
# Unions' Special
## Souvenir
## 2014





# யூனியன் சிறப்பு மலர்

# Jaffna Palace Hotel
# Jaffna

- AC & Non AC Comfortable Rooms & Restautant
- Jaffna Authentic Delicious Foods
- Cake Varieties and Takeaway Meals
- Outdoor Catering Services
- Wedding Makeup
- Vehicles Arrangements
- Quiek Laundry Services

- 10% Services Charges will be added to all Above Price
- Restaurant Hours : 7.00 am to 10.00 om only
- Check in Time 1.00 pm & Cheack out Time 11.30 a.m




824, Hospital Road,
Jaffna, SriLanka

Tel / Fax : 021 221 9209
E-Mail : Jaffnapalacehotel@gmail.com

# UNION'S SPECIAL

## Souvenir

## யூனியன் சிறப்பு மலர்

## 2014

# யா/ யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை
# கொடிக்கீதம்

தெல்லியூரில் ஆதியாக வந்த அன்னையே என்றும்
ஏற்றமோடு நாம் துதிப்போம் ஒன்று கூடியே
கல்வி ஓங்க கலை சிறக்க வந்த அன்னையே
தெல்லியூரின் யூனியன் கல்லூரி வாழ்க வாழ்கவே

அதிபர் துரை ரத்தினம் ஐயாவின் சேவையால்
எங்கள் கல்லூரி வளர்ந்தது பல்வளங்கள் கொண்டதாய்
பெருகும் பெருமை பேணிக்காக்க பச்சை நீலமாய்
கொடியை ஏற்றிடுவோம் எங்கள் அன்னை பாதம் பணிந்தே

ஆயிரத்தெண்ணூற்றிப் பதின் ஆறாம் ஆண்டிலே
மக்கள் அறிவுத்தாகம் தீர்க்க வந்த அன்னை ஜோதியே
ஆயிரம் பல்லாயிரம் அறிஞர் கூட்டத்தை நம்
நாட்டிற்கீயும் யூனியன் கல்லூரி வாழ்கவே

செந்தமிழோடாங்கிலமும் கணிதம் விஞ்ஞானம்
சேரும் அழகியலும் தொழில்நுட்பம் சமயம் சமூகம்
சுந்தர மனையியலும் வர்த்தகம் விளையாட்டிலும்
சிந்தை நிறை வெற்றி தரும் கல்லூரி வாழ்கவே.

அதிபரோடு ஆசிரியர் மாணவர் வாழ்க
வெற்றிமேலே வெற்றி நல்கும் எங்கள்
அன்னையே வாழ்க என்று கொடியை ஏற்றி
அன்னை பாதம் பணிந்து போற்றுவோம் - எங்கள்
யூனியன் கல்லூரி வாழ்க வாழ்க வளர்கவே!

இயற்றியவர் : பொன். ஸ்ரீ.வாமதேவன்

# எமது கல்லூரி அதிபர்



## திரு.வே.க.இரத்தினகுமார்

BA,PGD.Ed,MEd, SLPS -I

# முகாமைத்துவக்குழு - 2014



அதிபர்
திரு.வே.க.இரத்தினகுமார்
BA,PgDEd,M.Ed.
SLPS 2 – 1




பிரதிஅதிபர்
செல்வி ஜெ.செந்திவேல்
B.Com,PgD.Ed



உபஅதிபர்
திரு.வே.சேந்தன்
B.A,PgD.Pu.Ad,pg.D.Ed,pgD.S.N.Ed,M.E

## பகுதித் தலைவர்கள்



திரு.தா.இராசரட்ணம்
Sp.Tr.science



திருமதி.டு.ஞ லொயிட்
Sp.Tr.Art



திரு.ந.தவசோதிநாதன்
B.A,PGD.Ed



திரு.ஏ.அனுசாந்தன்
B.A.PGD.Ed,M.A,SP.Tr. Tamil

# OUR STAFF



**SEATED(L TO R)**

Mrs.M.Murugamoorthy, Miss V.Vaithilingam, Mrs.L.S.Lloyd, Mr.N.Ananthakumar, Miss.J.Sentivel (Deputy Principal), Mr.K.Rathnakumar (Principal), Mr.V.Senthan(Vice Principal), Mrs.A.Kugathasan, Mr.T.Rajaratnam, Mr.N..Thavasothynathan, Mr.N.Punithathayaparan, Mr.E.Anushanthan

**STANDING (1st ROW L TO R)**

Mrs.A.Vimalathasan, Mrs.P.Shathyaseelan, Mrs.S.Rameshkumar, Mrs.V.Raveendran, Mrs.S.Kugananthan, Miss.P.Kathikeshu, Mrs.M.Srikaran, Mrs.J.Sukirthan, Mrs.T.Jejakumar, Mrs.L.A Dominic, Mrs.M.Kirubakaran, Mrs.V.Jegasooriyar, Mrs. T.Ananthakumar, Mrs.S.Kirubakaran, Mrs.S.Surenthiranathan

**STANDING (2nd ROW L TO R)**

Mrs.T.Koneshwara, Mrs.A.Thirunavukarasu, Mrs.V.Vasiharan, Miss. B.Mayoortha, Mrs.J.Lambotharan, Mrs.I.Jokeenthiran, Miss S.Mithula, Mrs.N.Sanjeepan, Mrs S.Sivanathan, Mrs.P.Lingasabeshan, Mrs.V.Jejabalan, Mrs.M.Jegaruban, Mrs.N.Uthayakumar, Mrs.R.Murukananthan, Miss. Mary ReethaGiragory

**STANDING ( 3rd Row L to R)**

Mr.R.Rameshkumar, Mr.J.Sripirakash, Mr.C.Sivasuthan, Mr.V.Prabagaran, Mr.B.Velparan, Mr.S.Mugunthan, Mr.N.Senthuran, Mr.S.Sritharan, Mr.V.Vishnukaran, Mr.V.Rameshkumar, Mr.K.Mokanaranjan, Mr.Y.Suthakaran.

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை, இலங்கை


# Sri Durgadevi Devasthanam

Tellippalai, Sri Lanka

T.P. No : 021-3213151


திகதி 19-09-2012

## செஞ்சொற்செல்வரின் ஆசிச்செய்தி



மிகப் பழமை மிக்க, யூனியன் கல்லூரியின் வருடாந்த மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மிகவும் ஆனந்தமடைகின்றேன். பல்லாயிரம் மக்கள் பலன் பெற்ற இப்பள்ளித்தலம் பெருமைக்குரிய கல்விப்பீடம் என்றால் மிகையாகாது. இக்கல்லூரி இன்றும் கல்வியிலும், விளையாட்டுத்துறையிலும் கலைத்துறையிலும் தொடர்ந்து சாதனை நிலை நாட்டி வருவது அனைவரும் அறிந்ததே. இக்கல்லூரி முதல்வர் திரு.V.K.இரட்ணகுமார் அவர்களின் ஆற்றுப்படுத்தலின் நல்லாசியர்களால் பெருமக்களின் அர்ப்பணிப்புக்களோடு கல்லூரி விருத்தி பெற்று வருவது அறிந்து வாழ்த்துகிறேன். புகழ்பூத்த அதிபர்கள் வளர்த்த இக்கல்லூரியின் வளர்ச்சியில், உலகம் முழுவதும் வாழும் பழைய மாணவர்கள் மிகவும் ஆர்வமாக இருப்பதை நான் அறிவேன். கல்லூரியின் புதிய வரவேற்புவாயில் மிகவும் அழகாக அமைக்கப்பட்டு வருவது சிறப்பைத் தருகிறது. இக்கல்லூரி தன் சாதனைகளைத் தொடர்ந்து நிலை நாட்ட வேண்டி, அன்னை துர்க்காதேவியைப் பிரார்த்தித்து நல்லாசி கூறி அமைகிறேன்.

காலாநிதி.ஆறு திருமுருகன்
தலைவர்
ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை

දිසාපති / දිස්ත්‍රික් ලේකම්
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
Government Agent / District Secretary

දුරකථනය
தொலைபேசி
Telephone } 021-222 2235

ෆැක්ස්
பக்ஸ்
Fax } 021-222 2355

E-mail: gajaffna@sltnet.lk

දුරකථනය පොදු
பொது தொலைபேசி
General Telephone } 021-222 22
021-222 22


දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, යාපනය.
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.
District Secretariat, Jaffna.

මගේ අංකය
எனது எண்
My No. } Message from GA

ඔබේ අංකය
உமது எண்
Your No. }

දිනය
திகதி
Date } 19.09.2013

## அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி




வடமாகாகணத்தில் பாரம்பரிய சிறப்புக்களையும் வளம் கொளிக்கும் தோட்டங்களையும் கொண்டுள்ள வலிகாமம் வடக்கு பிரதேசத்தில் கல்வி ஒளிபரப்பி வரும் யா/யூனியன் கல்லூரியின் வருடாந்த மலரான யூனியன்ஸ் சிறப்பு மலருக்கு. வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

யாழ் மாவட்டத்தின் சிறந்த பாடசாலைகளில் ஒன்றாக விளங்கும் இக்கல்லூரி சகல துறைகளிலும் கற்றுக் கொள்ளக்கூடிய வசதி வாய்ப்புக்களையும் கொண்டுள்ளதுடன் அழகிய கட்டிட தொகுதி, ஆய்வுகூட வசதிகளுடன் பரந்த விளையாட்டு மைதானம் போன்ற பௌதீக வளங்களைப் தன்னகத்தே கொண்டுள்ளது. காலத்திற்கு காலம் நிர்வாகத் திறமைமிக்க அதிபர், வினைத்திறன் மிக்க ஆசிரியகுழாம் மூலம் வருடாவருடம் சிறந்த பரீட்சை பெறுபேறுகளை பெறுவதுடன் விளையாட்டுத்துறை, தமிழ்மொழித்திறன், ஆங்கிலத்தினப் போட்டி ஆகியவற்றில் சிறந்து விளங்கக் கூடியதாகவுள்ளது.

இக்கல்லூரியானது தனது வரலாற்றில் பல்வேறு துறைகளில் அறிஞர்கள் உட்பட பல புத்திஜீவிகளை உருவாக்குகின்ற யா/யூனியன் கல்லூரி மேன்மேலும் வளர்ச்சிக்காகவும் தனது தரமான கல்விப்பணியினால் மாணவர்களின் கல்வித்திறனை வளர்த்து சிறந்த சமுதாயத்தை உருவாக்க சீரிய வழியினைக்காட்டும் கலைக் கூடமாகத் திகழவும், இக்கல்லூரி மாணவர்களது ஆக்கங்கள் மற்றும் அவர்களது சாதனைகளை தாங்கி வெளிவரவுள்ள "யூனியன்ஸ் சிறப்புமலர்" சிறப்பாக மலர்ந்திடவும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சுந்தரம் அருமைநாயகம்
அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலகம்
யாழ் மாவட்டம்

# வடமாகாண கல்வி அமைச்சுச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி



யா/தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் வருடாந்தம் வெளியிடப்படும் "யூனியன்ஸ்" என்னும் சிறப்பு மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.


இக்கல்லூரி தனது வளர்ச்சிப் பாதையில் பல படிமுறைகளைத் தாண்டி, வலிகாமம் கல்வி வலயத்தில் புகழ் பெற்ற பாடசாலையாக முன்னணி வகிக்கின்றது. இக் கல்லூரி மாணவர்கள் விளையாட்டுப் போட்டிகளிலும் மற்றும் இணைபாட விதான செயற்பாடுகளிலும் முன்னணியில் நிற்பது ஆசிரியர்களின் அர்ப்பணிப்புடனான கற்பித்தல் செயற்பாடுகளும் தலைமைத்துவம் மிக்க அதிபரின் வழிநடத்துலுமே ஆகும்.

கல்லூரியின் மாணவர்களது ஆக்கங்கள் மற்றும் அவர்களது சாதனைகளை உள்ளடகிய "யூனியன்ஸ்" என்னும் சிறப்பு மலர் வருடாந்தம் வெளிவருவது கல்லூரியின் வழமையான செயற்பாடாகும். இச் செயற் பாட்டிற்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கிக் கொண்டிருக்கும் அதிபருக்கும் மற்றும் ஆசிரியர் குழாத்தினருக்கும் எனது பாராட்டுக்கள். இச் சிறப்பு மலரானது மாணவர்களிற்கும் கல்விச் சமூகத்தினருக்கும் தேவையான கருத்துக்களை அளிக்கும் என எதிர்பார்ப்பதுடன் இம் மலர் வெளிவர உழைத்த அதிபர், ஆசிரியர் குழாம், பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், கல்விச் சமூகம், மற்றும் நலன் விரும்பிகள் என்போரின் பணியை உளமாரப் பாராட்டுகின்றேன்.

கல்லூரியின் செயற்பாடுகள், சாதனைகள் மாணவர்களின் ஆற்றல்களை வெளிப்படுத்தும் முகமாக இச் சஞ்சிகை முகிழ்வது பாராட்டத்தக்க விடயமாகும். சஞ்சிகை வெளியீடு சிறப்புற அமையவும், விழா சிறக்கவும் எனது நல்லாசிகளை வழங்கி நிற்கின்றேன்.


சி.சத்தியசீலன்,
செயலாளர்,
கல்விபண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறைஅமைச்சு,
வடமாகாணம்.

# வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



யா/யூனியன் கல்லூரியினால் ஆண்டுதோறும் வெளியிடப்படுகின்ற யூனியன்ஸ் மலர் இவ்வாண்டும் வெளியிடப்படுவதனையிட்டு மகிழ்வடைவதுடன், தொடர்ந்து வரும் ஆண்டுகளிலும் சிறப்பாக வெளியிடப்பட வேண்டும் என்பதுடன், மலர் வெளியீடு சிறப்புற அமைய வாழ்த்துகின்றேன்.


சகல துறைகளுமே பாரிய வளர்சசி கண்டுகொண்டிருக்கின்ற இக் காலகட்டத்தில் மாணவர்களது வளர்ச்சிக்கு உதவிபுரிய கூடிய வகையிலும் கல்வியின் நோக்கத்தினை அடையக் கூடிய வகையிலும் ஆக்கங்களைத் தாங்கி இம்மலர் வெளிவருதல் வேண்டும் என்பதுடன், அவை சரியான முறையில் மாணவர்களையும், கல்விச் சமூகத்தையும் சென்றவடைவதுடன் உறுதி செய்துகொள்ள வேண்டும்.

இம் மலர் வெளியீட்டினூடாக மாணவர்களது ஆற்றல்கள் வெளிக் கொரணப்படுவதுடன், அவர்களது குழுச்செயற்பாடு, ஒற்றுமை, புத்தாக்க எண்ணங்கள் என்பன வளர்ச்சி பெற ஏதுவாகவும் அமைய வேண்டும்.

கல்வித்துறையில் மட்டுமன்றி இணைபாடவிதான செயற்பாடுகளிலும், தனக்கென ஓர் தனியிடத்தினை வகித்துக்கொண்டிருக்கின்ற இக்கல்லூரி சகல துறைகளிலும் மேலும் வளரச்சிகான வாழ்த்துடன் யூனியன்ஸ் மலர் வெளியீட்டின் பொருட்டு உழைத்த அனைவருக்கும் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் மலர் வெளியீடு சிறப்பாக அமைய ஆசி கூறுகின்றேன்.


செல்வரட்ணம் சந்திரராஜா<br>
கல்விப் பணிப்பாளர்,<br>
வலிகாமம் வலயம்.

# பிரதிக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



யா/யூனியன் கல்லூரியினால் ஆண்டுதோறும் வெளியிடப்படும் யூனியன்ஸ் மலரானது இவ்வாண்டும் வெளிவருவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.


ஆசிரியர்களினதும், மாணவர்களினதும் ஆக்கங்களைத் ஒருங்கே சேர்த்து இம்மலரானது மாணவர்களதும், ஆசிரியர்களதும் ஆற்றலையும் சாதனைகளையும் தாங்கி வருவதோடு சிந்தனைக்கு செயல்வடிவம் கொடுத்து அவற்றினை அச்சேற்றி ஏனையோரது சிந்தனைகளுக்கும் எடுத்துச் செல்லும் ஊடகமாக வெளிவருவது பாராட்டுக்குரியது.

இக் கல்லூரியானது பாடவிதான மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் சிறந்த சாதனை மட்டத்தைக் கொண்டு விளங்குகின்றது. செயற்பாடுகளில் பாடசாலை மாகாண ரீதியிலும் தேசிய ரீதியிலும் சிறந்த வெளியீடுகளைத் தன்னகத்தே நிலைநிறுத்தியுள்ளது. அவ்வகையான கல்லூரி ஆண்டுதோறும் சாதனைகளை நிலைநாட்டி செயற்படுத்த வேண்டும். இரண்டாவது நூற்றாண்டு காலத்தை நிறைவேற்ற முனையும் இப்பாடசாலை மென்மேலும் வளர்ச்சியுற்று மாணவர் சமுதாயம் நல்லனவற்றைப் பெற வாழ்த்துகின்றேன்.

இன்று வெளியிடப்படும் யூனியன்ஸ் இம்மலர் வெளியீட்டிற்காக அயராது உழைத்த அனைவருக்கும் எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பொ.ரவிச்சந்திரன்
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
வலிகாமம்.

# கோட்டக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



யா/யூனியன் கல்லூரியின் வருடா வருடம் மலர்ந்து கல்லூரியின் புகழை மேலும் மேலும் உயர்த்துவதற்கு வழிகோலும் யூனியன்ஸ் மலர் இந்த ஆண்டும் மலர்வது குறித்து மட்டற்ற மகிழ்வுவடைகின்றேன்.

பாடரீதியாகவும் இணைபாட ரீதியாகவும் தனக்கென முத்திரை பதித்து கொண்டிருப்பது வரவேற்கத்தக்கதாகும். வலைப்பந்தாட்டத்தில், ஹொக்கி விளையாட்டில், எறிபந்தாட்டத்தில், மேசைப்பந்தாட்டத்தில் அதி சிறந்த விருதுகள் இக் கல்லூரிக்கு கிடைத்துள்ளது பாராட்டப் படவேண்டியது.

மேலும் இக் கல்லூரியின் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்கும் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலக்விரும்பிகள் பழைய மாணவர்கள் யாவரும் மதிக்கப்பட வேண்டியவர்கள்.

ச.சண்முககுலகுமாரன்
கோட்டக்கல்விப் பணிப்பாளர்.
(MED,BA,DipinEd,Sc.TrL,SLPS-I)

பிரதேச செயலகம், வலிகாமம் வடக்கு, தெல்லிப்பழை
**DIVISIONAL SECRETARIAT, VALI NORTH, TELLIPPALAI**
ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය, වලිකාමම් උතුර, තෙල්ලිප්පලෙයි


Divisional Secretary – 021 321 7551 Administrative Officer – 021 224 1724 Accountant – 021 224 1725 Assistant Director of Planning – 021 224 1721

Office 021 224 1736 Fax 021 224 1726 Email dstellippalai@yahoo.com


My No – DS/VN/ADM Your No – Date – 09.10.2014

# வலி வடக்கு பிரதேச செயலாளரின் ஆசிச் செய்தி



இலங்கையின் வடபகுதியில் புகழ்சார்ந்த கல்விக் கூடங்களில் ஒன்றாகத் தனது கல்விப் பணியினை சிறப்பற ஆற்றிவரும் யா / யூனியன் கல்லூரி தனது இருநூறு வருடங்கள் பூர்த்தியைக் கொண்டாடும் வேளையில் பரிசளிப்பு நிகழ்வினையொட்டி வெளிவரும் சிறப்பு மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இக்கல்லூரி 1816 ஆம் ஆண்டு கட்டப்பட்ட தெற்காசியாவின் முதல் கலவன் பாடசாலையாகவும் வடமாகணத்திலும் வலி வடக்கிலும் முதன்மைக் கல்லூரிகளில் ஒன்றாகவும் திகழ்கின்றது. அத்துடன் தெல்லப்பளை பிரதேச விளையாட்டில் மாவட்ட மட்டத்தில் தொடர்ந்து ஏழு வருடங்கள் இக்கல்லூரியானது முன்னிலையில் உள்ளது. மேலும் வலைப் பந்து விளையாட்டில் பதின்நான்கு வருடங்கள் தொடர்ந்து வெற்றீட்டிய பாடசாலையாகவும் உள்ளது. அதுமட்டுமல்லாது உயர்தரத்தில் சிறந்த பெறுறேுகளும் தமிழ், ஆங்கில போட்டிகளில் சிறப்பிடங்களைப் பெற்று தேசியமட்டங்கள் வரை சென்று சாதனைகள் படைக்கும் கல்லூரியாகவும் காணப்படுகின்றது.

மனிதனுடைய வாழ்க்கையிலே கல்வி என்பது மிகவும் இன்றியமையாதது ஒன்றாகும். இக்கல்வி மூலம் சிறந்த மாணவ சமுதாயத்தையும் அறிவியல் சமூகத்தையும் உருவாக்கும் பொறுப்பு பாடசாலைக்குரியது. எப்படியும் வாழலாம் என்றில்லாமல் இப்படித்தான் வாழவேண்டும் என்பதை எடுத்தக் கூறுவதாக கல்வி அமைகின்றது. இத்தகைய கல்விச் செல்வத்தினை வழங்கும் சிறப்புடையதாகப் பாடசாலைகள் விளங்க வேண்டும்.

பல்வேறு இன்னல்களுக்கு மத்தியிலும் யா / யூனியன் கல்லூரி இடம் பெயர்ந்த நிலையிலும் கல்வியானது பாதிக்காத வகையிலே மீண்டும் இயங்க

வைத்து பாடசாலையின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் அயராது உழைத்து வரும் அதிபர் மற்றும் அதற்கு உறுதுணையாக இருந்து அர்ப்பணிப்புடன் சேவைபுரியும் ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் ஆகியோரையும் பாராட்டுகின்றேன்.

அறிவினைப் போதிக்கும் கல்விக் கூடங்கள் இத்தகைய மலர் வெளியீட்டினை வெளியிடுவது ஓர் ஆக்கபூர்வமான செயற்படாகும். எத்தனையோ இன்னல்களுக்கு மத்தியிலும் சளைக்காது நின்று சபதனை படைத்துவரும் ய / யூனியன் கல்லூரி எதிர்காலத்திலும் மேலும் வளர்ச்சிபெற்று பிரதேச மாணவர்கள் கல்வித்துறையிலும், கலை, பண்பாட்டு, விளையாட்டுத்துறைகளிலும் சிறந்த விளங்குவதற்கு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு பல்வேறு துறைகளிலும் அறிவினை வளர்க்கும் ஆக்கங்களைத் தாங்கி ஆண்டுதேறும் வெளிவரும் மலர் வெளியீடு சிறப்புற அமைவதற்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களை பணிவுடன் தெரிவிக்கின்றேன்.

பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம்,
வலி வடக்கு,
தெல்லிப்பளை.

# பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளரின் வாழ்த்துச் செய்தி



யாழ் மாவட்டத்தின் புகழ் பூத்த கல்லூரிகளில் தனக்கென ஓர் உன்னத இடத்தினைக் கொண்டதாம் நமது தெல்லியூர் இக் கல்லூரயில் வருடாந்தம் இடம்பெறும் "யூனியன்ஸ்" சிறப்பு மலரிற்கு வாழ்த்துச் செய்தி கூறுவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

நம்மைப் பெற்ற தாயை விட நம்மை வளர்த்தடுத்த தாயை என்றும் நாம் மறத்தல் கூடாது. "நன்றி மறப்பது நன்றன்று" என்ற வாசகத்திற்கிணங்க எம் தாயின் பெருமையை நாம் கூற மறந்துவிடக் கூடாது. யூனியன் கல்லூரியானது கல்வியில் மட்டுமல்லாது இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் சாதனை புரிந்து வருகின்றது.

எத்தனை சோதனைகள் வேதனைகள் வந்த போதிலும் நாம் எமது பாடசாலையை முன்னேற்றியே காட்டுவோம். என்று கங்கனம் கட்டி நிற்கும் அதிபரையும் அவரோடு தோளோடு தோள் சேர்ந்து நின்று ஒத்தாசை புரியும் உபஅதிபர் பிரதி அதிபர் ஆசியர்களும் பெருமையையும் தன்னகத்தே கொண்டு விளங்குவது எமது யூனியன் கல்லூரியே. இவர்கள் பெருமையை நாம் என்றும் மறந்து விடக்கூடாது.

அத்தோடு 2013ம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தரத்தில் 3A சித்தி பெற்று பொறியியல் பீடத்திற்கு ஒரு மாணவன் தெரிவாகியுள்ளான். இது இக்கல்லூரிக்கு கிடைத்த பெரு வெற்றியாகும். மேலும் 2014ம் ஆண்டு நடைபெற்ற தமிழ்த்தினப்போட்டி, ஆங்கிலதினப்போட்டி, விளையாட்டுத்துளைப்போட்டிகளில் யூனியன் கல்லூரிமாணவர்கள் பங்குபற்றி பல சாதனைகளையும் புரிந்து தேசிய மட்டம் வரை சென்று பரிசில்களும் பெற்றுள்ளார்கள். இது இக்கல்லூரிக்கு கிடைத்த மிகப் பெரிய வெற்றியாகும்.

இக்கல்லூரியானது மேலும் பல சாதணைகளை படைக்க வேண்டும். இப்பாடசாலையில் முன்னேற்றத்துக்காக எந்தவொரு சோதனை வந்தாலும் அதிபர் ஆசிரியர்குழாம் நமது பாடசாலை என்ற நோக்குடன் செயற்பட்டு யூனியன் கல்லூரியை மேலும் உயர்த்த வேண்டும். அதற்கு எல்லாம் வல்ல இறைவனின் திருவருட் கடாட்சமும் கிடைக்க வேண்டும் என்று இறைவனை வேண்டி எனது வாழ்த்தையும் நல் ஆசிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

"வாழ்க வையகம் வளர்க எம் யூனியன் தாய்"

திருமதி. ம.தமிழ்வாணி
செயலாளர் (பா.அ.ச)

# The Unions

**Old Students Association of Union College (UK)**
**Tellippalai, Sri Lanka**
**theunions.org.uk**

**President**
Mr. R. T. N. Thayalan
020 8813 0592-H
07901517539-M
**Secretary**
Mr. S. Thambipillai
01293 410718(H)
07886966231 (M)
**Treasurer**
Dr. K Ganeshaguru
020 8958 9979

**Vice President**
Mr. M.Sathianathan
**Asst. Secretary**
Mrs. S. Pathmanathan
**Asst. Treasurer**
Dr. (Mrs)M.Niranjan
**Social Secretary**
Mrs. T.Tharmapalasingam
**Asst. Social Secretary**
Mr. J.Sri Gengatharan
**Sports Secretary**
Mr. S.Kirupakaran
**Asst. Sports Secretary**
Mr. K.Kishantha
**Committee Members**
Dr S Kasivisvanathan
Mrs N Rajkumar
Mr. V sahathevan
Dr (Mrs) S.Selvachandran
Mrs. M. Sivanesan

## Message on the occasion of the Prize-giving day celebrations - 2014

It is with great pleasure that I sent this message of felicitations on behalf of the Unions -the Old Students Association (OSA) of Union College, UK branch, marking the 2014 Prize-giving day.

Firstly we would like to congratulate the Principal, staff and students of our our Alma Mater for all their hard work resulting in good results both in the academic and other extra-curricular activities. We are aware that the school continues to function with several short-comings and therefore it is really good to see that the school continues to compete well in the Jaffna peninsula.

Union College is one of the oldest schools in the Northern Province and is due to reach the mile stone of bi-centenary in October 2016. In order to mark this milestone, the Old Students Associations (OSAs) all over the globe together with the Principal and the Ministry of Education, Sri Lanka has embarked on a building project to replace the assembly hall that was destroyed during the civil war. You can all see that work on this project has already commenced and in this regard we would like to thank the Hon Minister Douglas Devananda and the Ministry of Education, Northern Province for their assistance in overcoming the problems we initially had. This project is estimated at a cost of Rs 30 million and we require urgent funds to be able to continue with it so that the Bi-centenary can be celebrated in a befitting style. We therefore appeal to the Government of Sri Lanka

and Ministry of Education, Northern Province to allocate funds towards this project. The school has served Tellippalai and the surrounding villages for as long as most of us can remember and beyond. We therefore appeal to all past students spread across the globe, parents, teachers and all well-wishers to rise to the occasion by contributing generously towards this project.

The Unions, UK, have continued to provide support to the school since it's inception more than twenty years ago and we continue to support the school in every possible way. We visited the school recently and have provided some assistance. We provide financial support annually to some deserving students. We, together with other OSAs (Canada, Australia,Colombo) contribute towards sports facilities. However the school needs urgent help in many areas to bring it back to her former glory. We therefore urge everyone connected with Tellippali and the school to join hands to make this happen.

We would take this opportunity to thank the Ministry of Education for the new laboratory block that has been built and other works that have been completed in the school.

On the occasion of this special day, we congratulate and express our appreciation to the Principals, past and present, staff and students for their hard work, dedication and efforts. May they maintain the high standards and keep the Union College flag flying high. We wish them a successful event today.

Sornadevi Thambipillai (Mrs)
Hon.Secretary

Mr R T N Thayalan
Hon. President

# Message from the Secretary, Melbourne Union College OSA



Greetings to students, parents, teachers, Vice Principal and Principal of Union College on the occasion of Prize Giving Day of 2014.

Union College students' academic, extracurricular activities and sports performance continue to improve every year. I am very happy to see excellent performance in Tamil Language Day and English Day competitions. Achievements in sports are also very impressive.


Prize Giving Days recognise the achievements of not only students but also teachers. Union College has a tradition of well-planned and organised prize giving days which takes a lot of planning, preparation and dedication to stage a successful event such as this one

Melbourne Old Students Association is proud to be part of Union College community. We like to continue our sponsorship of students to support, in a little way, to enhance their full potential. We will also continue to support extra classes for GCE (AL) students.

I would like to take this opportunity to wish students, teachers and the Principal a bright future and a successful 2014 Prize Giving Day.

**SellathuraiNarenthiran**
**Secretary**
**Melbourne Union College Old Students Association**

# Message from the President Union College Old Students Association Sydney.



I am very pleased and privileged to present this message for the annual founder's day and prize day 2014 of Union College. On behalf of the Old Students Association Sydney, I take this opportunity to appreciate the Principal Mr.K. Ratnakumar , teachers and well-wishers of the school to bring out our school name in national and international level. A special wishes for Hockey, Net ball and Table tennis team players and the coach. The Sydney Unions are so proud to hear about the academic and sporting performance of the school. We wish that you will continue to hoist our school flag in national and international level. This school has produced great people in the past and we hope it will continue to produce great men and women who will make a difference to the community and society. We are happy to celebrate our Alma Mater's bicentenary in 2016. We will continue to support the school and we wish you all the very best.

**A J G Jeyachandra**
**President**
**Union College Old Students Association Sydney**
**Australia**


# யூனியன் கல்லூரி பழைய மாணவர் சங்க (கனடா)த்தின் வாழ்த்துச் செய்தி



மீண்டும் யூனியன் கல்லூரியின் 2014ம் ஆண்டு பரிசளிப்பு விழாவிற்கான, யூனியன்ஸ் மலரில் எனது வாழ்த்துச் செய்தி இடம்பெறுவதில் மகிழ்ச்சி. யூனியன் கல்லூரி 200 வெற்றி ஆண்டுகளை நோக்கி பயணித்துக்கொண்டிருக்கும் மிக முக்கியமான தருணம் இது. பழைமை வாய்ந்த கல்லூரியே ஆனாலும் புதுயுகம் படைக்கும் சிறந்த மாணவர்களை கடமை தவறாத ஆசியர்களைக் கொண்ட கல்லூரி நமது யூனியன் கல்லூரி. அன்று தொட்டு இன்று வரை தொடர்ச்சியாக பெற்ற வெற்றிகள் இதை நிரூபிக்கின்றன. இக் கல்லூரிக்கு கிடைத்த நிர்வாகத் திறமை வாய்ந்த அதிபர்கள், ஆசிரியர்களின் தரமான மற்றும் திறமையான வழிகாட்டல் மற்றும் முயற்சியுடைய மாணவர்களே இதன் காரணகர்த்தாக்கள். பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து பல சோதனைகளைக் கடந்து இக்கல்லூரி யாழ்ப்பாணத்தில் பெயர் சொல்லும் கல்லூரிகளில் ஒன்றாக இடம் பிடித்திருக்கின்றது. கல்வி, விளையாட்டு, கலை போன்ற துறைகளில் யூனியன் கல்லூரி மாணவர்கள் தொடர்ந்து சாதனை படைத்து வருகிறார்கள் என்பது எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சி தரும் செய்தி. அவர்களது சாதனைகளும், வெற்றிகளும் தொடர கல்லூரி மென்மேலும் வளர பெற எனது வாழ்த்துக்கள்.

திருமதி ராஜனி விமலகாந்தன்
தலைவர்
யூனியன் கல்லூரி பழைய மாணவர் சங்கம்
(கனடாக் கிளை)

# MESSAGE FROM THE UNION COLLEGE OLD STUDENTS ASSOCIATION COLOMBO BRANCE



CONGRATULATIONS ! It is indeed joy and privilege for me to send this message of warm greetings and thoughts to Principal, Deputy Principal, Vice principal, Teachers, Staff, Students, both past and present of UNION COLLEGE TELLIPPALAI, on the occasion of the occasion of the "PRIZE DAY 2014"

School is our first contact with the world, a period of joy, healthy competition, fear, self – adjustments, discipline, independence, attitudes, where education is more than following a set curriculum but prepare young people for life and work. Having said this, I am, eternally grateful for what I am, today to Union College. In the good old days discipline, respect to teachers and elders, to name a few was instilled into us to be of values and believes together with achieving good examination results, Today, one thing I proudly declare to anyone is "I STUDIED AT UNION COLLGE, TELLIPPALAI" – THE BEST SCHOOL IN THE WORLD.


Dear Students learning is not a process limited to schools and colleges, it is indeed a life long process aimed at and achieved within school as well as outside the calls room. I strongly vbelieve Union college is common goals formation of a student to suit the dynamic chaning world in achieving common goals and objects in life. A feather in our caps – our school astablished in 1816 is marching towards 200 years in 2016. OSA – Overseas, Jaffna and Colombo Branches are making all arrangements to celebrate this proud event in 2016. In addition to this Union College has the pride of place as the 1st aducational institute in the north and the 4th in Sri Lanka.

I take this opportunity to congratulate each and every one of you prize winners. This reflects your hard work and dedication during the past year be it academically or achievement in sports or any other field. It is great to have your efforts and achievements recognized and rewarded. I am sure you have made your teachers, parents and other family members happy and proud of this moment.

I wish the rest of the students to strive to do better and nothing is impossible with a little more effort. WITH WARM WISHES AND GOD'S BLESSINGS!

**Nala vaithilingam**
**OSA COLOMBO BRANCH**

# யாழ்ப்பாணப் பழைய மாணவர் தலைவரின் வாழ்த்துச் செய்தி



எனது கல்லூரியை வாழ்த்தி வணங்கி மகிழ்கின்றேன்!

"சாகும்போதும் தமிழ்படித்துச் சாகவேண்டும் - என்றன் உடல்
சாம்பலும் தமிழ்மணந்து வேகவேண்டும்
பாடையிலே படுத்தூரைச் சுற்றும்போதும்
பைந்தமிழில் அழும் ஓசை கேட்கவேண்டும்
ஓடையிலே என்சாம்பல் ஓடும்போதும்
ஒண்தமிழே சலசலத்து ஓடவேண்டும்" என்ற உணர்ச்சி

ததும்பும் பாடலைத் தந்த பெருமைக்குரிய மாவை பண்டிதர் கலா சச்சிதானந்தம் பிறந்த மண்ணில் 200 ஆவது அகவையில் அகலக் கால்பதித்து வீறுநடைபோடத் தயாராகின்றது எமது யூனியன் கல்லூரித்தாய்.

என்னை எனக்கறியவைத்து, அவனியிலே எனை வாழவைத்து, அன்னை - பிதா குருவாகி, என் அபயமெலாம் போக்கி என் அஞ்ஞானமாகிய இருளை அகற்றி மெய்ஞ்ஞான ஒளியை எனக்கு அளித்தது யூனியன் கல்லூரி என்று குறிப்பிட்டால் மிகையாகாது.

ஆசியாவிலே முதல் தமிழ்க் கலவன் பாடசாலை என்ற பெருமைக்குரியது எமது கல்லூரி. வடபுலத்தில் ஆங்கிலக் கல்வியைப் போதிக்கும் பாடசாலையாகவும் இது அமைந்துள்ளது. அமெரிக்க மிசனறிமார்களால் 1816 ஆம் ஆண்டு எமது கல்லூரி உருவாக்கப்பெற்றது. அன்றுமுதல் இன்றுவரை ஆயிரம் ஆயிரம் வைத்தியர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள், ஆசிரியர்கள் என்று ஆயிரம் ஆயிரம் பட்டதாரிகளை எமது பாடசாலை உருவாக்கிக்கொண்டிருக்கின்றது.

"ஒழுக்கம் விழுப்பம் தரலால் அவ்வொழுக்கம்
உயிரிலு மோம்பப்படும்" என்ற வள்ளுவர் வாக்கிற்கு அமைவாக யாழ்.மாவட்டப் பாடசாலைகளிலே ஒழுக்கத்தை நூறு வீதம் கடைப்பிடிக்கும் பாடசாலை என்ற பெருமைக்குரியதும் எமது யூனியன் கல்லூரி என்பது வெள்ளிடைமலை.

எமது கல்லூரி ஆசிரியர்கள் தியாகசிந்தையுடன் - அர்ப்பணிப்புடன் செயற்படுகிறார்கள். அவர்கள் "எங்கே நடப்படுகிறாயோ அங்கே மலராகு" என்ற பொன்மொழிக்கு எடுத்துக்காட்டாய் இருப்பவர்கள். தன்னிடம் ஒப்படைக்கப்படும் மாணவர்களை வாழ்க்கை என்றால் என்ன? இதில் மாணவ, மாணவி சமூகத்தின் பங்கு எப்படி இருக்க வேண்டும் என்று ஒரு தெளிவை கற்றுக் கொடுக்கின்றனர். குறிக்கோள் இல்லாத வாழ்க்கை முகவரியில்லாத கடிதத்திற்குச் சமம். இது போல் தான் மாணவ சமூகமும் குறிக்கோள், இலட்சியம் இல்லாமல் இருந்தால் எதிர்காலம் ஓர் இருண்ட பாதை என்பதை ஆரம்ப காலத்தில் இருந்தே மாணவர்களின் மனதில் நன்கு பதிய வைத்து, அதன் மூலம் கிடைக்கும் வெற்றியை பார்க்கும் பொழுது ஆசிரியர்களின் முகத்தில் ஓர் மகிழ்ச்சி தோன்றும். இதனை வார்த்தைகளால் சொல்வதைவிட உணர்வு பூர்வமாக எமது மாணவர்களின் பெறுபேறுகளைக் கண்டு அவர்களின் பெற்றார்களிலும் பார்க்க ஆசிரியர்கள் அடையும் மகிழ்வை வைத்து உணர முடியும். தன்னிடம் ஒப்படைக்கப்படும் மாணவனை நல்ல மாணவனாக ஆக்குவதோடு, நல்ல மனிதனாக மாற்றும் பொறுப்பும் - இப்படித்தான் வாழவேண்டும் என்று ஆக்குகின்ற பொறுப்பும் ஆசிரியர்களுக்கு இருக்கிறது. அதே போல் ஆசிரியர்கள் என்பவர்கள் மாணவ சமூகத்தை உருவாக்குபவர்கள் அல்லர், மாறாக உயிரூட்டுபவர்கள். ஒரு சிறந்த ஆசிரியர்களின் பண்புகள், குணங்களை பார்க்கும் மாணவர்கள் அவர்களைத் தமக்கு உதாரண புருஷராக (Role model) ஆகக் கருதிச் செயற்படுவர். அதனால் ஆசிரியர்கள் தங்களை மாணவர்களின் காலக் கண்ணாடி என்ற எண்ணத்தில் தான் பணியாற்றி வருகின்றனர். அப்படி பணியாற்றுவதன் மூலம் கடினமாக உழைத்து வாழ்வில் ஒளிரும் மாணவ சமூகத்திற்கு ஆசிரியர்கள் உரிமையாளர்களாக மாறுகின்றனர். ஆசிரியப் பணி என்பது ஒரு தொழிலன்று. அவர்கள் தம்மை இந்தத் தொழிலில் முழுமையாக அர்ப்பணித்துச் சேவையாற்றுவதால் அது ஒரு சேவை என்று போற்றப்படுகின்றது. இத்துணை பெருமைக்குரிய ஆசிரிய சமூகத்தைக் கொண்ட சிறப்புக்குரியதாக எமது யூனியன் கல்லூரி அமைந்துள்ளது.

எமது கல்லூரி அதிபர் சிறந்த ஆளுமை படைத்தவர். கல்லூரியின் வளர்ச்சிப் பாதையில் மிகுந்த அர்ப்பணிப்புக் கொண்டவர். எமது கல்லூரி சகலதுறைகளிலும் தேசியமட்டத்தில் அதன் புகழ் ஓங்கவேண்டும் என்று பேரவாக் கொண்டவர். கல்வி மட்டுமன்றி இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் கல்லூரியை வளர்க்கவேண்டும் என்ற சீரிய சிந்தனையுடையவர். தலைமைத்துவம், அறிவு, ஆளுமை, செயற்றிறன், புத்திசாதுர்யம், விவேகம், பொறுமை, சாணக்கியம், மதிநுட்பம், துணிவு என்ற தசகுணமும் ஒருங்கே அமையப் பெற்றவர் எமது அதிபர் என்று கூறினால் மிகையாகாது.

எம்மை உருவாக்கிய கல்லூரித்தாய் இன்னும் பலவாண்டுகள் சீரிய கல்விப் பணியாற்றி, பல்வேறு புத்தியீவிகளையும், அறிவுடைய சமூகத்தையும் உருவாக்கவேண்டும் என்று கூறி எமது கல்லூரி அன்னையை வாழ்த்தி வணங்கி மகிழ்கின்றேன்.

நன்றி

லயன் சோ.சுகிர்தன்
(தலைவர் - பழையமாணவர் சங்கம்,
தவிசாளர் - வலி.வடக்கு பிரதேச சபை)

# யா/யூனியன் கல்லூரி தெல்லிப்பழை
# பரிசுத்தினம் - 2013/2014
# 15.10.2014

ஞானக்கணபதியின் மோனத் திருவடிகளை மனமொழி மெய்களாலே வந்தித்து, கல்வியும் கலைகளும் கவின்வீரச்செல்வமும் வரையாது வழங்கும் புவனேஸ்வரி அம்மையை வேண்டிக்கொண்டு இருநூறாண்டு நோக்கி இளநடைபோடும் கல்லூரித்தாயின் 198ஆவது பரிசுத்தினத்தை இனிமையாக கொண்டாட விழைகின்றோம்.

இந் நன் நாளிலே எம் அழைப்பினை ஏற்று பிரதம விருந்திராக வருகைதந்து சிறப்பித்து கொண்டிருக்கும் வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் மற்றும், விளையாட்டு துறைஅமைச்சின் செயலாளர் உயர்திரு எஸ்.சத்தியசீலன் அவர்களே! தங்கள் வரவினால் இறும்பூதடைகின்றோம்.

சிறப்பு விருந்தினராக வருகை தந்து எம்விழாவை சிறப்பித்துக் கொண்டிருக்கும் வலிகாமம் கல்வி வலயத்தின் புகழ்பூத்த கல்விப் பணிப்பாளர் உயர்திரு எஸ் சந்திரராஜா அவர்களே! தங்கள் வரவினால் நாம் பெருமையடைகின்றோம்.

கௌரவ விருந்தினர்களாக கலந்து எம்மைக் களிப்பில் ஆழ்த்திக் கொண்டிருக்கும் எமது தெல்லிப்பழை கோட்டக்கல்விப்பணிப்பாளர் திரு எஸ் சண்முககுலகுமாரன் அவர்களே! மற்றும் எங்கள் கல்லூரியின் பழைய மாணவியும், தொழிலதிபருமாகிய திருமதி சகுந்தலாதேவி திருஞானம் அவர்களே!உங்கள் வருகையினால் நாம் பெருமையடைகின்றோம்.

கல்லூரி வளர்ச்சிக்கு ஆசிகள் வழங்கி வந்த சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பணிகளைத் தொடரும் செஞ் சொற்செல்வர் ஆறுதிருமுருகன் அவர்களே! தங்கள் ஆசியும் வாழ்த்தும் எம்மை வாழ்விக்கட்டும்.

எமது கல்லூரியையும் கல்வி,கலைப்பணிகளையும் கௌரவப் படுத்தும் முகமாக வருகை தந்துள்ள அயற்பாடசலையின் அதிபர்களே! ஆசிரியர்களே உங்கள் அன்பார்ந்த வருகைக்கு தலை வணங்குகின்றோம்.

கல்லூரி வளர்ச்சியில் கைதந்து வளர்க்கும் கவினாரும் பணிபூண்ட பழைய மாணவர்களே! உங்கள் வரவினை பெருவரப்பிரசாதமாக மதிக்கின்றோம்.

கல்லூரி வளர்ச்சிக்கு அன்றுமுதல் இன்றுவரை உறுதுணை புரிந்து வரும் யாவருக்கும் இறைவன் ஆசிபுரிவாராக!

**அன்பார்ந்தபெற்றோர்களே!**

உங்கள் குழந்தைகளை நாளைய உலகில் பெரியவர்களாக ஆக்கவேண்டு மென்ற விருப்பினாலே எம்மிடம் அனுப்பியுள்ளீர்கள். உங்கள் எதிர்பார்ப்பு நிறைவேற எம்மாசிரியர்கள் நன்கு பாடுபட்டு வருகின்றனர். பாடசாலை நேரம் தவிர்ந்த வேளைகளில் பிள்ளைகளின் செயற்பாடுகள் எவ்வாறு உள்ளன என்பதை நன்கு கவனித்துக் கொள்ளுங்கள்.

நாம் வாழும் காலம் மிகவும் கொடியதாகி வருகின்றது. கொடுநோய்த் தொற்றுக்கள் போன்று தீய பழக்கங்களும் போதைகளும் தீவிரமாகப்பரவி வருகின்றன. திரை மறைவிலே பொறுப்பு வாய்ந்தவர்களும் இக்களைகள் வளர உரமிடுகின்றனர். ஒவ்வொரு பெற்றோர்களுமே உங்கள் பிள்ளைகளின் ஒவ்வொரு அசைவிலும் அவதானிப்பு நிகழ்த்துங்கள்.

சிறுவர் உரிமை, மனித உரிமை பற்றிய சட்டங்கள் பாடசாலைச் செயற்பாடுகளையும் கற்றல் விருத்தியையும் கடுமையாகப் பாதித்து வரும் காலமிது. பெற்றோர்களே! உங்கள் பூரண ஒத்துழைப்பினாலேதான் பிள்ளைகளின் மேம்பாட்டிற்கு எம்மால் உதவமுடியும் என்பதை விநயமாக தெரிவிக்கின்றேன்.

**எங்களோடு சேவைக்கு இணைந்த செம்மல்கள்**

வலயப் பாடசாலைகளுக்கிடையிலான இடமாற்ற செயற் பாட்டினால் எம் அயற் கல்லூரிகளி லிருந்து எம்மோடு வந்திணைந்து கொண்ட திருவாளர்கள் ந.புனித தயாபரன்(கணிதம்), ந.ஆனந்தகுமார் (இயந்திரதொ.நு), ந.செந்தூரன் (உடற்கல்வி) ஆகியோரும் திருமதிகள் ம.முருகமூர்த்தி (தமிழ்), ரா.முருகானந்தம் (கணிதம்) சா.சிவநாதன் (வணிகக்கல்வி), த.ஆனந்தகுமார் (வணிகக் கல்வி), ம.ஸ்ரீகரன் (பௌதீகவியல்), ஆ.விமலதாசன்(இரசாயனவியல்), ம.கிருபாகரன், றெ.மரியமனோகரன் (கிறிஸ்தவநாகரீகம்), வ.ஜெகசூரியர் (இந்துநாகரீகம்) ,இ.யோகீந்திரன், ந.சஞ்சீபன்(ஆங்கிலம்), ஆகியோர் செம்மை மனத்தோடு சீரப் பணி புரிகின்றனர்

**வேறிடம் சென்று பணி தொடர்வோர்**
**பிரதிஅதிபர் உயர்திரு இ.சண்முகேஸ்வரன ...**

இவர் 1992.07.01 இலிருந்து இக்கல்லூரியில் பணிபுரிந்து வந்தவர் கல்லூரி நிர்வாகத்தில் அச்சாணியாகி நின்று அரும்பாடுபட்டு உழைத்தவர். மாணவரின் ஒழுக்க விழுமியங்களுக்கு முதன்மையளித்து கல்வி போதிக்கும் இயல்பினர் மிகக்கண்டிப்பானவர்.

**உபஅதிபர் உயர்திரு வே.சந்திரசேகர...**

1997.03.19 இல் இக்கல்லூரியில் வந்து "மெல்லெனப்பாயும் தண்ணீர் கல்லையும் உருக்கிப்பாயும்" என்றபடி அசிரியர்களோடு பழகியும் "அடியை போல் அண்ணன் தம்பியும் உதவார்கள்" என்றபடிமாணவர்களோடு பழகியும் கல்விப்பணியைச்செவ்வனே செய்து வந்தவர்.

**விளையாட்டுத்துறைத் பொறுப்பாசிரியர் திருமதி ஜெ.ஜெயதரன**

1992.10.01 இல் இங்கு இணைந்து பகற்பொழுதில் பெரும்பொழுதை பந்தேந்தி களித்தாடும் பாவை நல்லாரோடு பாங் காகக்களித்து வழிகாட்டி வையமேத்த வான்புகழ் பல கொண்ட வாண்மையாளி.

**தமிழாளி–கலைவாணி நாதசொரூபன்**

1992.10.01 இல் இங்கு இணைந்து ஏற்றமுறும் இயற்தமிழால் எழிற்பணிகள் பலமுற்றி வாட்டமற தமிழ்ப்பயிர்க்கு வளமூட்டி நீர்வார்த்த வான்கருணை வாணி! தூண்டாவிளக்கு அனையள்எழிலூட்டும் திரிதூண்டி

**நடன ஆசிரியர் திருமதி மலர்விழி பிறேம்குமார்.**

1998.09.01 இல் இக்கல்லூரியில் இணைந்து கொண்ட இவர் பார்போற்றும் பரதக்கலையினை ஊர் போற்ற உணர்வோடும் ஒழுக்க நியமங்களோடும் போதித்து நன்மாணவர் பலரை உருவாக்கியவர்.

**உயிரியல் ஆசான் திரு அ.தயாபரன்**

1998.07.15 இல் இங்கு வந்து இணைந்து உயிரியல், விவசாயம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களை போதித்து மாணவர் மனதில் நீங்கா இடம் கொண்டவர்.

**சங்கீத ஆசிரியர் செல்வி ஜெயகௌரி முருகையா**

1999.05.12 இல் இங்கு இணைந்து ஏழிசையாலும் இசைப் பயனர்லும் கல்லூரியை வளர்த்தவர். பலதடவைகள் தேசிய நிலைத் தமிழ்தினப்போட்டிகளில் மாணவர்கள் முதலிடம் பெற வழிசெய்த இசையரசி.

**கிறிஸ்தவ பாடஆசிரியர் திருமதி ஜெயந்தி தவேந்திரராஜா**

1999.02.02 இல் இணைந்து இன்றுவரை கிறிஸ்தவ மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கும் இம்மாணவரின் மன்றச் செயற்பாடுகளுக்கும் விசுவாசியாக உழைத்து வந்தவர்.

**இரசாயனவியல் ஆசிரியர்.திருமதி மல்லிகா ரவீந்திரன**

2000.05.31 இல் இணைந்து இங்கு இணைந்து கொண்ட இவர் இடைநிலை வகுப்புக்களில் கணிதபாட ஆசிரயராகவும் உயர்தர வகுப்புக்களில் இரசாயனவியல் ஆசிரியராகவும் பணிசெய்து சிறப்புப்பெற்றவர்.

**பௌதீகவியல் ஆசான் திரு பா.தர்மசீலன்**

2002.01.16 இல் இங்கு இணைந்து கொண்ட இவர் "செய்வன திருந்தச்செய்" என்பதை தாரகமந்திரமாக கொண்டவர் கண்டிப்பும் அன்பும் சமமாக கையாண்டு போதனை செய்து வந்த சீரியர்.

**சைவத்தமிழ் ஆசிரியர் திருமதி உருத்திராதேவி பகீதரன்**

சைவசமய போதனைக்கேற்ற கோலமும் ஞான வீறும் கொண்ட ஆசிரியர். தரம் - 6,7 வகுப்புக்கள் அமைந்துள்ள "L" மண்டபத்தில் சுற்று சூழலை புனிதமாகவும் அழகாகவும் வைத்திருப்பதில் முன்னின்று பாடுபடுபவர்.

**சமூகவியல் ஆசான் திரு சு.நவகேதீஸ்வரன்**

2005.01.03 இல் இங்கு இணைந்தவர் நவநவமாய் உலகச் செய்திகளை அறிந்து அறிவிப்பதில் நிகரற்றவர். சிரிப்பவர்கதைப்பவர்ஆனால் வகுப்பில் வரன் முறையாய்ப் போதிப்பவர் மாணவர்கள் வாய் பிழந்து கேட்டிருப்பார்.

**பொருளியல் ஆசான் விளையாடினான**

திரு இ.இராஜராஜன் 2005.10.06 இல் இங்கு இணைந்து விளையாட்டுத் துறையில் பல ஏற்றங்களை எமக்களித்த ஏந்தல். கொக்கியைப்பயிற்றுவித்து பீடளித்த பெரியோன்.

**சிங்கமொழி அசிரியர் திருமதி கி.ஜெயமனோன**

மும்மொழிவித்தகத்தால் இருமொழியை வளர்க்கப்பாடுபட்டவர். மாகாண நிலையில் எம்மாணவர்கள் சிங்களமொழிப்பேச்சுப் போட்டிகளிலும், ஆங்கிலதினப் போட்டிகளிலும் பரிசில்களை வெல்ல வழிசெய்தவர்.

**விஞ்ஞான ஆசிரியர் திரு ம.ரவீஸ்வரன்**

2007.03.29 இல் இங்கு இணைந்து க.பொ.த(சா/த) வகுப்பில் விஞ்ஞான பாட அடைவு மட்டத்தைப் அதிகரிக்க ஆண்டுதோறும் அரும் பாடுபட்டு உழைத்தவர்.

**ஆங்கில ஆசிரியர் திருமதி யோ.சிவராஜா**

30.04.2010 இல் இங்கு இணைந்து சிறந்த ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றியதுடன் ஆங்கிலதினப் போட்டிகளுக்கு மாணவர்களை தயார்படுத்தும் பணியையும் விருப்போடு செய்து வந்தவர்.

**விஞ்ஞான ஆசிரியர் திரு S.ஜீவானந்தன**

2011.05.27 இல் இங்கு இணைந்து கொண்ட இவர் அவ்வாண்டு முழுவதும் தனி ஒருவராகவே க.பொ.த(சா/த) வகுப்பில் விஞ்ஞானபாட போதனையை நிகழ்த்தி பணிபுரிந்துள்ளார்.

**பௌதீகவியல் ஆசிரியர் திரு அ.யோகீஸ்வரன்**

2013.01.09 இல் இங்கு இணைந்து கொண்ட இவர் பாடபோதனையுடன் விளையாட்டு நிகழ்வுகளுக்கு மாணவரை அழைத்து செல்லும் பணியையும் செய்து வந்துள்ளார்.

இவர்களோடு 2014.01.17 இல் இடம்மாற்றமாகி வந்து சிலகாலம் எம்மோடு பணிபுரிந்த **திரு கிறிஸ்ரிதயாளஜெயன** அவர்களும் **திருமதி அ.மணிசேகர** அவர்களும் இடமாற்றமாகி விட்டனர்.

இவ்வாறே 2014.04.30 இல் இடமாற்றமாகி வந்து இங்கு இணைந்து பணியாற்றிய கணித பாடஆசிரியர் **திருமதி சு.சிவராஜா** அவர்களும் சுய விருப்பில் இடமாற்றமாகி சென்றுள்ளனர்.

இவர்களோடு செல்வி ஸ்ரீஸ்கந்தா. ஸ்ரீரங்கநாயகியும், மயூரதி.மகேந்திரதாஸ், திரு எஸ்.கமலதாஸ் அவர்களும எமது கல்லூரியில் தொண்டராசிரியர்களாக பயன்கருதாது பெரும்பணிபுரிந்து உத்தியோகச் சிறப்புப்பெற்று சென்றுள்ளனர்.

'இவர்கள் யாவரும் சென்ற இடங்களில் சீர்ப்ணிபுரிய இறையருள் பெருகட்டும்".

சோகத்தில் ஆழ்த்திய செய்தி.

2003.07.01 இல் எமது கல்லூரியில் கணிதபாடஆசிரியராக இணைந்து இவ்வாண்டு வரை ஓய்வொழிவு இல்லாது தன்பணியை திறம்பட நிறைவேற்றி வந்த திருமதி **ஜெ.தவலிங்கம** அவர்களின் திடீர் மறைவு எம்மை நீங்காத சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. அவரது கணவரும் பிள்ளைகளும் குடும்பத்தினரும் ஆறுதல் அடைய இறைவனை வேண்டுகின்றோம்.

**கல்வி சாரா ஊழியர்கள.**

கல்லூரியின் அன்றாட செயற்பாடுகள் யாவும் செவ்வனே நிகழ உதவி செய்துவரும் கல்வி சாரா ஆளணியினர் வாழ்விலும் வளம் உண்டாக இறையருள் பொழியட்டும்.

**கல்லூரியின் பௌதீக வள விருத்தி பற்றி நோக்குகையில்**

கல்லூரியில் அமையப் பெற்றிருக்கும் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் வழி பாட்டு மண்டபம் ஒன்று அமையப் பெற்று வருகின்றது. இம் மண்டபத்தினை அமைப்பதற்கென அதிபர் தலைமையில் திருப்பணிச் சபை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. மண்டப நிர்மாணத்திற்கு உதவ விரும்பும் நல்லுள்ளங்கள் திருப்பணிச் சபையுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

1816ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இக் கல்லூரியானது 2016ம் ஆண்டு இரு சகாப்த காலத்தை நிறைவு செய்யவுள்ளது. இந் நிறைவை கொண்டாடும் முகமாகவும் கல்லூரியின் பௌதீக வளத்தினை மேம்படுத்தும் நோக்கமாகவும் "இரு நூற்றாண்டு நிறைவு நினைவு மண்டபமானது" நிர்வாக அலகையும் ஒன்றுகூடல் மண்டபத்தினையும் ஒருங்கிணையப்

பெற்ற வகையில் அனைத்துப் பழைய மாணவர்களின் சங்கங்களின் பெரு முயற்சியினால் கட்டட நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இக் கட்டத்திற்குகாக நிதி உதவி செய்ய விரும்பும் பழைய மாணவர்கள் நலன் விரும்பிகள், கல்லூரி நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டு கின்றேன்.

மேலும் இக் கட்ட நிர் மாணத்திற்கான பூர்வாங்க வேலைகளில் ஏற்பட்ட தடைகளை அகற்றி எமக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த அமைச்சர் கௌரவ கே.என். டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும் இன்றைய பிரதம விருந்தினரும் வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளருமாகிய உயர்திரு எஸ்.சத்தியசீலன் அவர்களுக்கும், இன்றைய சிறப்பு விருந்தினர் வலிகாமம் கல்வி வலய பணிப்பாளருமாகிய உயர்திரு எஸ்.சந்திரராஜா அவர்களுக்கும் கல்லூரிச் சமூகத்தின் சார்பில் குறிப்பார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் கல்லூரியானது நடைமுறையிலுள்ள மகிந்த சிந்தனையின் பொதுக் கொள்கையின் அடிப்படையில் ஆயிரம் இடைநிலை பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளது. இவ் அபிவிருத்தித் திட்டத்தின் ஓர் அங்கமாக மகிந்தோதய ஆய்வுகூடம் வகை - II இக் கல்லூரிக்கு கிடைக்கப் பெற்றுள்ளது. ஆய்வு கூடத்தின் கட்டிட நிர்மாணப் பணிகள் நிறைவுற்ற நிலையில் ஆய்வு கூடம் இன்னும் சில வாரங்களில் மாணவர்களின் பயன்பாட்டிற்காக கையளிக்கப்படும் என்பதனை மகிழ்வுடன் அறியத்தருகின்றேன்.

**கல்விச்சாதனைகள**

**நாளைய உலகு இவர் களிடமே அங்குமிங்கும் அலைந்து திரிவதனால் மட்டும் கல்வியைப் பெற்றுவிட முடியாது** "ஒருவனைப் பற்றி ஓரகத்திரு" என்றாற்போல கல்வியிலும் ஓர் ஆசானது வழிகாட்டலுடன் முயன்று படிப்பதன் வாயிலாக முன்னேறிவிட முடியும் என்பதை ஒவ்வொருவரும் மறந்துவிடக் கூடாது.

கடந்த வருடம் உயர்தரக் கணிதப்பிரிவுலே எமது கல்லூரி மாணவன் **செல்வன் ஸ்ரீ.சுயந்திரன் அவர்கள் மூன்று பாடங்களிலும் அதிவிசேட சித்திகளை** பெற்று மாவட்ட நிலையில் 49 வது நிலையினையும் வென்று பொறியியல் துறைக்கு தெரிவாகி யுள்ளார். இவர் எந்தத் தனியார் கல்வி நிறுவனங்களுக்குமே செல்லாது முற்று முழுதாக கல்லூரிக் கற்கை மூலமே இப்பெறுபேற்றை பெற்றிருப்பதானது சமூகத்தில் எம்கல்லூரி மீதான நம்பிக்கையினை மேலோங்க வைத்துள்ளது.

க.பொ.த (சா/த) பரீட்சையில் 96 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றி 80 வீதமான மாணவர்கள் உயர்தர கற்கைக்கு தகுதி பெற்றிருக்கின்றார்கள். இவர்களில் இரண்டு மாணவர்கள் விழிப்புலவலு

இழந்த மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**உயர்தர மாணவர் மனறம.**

இம்மன்று திரு.ஏ.அனுசாந்தன், திரு.ந.தவசோதிநாதன், திரு சி.சிவசுதன், திரு.L.A.டொமினிக், திரு.நா.புனிததயாபரன்,திரு.ச.முகுந்தன் ஆகியோரது வழிகாட்டலுடன் தலைவர், செயலாளர், பொருளாளர்களாக முறையே மாணவர்கள் ம.நிருசன், சு.றுக்சன்பிரதாப், தி.தினுஷியா ஆகியோரையும் உறுப்பினர்களாக த.லதுர்'ன், ஸ்ரீ.பரணிதரன், பா.தினேஸ், ம.ஸ்ரீசன், ம.றெக்ஸி பிறின்ஸ் ஆகியோரையும் கொண்டு செயற்பட்டு வருகின்றது.

இவ்வாண்டு இரண்டு கருத்த மர்வுகளும் இரண்டு செயற்பாட்டுப் பட்டறைகளும் இவர்களால் நடத்தப்பட்டமை சிறப்பாகும். அத்துடன் வலி வடக்கு பிரதேச செயலக சிறுவர் நன்நடத்தை அதிகாரி திரு.க.வாகீசன் அவர்களாலும் வலிகாமம் கல்விவலய வழிகாட்டல் ஆலோசனையும் பணிப்பாளர் திரு.S.கிருபாகரன் அவர்களாலும் வழிகாட்டல் ஆலோசனைக் கருத்தமர்வுகள் நிகழ்த்துவிக்கப்பட்டன.

இவ்வாறு உயர்தர மாணவர்கள் கல்வியில் மட்டுமன்றி எதிர்கால உலகின் சவால்களுக்கு முகங்கொடுக்குமாறும் வளர்க்கப் படுகின்றனர்.

பாடசாலையின் மேம்பாட்டுக்கு முன்னின்று செயற்பட்டு வரும் பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தின் தலைவராக கல்லூரியின் அதிபர் அவர்களும், செயலாளராக திருமதி தமிழ்வாணி .மயூரன் அவர்களும் பொருளாளராக திரு செ.சிவசுதன் அவர்களும் சிறப்பான பணியை ஆற்றிவருகின்றனர்.

**விளையாட்டுத்துறை**

எமது கல்லூரியின் விளையாட்டுத் துறையைப் பொறுத்த வரையில் மெய்வன்மைப் போட்டிகளில் கோட்ட மட்டத்தில் 12 முதலாம் இடங்களும் 8 இரண்டாம் இடங்களும் 6 மூன்றாம் இடங்களும் கிடைத்ததோடு வலயமட்டத்தில் 3 முதலாமிடங்களும்4 இரண்டாமிடங்களும் 2 மூன்றாமி டங்களும் கிடைக்கப்பெற்றன. அத்துடன் 19வயது ஆண்கள் அணி 4x100m அஞ்சல் ஓட்டப் போட்டியில் வலய மட்டத்தில் முதலாம் இடத்தினைப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

இதுவரை நடைபெற்ற **வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில** கோட்ட மட்டத்தில் இம்முறையும் எமது அணிகள் (15,17,19) வெற்றிக் கிண்ணத்தைத் தமதாக்கின. தொடர்ந்து இடம் பெற்ற வலயமட்டப் போட்டிகளில் 15வயது அணி, 19வயது அணி என்பன முறையே 3ம், 1ம் இடங்களைப் பெற்றுக் கொண்டன. அத்துடன் மாவட்ட மட்டப் போட்டிகளில் 15வயது அணி 2ம் இடத்தினையும் 19வயது அணி 1ம் இடத்தினையும் பெற்றுக் கொண்டதுடன் மாகாணமட்டப் போட்டிகளில் 15வயது அணி 3ம்

இடத்தையும் 19வயது அணி 2ம் இடத்தினையும் பெற்றுத் தேசிய மட்டப் போட்டிகளில் கலந்து திரும்பின.

யாழ் மாவட்ட வலைப் பந்தாட்டச் சங்கம நடாத்திய சுற்றுப் போட்டியில் பெண்கள் வலைப்பந்தாட்ட அணியும், கலப்பு வலைப்பந்தாட்ட அணியும் சம்பியனைத் தமதாக்கின. மேலும் அரியாலை சுதேசிய விளையாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்ட போட்டியிலும் எமது வலைப் பந்தாட்ட அணி 1ம் இடத்தினைப் பெற்றுக் கொண்டமை பாராட்டுக்குரியதே.

2013ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட எறிபந்து சுற்றுப் போட்டியில வலய மட்டத்தில் 19வயது ஆண், பெண் இரு அணிகளும் 1ம், 2ம் இடங்களைப் பெற்றதுடன் மாவட்ட மட்டப் போட்டியில் 1ம், 3ம் இடங்களைப் பெற்றுக் கொண்டன. மேலும் மாகாண மட்டப் போட்டியில் இரு அணிகளும் 3ம் இடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டியில் கலந்து கொண்டன.

ஹொக்கிச் சுற்றுப் போட்டிகளிலும எமது கல்லூரி தனது சாதனையை நிலை நாட்டியது. மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட 19வயது ஆண்களுக்கான போட்டியில் வலயமட்டத்தில் 1ம் இடத்தினைப் பெற்றுக் கொண்டதுடன் மாகாணமட்டத்தில். 2ம் இடத்தினைப் பெற்று தேசிய மட்டப் போட்டிகளிலும் கலந்து கொண்டனர். யாழ்மாவட்ட பாடசாலைகள் கொக்கி சங்கத்தினால் நடாத்தப்பட்ட 15 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான கொக்கிப்போட்டியில் எமது அணி மாவட்ட மட்ட சம்பியனை வென்றமை பாராட்டுதற்குரியது.

எமது கல்லூரியின் 19வயது ஆண்களுக்கான மென்பந்து அணி கோட்டமட்டத்தில் வெற்றியீட்டி வலய மட்டத்தில் 1ம் இடத்தைப் பெற்றதுடன் மாவட்ட மட்டப் போட்டியிலும் கலந்து கொண்டது. மேலும் எமது கல்லூரியின் 15,19 வயது துடுப்பாட்ட அணிகள் இலங்கைப் பாடசாலைகளின் கிரிக்கற் சங்கத்தினால் நடாத்தப்பட்ட போட்டிகளில் கலந்து கொண்டு சிறப்பாக விளையாடின. இதில் 15வயது அணி 1ம் சுற்றில் வெற்றியீட்டி 2ம் சுற்றுப் போட்டிகளில் கலந்து கொண்டமையும் சிறப்புக்குரியதாகும்.

சதுரங்கப் போட்டிகளை எடுத்துக் கொண்டால் 2014ம் ஆண்டிற்கான ஆளுனர் வெற்றிக் கிண்ணத்திற்கான போட்டியில் ஆறு மாணவர்களும் தெரிவு செய்யப்பட்டு மாகாண மட்டப் போட்டிகளிலும் கலந்து கொண்டனர். வலய மட்டப் போட்டிகளில் 16வயது பெண்கள் பிரிவில் செல்வி.சி.மதுசனா வலய சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டமை பாராட்டுக்குரியது.

இணுவில் பொது நூலகத்தினால் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட சதுரங்கப் போட்டியில் 17 மாணவர்கள் வெற்றி

பெற்றனர். இவர்களில் செல்வி.சி.மதுசனா 15வயதுப் பெண்கள் பிரிவில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டதோடு 15வயது ஆண்கள் பிரிவில் செல்வன் சு.கலைநிலவன், செல்வன்.தி.சாருயன் என்போர் முறையே 2ம், 3ம் இடங்களையும், 19வயது பெண்கள் பிரிவில் செல்விகள் ஜெ.சஞ்சிதா, இ.விதுசா, ச.லக்சிகா என்போர் 2ம் இடங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இவ்வாண்டிற்கான வலயமட்ட சதுரங்கப்போட்டிகளில் 15வயது ஆண், பெண், 19வயது ஆண், பெண் பிரிவுகள் பங்கு பற்றியதுடன் 15வயது, 19வயது பெண்கள் பிரிவு அணிகள் 0.5 புள்ளி வித்தியாசத்தில் 3ம் இடத்தினை தவற விட்டிருந்தாலும் இவர்களது ஆற்றல்கள் சிறப்புக்குரியனவே.

மேலும் எமது கல்லூரியில் "சோட்டோகன்" கராத்தே பயிற்சிகள் இவ்வாண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பயிற்றுநர் T.சுரேந்திரன் அவர்களால் இவர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

எமதுகல்லூரியின் மேசைப்பந் தாட்டஅணிகள் கடந்த பல வருடங்களாக வலயமட்டப் போட்டியில் 1ம் இடம் பெற்றுவந்துள்ளன. இம்முறையும் நான்கு அணிகள் போட்டிகளில் வெற்றிபெற்றன. 19 வயதின் கீழ் ஆண்,பெண் அணிகள் வலயமட்டத்தில் 1ம் இடத்தையும், மாகாணமட்டத்தில் 19 வயதின் கீழ் பெண்கள் அணி 1ம் இடத்தையும், 19 வயதின் கீழ் ஆண்கள் அணி 3ம் இடத்தையும் பெற்றன. அதேவேளை 15 வயதின் கீழ் ஆண்,பெண் அணிகள் வலயமட்டத்தில் 2ம் இடத்தையும், மாகாணமட்டத்தில் 15 வயதின் கீழ் ஆண்கள் அணி 2ம் இடத்தையும் பெற்றது. 19 வயதின் கீழ் ஆண்,பெண் அணிகளும், 15 வயதின் கீழ் ஆண்கள் அணியும் தேசியமட்டப் போட்டிகளில் பங்குபற்றியது. 15 வயதின் கீழ் பெண்கள் அணிமாகாணமட்ட போட்டியில் பங்குபற்றியது.

ஆசிய ஜெர்மன் விளையாட்டுத்துறை பரிமாற்றத் திட்டத்தின் கீழ் இலங்கை மேசைப் பந்தாட்ட சங்கத்தினால் 2013 டிசம்பர் 21, 22 ம் திகதிகளில் நடாத்தப்பட்ட அகில இலங்கைரீதியில் தரப்படுத்த லுக்கு உட்படுத்தப் படாதவர் களுக்கான மேசைப்பந்தாட்டப் போட்டியில் செல்வி ஸ்ரீ.சிந்துயா 18 வயதின் கீழ், 21 வயதின் கீழ்மற்றும் பகிரங்கப் பிரிவுஆகிய மூன்றிலும் சம்பியன்களைவென்று அதிசிறந்த மேசைப்பந்தாட்ட ஆற்றல் வெளிப்பாட்டாளருக்கான விருதை வென்றார். இப்போட்டியில் சி.வித்தகன், அ.றொசான்மகாநாம, செல்வி மூ.சங்கீதா ஆகியோர்சிறப்புப் பரிசில் பெற்றனர். Ping pong academy நடாத்திய வடக்குகிழக்கு மாகாணமட்ட மேசைப் பந்தாட்டப் போட்டியில் சி.வித்தகன், ச.தனுசன் ஆகியோர்சிறப்புப் பரிசில் பெற்றனர்.

சுன்னாகம்றோட்டறிக் கழகம் 2014 மே 24ம் திகதிநடாத்திய மாவட்டமட்ட மேசைப் பந்தாட்டப் போட்டியில் 19

வயதின் கீழ் பெண்கள் அணி இரண்டாமிடத்தையும் 19 வயதின் கீழ் ஆண்கள் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டது. யாழ்மாவட்ட மேசைப்பந்தாட்ட சங்கத்தால் யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட மேசைப்பந்தாட்டப் போட்டியில் 19 வயதின் கீழ் பெண்கள் அணி **சம்பியனைப்** பெற்றுக் கொண்டது.

விளையாட்டுத்துறை அமைச்சினால் நடாத்தப்பட்ட மாகாண மட்டப் போட்டியில் முதலிடம் பெற்ற அணியில் ம.தனுஜா, மூ.சங்கீதா, க.கம்சாயினி, சி.வித்தகன், அ.றொசான்மகாநாம, அ.கோகிலசாந்தன் ஆகியோர் இடம் பெற்றதுடன், சி.வித்தகன், அ.றொசான்மகாநாம, அ.கோகிலசாந்தன் ஆகியோர் தேசியமட்டப் போட்டியில் பங்கு பற்றியுள்ளனர்.

இவ்விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியராக திரு ந.செந்தூரன் அவர்களும்,அவருக்கு உதவியாக ஆசிரியர்கள் திரு.நா.புனிததயாபரன், திரு ச.முகுந்தன், திரு சி.சிறிதரன், திரு க.பாலவிசாகன், திருஇ.ரமேஸ்குமார், திரு.செ.சிவசுதன், திரு த.ஸ்ரீபிரகாஸ், ஆகியோரும் ஆசிரியைகளான திருமதி பி.சத்தியசீலன், செல்வி வை.வயித்தி லிங்கம்,திருமதி L.A.டொமினிக், திருமதி லே.சோ.லொயிட், திருமதி ஆ.விமலதாஸன் ஆகியோரும் பயிற்றுநர்களாக திரு க.பிரசாந்தன், திரு எஸ்.ஜான்சன், திரு எஸ்.சுகிர்தன்,திரு டே.டிலிந்தன்,திரு **சி.பவகணேஸ்** ஆகியோரும் சிறப்புற செயற்பட்டு வருகின்றனர். இவர்களது பணிக்கு எனது பாராட்டினை தெரிவித்து கொள்கின்றேன்.

**இந்துமன்றம்**

இக் கல்லூரியில் கல்வி பயிலும் சைவ சிறாரது சமய விழுமியப் பண்பு விருத்தியை நோக்கமாகக் கொண்டியங்கும் **இந்துமாமன்றம** கல்லூரி வளாகத்தினுள் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அன்னை புவனேஸ்வரிக்கு அன்றாடம் பூசை வழிபாடுகளையும், வெள்ளி தோறும் சிறப்பான வழிபாடுகளையும் நிகழ்த்தி வருகின்றது. தைப்பொங்கல், புதுவருடப் பிறப்பு, தீபாவளி, மாதாந்த நட்சத்திரங்களில் அபிஷேக பூசை களையும் தைப்பூசத்திர நாளில் கும்பாவிஷேக தின உற்சவத்தையும் நிகழ்த்திவருகின்றது.

அத்துடன் மாவைக் கந்தன், நகுலேஸ்வரம், திருக்கேதீச்சரம் போன்ற வரலாற்று சிறப்பு மிக்க தலங்களில் பெரு விழாக்களின் போது விழாவை செய்வதுடன் இவ்வாண்டு முதன் முறையாக திருக்கேதீச்சர மகோற் சவத்தில் சேக்கிழார் உற்சவத்தை தனது உற்சவமாக தெரிவு செய்து நிகழ்த்த தொடங்கியது. அத்துடன் திருக்கேதீச்சர மகோற்சவகால திருமுறைவிழாவில் இந்து மன்றத்தின் ஆசிரியர்களும் மாணவர்களும் திருமுறைப் பாராயணம் நிகழ்த்தினர். மேலும் மாவைக் கந்தன்

ஆலய இலட்ச அர்ச்சனையும் மற்றும் இணுவில் காரைக்கால் சிவன் கோவில் மகோற்ச வத்திற்கு திருமுறைப் பாராயணம் திரு.தவசோதிநாதன் அவர்களின் நெறிப்படுத்தலில் இனிதே நிகழ்த்தப் பெற்றது. மேலும் ஆண்டு தோறும் தலயாத்திரைக்கு மாணவர்களை அழைத்தும் செல்கிறது.

அத்துடன் மாவைக் கந்தனின் எமது கல்லூரிக்குரித்தான மகோற் சவத்தின் போது புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தில் இருந்து எமது மன்றத்தின் ஏற்பாட்டில் மாணவிகளின் பாற்குடப் பவனியும் பஜனையும் இனிதே நிகழ்த்தப் பெற்றன. நயினாதீவு நாகபூசணி அம்மனின் உயர்திரு விழாவிற்கு அறங்காவலர் சபையின் வேண்டு கோளிற்கேற்ப மாணவர்களின் இசை அர்ச்சனை ஆலய கலையரங்கில் இனிதே நிகழ்த்தப் பெற்றது. இச் செயற்பாடு தீவக வலயப் பாடசாலைகளுக்கு முன்மாதிரியாகவும் வழிகாட்டலாகவும் அமைந்ததென பலரும் கருத்துத் தெரிவித்தனர்.

மேற்படி மன்றச் செயற் பாட்டிற்கு பொறுப்பாசிரியர்களாக திருவாளர்கள் ச.முகுந்தன், ஏ.அனுசாந்தன், ந.தவசோதிநாதன் ஆகியோரும் செல்வன்கள் ம.சதுர்சன், த.லதுர்சன், செல்வி.ந.விதுஷாயினி ஆகியோர் முறையே தலைவர், செயலாளர், பொருளாளராகவும் இருந்து செயலாற்றுகின்றனர்.

**கிறிஸ்தவமன்றம்**

காலை ஆராதனைகளின் போது தேவகீதங்களை இசைத்தும் இறை வசனங்களை வசனித்தும் வருடாந்தம் ஒளிவிழாவைத் திறம்பட நிகழ்த்தியும் கிறீஸ்தவ பக்தியைப் பரப்பிவருகின்றது. மாதந்தோறும் முதல் வெள்ளி நாள்களில் மல்லாகம் சதாசகாய மாதா கோயிலில் கிறீஸ்தவ மாணவர்களின் நன்மைக்காக வண.பிதா-றெக்ஸ் சௌந்தரா அவர்களால் நிகழ்த்தப்படும் திருப்பலிப்பூசைகளும் குறிப்பிடத் தக்கவை. இந் நிகழ்வில் எம்மாணவர்கள் கலந்து பயன் பெறுகின்றார்கள்.

மன்றப் பொறுப்பாசிரியர்கள் திருமதிகளான ம.மரியமனோகரன், L.S.லொயிட், LA டொமினிக், ந.சஞ்சீபன், மேரிறீதாகிறகோரி, திருபா.வேல்பரன், செல்வி.அ.மிதிலா ஆகியோர் மாணவர்களைத் திறம்பட வழிநடத்திவருகின்றனர்.

மன்றத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர்களாக மாணவர்களாகிய சு.றுக்சன் பிரதாப், ம.றெக்ஸிபிறின்ஸ், டே.றோய்மேவின் ஆகியோர் முறையே பணியாற்றி வருகின்றனர்.

**தமிழ்மன்றம்**

தமிழ்மொழித்திறன்களை விருத்தி செய்யும் நோக்கில் தமிழ் மன்றம் செயற்பட்டு வருகின்றது. இந்த வகையில் தமிழ்மொழித்தினப் போட்டிகள் மற்றும்

தமிழ் மொழித்திறன் சார் போட்டிகள் யாவும் இம் மன்றத்தினூடாகச் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வருடம்(2014) நடைபெற்ற தமிழ் மொழித்தினப் போட்டிகளில் கோட்டமட்டத்தில் 8 முதலிடங்களும் ,8 இரண்டாம் இடங்களும் 6 மூன்றாம் இடங்களும் கிடைக்கப் பெற்றதோடு, வலயமட்டத்தில் 3 முதலாம் இடங்களும்,ஒரு மூன்றாமிடமும் கிடைக்க பெற்றன. மாகாண மட்டத்தைப் பொறுத்தவரையில் 1 இரண்மிடமும் 1 மூன்றாமிடமும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

தமிழ்மொழித்தினப்போட்டிகள் தவிர்நத பிரதேச செயலகத்தினால் சிறுவர்தினம், முதியோர்தினம் ஆகியவற்றில் நடாத்தப்பட்ட போட்டிகளிலும் எமது பாடசாலை குறிப்பிடத்தக்க வெற்றிகளை ஈட்டியது. சிறுவர்தினம் தொடர்பான கட்டுரைப் போட்டியில் பிரிவு – 1 இல் பங்குபற்றிய மாணவன் முதலாம்இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

2014ம் ஆண்டுக்கான தமிழ் மன்றத்தலைவர் செல்வன் இ.கபில்ராஜ், செயலாளர் வி.மயூரதி, பொருளாளராக ர.நந்தினி ஆகியோரும், பொறுப் பாசிரியராக திருமதி ம.முருகமூர்த்தியும், திரு பூ.நகுலனும் செயற்பட்டு வருகின்றனர்.

**கவின்கலைமன்றம்**

கலைத்திறன் போட்டிகளில் மாணவர்களை தேசியம் வரை பங்குகொள்ள வைத்து வெற்றி பெற உழைத்து வருகின்றது கவின்கலை மன்று. இம்மன்றம் தமிழ் மொழித்தின இசை,நடனம்,நாடகம் போன்ற போட்டிகளில் கோட்ட மட்டத்தில் தனிநடனம் II,III,IV ஆகிய பிரிவுகளில் இரண்டாம் இடங்களும், வலயமட்ட தனிநடனப்போட்டியில் பிரிவு III இல் செல்வி செ.சானுஜா முதலாம் இடமும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

கோட்டமட்ட குழுநடனப் போட்டியில் மூன்றாம் இடத்தையும், கோட்ட மட்டத்தில் பிரிவு II இல குழு இசைப் போட்டியில் முதலாம் இடத்தையும், மாகாணமட்ட வில்லுப் பாட்டுப் போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்றமை சிறப்பானதாகும்.

வயாவிளானில் நடைபெற்ற உலக நடனத்தின விழாவிலும் உடுவில் கலாச்சார மண்டபத்திறப்பு விழாவிலும் நடனக்குழுவினர் பங்குபற்றியிருந்தனர். அத்தோடு யோகர்சுவாமிகள் குரு பூஜைத்தின பண்ணிசைப் போட்டியில் செல்வி த.பவதாரணி பரிசு பெற்றமையும், சகலகலாவல்லி மாலை பாடலில் செல்வி ச.நிசாந்தி பரிசு பெற்றமையும் சிறப்பானதாகும். K.K.S படைப்பிரிவு இராணுவத்தினரால் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் நடாத்தப்பட்ட இசைப் போட்டியில் பங்குபற்றி 1ம்

இடத்தினைப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

உலகசிறுவர் தினத்தையொட்டி நடாத்தப்பட்ட "பரிகல்பன" அகில இலங்கை சித்திரப் போட்டியில் பங்குகொண்டதுடன், தரம்-9 இல் வ.உமாசுதன் 1ம் இடத்தையும், தரம் 12 இல் இ.சதுர்சன் 2ம் இடத்தையும், ப.கிஷோக் 3ம் இடத்தையும் பெற்றிருந்தனர்.

அத்தோடு அரச சிறுவர் ஓவிய விழாப்போட்டியில் தரம்-10 வ.உமாசுதன் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டார். அன்பு வாரச்சித்திரப் போட்டியில் ம.றெக்சிபிறின்ஸ், கு.கபில்ராஜ், ப.கிஷோக், இ.சதுர்சன் ஆகியோர் அதில் பரிசு பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு கவின்கலை மன்ற நிகழ்வுகள் சிறப்பான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கவின்கலைமன்ற செயற்பாட்டு முன்னோடிகளாக திருமதிகளான ஜீலம்போதரன், கு.அன்பரசி, ஜெ.சுகிர்தன், வே.வசீகரன்,திருமதி தி.ஜெயக்குமார், வே.சோ.லொயிட், திருவாளர்கள் ந.தவசோதிநாதன் ஆகியோர் செயற்பட்டுவருகின்றனர்.

ஆங்கிலமன்றம்

ஆங்கிலமொழிக்கல்வியின் தேவை உணரப்பட்டநிலையில் அம்மொழி தொடர்பான போட்டிகளில் மாணவர்களை ஈடுபடுத்தி வெற்றிகள் பெற உழைத்து நிற்கின்றது ஆங்கில மன்று. இம்மன்றத்தின் தலைவர் செயலாளர், பொருளாளர்களாக முறையே ம.நிருசன், ஸ்ரீ.சிந்துஜா, S.நிலோஜினி ஆகியோர் பணியாற்றி வருகின்றனர். இம்மன்றமானது மாணவரிடத்தே வெள்ளிதோறும் வினாடிவினாப் போட்டியினை நிகழ்த்தியும் பேசும் ஆற்றலை வளர்த்திடவும் ஆவன செய்து வருகின்றது. இப்போட்டிகளில் சிறப்பாக செயற்பட்டுவரும் மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கிக் கௌரவித்தும் வருகின்றது.

இவ்வாண்டு நடாத்தப்பட்ட ஆங்கிலதினப் போட்டிகளில் கோட்ட மட்டத்தில் 11முதலிடங்களையும், 11இரண்டாம் இடங்களையும், 16 மூன்றாம் இடங்களும்,வலயமட்ட போட்டிகளில் 4 முதலாமிடங்களும்,2 இரண்டாம் இடங்களும்,2 மூன்றா மிடங்களும் கிடைக்கப்பெற்று,6 மாணவிகள் மாகாணமட்டப்போட்டிகளில் கலந்து கொண்டனர்.

இம் மாணவரது உயர்வுக்கும், வெற்றிக்கும் உந்துதல் அளித்து பயிற்சிகளை வழங்கி நிற்கும் ஆசிரியர்கள் செல்வி வ.வயித்திலிங்கம், திரு க.பாலவிசாகன், திரு வை.பிரபாகரன், திருமதிகள் இ.யோகீந்திரன், ந.சஞ்சீபன் ஆகியோருக்கு நன்றிகள் உரித்தாகுக.

**கணித,விஞ்ஞானமன்றம்**

மாணவர்களை வினாடிவினாப் போட்டிகளுக்கு தயார்படுத்தி வெற்றிகோலும் கணித, விஞ்ஞான மன்றம இவ்வருடம் நடைபெற்ற கணிதப்போட்டியில் தரம் - ஒன்பதைச் சேர்ந்த மாணவன் ஜெ.டிலக்சன் கோட்டமட்டத்தில் 3ம் இடத்தை பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்தார். கணிதவிஞ்ஞான மன்றத்தில் தலைவராக செல்வன் பா.தினேஸ் செயலாளராக செல்வி ப.துவாரகா பொருளாளராக செல்வி ஜெ.துஷானி ஆகியோரும் பொறுப்பாசிரியர்களாக திருமதி சா.கிருபாகரன் திரு ந.புனிததயாபரன் திருமதி ஆ.விமலதாசன் திருசி.சிறிதரன், திருமதிம.சிறிகரன்,திருமதி ம.கிருபாகரன் ஆகியோரும் செயற்பட்டு வருகின்றனர்.

**வழிகாட்டிகள் குழுமம்**

வழிகாட்டிகள் குழுவானது 36 உறுப்பினர்களுடன் இயங்கிவருகின்றது. இவ்வருடம் 20 பெண்கள் இணைவு பெறுவதற்கான பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். பாடசாலையில் நடைபெறும் நிகழ்வுகளின் போது தம்மால் இயன்ற பணிகளை செய்து வருவதுடன் சாரணியர் பாசறைகளிலும் பங்கு பற்றி வருகின்றனர். பொறுப்பாசிரியர்களாக திருமதி லே.சோ.லொயிட் திருமதி சா.கிருபாகரன் ஆகியோர் செயற்பட்டு வருகின்றனர்.

**வணிகமன்றம்**

தலைவர், செயலாளர், பொருளாளர்களாக முறையே மாணவர்கள் ம.நிருசன், செ.நிலோஜினி, ம.சிறீசன் ஆகியோரை கொண்டு செயற்படும் மன்றத்தில் இருபிரிவு வணிகத் துறைகளிலுமாக 29 மாணவர்கள் அங்கத்துவம் பெறுகின்றனர்.

இம் மன்றத்தின் அங்கத்தவர்கள் பல்வேறு போட்டிகளிலும் பங்குபற்றி வெற்றியீட்டி யுள்ளனர். அந்த வகையில் இலங்கை தரநிர்ணய நிறுவனத்தால் நடாத்தப்பட்ட போட்டியில் இரண்டு மாணவர்கள் வலயமட்டத்தில் வெற்றிபெற்று மாகாணமட்டப் போட்டியில் பங்கு பற்றினர். அத்துடன் வணிகதினப் போட்டியில் பங்குகொண்டு குறுவினாப் போட்டியிலே வலயமட்டத்தில் 1ம்,2ம் இடங்களைப் பெற்று மாகாணமட்டப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ளனர். கட்டுரை,பேச்சு போட்டியில் கோட்ட மட்டத்தில் மூன்றாம் இடத்தினை பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

2015 உயர்தரப்பிரிவு வணிக மாணவர்கள் "வணிகதீபம்" எனும் சஞ்சிகையை வெளியீடு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இம் மன்றத்தின் பொறுப்பா சிரியர்களாக செல்வி ஜெ.செந்திவேல், திரு.வே.பிரபாகரன், திருமதி சா.சிவநாதன், திருமதி த.ஆனந்தகுமார், திரு செ.சிவசுதன் ஆகியோர் உள்ளனர்.

**மேலைத்தேய வாத்திய இசைக்குழு**

இக்குழு வழமைபோன்று கல்லூரியின் நிகழ்வுகளிலும், கல்லூரிக்கு வெளியே நடைபெறும் நிகழ்வுகளிலும் தனது பங்களிப்பை நல்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

2013ம் ஆண்டு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற .இலங்கை மாணவர் படையணியின் பாடசாலைகளுக் கிடையிலான தரப்படுத்தல் மற்றும் இரண்டு நாள் பயிற்சிகளின் நிறைவில் எமது பாண்ட் அணியானது சிறந்த குழுவாக தெரிவு செய்யப்பட்டது. 2014ம் ஆண்டு மாகாணமட்ட விளையாட்டுப் போட்டியில் பாடசாலைகளுக் கிடையிலான பாண்ட் வாத்திய போட்டியில் எமது பாடசாலை அணியினர் இரண்டாம் இடத்தைப் பெற்றிருந்தனர்.

மற்றும் 2014 ஆம் ஆண்டு மாகாணமட்ட பாடசாலைகளுக் கிடையேயான மெய்வல்லுநர் போட்டிகளில் வரவேற்பு நிகழ்வுக்கு எமது பாடசாலை அணியினரே பாண்ட் வாத்திய இசையை வழங்கியிருந்தனர். 2013 ம் ஆண்டு பிரித்தானிய நாட்டின் பிரதம மந்திரி கௌரவ டேவிட் கமரூன் அவர்களின் இலங்கை விஜயத்தின் போது எமது வலிவடக்கு தெல்லிப்பழை பிரதேச மீள் குடியேற்ற நிகழ்வுகளில் கலந்துகொள்ள வருகைதந்த போது எமது பாடசாலை அணியினரே அவருக்கான வரவேற்பு மரியாதைகளை வழங்கியிருந்தமை குறித்து கல்லூரிச்சமூகம் பெருமை கொள் கின்றது. இப்படியாக நெடுங்காலமாக எமக்கு இருந்துவந்த வாத்திய கருவிகளுக்கான தட்டுப்பாடு தற்போது நீங்கியிருக்கின்றது. எமது கல்லூரியின் பழையமாணவனும் "வனிக்கா மெடிக்கல்" நிறுவன அதிகாரியுமான திருவாளர் எஸ்.கஜன் அவர்கள் தனது சொந்தப்பணத்தில் இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான வாத்தியக் கருவிகளை எமது பாடசாலை பாண்ட் வாத்திய அணிக்காக மனமுவந்து வழங்கியிருந்தார்கள். இதற்கான நன்றிகளையும் கல்லூரி சார்பாக தெரிவித்துக் கொள்கின்றோம். இவற்றுக்கு மேலாக எமது அணியானது சீரான கோலவுடையின்றி தனது செற்பாட்டை வழங்கி வருகின்றமை பெரிதும் வருத்தமளிக்கின்ற விடயமாக உள்ளது.

**இவர்களுக்கான கோலவு டையினை வழங்கி உதவிட உதவும் நெஞ்சங்களை எம் கல்லூரி வேண்டி நிற்கின்றது.** இவ்வணியை நெறிப்படுத்தும் பொறுப்பாசிரியராக திருமதி லே.சோ.லொயிட், மற்றும், செல்வி வ.வயித்திலிங்கம் ஆகியோரும் பயிற்றுநர்களாக எமது பாடசாலை பழைய மாணவர்களாகிய செல்வன் கே.டினா,மற்றும் வி.பிருந்தாபன் ஆகியோர் இவ்வணியை செவ்வனே வளர்த்து வருகின்றார்கள் இவர்களுக்கும் கல்லூரியின் சார்பில் நன்றியை தெரிவிப்பதோடு தொடர்ந்து பங்களிப்பை

வழங்கவேண்டுமென்றும் வேண்டி நிற்கின்றோம்.

**சமூக விஞ்ஞான மன்றம்**

சமூகவிஞ்ஞான அறிவை மாணவர்களிடம் வளர்க்கும் நோக்குடன் இம்மன்றம் செயற்பட்டு வருகின்றது. தலைவர் ச.அனுசாந், செயலாளர் செ.கஸ்தூரி, பொருளாளர் சிவப்பிரியா என்போருடன் ஏனைய நிர்வாக உறுப்பினர்களும் இணைந்து மன்ற வேலைத்திட்டங்களை அமுல் செய்கின்றனர். சமூகவிஞ்ஞானப்போட்டி, அனர்த்த முகாமைத்துவ போட்டிகளுக்காக மாணவர்களை தயார்செய்து அவர்கள் வெற்றி பெறுவதற்கு வழிசமைக்கின்றது. கோட்ட,வலய மட்டங்களில் பலமாணவர்கள் வெற்றி பெற்றிருக்கின்றனர் அனர்த்த முகாமைத்துவப் போட்டியில் செல்வி பா.சஞ்சுகாசினி மாகாண மட்டத்தில் 3ம் இடத்தை பெற்றிருந்தமை குறிப்பிடத் தக்கதாகும்.

**யூனியன்ஸ் விவாதிகள் கழகம்**

மாணவர்களின் விவாதத் திறனையும் சமூகவிஞ்ஞான அறிவையும் விருத்தி செய்யும் நோக்கில் இவ்வாண்டு கல்லூரியில் உருவாக்கப்பட்ட புதிய கழகமாக **"யூனியன்ஸ் விவாதிகள் கழகம்"** திகழ்கின்றது.

இம் மன்றத்தின் பொறுப்பாசிரியராக திரு த.ஸ்ரீப்பிரகாஸ் அவர்களும் தலைவர் செல்வன் பா.தினேஸ், உபதலைவர் செல்வி சி.சிந்துஜா செயலாளர் செல்வன் தி.தனுராஜ் உபசெயலாளர் செல்வன் நா.கபிலன் பொருளாளர் செல்வன் ம.நிருசன் இணைப்பாளர் செல்வன் ம.அஜந்தன் ஆகியோர் செயலாற்றி வருகின்றனர். இம்மன்றத்தினால் இவ்வாண்டில் மேற்கொண்ட செயல்பாடுகளாக விவாதப்பயிற்சிப் பட்டறைகளை நடாத்தியமை, பாடசாலை மட்டத்திலான பொதுஅறிவுப்போட்டிப் பரீட்சைகளை நடாத்தியமை,காலையில் புதினப் பத்திரிகைகள் வாசித்தல் என்பவற்றை நிகழ்த்தி வருகின்றது. அத்துடன் இம்மாதத்தின் "விவாதிகள் விழா" வினை நடாத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இம்மன்றம் அகிலஇலங்கை விவாதிகள் கழகத்தினால் நடாத்தப்பட்ட "**மொழிமுனை**" விவாதப் போட்டியில் 2ம் இடத்தினையும் மொறட்டுவப் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்பட்ட "**தமிழருவி**" விவாதப் போட்டியில் மாவட்டமட்டத்தில் 2ம்இடத்தினையும் சக்தி தொலைக்காட்சியினால் நடாத்தப்பட்ட "**மண்வாசனை**" விவாதப் போட்டியில் 3ம் இடத்தையும் பெற்றுக்கொண்டது.

**உளநல மன்றம்**

இம்மன்றத்தின் தலைவராக செல்வன் ம.நிருசனும் செயலாளராக செல்வி சி.சிந்துஜா அவர்களும் பொருளாளராக செல்வன் ம.சிறிசனும் மற்றும் உறுப்பினர்களாக செல்வன். கபிலன், செல்வன் பா.துர்க்காராஜ் அவர்களும் உள்ளனர். மேலும்

இம்மன்றத்தின் பொறுப்பாசிரியர்களாக திருமதி த.ஜெயக்குமார், திரு இ.ரமேஸ்குமார்,திரு ந.செந்தூரன், திருமதி த.கோணேஸ்வரா,திருமதி ஜீ.லம்போதரன் அவர்களும் மன்ற செயற்பாட்டுக்கு உறுதுணையாக உள்ளனர்.

இம்மன்றத்தின் செயற்பாடுகளாக மாணவர்களுக்கு நற்சிந்தனைகளை வழங்குவதன் மூலம் நல்வழிப் படுத்தபடுகின்றனர். மேலும் மனவளக்கலை மன்றத்தினராலும் தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையின் சுகாதாரப் பிரிவினராலும் யோகாசனப்பயிற்சி நடாத்தப்பட்டு மாணவர்கள் வழிப்படுத்தப்பட்டனர்.

மாணவர்களிடையே இனங் காணப்பட்ட பிரச்சனைக்குரிய ஆற்றுப்படுத்தல்கள் மேற் கொள் ளப்பட்டன. திரு இ.ரமேஸ்குமார் ஆசிரியர் தேவையேற்படும் போ தெல்லாம் மாணவர்களுடைய வீடுகளுக்கு சென்று அவர்களுடைய குறைகளை அறிந்து அப் பிரச்சனைகளை தீர்ப்பதன் மூலம் அம்மாணவர்களை நல் வழிப்படுத்து கின்றார். மாணவர்கள் உரிய நேரத்திற்கு வருகை தருதல், வரவு ஒழுங்கு, ஓய்வு நேரப்பயன்பாடு, மாணவர்களது உடல், உள ஆரோக்கிய செயற்பாடு போன்றவற்றில் கவனம் எடுக்கப் படுகின்றது. மாணவர் துஷ்பிரயோகம், வீதி ஒழுங்கு போன்ற விடயங்களில் மாணவர்களுக்கு அவ்வப்போது தெல்லிப்பழை பொலிஸ்பிரிவு உத்தி யோகத்தர்கள், வலயக்கல்வி பணிமனையில் இருந்து திருச.கிருபானந்தன், திருமதி பி.அம்பிகைபாகன், திருமதி. கி.கமலராணி ஆகியோர் கருத்துரை களையும் ஆலோசனைகளையும் வழங்கியுள்ளனர்.

"**அன்பின் பள்ளிக்கூடம்**" நிகழ்வில் எமது கல்லூரி கலந்து கொண்டு குருநாகல் மாவட்டத்திலுள்ள S.B Herath National School உடன் கல்வி அமைச்சினால் இணைக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

**சுகாதாரக்கழகம்.**

பாடசாலையினது சுற்றுச் சூழலுக்கும் மாணவர் தம் உடல்,உள ஆரோக்கியத்திற்கும் பங்களிப்பு நல்கும் இக்கழகமானது பாடசாலையின் சுத்தம்,மாணவர்களின் சுத்தம், போசாக்கு தொடர்பான செயற்பாடுகளை முன்னெடுத்து நிகழ்த்துகின்றது. மேலும் இக்கழக வழிகாட்டிகளாக திருமதி தி.ஜெயக்குமார் ,திருந.செந்தூரன் திருமதி த.கோணேஸ்வரா ஆகியோர் செயற்படுகின்றனர்.

சுகவாழ்வுப்பேரவை நடாத்திய கட்டுரைப் போட்டியில் செல்வி ச.துவாரகா,செல்வி க.பிரவீனா ஆகியோர் பங்குபற்றினர் இவர்களது கட்டுரைகள் சிறந்த கட்டுரைகளாக தெரிவுசெய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டன. இதற்கு பக்கபலமாக மேரிறீதாகிறகோரி ஆசிரியர் அவர்கள் இருந்து செயற்பட்டார்.

மேலும் வலயக்கல்வி அலுவலகத்தால் சுகாதாரம், நீர் போசாக்கு தொடர்பாக நடாத்தப்பட்ட பரீட்சையில் எமது பாடசாலை மாணவர்களும் பங்குபற்றினர்.

எமது கழகமானது இனிவரும் காலங்களில் மேலும் வினைத்திறனுடன் செயற்படும் என்பதை இக்கழகத்தின் சார்பாக தெரிவித்துகொள்கின்றேன்.

**தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பமன்றம்.**

மாணவர்களை "உலமயமாதல்" எண்ணகருவுக்கமைவாக புதிய உலகுக்குள் கொண்டுவரும் மன்றமாக தகவல் தொடர்பாடல் மன்றம் இயங்கிவருகின்றது. தலைவர் செல்வன் தனுராஜ் செயலாளர் பிரசாலினி பொருளாளர் செல்வன் ம.நிரு'ன் ஆகியோரைக் கொண்டு செயலாற்றி வரும் மன்றம் இதுவாகும். இம்மன்றத்தின் பொறுப்பாசிரி யர்களாக திருமதி ம.ஜெகரூபன், திருவை.பிரபாகரன் ஆகியோர் இருந்து வருகின்றனர். இம்மன்றத்தினூடாக வலயமட்டத்தில் நடைபெறும் போட்டிகளில் மாணவர் பங்கு பற்றுகின்றனர்.

பாடசாலையின் முழுத் தோற்றத்தினையும், பாடசாலையின் அனைத்து செயற்பாடுகளையும் படங்கள், அசைவூட்டங்கள் சலனப் படங்கள் உள்ளடங்கலாக வெளிக் கொணரும் வகையில் இணையத்தளம் ஒன்று வெளியிடப்பட்டது. இதனை திரு வை.பிரபாகரன் அவர்கள் பொறுப்பாக நின்று நெறிப்படுத்தி வருகின்றார். இம்மன்றமானது இனிவரும் காலங்களில் மிகவும் சிறப்பாக செயல்படும் எனவும் கூறுகின்றோம்.

**சாரணியப்படையணி**

மாணவர்களிடையே ஆளுமைப் பண்பையும் சமூகப் பொறுப்பையும் ஏற்படுத்தும் நோக்காகக் கொண்டு கல்லூரியின் சாரணியப்படையணி செயற்பட்டு வருகின்றது. கல்லூரியால் படையணி ஆரம்பிக்கப்பட்டு 75ம் ஆண்டினை நிறைவு செய்துள்ளது. இவ்வாண்டு புதிய சாரணர்கள் இணைக்கப்பட்டு 54 பேர் படையணியில் உள்ளனர். பாடசாலையினதும் சமூக அமைப்புக்களினதும் நிகழ்வுகளிலும் தமது கடமையை சிறப்பாக செய்வதோடு பாடசாலை நுழைவாயிலில் வீதிப் போக்குவரத்துக் கடமையையும் பொறுப்பேற்றுள்ளனர். சாரணர் தலைவராக ம.துஷிகன் அவர்களும் பொறுப்பாசிரியர்களாக திரு.க. பாலவிசாகன், திரு.வி.பிரபாகரன், திரு.த.ஸ்ரீபிரகாஸ் ஆகியோர் செயற்பட்டு வருகின்றனர்.

**விசேடகல்வி**

எமது பாடசாலையில் விசேடகல்வி அலகு சிறப்பாக செயற்பட்டு வருகின்றது. விசேட தேவையுடையோரை இனங்கண்டு அவர்களுக்கான விசேட கல்வித் தேவையைப் பூர்த்தி செய்யும்

பணியை இவ்வலகு திறம்பட நிறைவேற்றி வருகின்றது.

பார்வைக்குறையுள்ள "பிறைல்" பயன்படுத்தும் மாணவர்களைச் சிறப்புறக் கையாளும் இக்கல்லூரி "உட்படுத்தல் கல்வித் திட்டம்" எனும் செயற்பாட்டை சிறப்புறச் செய்து பல வெற்றிகளையும் கண்டுள்ள தென்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

விசேட கல்வி அலகினூடாக பார்வைக் குறைபாடு (பிறெயில் பயன்படுத்துவோர்), கேட்டல் பேச்சுக் குறைபாடு,குற்றி எழுத இயலாமை, உடலியற் குறைபாடு, மற்றும் பல்வித இயலாமைகள் என்ற வகுதிகளுக்குள் அடக்கப்பட்ட 17 மாணவர்கள் இவ்வாண்டு விசேட கல்வி அலகின் செயற்பாடுகளை சிறப்புறப் பெற்று வருகினறனர்.

இவர்களுக்கான கற்பித்தற் பணியை திரு.வி.விஷ்ணுகரன், செல்வி.பா.மயூர்தா ஆகியோர் நிகழ்த்தி வருகின்றனர்.

இவ் விசேட கல்வியலகின் சிறந்த செயற்பாட்டுக்கு எடுத்துக்காட்டாக கடந்த O/L பரீட்சைப் பெறுபேறுகள் விளங்குகின்றன.

**சுற்றாடல் முன்னோடிக்குழு**

இக்குழு அங்கத்தவர்கள் சுற்றாடல் முன்னோடிக்குழு அங்கத்தவர்கள் ஒன்றிணைந்து பாடசாலை சூழலில் சிரமதானத்தின் மூலம் பாதினியம் போன்ற செடிகளையம் மற்றும் பற்றைகளையும் அவ்வப்போது அழித்து வருகின்றனர்.

மேலும் அருமையான மூலிகைத் தோட்டம் ஒன்றை பராமரித்தும் சுற்றாடலை அழகுபடுத்தும் பூங்கன்றுகளை வளர்த்தும் பணியாற்றி வருகின்றனர். இதில் தரம்- 6,7 வகுப்பை சார்ந்த மாணவர்களும் பொறுப்பாசிரியர்களாக திரு த.இராஜரட்ணம், திருமதி ஜீ.லம்போதரன்,திருமதி வா.ஜெயபாலன் ஆகியோர் செயற்பட்டுவருகின்றனர்.

**தொழில்நுட்ப மன்றம்**

இவ்வாண்டுமுதல் எமது பாடசாலையில் தொழில்நுட்பமன்றம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அம்மன்றத்தில் பிரயோகத்தொழில் நுட்பத்திறன், விவசாயம், மனைப்பொருளியல், வடிவமைப்பு தொழில் நுட்பவியலும், பொறி முறைத்தொழில் நுட்பம், விவசாயமும் உணவுத்தொழில் நுட்பம் முதலான பாடங்களை கற்கும் மாணவர்கள் அங்கத்தவம் பெறுகின்றனர. இம்மன்றத்தின் தலைவராக செல்வன் ப.டயசன் அவர்களும் செயலாளராக செல்வி ஆ.கௌசல்யா அவர்களும் ஏனைய நிர்வாக உறுப்பினர்களாக செல்வன் க.விதுர்சன், கே. திருமாவளவன், அ.விதுர்சன், ஆ.கபிலாயன், இ.அனோயன், க.பிருந்தாபன், செல்விகள் ஆ.அபிலாசினி,

க.பிரவீனா, விஷ்ணுகா ஆகியோர் செயற்பட்டு வருகின்றனர்.

இம்மன்றத்தின் பொறுப்பாசிரியர்களாக திரு ந.ஆனந்தகுமார், திருக.மோகனரஞ்சன், திருமதி வா.ஜெயபாலன்,செல்வி மேரிறீதா கிறகோரி ஆகியோர் செயற்படுகின்றனர்.

இவ்வாண்டு முதல் எமது கல்லூரியில் க.பொ.த(உ/த) கலைப் பிரிவு மாணவர்களுக்கு வன்தொழில் நுட்ப பாடப்பிரிவான பொறிமுறைத் தொழில் நுட்பவியலும், மென்தொழில் நுட்பபாட பிரிவான விவசாய உணவுத்தொழில் நுட்பவியலும், தரம்-10மாணவர்களுக்கு வடிவமைப்பும் தொழில் நுட்பவியலும் போன்ற தொழில்நுட்ப பாடங்களும் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இனிவரும் ஆண்டில் எமது கல்லூரி “ஆயிரம் பாடசாலை திட்டத்தில்” இணைக்கப் பட்டிருப்பதனால் வருகின்ற ஆண்டு தொழில்நுட்பபாடம் சிறப்பாக ஆரம்பிக்கபடவுள்ளமையை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

பாடசாலையின் செயல்பாடுகள் ஒவ்வொன்றிலும் தங்கள் பங்களிப்பினை தப்பாமல் ஆற்றி நம் உயர்வுக்கு உதவிவருகின்ற பழையமாணவர் சங்கத்தின் தலைவராக திரு சோ.சுகிர்தன் அவர்களும் செயலாளராக திரு வி.பாலேந்திரா அவர்களும் பொருளாளராக திரு எஸ்.நந்தீஸ் அவர்களும் பணியாற்றி வருகின்றனர்.

**ஆசிரியர் கழகம்**

ஆசிரியர்களின் நலன்களை பேணுவதற்காகவும் அவர்களின் குடும்ப நிகழ்வுகளில் கலந்து தேவையறிந்து சேவையாற்றி வருகின்ற இக்கழகத்தின் தலைவராக திரு ந.தவசோதிநாதன் அவர்களும் செயலாளராக திரு வை.பிரபாகரன் அவர்களும், பொருளாளராக திரு பா.வேல்பரன் அவர்களும் திறம்பட பணியாற்றி வருகின்றனர்

**நன்றிக்குரியோர்கள்**

இன்றைய பரிசுத்தினம் இனிதே நிகழ்ந்திட கல்லூரியின் பெருமை யோங்கிட **ஆசிநல்கும் இறைவனுக்கும், பெரியோர்களுக்கும் எமது முதற்கண் நன்றிகள்.**

சிரமம் நோக்காது குறுகிய கால அழைப்பினை ஏற்று பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினராகவும் கௌரவ விருந்தினர்களாகவும் வருகை தந்து எம்மைக் களிப்பில் ஆழ்த்தியுள்ள பெரியோர்களுக்கு எமது மனமார்ந்த நன்றி.

கல்லூரி கடமைகள் செம்மையுற நிறைவேற உதவி வரும் பிரதி அதிபர், உப அதிபர், பகுதித்தலைவர்கள், ஆசிரியர்கள், கல்வி சாரா ஆளணியினர் யாவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

இன்றைய “யூனியன்ஸ் சிறப்புமலர்” வெளியீட்டிற்கு ஆசிச் செய்திகளையும் வாழ்த்துச்

செய்திகளையும் விளம்பரங்களையும் தந்துதவிய அனைவருக்கும் எமது நன்றிகள் பற்பல.

ஞாபகார்த்தப் பரிசில்களை வழங்கியோருக்கும்,தனிப்பட்டரீதியில் அன்பளிப்புக்களை வழங்கியோருக்கும் பரிசளிப்பு விழாவிற்கு பண உதவி வழங்கியோருக்கும் மற்றும் யாவருக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

மலரினை உரியகாலத்தில் அச்சிட்டு வெளியிட உதவிய "வைரஸ்" பதிப்பக உரிமையாளருக்கும் மற்றும் யாவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

மேலும் இன்றைய நன்நாளில் இங்கு வருகைதந்து எம்மை மகிழ்வித்த அயற்பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் எமது முன்னாள் ஆசிரியர்கள், பழையமாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், யாவருக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலை தெரிவித்துக் கொள்கின்றோம்.

# பெருவிளையாட்டு அணிநிலைகள்

| நிகழ்ச்சிகள் | | | கோட்டம் | | | வலயம் | | | மாவட்டம் | | | மாகாணம் | | | தேசியம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண்டு | அணி | U15 | U17 | U19 | U15 | U17 | U19 | U15 | U17 | U19 | U15 | U17 | U19 | |
| வலைப்பந்து | 2006 | | 1 | 1 | 1 | 1 | 2 | 1 | | 2 | 1 | | 1 | 1 | |
| | 2007 | | 1 | 1 | 1 | 1 | 1 | 3 | | 1 | | * | * | * | |
| | 2008 | | 1 | 1 | 1 | | | 1 | | | 1 | | | 2 | |
| | 2009 | | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | |
| | 2010 | | 1 | 1 | 1 | 2 | 1 | 1 | | 1 | 1 | | 1 | 1 | |
| | 2011 | | 1 | 1 | 1 | | 3 | 1 | | 2 | 1 | | 3 | 1 | |
| | 2012 | | 2 | 1 | 1 | | 2 | 1 | | | 1 | | | 1 | |
| | 2013 | | 1 | 1 | 1 | | 2 | 1 | | 2 | 1 | | 2 | 1 | |
| | 2014 | | 1 | 1 | 1 | 3 | | 1 | 2 | | 1 | 3 | | 2 | |
| மேசைப்பந்து | 2006 | ஆண் | | | | | | 1 | | | | | | | |
| | | பெண் | | | | | | 1 | | | 1 | | | 2 | |
| | 2007 | ஆண் | | | | | | 1 | | | 3 | | | | |
| | | பெண் | | | | | | 1 | | | 1 | | | | |
| | 2008 | ஆண் | | | | | | 1 | | | | | | | |
| | | பெண் | | | | | | 2 | | | 2 | | | 2 | |
| | 2009 | ஆண் | | | | | | 1 | | | 3 | | | | |
| | | பெண் | | | | | | 1 | | | 2 | | | 2 | |
| | 2010 | ஆண் | | | | | | 1 | | | 2 | | | | |
| | | பெண் | | | | | | 1 | | | 2 | | | 2 | |
| | 2011 | ஆண் | | | | | | 1 | | | 2 | | | | |
| | | பெண் | | | | | | 1 | | | 1 | | | 1 | |
| | 2012 | ஆண் | | | | 2 | | 1 | | | 2 | | | | |
| | | பெண் | | | | 1 | | 1 | 1 | | 3 | 2 | | 1 | |
| | 2014 | ஆண் | | | | 2 | | 1 | | | | 2 | | 3 | |
| | | பெண் | | | | 2 | | 1 | | | | | | 1 | |
| கொக்கி | 2006 | ஆண் | | | | | | 1 | | | 3 | | | | |
| | 2007 | ஆண் | | | | | | 1 | | | 1 | | | | |
| | 2010 | ஆண் | | | | | | 1 | | | 1 | | | | |
| | 2012 | ஆண் | | | | | 2 | | | 2 | | | 2 | | |
| | 2014 | ஆண் | | | | | 1 | | | | | | 2 | | |
| உதைபந்து | 2006 | ஆண் | | 2 | | | 1 | | | 2 | | | | | |
| | 2007 | ஆண் | | | | 2 | | | | 1 | | | | | |
| | 2010 | ஆண் | | | | | | | | | | | | | |
| | 2014 | ஆண் | | | 1 | | | | | | | | | | |

| | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| துடுப்பாட்டம் | 2007 | | | | 1 | | | 3 | | | | | | | |
| | 2008 | | | | 3 | | | | | | | | | | |
| | 2009 | | | | 1 | | | 3 | | | | | | | |
| | 2012 | | | | | | | 2 | | | | | | | |
| | 2014 | பெண் | 3 | | | | | | | 3 | | | | | |
| எறிபந்து | 2014 | ஆண் | | | | | | 1 | | | 3 | | | 3 | |
| | | பெண் | | | | | | 1 | | | 1 | | | 3 | |

# பாடரீதியாக்வை

| நிகழ்ச்சி | இடம் | 2009 | | | | | 2010 | | | | | 2011 | | | | | 2012 | | | | | 2013 | | | | | 2014 | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | கோட்டம் | வலயம் | மாவட்டம் | மாகாணம் | தேசியம் | கோட்டம் | வலயம் | மாவட்டம் | மாகாணம் | தேசியம் | கோட்டம் | வலயம் | மாவட்டம் | மாகாணம் | தேசியம் | கோட்டம் | வலயம் | மாவட்டம் | மாகாணம் | தேசியம் | கோட்டம் | வலயம் | மாவட்டம் | மாகாணம் | தேசியம் | கோட்டம் | வலயம் | மாவட்டம் | மாகாணம் | தேசியம் |
| விஞ்ஞானம் | 1 | 3 | 1 | | | | 1 | | | | | | | | | | 1 | | | | | | | | | | | | | | |
| | 2 | | | | | | 2 | 1 | | | | | | | | | 1 | | | | | 1 | | | | | | | | | |
| | 3 | | | | | | 1 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| கணிதம் | 1 | 1 | | | | | 1 | | | | | | | | | | 1 | | | | | | | | | | | | | | |
| | 2 | 2 | 1 | | | | 2 | | | | | 2 | | | | | 1 | 1 | | | | | | | | | | | | | |
| | 3 | 2 | 1 | | | | 2 | | | | | 2 | 2 | | | | 1 | | | | | | | | | | | | | | |
| வணிகம் | 1 | 2 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | 5 | 2 | | | |
| | 2 | | | | | | | | | | | | | | | | 3 | | | | | 3 | | | | | | 2 | | | |
| | 3 | 1 | | | | | | | | | | | | | | | 2 | 1 | | | | 2 | 1 | | | | 3 | | | | |
| மனைப் பொருளியல் | 1 | 1 | | | | | 1 | | | | | 1 | 1 | | | | 3 | 1 | | | | 3 | 1 | | | | 1 | 1 | | | |
| | 2 | 1 | | | | | 2 | | | | | 2 | | | | | | | | | | | | | | | | | | | |
| | 3 | 1 | | | | | 1 | | | | | 1 | | | | | | | | | | | | | | | 1 | | | | |
| சமூக விஞ்ஞானம் | 1 | | | | | | | | | | | 6 | 4 | 1 | | | 5 | 2 | | | | 5 | 2 | | | | | | | | |
| | 2 | | | | | | | | | | | 6 | 1 | 1 | | | 5 | 5 | | | | 5 | 5 | | | | | | | | |
| | 3 | | | | | | | | | | | 3 | 1 | | | | 3 | 1 | | | | 3 | 1 | | | | | | | | |

# ஆங்கில தினம்

| நிகழ்ச்சி | இடம் | 2006 | | | | | 2007 | | | | | 2008 | | | | | 2009 | | | | | 2010 | | | | | 2011 | | | | | 2012 | | | | | 2013 | | | | | 2014 | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | கோட்டம் | வலயம் | மாவட்டம் | மாகாணம் | தேசியம் | கோட்டம் | வலயம் | மாவட்டம் | மாகாணம் | தேசியம் | கோட்டம் | வலயம் | மாவட்டம் | மாகாணம் | தேசியம் | கோட்டம் | வலயம் | மாவட்டம் | மாகாணம் | தேசியம் | கோட்டம் | வலயம் | மாவட்டம் | மாகாணம் | தேசியம் | கோட்டம் | வலயம் | மாவட்டம் | மாகாணம் | தேசியம் | கோட்டம் | வலயம் | மாவட்டம் | மாகாணம் | தேசியம் | கோட்டம் | வலயம் | மாவட்டம் | மாகாணம் | தேசியம் | கோட்டம் | வலயம் | மாவட்டம் | மாகாணம் | தேசியம் |
| | 1 | 2 | | | | | 2 | 2 | | | | 6 | 1 | | | | 4 | 1 | | | | 4 | | | | | 4 | 3 | | | | 3 | 1 | | | | 3 | | | | | 6 | 4 | | | |
| | 2 | 1 | 1 | | | | 3 | | | | | 4 | 1 | 1 | 1 | | 4 | | | | | 3 | 1 | | | | 2 | 1 | | | | 3 | | | | | | 1 | | | | 5 | 2 | | | |
| Copy Writing | 3 | 1 | | | | | 6 | 1 | 1 | | | 5 | 1 | | | | 1 | 1 | | | | | 2 | | | | 3 | | | 1 | | 4 | | | | | 2 | 1 | | | | 5 | 2 | | | |
| | 1 | 2 | | | | | 1 | | | | | 1 | | | | | 2 | | | | | 1 | | | | | 1 | | | | | 1 | | | | | | | | | | 2 | | | | |
| | 2 | 1 | 1 | | | | 2 | | | | | 3 | | | | | 1 | | | | | 3 | | | | | 2 | | | | | | | | | | 1 | | | | | | | | | |
| Recitation | 3 | 2 | | | | | 4 | | | | | 3 | | | | | 2 | | | | | 1 | | | | | 2 | | | | | 3 | | | | | 1 | | | | | 1 | | | | |
| | 1 | 2 | | | | | 3 | 1 | | | | 3 | | | | | 5 | | | | | 2 | | | | | 2 | | | | | 2 | 1 | | | | 1 | | | | | | | | | |
| | 2 | 4 | | | | | 2 | 2 | | | | 3 | | | | | 5 | | | | | 3 | | | | | 2 | | | | | 1 | | | | | 2 | | | | | 2 | | | | |
| Dictation | 3 | 3 | | | | | 3 | | | | | 1 | 1 | | | | 1 | | | | | 2 | | | | | | | | | | 2 | | | | | 2 | | | | | 1 | | | | |
| | 1 | 2 | | | | | 2 | | | | | | | | | | 2 | | | | | 1 | | | | | 2 | | | | | 2 | 1 | | | | 1 | | | | | | | | | |
| | 2 | 3 | | | | | 3 | | | | | 3 | | | | | 1 | | | | | 2 | | | | | 2 | | | | | | | | | | 1 | | | | | | | | | |
| Creative Writing | 3 | 3 | | | | | 1 | 1 | | | | 4 | 1 | | | | 5 | | | | | 3 | | | | | 1 | | | | | | | | | | 3 | | | | | 3 | | | | |
| | 1 | | | | | | 2 | 1 | | | | 1 | | | | | 2 | | | | | 1 | | | | | 2 | | | | | 1 | | | | | | | | | | 1 | | | | |
| | 2 | 2 | | | | | 1 | | | | | 1 | | | | | 2 | | | | | 1 | | | | | 2 | | | | | 1 | | | | | 2 | | | | | 1 | | | | |
| Oratory | 3 | 2 | | | | | | | | | | 1 | | | | | | 1 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | 1 | | | | |
| | 1 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | 2 | | | | | | | | | | 1 | | | | | | | | | |
| | 2 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | 2 | | | | | 2 | | | | | | | | | | 1 | | | | |
| Story telling | 3 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | 2 | | | | | | | | | | | 1 | | | | 1 | | | | |
| | 1 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | 2 | | | | | | | | | |
| | 2 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | 1 | | | | | | | | | |
| Group Event | 3 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | 5 | | | | | | | | | |
| | 1 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | 1 | | | | |
| | 2 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| News reading | 3 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | 1 | | | | |
| | 1 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | 1 | | | | |
| | 2 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | 2 | | | | |
| Role play | 3 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | 3 | | | | |

## தரம் 9 மாகாணமட்டப் பரீட்சை பெறுபேறுகள் (சதவீதத்தில்)


| பாடம் | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|---|---|---|
| தமிழ் மொழி | 100 | 100 | 95.5 | 100 | 100 | 100 | 96.4 | 98 |
| ஆங்கிலம் | 62.7 | 100 | 22.4 | 57.5 | 26.66 | 53.4 | 26.7 | 27 |
| விஞ்ஞானம் | 100 | 52.63 | 85.5 | 100 | 100 | 100 | 41.86 | 45 |
| கணிதம் | 98.9 | 94.73 | 94.4 | 89.5 | 42.66 | 55.6 | 53.48 | 67 |
| சமூகக்கல்வியும் வரலாறும் | 100 | 97.89 | 84.4 | 78.3 | 80 | 92 | 30.23 | 42 |
| புவியியல் | | 96.84 | 100 | 97.2 | 100 | 98.8 | 68.6 | 67 |
| குடியுரிமை | | 94.73 | 100 | 100 | 100 | 100 | 77.9 | 61 |
| சுகாதாரமும்,உடற்கல்வியும் | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 98.88 | 96 |
| சைவசமயம் | 100 | 100 | 100 | 100 | 98.5 | 100 | 53.01 | 96.6 |
| றோமன் கத்தோலிக்கம் | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |
| றோமன் க. அல்லாதது | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |
| சித்திரம் | 100 | 96.87 | 100 | 80.7 | 70.37 | 80 | 93.3 | 100 |
| நடனம் | 100 | 100 | 89.47 | 94.1 | 100 | 95 | 81.25 | 87.5 |
| சங்கீதம் | 100 | 100 | 100 | 94.5 | 100 | 86.3 | 61.9 | 88.88 |
| நாடகம் | | | | | | 100 | 78.78 | 88.7 |
| செயன்முறைத்தொழில்நுட்பம் | | | | | | | | 82 |


# தமிழ் மொழி கலைத்திறன் போட்டி


| நிகழ்ச்சி | இடம் | 2008 | | | | | 2009 | | | | | 2010 | | | | | 2011 | | | | | 2012 | | | | | 2013 | | | | | 2014 | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | கோட்டம் | வலயம் | மாவட்டம் | மாகாணம் | தேசியம் | கோட்டம் | வலயம் | மாவட்டம் | மாகாணம் | தேசியம் | கோட்டம் | வலயம் | மாவட்டம் | மாகாணம் | தேசியம் | கோட்டம் | வலயம் | மாவட்டம் | மாகாணம் | தேசியம் | கோட்டம் | வலயம் | மாவட்டம் | மாகாணம் | தேசியம் | கோட்டம் | வலயம் | மாவட்டம் | மாகாணம் | தேசியம் | கோட்டம் | வலயம் | மாவட்டம் | மாகாணம் | தேசியம் |
| மொழித்திறன் | 1 | 4 | 3 | | 1 | | 4 | 3 | 2 | 2 | | 4 | 3 | 2 | 1 | | 4 | | | | | 2 | 1 | | | | 2 | 2 | | | | 1 | | | | |
| | 2 | 1 | 1 | 1 | | | | | | | | | 1 | | | | | 2 | | | | 2 | | | | | 1 | | 1 | | | 3 | 1 | | | |
| | 3 | | | 1 | | | 2 | | 1 | | | 2 | | | | | 3 | 1 | | | | 1 | 2 | | | | 2 | | | | | 3 | | | | |
| பேச்சு | 1 | | | | | | 1 | | | | | 1 | 1 | 1 | | | | | | | | | | | | | | | | | | 2 | | | | |
| | 2 | | | | | | 1 | | | | | | | | 1 | | 1 | | | | | | | | | | 1 | | | | | | 1 | | | |
| | 3 | 3 | | | | | | 1 | | | | 1 | | | | | 3 | | | | | 3 | | | | | 1 | | | | | | | | | |
| பாவோதல் | 1 | 1 | 1 | 1 | 1 | | 2 | 2 | | | | 2 | 1 | | | | 1 | 1 | 1 | 1 | | 1 | 1 | 1 | 1 | | 3 | | | | | | | | | |
| | 2 | 1 | | | | | | | | | | 1 | 1 | | | | 1 | | | | 1 | | | | | 1 | | | | | | 2 | | | | |
| | 3 | | | | | | 1 | | 1 | | | | | | | | 1 | | | | | | | | | | | 1 | | | | | | | | |
| இசை | 1 | 3 | 2 | 1 | | | 3 | 1 | | | | | | 2 | | | 1 | 1 | | | | 1 | 1 | | | | 2 | 2 | | | | 1 | | | | |
| | 2 | 1 | | | 1 | | | 1 | 1 | | | | | 1 | | | 2 | | 1 | | | 2 | | 1 | | | | | | | | | 1 | | | |
| | 3 | | 1 | 1 | | | | | | | | | | | | 1 | | | | | | | | | | | | | 2 | | | 1 | | | | |
| நடனம் | 1 | 2 | | | | | 2 | | | | | 1 | | | | | 1 | | | | | | | | | | 1 | | | | | | 1 | | 1 | |
| | 2 | 1 | 1 | | | | 1 | 1 | | | | 3 | | | | | 1 | 1 | | | | | 1 | | | | 2 | 2 | | | | 3 | | | | |
| | 3 | 1 | 1 | | | | 1 | | | | | | | | | | 2 | | | | | 2 | | | | | 1 | | | | | | | | | |
| குழு | 1 | 1 | 1 | 1 | | | 3 | 3 | 2 | 2 | | 3 | | | | | 1 | 2 | | | | 1 | 2 | | | | 5 | | | | | 4 | 1 | | | |
| | 2 | 1 | | | | | 1 | | 1 | | | | 3 | | | | 1 | | 2 | | | 1 | | 2 | | | | | | | | | | | | |
| | 3 | | | | 1 | | | | | | | | | | | | | 1 | | | | | 1 | | | | 2 | 2 | | | | 2 | 1 | | | |

# க.பொ.த.(சா/த) பெறுபேறு


| பாடம் | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சைவம் | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |
| றோமன் கத்தோலிக்கம் | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |
| றோமன் க. அல்லாதது | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | | 100 | 100 |
| தமிழ் மொழி | 100 | 98.8 | 98.13 | 100 | 100 | 98.9 | 100 | 100 | 98.51 | 94.7 |
| ஆங்கிலம் | 61.76 | 44.2 | 31.7 | 58 | 24.1 | 41.8 | 49.42 | 61 | 29.85 | 45.3 |
| விஞ்ஞானம் | 90.36 | 79.3 | 76.63 | 84 | 84.3 | 80.6 | 81.6 | 98 | 67.16 | 70.5 |
| கணிதம் | 93.2 | 88.6 | 87.85 | 100 | 95.2 | 90.42 | 97.7 | 100 | 95.51 | 85.3 |
| சமூகக்கல்வியும்/வரலாறும் | 83.13 | 93.1 | 98.13 | 94 | 94 | 77.4 | 93.1 | 99 | 64.18 | 54.7 |
| சித்திரம் | 71.79 | 100 | 88.8 | 92 | 100 | 100 | 88.8 | 95 | 95.65 | 100 |
| சங்கீதம் | 71.79 | 76.2 | 73.9 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |
| நடனம் | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 93.3 |
| நாடகம் | | 100 | 100 | 100 | 100 | 98.3 | 100 | 100 | 100 | 100 |
| வர்த்தகம் | 83.87 | 91.7 | 86.88 | 70 | 61 | 81.6 | 78.9 | 98 | 93.55 | 75.6 |
| விவசாயம் | 95.83 | 100 | 100 | 97 | 88.4 | 79.19 | 100 | 100 | 100 | 91.3 |
| மனைப்பொருளியல் | 75 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |
| தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பவியலும் | | | | 100 | 92.3 | 62.5 | 87.5 | 84 | 100 | 100 |
| குடியுரிமை | | | | | 100 | 95.12 | 97.22 | 100 | 84 | 100 |
| புவியியல் | | | | | 95.8 | 100 | 100 | 100 | 100 | 87.5 |
| உடற்கல்வி | | | | | 100 | 100 | 100 | 100 | 96.55 | 100 |
| இலக்கிய நயம் | | | | | | 100 | 86.6 | 91 | | |
| ஊடகம் | | | | | | | 92.3 | 100 | 85.71 | 77.7 |
| தோற்றியோர் | 83 | 86 | 107 | 90 | 83 | 93 | 87 | 97 | 67 | 95 |
| சித்தி | 75 | 78 | 88 | 90 | 78 | 78 | 84 | 97 | 59 | |
| உயர் கல்விக்கு தகுதி உடையோர் | 68 | 78 | 88 | 87 | 78 | 71 | 84 | 96 | 59 | |
| சித்தி வீதம் | 90.36 | 90.7 | 82.24 | 96.66 | 94 | 97.2 | 96.6 | 100 | 88 | |



தமிழ் மொழி
100
90
80
70
60
50
40
30
20
10
0



இலக்கியநயம்
100
90
80
70
60
50
40
30
20
10
0
2009
2010
2011



சமுகக்கல்வியும்/வரலாறும்
100
90
80
70
60
50
40
30
20
10
0
2004
2005
2006
2007
2008
2009
2010
2011
2012
2013



விஞ்ஞானம்
100
90
80
70
60
50
40
30
20
10
0
2004
2005
2006
2007
2008
2009
2010
2011
2012
2013



சைவசமயம்
100
90
80
70
60
50
40
30
20
10
0



றோமன் க. அல்லாதது
100
90
80
70
60
50
40
30
20
10
0



றோமன் கத்தோலிக்கம்
100
90
80
70
60
50
40
30
20
10
0



சங்கீதம்
100
90
80
70
60
50
40
30
20
10
0
2004
2005
2006
2007
2008
2009
2010
2011
2012
2013



குடியுரிமைக்கல்வி
100
90
80
70
60
50
40
30
20
10
0
2008
2009
2010
2011
2012
2013


தகவல் தொடர்பாடலும்
தொழில்நுட்பவியலும்
100
90
80
70
60
50
40
30
20
10
0
2007
2008
2009
2010
2011
2012
2013



மனைப்பொருளியல்
100
90
80
70
60
50
40
30
20
10
0
2004
2005
2006
2007
2008
2009
2010
2011
2012
2013



சுகாதாரமும் உடற்கல்வியும்
100
90
80
70
60
50
40
30
20
10
0
2008
2009
2010
2011
2012
2013



புவியியல்
90
80
70
60
50
40
30
20
10
0
2008
2009
2010
2011
2012
2013



100
80
60
40
20
0


நாடகமும் அரங்கியலும்
2005
2008
2009
2012


நடனம்
100
90
70
60
50
30
20
0
2004
2005
2007
2008
2009
2010
2012
2013



வர்த்தகமும் கணக்கீடும்
100
90
80
70
60
50
40
30
20
10
0
2004
2005
2006
2007
2008
2009
2010
2011
2012
2013



விவசாயம்
100
90
80
70
60
50
40
30
20
10
0
2004
2005
2006
2007
2008
2009
2010
2011
2012
2013



தொடர்பாடலும்
ஊடகக்கல்வியும்
100
90
80
70
60
50
40
30
20
10
0
2010
2011
2012
2013


# க.பொ.த.உ/த பெறுபேறு


| பாடம் | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|---|---|---|
| உயிரியல் | 90.6 | 100 | 92.8 | 73.5 | 81.25 | 83.3 | 71.4 | 89 |
| இணைந்த கணிதம் | 94 | 100 | 64.2 | 65.14 | 66.66 | 90 | 64.7 | 75 |
| இரசாயனவியல் | 46 | 80 | 75 | 65.71 | 70.96 | 56.3 | 45.8 | 64 |
| பௌதீகவியல் | 75 | 85 | 78.6 | 71.42 | 67.74 | 62.5 | 70.83 | 64 |
| வணிகக்கல்வி | 73.6 | 77.8 | 73.3 | 85.71 | 88.2 | 55.5 | 85.7 | 43.4 |
| கணக்கீடு | 73.6 | 66.7 | 86.6 | 95.4 | 64.7 | 33.3 | 71.4 | 39.1 |
| பொருளியல் | 80 | 73.7 | 70 | 91.3 | 77.27 | 50 | 78.6 | 39.1 |
| அளவையியல் | 83 | 87 | 81.8 | 79.24 | 72.9 | 78.9 | 72.7 | 47 |
| இந்துநாகரீகம் | 75 | 93.8 | 100 | 76.47 | 100 | 93.3 | 87.1 | 97 |
| தமிழ் | 96 | 92.3 | 94.5 | 78.18 | 90.9 | 91.7 | 80.0 | 92 |
| புவியல் | 100 | 95 | 100 | 100 | 100 | 81.2 | 72.2 | 83.3 |
| நாடகம் | 100 | 96.8 | 100 | 100 | 94.52 | 100 | 100 | 94.4 |
| நடனம் | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |
| சங்கீதம் | 87.5 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |
| அரசியல் | 100 | 85 | 66.7 | 62.5 | 78.78 | 90.3 | 82.8 | 70 |
| கிறிஸ்தவம் | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |
| மனைப்பொருளியல் | 25 | 75 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |
| வரலாறு | | | | | 96.2 | 100 | 94.4 | 100 |
| சித்திரம் | | | | | | 100 | 100 | 100 |



உயிரியல்
100
90
80
70
60
50
40
30
20
10
0



இணைந்த கணிதம்
100
90
80
70
60
50
40
30
20
10
0



இரசாயனவியல்
100
80
60
40
20
0



பௌதீகவியல்
100
90
80
70
60
50
40
30
20
10
0



வணிகக்கல்வி
100
80
60
40
20
0



கணக்கீடு
100
90
80
70
60
50
40
30
20
10
0



பொருளியல்
100
80
60
40
20
0



இந்துநாகரீகம்
100
90
80
70
60
50
40
30
20
10
0



அளவையியல்



தமிழ்



புவியியல்



நாடகம்


நடனம்



சங்கீதம்


மனைப்பொருளியல்



வணிகக்கல்வி




கிறிஸ்தவம்
100
90
80
70
60
50
40
30
20
10
0

அரசியல்
100
90
80
70
60
50
40
30
20
10
0

100
90
80
70
60
50
40
30
20
10
0

100
90
80
70
60
50
40
30
20
10
0

## கல்லூரியில் ஒளிரும் வைரங்களாக.........



- 2013 க.பொ.த (உ/த) பரீட்சையில் கணிதத்துறையில் மூன்று அதிவிசேட சித்திகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் 49ம் நிலையில் இருக்கும் செல்வன் ஸ்ரீ.சுயேந்திரன்



- ச.வித்தகன்
  மேசைப்பந்தாட்ட மாகாண அணியில் இடம்பெற்றமை



- அ.கோகுலசாந்தன்
  மேசைப்பந்தாட்ட மாகாண அணியில் இடம்பெற்றமை



- அ.றொசான் மகாணா
  மேசைப் பந்தாட்ட மாகாண அணியில் இடம்பெற்றமை



- செல்வி ஜெ.சஸ்மிதா மாணவர் படையணிக்கான பயிற்சியின் போது சிறந்த ஆற்றுகைக்காக பரிசு பெற்றதோடு நேபாளம் செல்லும் வாய்ப்பை பெற்றமை



- செல்வி செ.சானுஜா 2014 மாகாணமட்ட தமிழ்த்தினப் போட்டியின் தனிநடனம் பிரிவு II இல் 3ம் இடம் பெற்றமை

- செல்வி பா.சஞ்சுகாசினி 2014 மாகாண மட்ட அனர்த்தமுகாமைத்துவ போட்டியின் பிரிவு II இல் 3ம் இடம் பெற்றமை



## பரிசளிப்பு விழா மலர்க்குழு - 2014



## மாணவர் தலைவர்கள் - 2014



## கல்வி சாரா ஊழியர்கள் - 2014



## இந்துமாமன்றம் - 2014



## கிறிஸ்தவ மன்றம் - 2014



# உதவும் கரங்கள் - 2014

1. பழையமாணவன் திரு இராஜன் எஸ் ராஜ்குமார் விஞ்ஞானப் பிரிவு மாணவர்களுக்கான இரவுநேரவகுப்பு மற்றும் கொக்கி அணிக்கும், வறியமாணவர் நிதியுதவியமாக ரூபா 163950.00 வழங்கியமை.
2. திருஆர்.கஜன் (வனிக்கா மெடிக்கல்ஸ்) அவர்களால் ரூபா 200000.00 பெறுமதியான மேலைத்தேய வாத்தியக் கருவிகள் வழங்கி உதவியமை.
3. ரவி சௌந்தரராஜன், சுந்தரி சௌந்தரராஜன் மற்றும் அவர்களது நண்பர்கள் இணைந்து வலைப்பந்து அணியினருக்கான சப்பாத்துகள் கொள்வனவிற்காக ரூபா 96000.00 சுஜனி இராஜரட்ணம் என்பவருடாக அனுப்பப்பட்டது.
4. சிறினிவாஸ் மதனதீபன் என்பவரால் ரூபா 35000.00 பெறுமதியான Hockey sticks வழங்கப்பட்டமை.
5. யாழ்ப்பாணப் பழையமாணவர் சங்கம் 15, 17, 19 வயதுப்பிரிவு துடுப்பாட்ட அணிகளுக்கான துடுப்பாட்ட போட்டிச் செலவுகளாக ரூபா 78329.00 ஏற்றுக்கொண்டுள்ளனர்.
6. முன்னைநாள் ஆசிரியரும், பழையமாணவருமாகிய திரு சச்சிதானந்தன் வறியமாணவருக்கு ரூபா 2000.00 மும் உதவி ஆசிரியருக்கு ரூபா 4000.00 மாதாந்தம் வழங்கி உதவுதல்.
7. பழையமாணவர்கள் நவீனா பாலேசன், சகோதரர் Dr.ஜெயரஞ்சன் ஆகியோர் வறியமாணவருக்கு உதவுதொகையாக மாதாந்தம் ரூபா 10000.00 வழங்கி உதவுதல்.
8. தேசியமட்ட விளையாட்டில் பங்குபற்றும் அணிகளிற்கான செலவாக யாழ்ப்பாணப் பழையமாணவர் சங்கம் ரூபா 25000.00 மும் லண்டன் பழையமாணவர் R.Tதயாளன் சகோதரர்கள் ரூபா 50000.00 மும் வழங்கி உதவியமை.
9. 2005Batch சார்பா க.யுவராஜ் 15 வயதின் கீழ் கொக்கி அணியினருக்கு ரூபா 4500.00 பெறுமதியான stoking வழங்கி உதவியமை.
10. தெல்லிப்பழை துர்க்காதேவஸ்தானம் பரிசளிப்பு விழாவுக்காக ரூபா 10000.00 அன்பளிப்பாக வழங்கியுதவியமை.
11. செரண்டிப் நிறுவனத்தினர் ஆறு வறியமாணவர்களுக்கு உதவுதொகையாக மாதாந்தம் ரூபா 8000.00 வழங்கி உதவுதல்.
12. முன்னைநாள் அதிபர் திரு.சு.புண்ணியசீலன் அவர்கள் மாவிட்டபுரம் 9ம் நாள் திருவிழாவிற்கு ரூபா 20000.00மும், பாடசாலையில் அமைந்துள்ள

புவனேஸ்வரி அம்பாள் ஆலய குருக்கலுக்கன சம்பளமாக மாதாந்தம் ரூபா 3000.00 வீதம் ரூபா 24000.00 மும் வழங்கி உதவுகின்றமை.

13. வருடந்தோறும் பாடசாலை இல்லமெய்வல்லுனர் போட்டிமற்றும் பரிசளிப்பு விழாவிற்கான மதிய உணவுச் செலவிற்கு பழையமாணவன் திரு.சி.விக்னராஜா அவர்கள் ரூபா 50000.00 வழங்கி உதவியமை.
14. பழையமாணவன் திரு.கே.செந்தில்ராஜா அவர்களால் இல்லமெய்வல்லுனர் போட்டிக்குரூபா 5000.00 பெறுமதியான Champoin cups வழங்கி உதவியமை.
15. பழையமாணவன் திருக.பாலகருணா மேடையின் பின்புறதிரைச்சீலைக்காக ரூபா 45000.00 வழங்கி உதவியமை.
16. பழையமாணவன் கலாநிதி எஸ்.ரகுராம் ரூபா 12000.00 பெறுமதியான Dinner Table cloth வழங்கி உதவியமை.
17. பழையமாணவி கீதாஞ்சலி ஞானேஸ்வரன் ரூபா 12000.00 பெறுமதியான Dinner set அன்பளிப்புச் செய்தமை.
18. நூல்தேட்டம் நிறுவனத்தால் நூலகத்திற்கு 300 நூல்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.
19. விளையாட்டு உத்தியோகத்தர் திரு.சி.வல்லவக்குமரனால் 08 வலைப் பந்துகள் வழங்கி உதவியமை.
20. Table tennis racket கொள்வனவிற்காக பழையமாணவன் என்.குலேந்திரன் ரூபா 10000.00மும், பெற்றார் திருமதி B.சிறிகாந்தன் ரூபா 15000.00 மும் வழங்கி உதவியமை.
21. லண்டன் பழையமாணவர்சங்கம் 6 வறியமாணவர்களுக்கு உதவு தொகையாக 2013 டிசம்பர்வரை ரூபா 69000.00 வழங்கியமை.
22. ரூபா 18000.00 பெறுமதியான புல் வெட்டும் இயந்திரம் பழையமாணவர் சங்கம் அன்பளிப்புச் செய்துள்ளது.
23. யூனியன்ஸ்கழக வலைப்பந்தாட்டப் போட்டிக்கு பழையமாணவி நாமகள் ரூபா 10000.00 வழங்கி உதவியமை.
24. மெல்போனில் வதியும் பழையமாணவன் திரு.இ.மனோகரன் அவர்களால் 15வயதுப்பிரிவு ஆண், பெண் 19 வயதுப்பிரிவு ஆண், பெண், பயிற்றுனர் ஆகிய 4 அணிகளுக்குமாக ரூபா 21000.00 பெறுமதியான 26 கோலஉடைகள் வழங்கி உதவியமை.
25. பழையமாணவன் திருகே.செந்தில்ராஜா அவர்கள் ரூபா 51000.00 பெறுமதியான 15, 17, 19 வயதுப்பிரிவு வலைப்பந்தாட்ட அணியினருக்கான கோலஉடைகள் 40ம், 15 வயதுப்பிரிவு உதைபந்தாட்ட அணிக்கான கோலஉடைகள் 20ம் வழங்கி உதவியமை.

26. மெல்போனில் வதியும் பழையமாணவன் திரு.இ.மனோகரன் அவர்களால் தேசியமட்ட மேசைப்பந்தாட்டப் போட்டியில் அதிசிறந்த ஆற்றல் வெளிப்பாட்டாளராக தெரிவுசெய்யப்பட்ட செல்வி.சி.சிந்துஜா அவர்களுக்கு சொந்தமாக ரூபா 10000.00 பெறுமதியான Table tennis racket வழங்கியமை.
27. போலந்தில் வதியும் திரு.து.ஜெயக்குமார் அவர்கள் சிறந்தமேசைப்பந்தாட்ட வீராங்கனையாக தெரிவுசெய்யப்பட்ட செல்வி.சி.சிந்துஜா அவர்களுக்கு ரூபா 15030.00 வழங்கி உதவியமை.
28. லண்டன் பழையமாணவர் R.T தயாளன் அவர்கள் சாரணர்சீருடைக்காக ரூபா 35000.00 வழங்கி உதவியமை.
29. பழையமாணவியும் முன்னைநாள் ஆசிரியருமாகிய திருமதி ஞானேஸ்வரி வசந்தகுமார் அவர்கள் கணிதப்பிரிவு மாணவர்கள் இருவருக்கு மாதாந்தம் ரூபா 3000.00 வழங்கி உதவுதல்.
30. அவுஸ்திரேலியா மெல்போன் பழையமாணவர் சங்கம் தரம் 10 மாணவர்கள் 10 பேருக்கு தலா ரூபா 1500.00 வீதம் 2014 ஏப்ரல் முதல் வழங்கி வருகின்றது. மேலும் உயர்தர விஞ்ஞானப்பிரிவு மாணவர்களுக்கான இரவுநேர வகுப்பிற்காக 2013 செப்டெம்பர் முதல் 2014 ஜனவரி வரை ரூபா 5000.00 மாகவும் 2014 பெப்ரவரி இலிருந்து மே வரை ரூபா 12000.00 வீதம் மொத்தமாக ரூபா 68000.00 வழங்கி உதவியமை.
31. 3A பெற்று பொறியியல் பீடத்திற்கு தெரிவாகிய மாணவன் செல்வன் ஸ்ரீ.சுயேந்திரனிற்கு அப்பாப்பிள்ளை ஞாபகார்த்தமாக ரூபா 3000.00 மாதாந்தம் அவர் பொறியியல் கல்வியை தொடரும் 4 வருட காலத்திற்கும் அவரது மகனால் வழங்கப்படவுள்ளது.

பரிசளிப்புவிழாவிற்கான அன்பளிப்புகள், ஞாபகார்த்தப் பரிசில்கள்

| | | |
|---|---|---|
| 32. கந்தையா வைத்தியநாதன் - கனடா | ரூபா | 62000.00 |
| 33. பத்மினி தவராஜா - கனடா | ரூபா | 50000.00 |
| 34. யாழ்ப்பாணப் பழையமாணவர்சங்கம் | ரூபா | 50000.00 |
| 35. திருவே.சகாதேவன் | ரூபா | 21400.00 |
| 36. றாதா | ரூபா | 21200.00 |
| 37. R.T தயாளன் சகோதரர்கள் - லண்டன் | ரூபா | 15000.00 |
| 38. திருப.ஜெயசேகரம் | ரூபா | 5000.00 |
| 39. திருஎன்.ஸ்ரீகாந்தன் | ரூபா | 5000.00 |
| 40. திரு எஸ்.சிவக்கொழுந்து | ரூபா | 5000.00 |

41. என்.குலேந்திரன் - ஆசிரியர்சிவப்பிரகாசம் சார்பாக

ரூபா 5000.00

42. கலாநிதிசி.ரகுராம் முன்னைநாள் பிரதியதிபர் திருV.S.சிவசுப்பிரமணியம் சார்பாக

ரூபா 5000.00

43. அதிபர் திரு க.இரத்தினகுமார் திரு, திருமதி கந்தையா செல்லமுத்து ஞாபகார்த்தமாக ரூபா 5000.00

44. பழையமாணவர்வி.சச்சிதானந்தம் திரு,திருமதிவிக்கினராஜா மங்களம் ஞாபகார்த்தமாக ரூபா 5000.00

45. திருயோ.யோகரூபன் ரூபா 4000.00

46. திருபா.பிரதீப் ரூபா 4000.00

47. பழையமாணவன் திருடினேஸ்குமார் ரூபா 3000.00

48. திருந.சுரேஸ்வரன் ரூபா 3000.00

49. திருக.கஜனன் ரூபா 3000.00

50. திரு இ.ரவீந்திரன் ரூபா 1000.00

51. திரு.ச.சந்திரகுமாரன் ரூபா 1000.00

52. செல்விமு.ஜெயகௌரி முன்னைநாள் ஆசிரியர்அமரர் ஜெ.தவலிங்கம் சார்பாக

ரூபா 1000.00

53. திருசு.புண்ணியசீலன் தந்தைசார்பாக ரூபா 1000.00

54. திரு இ.சண்முகேஸ்வரன் தாய் சார்பாக ரூபா 1000.00

55. மெல்போன் பழையமாணவர் திரு இ.மனோகரன் தந்தைசார்பாக

ரூபா 1000.00

56. திருஅ.தயாபரன் தந்தைசார்பாக ரூபா 500.00

57. சிங்கபூரில் வாழும் பொறியியல் பேராசிரியர் நாகரட்ணம் சுகந்தன் அவர்களினால் வறியமாணவர்களுக்கு மாதாந்தம் ரூபா 5000.00 வழங்கப்படுகின்றது.

***Details of donations given by London OSA to union college from last year 15/10/2013 to15/10/2014.***

1. London OSA so far paid £7200.00 (Rs 1440000.00) 14.4 lacks to Jaffna OSA of Chunakam Bank of Ceylon account since the year 1995 until 2014. We sent this amount advised them to spend it only for the building construction. Since then Jaffna OSA has been keeping the amount in their fixed deposited account and from the interest earned from the capital they help our school financial needs in curricular as well as extracurricular activities. Now the building project is started therefore Jaffna OSA can pay our money to the building project.

2. With this London OSA helps to the identified poor children of our college for their education from 2011 to 2013. There are six students and Rs 2000.00 for each student is given per month. ( so far we paid Rs 432,000.00 to Jaffna OSA to give Rs 2000.00 per month for all the six children)

3. The fund (2000X6X12=144,000) for 2014 is available to send to the children but we are waiting for the confirmation from Jaffna OSA whether they settled all the previous year's amount to the children.

4. When we visited to college this year in June 2014 principal asked for Rs 120,000.00 to improve the first eleven grounds to do the turfing to the cricket pitch and the whole grounds .So we asked Jaffna OSA to give the money until this time nothing heard from Jaffna OSA or from school. We need a written confirmation from school or Jaffna OSA whether the job started or not .Then only we will be able to release the requested amount from here.

5. The building project (Sanders Hall) have started in June 2014 the foundation and the columns are erected the contractor has sent the first invoice for Rs 2500,000.00 (25 lacks). London OSA paid Rs10, 00,000.00(10 lacks) for another Rs500,000 .00 (5 lacks) we asked the Jaffna OSA to pay from the money that we sent them previous years for

the building fund .Now we are waiting for their reply. While writing this we hear that Jaffna OSA is ready to release the requested amount of Rs 500,000.00. We are waiting for the confirmation of their payment.

6. R.T.N.Thayalan old boy of union college paid Rs 35,000.00 for the scout uniform this year 2014

7. R.T.N.Thayalan old boy of union college paid Rs 50,000.00 for all Island School sports competition which was held in Colombo.

8. MR.R.T.N.Thayalan (old boy of union college London branch) paid total of Rs 15,000.00 (Rs 5000.00 for 2 trophies in memory of his mother late MRS LILLY THANGARATNAM THAMBIAYAH she was a former teacher there early and Rs 5000.00 paid for the student got 3 A passes in A/ L (cash prize).

9. MRS.PREMA THAYALAN paid Rs 5000.00 in memory of her brothers and sister old students of union college LATE MR.R.PUVEENDRAN, MR.R.MAHENDRAN and MISS LALITHA RATNASINGAM.

# பாடசாலைக்கல்வி

அ.றோசனா, தரம் 09

வாருங்கள் மாணவரே!
பாடசாலைக்கல்விதனை பெற்றிடவே
கல்வி என்னும் பயிருக்கு
கண்ணீர் என்னும் மழை வேண்டும்
என்று அனு தினமும் உங்களை
அழைக்கின்றார் ஆசிரியர்
இளையோருக்குக் கைகொடுத்தே
அன்பினால் அடிமையானோம்
இது போன்ற இனிமை
இனிமேலும் வந்திடாதா?
ஈழ மணித் திருநாட்டில்.
யா/யூனியன் கல்லூரிதனிலே
கல்விதனைக் கற்றிடவே
மாணவரே வாரீர்.

✲ ✲ ✲

# என் தந்தை

த.கஜானி, 2015 உயர்தரம் (கலை)



ஆயிரம் துளி
வியர்வை சிந்தி – என்
துயர் துடைத்து
உயர்வுக்கு வழிகாட்டியவர்
கஷ்டங்கள் பல இருந்தும்
நஷ்டங்கள் பல வந்தும்
இஷ்டப்படி படிக்க வைத்து
பட்டப் படிப்பிற்கு
நாட்டம் பெறச் செய்தார்
என் தந்தை.

நானோ
"பட்டணம்" பல சென்று
உழைத்துச் செல்வத்தை
"கொட்டனும்" என நினைத்தேன்
என் குடும்பத்திற்கு
இன்னும் என் தந்தை
"கட்டணம்" தருகின்றார்
கல்விக்கரையை – நான்
"முட்டணும் என்பதற்காய்


தினம் அழைத்து
பணம் கேட்கும் போதெல்லாம்
சினம் கொண்டு பேசாமல் - நல்ல
குணம் கொண்டு கதைக்கிறார் - அவர்
மனம் நோகும்படி நடக்கமாட்டேன்

காடு மேடு தாண்டி
ஓடு கொண்டு கற்க வந்த
மாணவரின் - அறியாமை
பேதைமை அகற்றும் மேதையானேன்.
என் தந்தை
சிந்திய வியர்வைக்கு
தான் எழுதிய
கவிதை இது

✲ ✲ ✲

# நட்பு

ஆயிரம் கோடி நட்சத்திரங்கள் விண்ணில்
இருந்தாலும் விண்ணிற்கு அழகு நிலவு தான்
ஆயிரம் உறவுகள் மண்ணில் இருந்தாலும்
உறவிற்கு அழகு நட்பு தான்.



அழகு அழகு பூக்கள் அழகு
முதல் முதல் பூக்கும் பூ அழகு
முதல் முறை கிடைக்கும் நட்பு அழகு
பூப் போல புன்னகை நட்புக்கு அழகு

மலரின் அழகு மணம் உள்ள வரை
மனதின் அழகு நிம்பமதி உள்ள வரை
தீபத்தின் அழகு ஒளி உள்ள வரை
தினமும் அழகு நட்பு உள்ள வரை

கவிதை என்பது வாசிப்பது
கல்வி என்பது நேசிப்பது
நட்பு என்பது சுவாசிப்பது

சி.மதுஷா, தரம் 09

❋ ❋ ❋

# ஆசிரியர் ஆதவனே

ந.நந்தினி, உயர்தரம் 2015 (கலை)



இளைய தலைமுறையின் எதிர்காலம் சிறந்தோங்க
ஏற்றமுடன் அவர் வாழ்வு உலகெங்கும் புகழ் விளங்க
அளவு கணக்கின்றி அறிவாற்றல் படைத்தோராய்
ஆசிரியர் தம்பணியை ஆற்றுகிறார் இவ்வுலகில்

ஏட்டினைக் காட்டி வைத்து எழுத்துக்களைக் காட்டி வைத்து
இறைவழி காட்டி வைத்து இரு வினையும் காட்டி வைத்து
நாட்டினைக் காட்டி வைத்து நல்வழிகள் காட்டி வைத்து
ஞாலத்தைக் காட்டி வைக்கும் நல்ல ஆசான் வாழியவே.

கண்டித்தும் தண்டித்தும் கேண்மையொடும் உறவாடி
கலைஞானம் தந்திடுவார் கதிரவனாய் பெருமை மிகு
பண்பாளர் எமையாக்கி பெற்றோர்க்கு நிகராக
பெருந்தகையாய் எமைமாற்றும் பேராசான் வாழியவே.

ஏழேழ் பிறப்பினிற்கும் எமைத் தொடரும் கல்வியினை
ஊட்டி வளர்ந்தெடுக்கும் ஆசிரியர் இல்லையெனில்
வாழ்நாள் நன்றாகா வையகமும் இனிதாகா
வாழ்த்துவோம் வாழ்த்தி வணங்கிடுவோம் குருமாரை

வாழத்தகுதி நல்கும் வள்ளல்கள் இவரென்றே
வையகம் உணரட்டும் வாழ்த்துக்கள் வழங்கட்டும்
ஊழைப் பொடியாக்கி உலகையே மாற்றி வைக்கும்
அறிவாற்றல் மிக பெற்ற ஆசிரியர் வாழியவே.

✲ ✲ ✲

# சிந்தனைக்கு விருந்தாய் சில துளிகள்

ச.நிஷாந்தி, உயர்தரம் 2016 (கலை)



- ✠ தன்னடக்கம் என்பது உன்னை நீ புரிந்து கொள்வது.
- ✠ அவையடக்கம் என்பது உன்னை உலகம் புரிந்து கொள்வது
- ✠ மகிழ்வென்பது மற்றவரை மகிழ்வித்துப் பார்ப்பதாகும்.
- ✠ கொடுக்கத் தெரிந்தவனுக்குத் தான் எடுப்பதற்கு உரிமை உண்டு.
- ✠ விழித்திருந்து உழைத்தால் விடியல் உன் கையில்.
- ✠ எல்லா மனிதரையும் நம்புவது ஆபத்து ஒருவரையும் நம்பாது இருப்பது பேராபத்து.
- ✠ தோல்விகளைக் கண்டு துவண்டு விடாதே. தோல்வி தான் வெற்றியின் முதற்படி.
- ✠ உண்மை உரைத்து உத்தமராய் இரு.
- ✠ இறைவனை நோக்கி நீ ஒரு கலாலடி எடுத்து வை. இறைவன் உன்னை நோக்கி ஆயிரம் காலடி எடுத்து வைப்பான்.
- ✠ உன்னை நீ திருத்து உலகம் தானாய் திருந்தும்.
- ✠ தவறுகள் செய்தால் மன்னிப்புக்கேள் தெரிந்து கொண்டே தவறுகளைச் செய்யாதே.

✲ ✲ ✲

# இளம் சமுதாயம்


ப.கிரிஜா, உயர்தரம் 2014

இதயம் ஒன்று மனிதனுக்கு
தாய், தந்தை, சகோதரம்
நேசிக்கத் தெரியாது
தந்தியறுந்த வீணை போல்
பயனற்றுள்ளது
கவிதைகள் கொண்டும்
காவியங்கள் கொண்டும்
முடியாதவற்றை
முடிவாகக் கொண்டு
வர்ணிக்கும் இளம் சமுதாயம்
இன்று பயனின்றி
கல்விப்பாதையை விலத்தி
சுற்று வாழ்க்கையை
எட்டிப்பார்த்து
தம் பெரிய மனசு
கொண்டு – பல
மாற்றங்களை ஏற்படுத்த
மறந்து விடுகிறார்கள்
மாசுபட்டுப் போகிறது!
மனசிலும் இதயத்திலும்
மீண்டும்
நல்ல மனங்கள்
மலர வேண்டும்!

✲ ✲ ✲

# நூல் பல கல்

**சு.பவித்திகா, தரம் 06**



இயற்கையன்னை மனிதனை அறிவு வளத்திற்குரிய மூளையோடும் உணர்ச்சியும் கற்பனையும் ஊற்றெடுக்கும் உள்ளத்தோடும் படைத்துள்ளாள். ஆகவே மனிதனின் முழுமையான வாழ்விற்கு அறிவும் வேண்டும், உணர்வும் வேண்டும் ஒன்றை மட்டும் கடைப்பிடித்து மற்றொன்றைப் புறக்கணித்தால் வாழ்வு ஊனமாகின்றது.

"கண்ணுடையார் என்பவர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையார் கல்லாதவர்" என்ற வள்ளுவர் வாய்மொழிப்பொருளை உலகம் ஒருமுகமாக ஒப்புக்கொள்ளும் நிலை மலர்ந்து விட்டது! அவ்வாய்மொழி ஊனக்கண்ணிலும் ஞானக்கண்ணே சிறந்ததது என்ற கருத்தினை தெளிவுறக்காட்டுகின்றது. ஊனக்கண்ணின் காட்சிக்கு ஓரெல்லையுண்டு அவ்வெல்லைக்கு அப்பாற்பட்ட எதனையும் அறிய முடியாது. அது மட்டுமல்ல அது நோயாலும் மூப்பாலுங் கூர்மை குன்றி காட்சிப் பண்பையிழந்து விடும். ஆனால் அறிவுக் கண்ணோ எதனாலும் கூறப்படாது. கண் காணாத இடங்களில் நிகழ்வனவற்றையும் எதிர்காலத்தில் நிகழ்வனவற்றையும் காணும் ஆற்றல் பெற்றது. இதனால் தான் கல்வி பெற்றவர்களை கண்ணுடையவர்கள் என்று கூறுகின்றனர். நாமும் எமது கல்வி அறிவை மேம்படுத்த பல நூல்களைக் கற்க வேண்டும்.

இத்தகைய கல்வியைப் பெறுவதற்கு பல பல சாதனங்கள் காணப்படுகின்றன. நூல்கள், வானொலி, தொலைக்காட்சி, இலக்கியங்கள் என்பன குறிப்பிடத்தக்கது. எனினும் கல்வியென்னும் தீபம் உலகிலே ஏற்றப்பட்ட அன்று தொட்டு இன்று வரை அதனை அணைய விடாது நெய்யிட்டு ஒளியேற்றிய பெருமை நூல்களுக்கேயுண்டு. மற்றைய சாதனங்கள் கல்வியறிவு வளர்ந்த பிறகு தான் கண்டுபிடிக்கப்பட்டன. கல்வியின் தாயாக விளங்குவது நூல்கள். கரையிலாக் கல்வியின் ஒவ்வொரு சிறுபகுதியையும் விளக்கி நிற்பது நூல்கள். அத்தகைய

நூல்களை நாம் வாழ்க்கையில் தேடியெடுத்துக் கொள்ள வேண்டும். வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான் என்று ஆன்றோர்கள் கூறுவார்கள்.

அது மட்டுமல்ல உலகிலுள்ள நூல்கள் யாவும் மக்களின் வாழ்க்கையோடு இணைந்து விட்டன பல நூல்களை நாம் கற்கின்ற போது அறம், பொருள், இன்பம், வீடு மனிதனின் முழுமையான வாழ்விற்கு வேண்டிய உண்மைத் தத்துவங்களைக் கண்டு உணர்ந்து வாழ்வதற்கு துணை புரிகின்றது. அதாவது தனி மனித வாழ்விற்கும் சமூக வாழ்விற்கும் தீயனவற்றை நீக்கி நல்லன எவை என்பதை உணர்த்துவன நூல்கள். "அறம், பொருள், இன்பம் விடடைதல் நூற்பயனே" என்ற சூத்திரம் நூல்களின் பயனைக் கூறுகின்றது. காலத்திற்கு காலம் உலகிலே தோன்றிய அறிஞர்களின் சிந்தனைகள், தத்துவக் கோட்பாடுகள், அறிவியல் முடிவுகள், ஆய்வுகள் என்பவற்றை எமக்கு தருவது நூல்கள். இவற்றை நாம் தேடிக் கற்றுக் கொண்டால் நூல்களின் அறிவை மன உணர்வுகளை வளர்த்துக் கொள்ள உதவுகிறது. நூல்கள் நல்ல நண்பனாக இருந்து எமக்கு வழிகாட்டுகின்றது. ஓய்வு நேரத்தை இன்பமாகவும் பயன்படத்தக்க வகையிலும் கழிப்பதற்கும் நூல்களே சிறந்தன. நல்ல நூல்களை வாசிப்பதால் நாளடைவில் வாசிக்கும் பழக்கமும் கற்கும் ஆர்வமும் பிறக்கின்றன. மனித வாழ்விற்கு மிக மிக இன்றியமையாத கல்வியெனும் செழுஞ் சுடரை ஒளி செய்வது நூல்கள் அவ்வாறுபட்ட நூல்களை நாமும் கற்று பயன் பெறுவோமே.

❋ ❋ ❋

# ஆசான்

**ருக்சன் பிரதாப், உயர்தரம் 2015 (கலை)**



அன்பினால் அரவணைத்து
பண்பினால் பாசமூட்டி
ஆயுதம் ஏந்திய கரங்களிலே
மாண்புடன் பேனா ஏந்த வைத்து
கல்வி எனும் வெளிச்சமான வாழ்விற்கு
மாணவர்களை அழைக்கின்றவன் ஆசான்

தாய், தந்தை என்ற பெயருக்கு
அர்த்தம் சொன்னவனும் ஆசானே
தாய், தந்தை என்றால் யார் என்று
எமக்கு புரிய வைத்தவனும் ஆசானே

காசு பணம் பாராது சாதி மத பேதமின்றி
நம்மனை வரையும் நல்வழிப்படுத்துபவரும் ஆசானே
அறிவுரைகள் பல ஊட்டி
ஊக்கமுடன் கற்கவைப்பவனும் ஆசானே

கல்வியை மட்டு மல்லாது நல்ல பழக்க வழக்கங்களையும் கற்றுத்தந்து
எம்மனைவரையும் நேரிய பாதையில் வழி நடத்துபவனும் ஆசானே
இன்பத்தில் பங்கெடுத்து துன்பத்தில் விட்டு விலகும் மாந்தர் போல் அல்லாது
இன்ப துன்பம் அனைத்திலும் பங்கெடுப்பவன் ஆசானே.

எம்போல் ஆயிரம் மாணவர்களைக் கண்டு
உமது பணி என்றும் சிறக்க உம் புகழ்
எங்கும் பரவ மனமார வாழ்த்துகின்றோம் எம் ஆசான்களே

***

# அன்பு

ம.நிருஷன், உயர்தரம் 2015

கருவறைச் சுவரிலே தடம்புரள்கிறேன்
உருவமே உருக்குலைந்து உழல்கிறாள்
தினசரி விழியினில் கண்ணீருடன்
புருவங்களோடு புரியாவார்த்தையால் கதறுகிறாள்.



அம்மா என்று
பிரசவ வலியினால் வலிந்தல்ல
தன்னை அம்மா என்றழைத்திடும் ஜீவனின்
உன்னதமான அன்பிற்காய் !

❋ ❋ ❋

# ஒழுக்கம்

ஆ.கபிலாயன், தரம் 07



ஒழுக்கம் மேன்மை தரும்
அதனால் உயிரினும் மேம்பப்படும்
என்றாராம் பொய்யா மொழியை
எமக்களித்த திருவள்ளுவனார்
பாமரராக இருந்தாலும்
படித்தவராக இருந்தாலும்
ஒழுக்கத்தை பின்பற்றாவிடில்
உலகில்வாழ்வதற்கு அர்த்தமேயில்லை

❋ ❋ ❋

# வணிக வளர்ச்சியில் வங்கியின் பங்களிப்பு

இ.விதுசா, தரம் 11

மனிதத் தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவு செய்கின்ற எந்தவொரு நடவடிக்கையும் வணிகம் எனப்படும். வணிகத்தின் வளர்ச்சிக் கட்டங்களாவன நேர் உற்பத்தி, பண்டமாற்று யுகம், பணப்பரிமாற்ற யுகம், கைத்தொழில் புரட்சியுகம், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப யுகம் என்பனவாகும்.

வணிக வளர்ச்சியில் வணிக வங்கிகளின் பங்களிப்பு இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. வணிக வங்கி எனப்படுவது கேள்வி வைப்புக்களையும் சேமிப்பு வைப்புக்களையும் நிலையான வைப்புக்களையும் ஏற்று பாதுகாப்புடன் வணிக நடவடிக்கைக்குரிய பல்வேறு சேவைகளை வழங்கும் நிதி நிறுவனமே ஆகும். இவ் வங்கிகள் இலங்கை மத்திய வங்கியில் அனுமதி பத்திரம் பெற்று செயற்பட வேண்டும்.

வணிக வங்கிகளின் மூலம் வழங்கப்படும் சேவைகளாவன வைப்புச் சார்ந்த சேவை, கடன் சார்ந்த சேவை, இலத்திரனியல் சார்ந்த சேவை, வெளிநாட்டுச் செலவாணி சார்ந்த சேவை, ஏனைய சேவைகளான அடகு சார்ந்த சேவை, பாதுகாப்புச் சேவை, ஆலோசனைச் சேவை, குத்தகைச் சேவை என்பனவாகும்.

வணிக வங்கிகளில் பேணப்படும் வைப்புக்களாவன சேமிப்பு வைப்பு, கால வைப்பு, கேள்வி வைப்பு என்பனவாகும். இவ்வைப்புக்களில் வியாபாரிகளுக்கு மிக முக்கியமானது கேள்வி வைப்புக்கள் ஆகும். இது நடைமுறைக் கணக்கு உரிமையாளர் குறிப்பிட்டதொரு பணத்தை தனது கணக்கிலிருந்து குறித்த பெயருடைய நபருக்கு அல்லது அவரால் குறிப்பிட்டதொருவருக்கு அல்லது அதனை எடுத்து வருபவருக்கு வழங்கப்பட வேண்டும் என வங்கி மீது பிறப்பிக்கப்படும் எழுத்துருவான கட்டளை ஆகும்.

வணிகர்களுக்கு வணிக வங்கிகளின் நடைமுறைக் கணக்கின் மூலம் காசோலை பயன்பாடு, கொடுக்கல் வாங்கல்களை இலகுபடுத்தல், பாதுகாப்பு நேரம் மீதப்படுதல், பணம் செலுத்தப்பட்டது என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளல், வங்கி மேலதிகப் பற்று வசதியை பெறல், அறவீடுகளை அறவிடக் கூடிய வசதிகள் என்பவற்றை பெற்றுக் கொள்ளவும் முடியும். நிலையியற் கட்டளைகளைச்

செயற்பாடுகளை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். இதன் மூலம் வணிகத்தின் வளர்ச்சிக்கு நடை முறைக் கணக்கின் பயன்பாட்டை பெற்றுக் கொள்ள முடியும்.

வணிக நிறுவனங்கள் தம்மிடமுள்ள மேலதிக நிதியை நிறுவனத்தில் வைத்திருப்பது பொருத்தமற்றதாகும். இவற்றினை வங்கி ஒன்றில் வைப்பிலிடுவதன் மூலம் வட்டி வருமானத்தை பெற்றுக் கொள்ள முடியும். அத்தோடு பணத்திற்கு பாதுகாப்புக் கிடைக்கும் வணிக நடவடிக்கைகளுக்கு தேவையான சொத்துக்களை கொள்வனவு செய்வதற்கும் அன்றாட நடவடிக்கைகளை நடாத்திச் செய்வதற்கும் வணிகர்களுக்கு பணம் தேவைப்படுகின்றது. இத்தகைய பணத் தேவையை வணிக வங்கிகள் கடன்களை வழங்குவதன் மூலம் நிறைவேற்றுகின்றன.

வணிகர்களுக்குப் பல்வேறு தேவைகளுக்காகப் பல்வேறு கடன்களை வணிக வங்கிகள் வழங்குகின்றன. வணிக வங்கிகள் மூலம் பெற்றுக் கொள்ளக் கூடிய கடன்களை காலத்தின் அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்தலாம். அவையாவன குறுங்காலக் கடன், நீண்ட காலக்கடன் என்பனவாகும். ஒருவருட காலத்திற்குள் செலுத்தி முடிக்க வேண்டிய கடன்கள் குறுங்கால கடன் என்பதுடன், ஒருவருடத்திற்கு மேல் தீர்க்க வேண்டிய கடன்கள் நீண்ட கால கடன்கள் எனப்படும். இவ்வாறு வணிக வங்கிகள் கடன்களை வழங்கி வணிக வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்கின்றது.

வணிக வங்கிகள் வாடிக்கையாளருக்கு இலத்திரனியல் சார்ந்த சேவையும் வழங்குகின்றது. தற்போதைய காலப் பகுதியில் இலத்திரனியல் விஞ்ஞானமானது அதிசயிக்கத்தக்க வகையில் வளர்ச்சியடைந்ததன் காரணமாக கணினி, தொலைத்தொடர்பு சேவை போன்ற துறைகளில் ஏற்பட்ட ஒன்றிணைந்த முன்னேற்றம் காரணமாக வங்கி வாடிக்கையாளர்களுக்கு விரைவாக நிதிக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கு இலத்திரனியல் பணம் தோன்றியது.

வணிகர்களுக்குத் தமது நடவடிக்கைகளை இலகுபடுத்திக் கொள்ளும் பொருட்டு வணிக வங்கியொன்றிலிருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய இலத்திரனியல் பணம் ஆவன கடனட்டை, வரவட்டை, ரெலர் அட்டை என்பனவாகும். கடனட்டையானது வணிக வங்கி மூலமே வழங்கப்படும். யாதேனும் ஒரு குறிப்பிட்ட பெறுமானம் வரையில் பொருட்களையும் சேவைகளையும் பெற்றுக் கொள்ள வணிக நிறுவனங்களுக்கு கடனட்டையை சமர்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

கடனட்டை மூலம் வணிகங்களின் விற்பனை வருமானம் அதிகரிக்கும் வணிக இடர், அச்சம் குறையும், வணிக நடவடிக்கைகள் இலகுவானதாகவும் எளிமையானதாகவும் இருக்கும். வரவட்டையானது வணிக வங்கிகள்

வாடிக்கையாளர்கள் தமது வைப்புக்களின் உள்ள பணத்தைப் பயன்படுத்த இவ் அட்டைகளை வழங்கும். இங்கு அனுமதிக்கப்பட்ட வணிக நிறுவனங்கள் மூலம் பண்டங்களை கொள்வனவு செய்யும் போது குறிப்பிட்ட பெறுமானம் கொள்வனவாளரின் கணக்கிலிருந்து விற்பனையாளரது கணக்கிற்கு மாற்றம் செய்யப்படும்.

ரெலர் அட்டையானது பணம் வைப்புச் செய்தல், மீள எடுத்தல், கணக்குகளுக்கிடையே பணம் மாற்றீடு செய்தல் போன்ற கருமங்களை கணினி மயப்படுத்தப்பட்ட இயந்திரத்தின் உதவி கொண்டு சுயமாக வாடிக்கையாளர் மேற்கொள்வதற்காக வணிக வங்கிகளினால் வழங்கப்படுகின்றது. இவ்வாறு வணிக வங்கிகள் இலத்திரனியல் சார்ந்த சேவைகளை வழங்குகின்றன.

வணிக வங்கிகள் அந்நிய செலவாணி சார்பான சேவைகளையும் வழங்குகின்றது. வெளிநாட்டு வணிகக் கருமங்களில் ஈடுபடும் வணிகர்களுக்குத் தமது நடவடிக்கைகளை வெற்றிகரமான முறையில் நடாத்திச் செல்வதற்காக வணிக வங்கிகள் எண்ணிலடங்காகச் சேவைகளை வழங்கி வருகின்றன. அச் சேவைகளாவன வெளிநாட்டு நாணயங்களை பேணுதல், கொள்வனவு செய்தல் இவ்வாறு வணிக வங்கிகளும் அந்நியச் செலவாணி சார்ந்த சேவைகளை வழங்குகின்றது.

வணிக வங்கிகள் மூலம் ஏனைய சேவைகளாக ஆலோசனை சேவை, அடகுச் சேவை, பாதுகாப்புச் சேவை, குத்தகை சேவை என பல்வேறு சேவைகள் வழங்கப்படுகின்றது. இவ்வாறு வணிக வங்கிகள் வணிக வளர்ச்சிக்கு பல்வேறு வழிகளில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

நன்றி

✲ ✲ ✲

# நம்பிக்கையுடன்...

ந.விதுசாயினி, உயர்தரம் 2015

பள்ளி எனும் கூடத்திலே
பாடம் பெற வந்து
பாசத்தையும் பகிர்ந்து கொண்ட
என் நேசமான உடன் பிறவா சகோதரர்களே

House main hall இலிருந்து
Miss call அடித்து
மாணவனைப் புறப்படச் சொன்ன
ஆசானையும்

Tour என்று சொல்லி
ஊர் ஊராய் சுத்தி
பலதையும் கற்றுக் கொண்ட
ஐந்து நாட்களையும்

மறக்க மட்டும் முடியாமல்
மனதிலே சுமந்து கொண்டு
பிரியச் சற்றுமே பிடிக்காமல்
பரிதவித்து நிற்கின்றோம்

அருண்டோடும் காலச் சக்கரத்தில்
அனைவரையும் பல்கலையில்
மீண்டும்
சந்திப்போம் என்ற நம்பிக்கையுடன் .............

கண்மூடித் திறப்பதற்குள்
கனவாகிப் போய்விட்ட
எட்டு (8) வருடங்களும்
மீண்டும் நனவாகாதா!

Chit இலே வந்தாலும்
சிரிக்கவே வைத்திடும்
Dr.சேந்தினியின்
சங்கதிகளும்

அலட்டிய அரட்டைகளையும்
வம்புச் சண்டைகளையும்
இன்ப, துன்பம் பகிர்ந்து கொண்ட
இனிய நண்பர்களையும்

எங்கிருந்தெல்லாம் வந்து
உறவென்று பழகியதால்
உரிமையும் எடுத்த பின்பு
பிரியச் சொன்னால் தாங்குமா?

✲ ✲ ✲

## தமிழ் மன்றம் - 2014



## ஆங்கில மன்றம் - 2014



## சமூக விஞ்ஞான மன்றம் - 2014



## உயர்தர மாணவர் மன்றம் - 2014



## உளநல மன்றம் - 2014



## கணித, விஞ்ஞான மன்றம் - 2014



## வணிக மன்றம் - 2014



## சுகாதாரக் கழகம் - 2014



## விழிப்புலவலுவிழந்த மாணவர்கள் - 2014



## கவின்கலை மன்றம் - 2014



## தகவல் தொழில்நுட்ப மன்றம் - 2014



## சுற்றாடல் முன்னோடிக்கழகம் - 2014



# மறவாத நினைவான நண்பர்களே

ந.விதுசாயினி, உயர்தரம் 2015 (கலை)

எங்கெங்கும் இருந்து வந்து இனிய
சிட்டுக்குருவிகள் கட்டிய சிறு கூடு – கலைவதாய்
தட்டுத் தடுமாறுது மனம்
நட்பு என்பதை நன்கு விளங்கவும்
தப்பு என்பதை நன்கு விளக்கவும்
எப்போதும் எமக்கு உதவிய இனிய சோலையிது!
எல்லோருக்கும் வாய்க்காதா
உயர்தர வசந்தம் எமக்காகிப் போனது
எட்டாண்டு (8) கற்கைகள் முடிவுறும் வேளையில்
பறந்து போகின்றோம் நாம் பலதிக்காய்
மீள ஒரு பொழுது நாம் காணலாம்
கடைசி வரை நாம் காணாமலும் கண் மூடலாம்
அடுத்த ஜனனம் வரை அழியாத நினைவுகளாய்
தடித்த எழுத்துக்களால் சம்பவங்கள் மன ஏட்டில்
நடித்த நாடகம் படித்த பாடல்கள் - சிலவேளை
உடைத்த கண்ணாடித் துகள்கள் எல்லாமே
இனிய வலிகளாய் இப்போது உள்ளம் தைக்குது
தனியே இருக்கையில் மனம் தவிக்குது
இனிய நினைவுகளாய் அடி மனத்தில் ஈரமாய்
இனியொரு பொழுது எங்கோ ஒரு தெருமுனையில்
தனியான நாம் நம்மைக் காணலாம் இப்போது
கசந்த நினைவுகளும் கனிவாகும் அப்போது நண்பர்களே!



* * *

# இதயங்கள் பேசட்டும்

ந.விதுசாயினி, உயர்தரம் 2015 (கலை)

கண்ணுக்குள் ஒளிகின்ற ஒளியதுவாய்
காலத்தால் அழியாத காவியமாய்
விண்ணதிலும் சென்று பல விந்தை செய்யும்
ஞாலமெல்லாம் அழியாத அறிவு தந்து
தன்மான நின் பாதார விந்தம் பணிந்து
பகிர்கின்ற சிறுமியின் சிறுமாலையிது.

காலச்சக்கரம் ஓடியது எங்கள்
கரிய விழிகளும் நனைகிறது.
கடைசிக்கு வந்துவிட்டோம்
காதுகளில் பிரிவு மணி

உள்ளமும் உடலும் ஒன்றாய் சங்கமிக்க
கள்ளமின்றி ஓர் குடும்பமாய் கழித்த நாட்கள்
இதமான வருடலும் இன்பச் சிரிப்பும்
உறவுகள் தொடர உல்லாசமான
குட்மோனிங் இன்று இறுதியாக
பொங்கிய இன்ப வரலாற்றுச் சுவடுகள்

தங்கிய அறிவு விந்தையின் விந்தைகள்
மங்கிய பொழுதாய் மலரும் நினைவதாய்
சிங்காரமாய் மலரும் Activity room
சிந்தையுடன் அமரும் Library
எங்களின் Principal vice principal
Deputy principal and reacher's

எல்லோரும் இங்கிருக்க நாம் மட்டும்
எங்கே? காலத்தின் ஓட்டத்தில்
ஒருவரை ஒருவர் நாம் மீண்டும் காணலாம்
கண்டாலும் கதை பேசும் விழியோடு
விலகலாம் விடை பெறலாம் - ஆனால்
எம் இதயங்கள் என்றும் பேசிக்கொண்டிருக்கும்

***

# நிழல்களின் நிஜவரிகள்

**ந.விதுசாயினி, உயர்தரம் 2015 (கலை)**

பதினொரு வயதினிலே பவ்வியமாய் கால்பதித்து
உயர்தர வகுப்பினிலே கலை பிரிவிலே
உயிரெனக்கருதி - பரீட்சையிலே
ஒன்று தொட்டு பல அமர்வெழுதி
பாடசாலைக்கு விடைகொடுக்கும் நண்பர்களே

எங்கிருந்தோ வந்தோம்
ஏழை பண பேதமின்றி
நண்பர்களாய் எதிரிகளாய்
பிரியர்களாய்
நாம் வாழ்ந்தோம்

ஆண்டுகள் எட்டு ஓடி - இன்று
பிரிவுகளை சந்திக்கின்றோம்
பிரிகின்ற உறவுகளிற்கு
பிரியமாய் ஓரிரு நினைவுகள்

பள்ளி *Canteen* முதல்
ரிதிகா கடை வரை - மாதம் ஆயிரம்
நறுக்கென்று செலவாயிற்கு
ஒரு கோப்பையில் பலர் உண்டது
இனி சாத்தியமா?

சுற்றுலா ஒன்று சென்று
சுற்றியவர் எத்தனைபேர் கூடித்தான்
பிரிந்தனர் எத்தனை பேர்
பழம் பிள்ளையாரில் 6.00 வரை
சுன்னாகத்தில் 8.00 வரை
நிற்பது இனி சாத்தியமா?
ஒரு சிறுபொழுது கூட இன்று
அருமையாய் தெரிகிறது
அந்த *Switch* கூட
நமது ஆண்களின் பிரிவுத்துயரில்
சத்தமிட்டு அழுகின்றது.

✲ ✲ ✲

# கல்லூரித் தாய்

தொடங்கும் இந்த உலகினில்
சிறக்கும் இந்தப் புவிதனில்
பிறக்கும் இந்தப் பொழுதினில்
மாறும் இந்தக் காலத்தில்
நிலைக்கும் யூனியன் மடியில்
போற்றிடும் அன்னையின் கல்வி

காலங்கள் மாறினாலும்
கண்டங்கள் கடந்தாலும்
மாற்றங்கள் நிகழ்ந்தாலும்
மாறுதல்கள் நடந்தாலும்
நிலைப்பது யூனியன் தாய்

விளக்கின் ஒளியிலும்
ஒளியின் பிரகாசத்திலும்
பிரகாசத்தின் எண்ணத்திலும்
எண்ணிய எண்ணம் நிறைவேற
மன்னுலக யூனியன் தாய்

ப.கபிலன், தரம் 08

அழியாச் செல்வம் எனும்
கல்வியை தேடி ஓடும்
ஒளி விளக்கு என நாளும்
யூனியன் தாயின் மடியில்
சாய்ந்திடும் மழலைகள் நாம்

✲ ✲ ✲

# பள்ளி நாட்களில்....

த.திவ்ஜா, தரம் 08

வாழ்க்கைப் பயணமதில்
அர்த்தமான நாட்களாய் - எம்
மனதில் குடியேறிய பாசமான
பச்சிலைகளாய் என்றும் எம்
நெஞ்சை விட்டகலா நீங்கா
நினைவலைகளாய் நம் பள்ளி நாள்கள்
இல்ல வறுமை மறந்து

இன்ப துன்பம் மறந்து
இளவட்டப் பறவைகளாய் - நாம்
என்றும் எம் கல்லூரி வானிலே
வட்டமிட்டு சிறகடிப்போம்
காலங்கள் பல மாற்றங்கள் தந்தாலும்
பரீட்சை முடிந்து பல தேசம் சென்றாலும்
என்றும் எம் உயிரில் வாழ்வது நம்
பள்ளி நாட்களே ...........

பட்ட கஸ்டம் நாம் மறந்தோம்
பல வேதனை நாம் இழந்தோம்
கல்வி எனும் அமுதூட்டும்
கல்லூரித் தாயை என்றும்
ஏற்றித் துதித்திடுவோம்

✲ ✲ ✲

# அன்னை யூனியன் தாயின் மடியில்

**ப.வனஜா உயர்தரம் 2014 கலை**

ஒளி பொருந்திய புவனேஸ்வரியின்
அருள் நிறைந்த எமக்கு
சில தினங்கள் கழித்தாலும்
அன்னையை சந்திக்க வந்த வேளையில்
தாயின் நினைவுகளே அதிகம்

தாயை தேடிய சேய் போல
சுற்றிடும் நினைவுகள் பற்பல
தனித்து நிற்கும் எம்மிடம்
சுற்றி வரும் வாழ்க்கையின் மாறுதல்களில்
இதுவும் ஒன்றா?

பள்ளியில் பயின்ற நினைவுகள்
பாடிப் பழகிய காலங்கள்
ஆசானின் அன்பு வார்த்தைகள்
கல்லூரியைக் கடந்தாலும்
மீளும் என்பது சரிதானா?

சேர்த்து வைத்த நினைவுகள்
கண்டு களித்த காட்சிகள்
சேர்ந்து சிரித்த காலங்கள்
கூடிப் பழகிய நட்புகள்
மீண்டும் திரும்பும் என்பது ஐயமே.

எத்தனை மாணவர்களை
எத்தனை சாதனைகளை
இன்னும் எத்தனை எத்தனை
கீர்த்தியைப் பெற்ற யூனியன் தாயே – உன்னிடம்
சிரம் தாழ்த்தி நிற்கிறோம்.

செந்தமிழ் மணத்த தேசம் - கொடும்
வெந்தழலாய் அழிந்த போதும்
எம் தமிழ் நின்றொலிக்கும்
அன்னையே...... செழும்
செந்தமிழை ஒலித்திடு.

அன்னையே நீ இணையத்தில் ஏறிவிட்டாய்
சுதந்திரமாய் இப் புவியை சுற்றிவராய்
இதையறியா எம் மாணவர் ஏதறிவார்

யூனியன் தாயே
நீ என்றும் பொங்கி வாராய்.

அன்னை யூனியன் தாயே
நீ என்றும் ஒளிர வேண்டும்
எஞ்சியிருக்கும் மாணவர் மனம் குளிர வேண்டும்
பல துறையும் உன்னாலே மிளிர வேண்டும்
இதைக்கண்டு அனைத்துலகம் புகழ வேண்டும்

இன்னும் பல சேவைகள் நீ புரிய
வீறு நடை போடுவோம்
அன்னையே உன் கல்வி
புதுத்தமிழாய் எம்முன் பிரகாசிக்க
அந்த சூரியனே இருளடையும்

❋❋❋

# இலங்கையின் தேசியத்திற்கு வித்திட்ட மத புனருத்தாரண இயக்கம்

ந.விதுசாயினி உயர்தரம் 2015 கலை

காலனித்துவ ஆட்சியாளர்கள் இலங்கையிலே கிறிஸ்தவ மிஷனரி இயக்கங்களை நிறுவி இந்த இயக்கங்கங்கள் ஊடாக சுதேசிகளை மதமாற்றம் செய்யும் நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். மத மாற்றத்தினை இலகுவாக முன்னெடுப்பதற்காக கல்வியை அவர்கள் கருவியாக பயன்படுத்தினர். அதாவது கல்வியை வழங்குவதன் மூலம் இலகுவாக மதமாற்றம் செய்ய அவர்கள் முனைந்தனர். அவர்களது மத மாற்ற முயற்சி வெற்றி பெற்றது.

இவ்வாறு சுதேசிகள் மத மாற்றப்படுவதனை தடுப்பதற்காக எழுச்சி பெற்ற இயக்கங்களே மத மலர்ச்சி இயக்கம் ஆகும். இவ்வாறு காணப்பட்ட இயக்கங்களே தேசியத்திற்கு வித்திட்ட மத புனருத்தாரன இயக்கங்கள் ஆகும். அந்த வகையில் மத புனருத்தாரன இயக்கங்களாக பின்வருவன காணப்பட்டன,

i. பௌத்த மறுமலர்ச்சி இயக்கம்
ii. இந்து மறுமலர்ச்சி இயக்கம்
iii. இஸ்லாமிய இயக்கம்

இலங்கையில் தோற்றம் பெற்ற சமய மறுமலர்ச்சி இயக்கம் பௌத்த மறுமலர்ச்சி ஆகும். பௌத்தர்கள் மத மாற்றம் செய்யப்படுவதனை தடுப்பதற்காக உருவாக்கப்பட்ட இயக்கபம் இந்த இயக்கத்தை உருவாக்கியவர் **மீ கொடுவத்த ஸ்ரீ குணாநந்த தேரோ ஆவார**. இவருக்கு உதவியாக பின்வருவோர் விளங்கினர்.

i. ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல தேரர்
ii. வலன ஸ்ரீ சித்தார்ந்த தேரோ
iii. கேணல் ஒல்கோட்
iv. அநாகரிக தர்மபாலா

இந்த இயக்கம் சுறு சுறுப்பு மிக்க செயற்பாட்டு திறனுடைய இயக்கமாக அமைந்திருந்தது. கத்தோலிக்க மதகுருமாருடன் நேரடி விவாதங்களை நடாத்தி

பௌத்த மதத்தின் சிறப்பை அவர்களுக்கு எடுத்து விளங்கியமை, பௌத்தர்கள் மத்தியிலே மதமாற்ற நடவடிக்கைக்கு எதிரான விழிப்புணர்வை கட்டியெழுப்பியமை; பௌத்த ஆங்கில பாடசாலைகளை நிறுவி பௌத்தர்கள் ஆங்கிலமொழி மூல கல்வியை பெறுவதற்கு வகை செய்தமை; போன்ற பணிகளை இவ்வமைப்பு செய்தது. இந்த இயக்கத்தின் சுறுசுறுப்பான செயற்பாடு காரணமாக இவ்வியக்கத்துடன் பெரும் எண்ணிக்கையான இளைஞர்கள் அணி திரண்டனர். அவர்களுள் பின்வருவோர் முக்கியமானவர்கள்.

D.S சேனநாயக்கா

S.W.R.D பண்டார நாயக்கா

F.R சேனா நாயக்கா

F.C சேனநாயக்கா

D.P ஜயதிலக்க

W.W.A.D சில்வா

C.W.W கன்னங்கரா

இவர்கள் பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தின் 2ம் நிலை தலைவர்களாக செயற்பட்டனர்.

## பௌத்த சமய மறுமலர்ச்சி இயக்கத்தின் செயற்பாடுகள்

சிங்கள – பௌத்த மக்கள் மத்தியிலே தேசியத்துவ உணர்வை கட்டியெழுப்பியது இதனால் இலங்கையில் ஒரு தேசிய இயக்கம் தோற்றம் பெறுவதற்கான தளத்தை அது உருவாக்கியது. அது மட்டுமன்றி இலங்கையில் தோன்றிய தேசிய இயக்கத்திற்கான தலைவர்களை உருவாக்குவதிலும் இவ்வியக்கம் முக்கிய பங்கு வகிக்கின்றது.

மற்றும் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தை ஸ்தாபித்தவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஆவார். பௌத்த மறுமலர்ச்சி இயக்கம் சுறுசுறுப்பு மிக்க இயக்கமாக செயற்பட்டு மக்கள் மத்தியிலே செல்வாக்கு பெற்ற இயக்கமாக மாறிய போது அதன் எதிரொலியாக எழுச்சி பெற்ற இயக்கமே இந்து மறுமலர்ச்சி இயக்கம் ஆகும். இந்துக்கள் மதமாற்றம் செய்யப்படுவதனை தடுத்து நிறுவத்துவதிலே இந்த இயக்கம் தீவிரமான பங்கை ஆற்றியது. இந்து ஆங்கில பாடசாலைகளை நிறுவி அவற்றிற்கூடாக இந்து மக்கள் ஆங்கில கல்வியை கற்றுக் கொள்வதற்கு வசதி செய்து கொடுத்தது. யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி இந்த இயக்கத்தால் நிறுவப்பட்ட

பாடசாலை ஆகும். இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் செயற்பாடுகள் காலணித்துவ ஆட்சியாளர்களின் மதமாற்ற செயற்பாடு மீது பாரிய தாக்கத்தை தோற்றுவித்தது. அத்துடன் இந்துக்களை ஏகாதிபத்திய வாதிகளுக்கு எதிரான உணர்வு மிக்கவர்களாக கட்டியெழுப்புவதிலும் செல்வாக்கு செலுத்தியது.

அதேபோல் பௌத்த இந்து மறுமலர்ச்சி இயக்கங்களுக்கு அடுத்தாக முக்கியம் பெறும் மற்றொரு இயக்கம் இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கமாகும். காலணித்துவ ஆட்சியாளருடைய மதமாற்ற நடவடிக்கைகள் இஸ்லாமிய மக்கள் மத்தியிலே கலாச்சார ரீதியிலான பாதிப்பை ஏற்படுத்துவதை தடுப்பதற்காக உருவாக்கப்பட்ட இயக்கமே இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கம் ஆகும். இந்த இயக்கத்தை தோற்றுவித்தவர் அறிஞர் சித்திலெப்பை என்பவராவார்.

இவர் இஸ்லாமிய மக்கள் ஆங்கில கல்வியை பெறுவதற்கும் ஆங்கில கலாச்சாரம் இலக்கியம் என்பவற்றை பாதுகாக்கவும் பல்வேறு நடவடிக்கையைப் மேற்கொண்டது. குறிப்பாக இஸ்லாமிய ஆங்கில பாடசாலைகளை நிறுவியமை முஸ்லீம் நேசன் என்ற பத்திரிகையை நிறுவியமை இஸ்லாமிய மத பிரச்சாரங்களை பள்ளிவாசலுக்கூடாக முன்னெடுத்தமை போன்ற பணிகளை மேற்கொண்டனர்.

இஸ்லாமிய இயக்கத்தின் மேற்குறித்த நடவடிக்கைகள் இஸ்லாமியர் மத்தியிலே ஏகாதிபத்தியற்கான் எதிரான எதிர்ப்பு உணர்வை கட்டியெழுப்புவதாக அமைந்தது. மேற்குறித்த அடிப்படையிலே பௌத்த, இந்து, இஸ்லாம் மத மறுமலர்ச்சி இயக்கங்கள் கூட்டு மொத்தமாக இலங்கை மக்கள் மத்தியிலே தேசிய ரீதியிலான எழுச்சி ஒன்று ஏற்படுவதற்கு வழிகோலியது. இந்த எழுச்சி இலங்கையில் ஒரு தேசிய இயக்கம் உருவாக்கம் பெறுவதற்கு வழிகோலுவதாக அமைந்தது.

இவ்வாறு இலங்கையில் தேசிய இயக்கம் தோற்றம் பெற பௌத்த, இந்து, இஸ்லாம் ஆகிய மூன்று மதங்களினதும் மறுமலர்ச்சி புனருத்தாரண இயக்கங்களே காரணம் ஆகும்.

✲ ✲ ✲

பௌத்த மதத்தின் சிறப்பை அவர்களுக்கு எடுத்து விளங்கியமை, பௌத்தர்கள் மத்தியிலே மதமாற்ற நடவடிக்கைக்கு எதிரான விழிப்புணர்வை கட்டியெழுப்பியமை; பௌத்த ஆங்கில பாடசாலைகளை நிறுவி பௌத்தர்கள் ஆங்கிலமொழி மூல கல்வியை பெறுவதற்கு வகை செய்தமை; போன்ற பணிகளை இவ்வமைப்பு செய்தது. இந்த இயக்கத்தின் சுறுசுறுப்பான செயற்பாடு காரணமாக இவ்வியக்கத்துடன் பெரும் எண்ணிக்கையான இளைஞர்கள் அணி திரண்டனர். அவர்களுள் பின்வருவோர் முக்கியமானவர்கள்.

D.S சேனநாயக்கா
S.W.R.D பண்டார நாயக்கா
F.R சேனா நாயக்கா
F.C சேனநாயக்கா
D.P ஜயதிலக்க
W.W.A.D சில்வா
C.W.W கன்னங்கரா

இவர்கள் பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தின் 2ம் நிலை தலைவர்களாக செயற்பட்டனர்.

## பௌத்த சமய மறுமலர்ச்சி இயக்கத்தின் செயற்பாடுகள்

சிங்கள – பௌத்த மக்கள் மத்தியிலே தேசியத்துவ உணர்வை கட்டியெழுப்பியது இதனால் இலங்கையில் ஒரு தேசிய இயக்கம் தோற்றம் பெறுவதற்கான தளத்தை அது உருவாக்கியது. அது மட்டுமன்றி இலங்கையில் தோன்றிய தேசிய இயக்கத்திற்கான தலைவர்களை உருவாக்குவதிலும் இவ்வியக்கம் முக்கிய பங்கு வகிக்கின்றது.

மற்றும் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தை ஸ்தாபித்தவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஆவார். பௌத்த மறுமலர்ச்சி இயக்கம் சுறுசுறுப்பு மிக்க இயக்கமாக செயற்பட்டு மக்கள் மத்தியிலே செல்வாக்கு பெற்ற இயக்கமாக மாறிய போது அதன் எதிரொலியாக எழுச்சி பெற்ற இயக்கமே இந்து மறுமலர்ச்சி இயக்கம் ஆகும். இந்துக்கள் மதமாற்றம் செய்யப்படுவதனை தடுத்து நிறுவத்துவதிலே இந்த இயக்கம் தீவிரமான பங்கை ஆற்றியது. இந்து ஆங்கில பாடசாலைகளை நிறுவி அவற்றிற்கூடாக இந்து மக்கள் ஆங்கில கல்வியை கற்றுக் கொள்வதற்கு வசதி செய்து கொடுத்தது. யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி இந்த இயக்கத்தால் நிறுவப்பட்ட

பாடசாலை ஆகும். இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் செயற்பாடுகள் காலணித்துவ ஆட்சியாளர்களின் மதமாற்ற செயற்பாடு மீது பாரிய தாக்கத்தை தோற்றுவித்தது. அத்துடன் இந்துக்களை ஏகாதிபத்திய வாதிகளுக்கு எதிரான உணர்வு மிக்கவர்களாக கட்டியெழுப்புவதிலும் செல்வாக்கு செலுத்தியது.

அதேபோல் பௌத்த இந்து மறுமலர்ச்சி இயக்கங்களுக்கு அடுத்தாக முக்கியம் பெறும் மற்றொரு இயக்கம் இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கமாகும். காலணித்துவ ஆட்சியாளருடைய மதமாற்ற நடவடிக்கைகள் இஸ்லாமிய மக்கள் மத்தியிலே கலாச்சார ரீதியிலான பாதிப்பை ஏற்படுத்துவதை தடுப்பதற்காக உருவாக்கப்பட்ட இயக்கமே இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கம் ஆகும். இந்த இயக்கத்தை தோற்றுவித்தவர் அறிஞர் சித்திலெப்பை என்பவராவார்.

இவர் இஸ்லாமிய மக்கள் ஆங்கில கல்வியை பெறுவதற்கும் ஆங்கில கலாச்சாரம் இலக்கியம் என்பவற்றை பாதுகாக்கவும் பல்வேறு நடவடிக்கையை மேற்கொண்டது. குறிப்பாக இஸ்லாமிய ஆங்கில பாடசாலைகளை நிறுவியமை முஸ்லீம் நேசன் என்ற பத்திரிகையை நிறுவியமை இஸ்லாமிய மத பிரச்சாரங்களை பள்ளிவாசலுக்கூடாக முன்னெடுத்தமை போன்ற பணிகளை மேற்கொண்டனர்.

இஸ்லாமிய இயக்கத்தின் மேற்குறித்த நடவடிக்கைகள் இஸ்லாமியர் மத்தியிலே ஏகாதிபத்தியற்கான எதிரான எதிர்ப்பு உணர்வை கட்டியெழுப்புவதாக அமைந்தது. மேற்குறித்த அடிப்படையிலே பௌத்த, இந்து, இஸ்லாம் மத மறுமலர்ச்சி இயக்கங்கள் கூட்டு மொத்தமாக இலங்கை மக்கள் மத்தியிலே தேசிய ரீதியிலான எழுச்சி ஒன்று ஏற்படுவதற்கு வழிகோலியது. இந்த எழுச்சி இலங்கையில் ஒரு தேசிய இயக்கம் உருவாக்கம் பெறுவதற்கு வழிகோலுவதாக அமைந்தது.

இவ்வாறு இலங்கையில் தேசிய இயக்கம் தோற்றம் பெற பௌத்த, இந்து, இஸ்லாம் ஆகிய மூன்று மதங்களினதும் மறுமலர்ச்சி புனருத்தாரண இயக்கங்களே காரணம் ஆகும்.

✲ ✲ ✲

# வாசிப்பதனால் மனிதன்

**வி.தாரணி, தரம் 06**

மனிதனது வாழ்வானது பல சவால்களையும் தடைகளையும் கொண்டமைந்துள்ளன. இவைகளைத் தாண்டி வாழ்க்கையில் வெற்றியைக் காண தேடல் அவசியமாகின்றது. **'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு'** எனும் ஆன்றோர் வாக்கிற்கிணங்க **'தேடலின் மூலம் கல்வியைப் பெறு'** இன்றைய வாக்கு. எனவே மனிதன் வாசிப்புத் தேடலின் மூலம் பூரணமடைகின்றான் என்பது குறிப்பிடத்தக்கது.

அறிவுச் சமுதாயத்தின் அடித்தளமாக வாசிப்பு அமைவதும் உலக அறிவைப் பெறுதவற்கான திறவு கோலும் அதுவே ஆகும். ஆனால் இன்று இலத்திரனியல் ஊடகங்களின் ஆக்கிரமிப்பினால் கணினி மயமாக்கப் பட்டுவரும் புதுவாழ்விலே பாடசாலைகளின் கல்வி முறைமை பாடத்திட்டத்துடன் சுருங்கி விட்ட நிலைமை மனிதன் எப்படியும் வாழலாம் என்ற மனம் போன போக்கில் வாழ முற்பட்டமையால் புத்தகங்கள் இல்லாத வாசிப்பு உணர்வற்ற உலகத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றோம். புத்தக வாசிப்பை மறந்து சமுதாயம் அழிந்து போகும் என்பது ஆராய்ச்சியாளர் முடிவாகும்.

நாம் தினமும் வாசிப்போமேயானால் ஆற்றல் பெருகும், ஆளுமை உருவாகும், சோர்வு நீங்கி, உற்சாகம் பெருகும். சுயநலம் கடந்த பொது நலம் உருவாகும், முடிவெடுக்கும் திறன் அதிகரிக்கும், தன்நம்பிக்கை தோன்றும், மனம் நிறைவு பெறும். வாழ்க்கை மேம்படும், நவீன சிந்தனைகள் உருவாகும், அறிவு விருத்தியடையும், மொழிவளம் பெருகும், சுய கற்றல் உருவாகும், பொது அறிவு வளரும், எழுத்தாற்றல், பேச்சாற்றல், படைப்பாற்றல் அதிகரிக்கும் எனவே தான் தகவல் அறிந்த கல்வி அறிவுடைய சமுதாயத்தை உருவாக்க முடியும். இதன் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு கூறுகின்ற வழிகாட்டியாகவும், ஆலோசனை கூறும் ஆலோசகராகவும் விளங்க முடியும்.

இதற்கு மேலாக சிந்தித்து வாசிக்கின்ற சமுதாயம் இன்று செல்லிடத் தொலைபேசியில் வரும் குறுஞ் செய்திகளைத் தவிர வேறு எதையும் வாசிக்கும் பழக்கம் இல்லாதவர்களாக இருக்கின்றன. எனவே வாசிப்பில் ஏற்படுகின்ற பின்னடைவை சீர்செய்வதில் அக்கறை செலுத்துவது காலத்தின் தேவையாகும்.

எனவே வாசிப்பே ஒரு மனிதனை பூரணமடையச் செய்வதால் நூல்களுக்கும் குழந்தைகளுக்குமிடையே வாசிப்பு என்ற காற்றை சுவாசிக்கக் கற்றுக்கொடுக்க வேண்டும். நாம் உடைக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் போல வாசிப்பு அவசியம் என்ற மனநிலையை ஒவ்வொரு மனங்களிலும் ஏற்றி வைப்போமாக!

✲ ✲ ✲



## வாசிப்பை நேசிப்போம்

ச.லக்சனா, தரம் 10

பாடசாலை விழுதுகள் - நாம்
பள்ளி நூலகம் தனை - மிகப்
பயன் படுத்தியே எந்நாளும்
மிளிர்ந்திடுவோம் பாரினிலே!

பாசி மூடிய பவளம் போல
பயனற்றிருக்காது கதை
கவிதை கட்டுரையென
களிப்புடனே பலவற்றையும்
பாடசாலை நூலகம் - தனில்
படித்திடுவோம் பரிவுடனே
மாரித் தவளையின் இயல்பில்!

மாணவர்கள் நாம் வகுப்பினிலே
பொன்னான நேரந்தனில் - வீண்
பகிடி வகைகள் செய்திடாது
ஆயிரம் ஆயிரம் புத்தகம் புரட்டி
மாறிடுவோம் பூரண மனிதர்களாய்!



✲ ✲ ✲

# பழமொழிகளும் அவற்றின்

**ச.சுபாஷ்திகா தரம் 06**

1. அழுத பிள்ளை பால் குடிக்கும்
   **முயற்சி செய்தவர் பயன் பெறுவர்**

2. இறக்கப் போனாலும் சிறக்கப் போ
   **வறுமையிலும் செம்மையாக வாழ வேண்டும்**

3. பேராசை பெருந் தரித்திரம்
   **எல்லை கடந்த ஆசை இன்பம் தரும்.**

4. முயற்ச்சியுடையார் இகழ்ச்சி யடையார்
   **விடாது முயற்சி செய்தால் வெற்றி கிட்டுவது நிச்சயம்**

5. காற்றுள்ள போதே தூற்றிக்கொள்
   **சந்தர்ப்பத்தை தவற விடக்கூடாது.**

6. நாமொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைத்தது.
   **எண்ணியபடி எதுவும் நடப்பதில்லை.**

7. விளையும் பயிரை முளையில் தெரியும்
   **ஒருவனின் சிறுவயதுப் பழக்கங்களை வைத்து அவனைப் பற்றி மதிப்பிடலாம்.**

8. அஞ்சியவன் கண்ணுக்கு ஆகாயமெல்லாம் பேய்
   **பயமுள்ளவனை எல்லாம் பயமுறுத்தும்**

9. ஆத்திரகாரனுக்கு புத்தி மத்திமம்.
   **கோபம் வருமிடத்து நிதானம் குறைந்து விடும்.**

10. கோபம் பாவத்தைத் தேடும்.
    **கோபம் தீமையை ஏற்படுத்தும்.**

✲ ✲ ✲

# உங்களுக்குத் தெரியுமா?

**கௌசல்யா, உயர்தரம் 2016 (கலை)**

- ✠ மூளையைவிட பெரிதான கண்களை கொண்ட பறவை? **தீக்கோழி**
- ✠ நாக்கால் காதை சுத்தம் செய்யும் விலங்கு? **ஒட்டகசிவிங்கி**
- ✠ நான்கு மூக்குகளை உடைய உயிரினம்? **நத்தை**
- ✠ வயிற்றில் நான்கு பகுதிகளை கொண்ட விலங்கு? **மாடு**
- ✠ நீரை அருந்தாத நீர்வாழ் உயிரினம்? **டொல்பின்**
- ✠ நுலையீரல் இல்லாத உயிரினம்? **எறும்பு**
- ✠ பின்புறமாக பறக்கும் பறவை? **ஹம்மிங் பறவை**
- ✠ துருவக் கரடி எந்த கையை அதிகமாக பயன்படுத்தும்? **வலது கை**
- ✠ பற்கள் இல்லாத பலூட்டி இனம்? **எறும்புத்தின்னி**
- ✠ நட்சத்திர மீன்களுக்கு எத்தனை கண்கள்? **எட்டு**
- ✠ மூன்று இதயத்தை கொண்ட கடல்வாழ் உயிரினம் எது? **அக்டோபஸ்**
- ✠ உலகில் மிகவும் விஷத்தன்மை கொண்ட மீன்? **ஸ்டோனஃபிஷ்**(அவுஸ்ரேலியா)
- ✠ தலையில் இதயத்தை கொண்டுள்ள கடல்வாழ் உயிரினம்? **இறால் மீன்**
- ✠ உலகிலே மிகப்பெரிய பாலூட்டி இனம்? **நீலத்திமிங்கலம்**
- ✠ இமையுள்ள பறவை எது? **தீக்கோழி**
- ✠ கழுத்தை வட்டமாக சுற்றும் பறவை? **ஆந்தை**
- ✠ நீரிற்கு அடியில் பறக்கும் பறவை? **பென்குயின்**
- ✠ மூக்கில் பல் உள்ள உயிரினம்? **முதலை**
- ✠ உலகிலே அதிக நேரம் மூச்சை அடக்கும் பிராணி? **முதலை**
- ✠ நம்முடைய இதயத்தின் எடை? 10 **அவுன்ஸ்**
- ✠ கண்ணை பரிசோதிக்க பயன்படும் கருவி? **அப்தஸ் மாஸ்கேப்**

நாடுகளும் பாராளுமன்றங்களும்

- பூட்டான் – தேசிய அசெம்பிளி
- சீனா – தேசிய மக்கள் கங்கிரஸ்
- இங்கிலாந்து – பாராளுமன்றம்
- இந்தியா – பாராளுமன்றம்
- ஈராக் – தேசிய அசெம்பிளி
- நேபாளம் – தேசிய பஞ்சாயத்து
- போர்த்துக்கல் – கோர்ட்டஸ்
- லிபியா – பொதுமக்கள் கங்கிரஸ்
- கொலம்பியா – காங்கிரஸ்
- தென் ஆபரிக்கா – அசெம்பிளி சபை
- இலங்கை – பாராளுமன்றம்

***

நாள்கள் செல்லச் செல்ல
நாம் கல்லூரியை மறந்தாலும்
கல்லூரி நம்மை
மறப்பதில்லை......
பள்ளி அறையில் ஒன்றாய்
செய்த குறும்புகளும்.......
மேசை மேல் வரைந்த
கிறுகல்களும்.......
மரங்களில் செதுக்கிய
பெயர்களும்.......
ஆசையாய் நாட்டிய
பூக்கன்றுகளும்
என்றும் எம்மை
நினைவு படுத்திக்
கொண்டே இருக்கும்.

கல்லூரி
அகல்யா, உயர்தரம் 2016 (வர்த்தகம்)

***

# விடுகதைகள்

01. இரத்தத்திலே வளர்வது இரத்தம் அல்லாதது அது என்ன? நகம்

02. இருட்டுக்குள் நடமாடுவான். குருட்டுப் பட்டம் பெற்றவன் அவன் யார்? **வௌவால்**

03. தலையை தட்டினால் வாய்விட்டு அழுவான் அவன் யார்? **நீர்ப்பம்பி**

04. புத்தாண்டு விருந்தாளி தங்குவதோ ஓராண்டு? **கலண்டர்**

05. உயிரில்லாத நீதிபதி உரிய தீர்ப்பு வழங்குவார் அவர் யார்? தராசு

06. தீக்குளித்தால் திடமாக இருப்பான் அவன் யார்? **செங்கல்**

07. கையில் தவழும் கையில் உறங்கும் அது என்ன? **பணம்**

08. உருவம் உண்டு உயிர் இல்லை அது என்ன? **சட்டை**

09. சங்கீத பாட்டுக்காரன் இவன் பாட்டால் எதிரிக்கு இரையாவான் அவன் யார்? **தவளை**

10. கல்வீட்டு தாத்தா மெதுவாகத்தான் நடப்பார் அது என்ன? **ஆமை**

11. வரும்போது வெண்சிவப்பு! வளர வளரத் தகதகப்பு! போகும் போது கடும் சிவப்பு! அது என்ன? **சூரியன்**

12. மழைக்காலம் வந்து விட்டால் மகராசி பாட்டெடுப்பான் அவன் யார்? **தவளை**

13. தீக்குளித்தாலும் திடமாக இருப்பவர்? **செங்கல்**

14. கல்வீட்டுத் தாத்தா மெதுவாகத் தான் நடப்பார் அவர் யார்? **ஆமை**

15. வயலில் உழுதவன் ஊதியம் வாங்கவில்லை அவன் யார்? **மண்புழு**

16. வெயிலில் மலரும். காற்றில் உலரும் அது என்ன? **வியர்வை**

17. தலையைச் சீவினால் தாளில் நடப்பான் அவன் யார்? **பென்சில்**

18. ஊசி போட்ட வைத்தியர் பாடிக் கொண்டே போகிறார் அவர் யார்? **நுளம்பு**

# எமது யூனியன் கல்லூரி

**சசீலன் பவித்திரா, உயர்தரம் 2016 (கலை)**

நம் யாழ்ப்பாணத்திற்கு ஓர் பந்தமாய்
நம் தெல்லிப்பழைக்கு ஓர் சொந்தமாய்
ஆழ்கடலில் தோன்றிய ஓர் அதிசயமாய்
1816ல் ஆரம்பமானது நம் யூனியன் கல்லூரி

எத்தனை அதிபர்களின் கால்தடங்கள்
எத்தனை ஆசிரியர்களின் வியர்வைத் துளிகள்
இவையெல்லாம் மறக்குமா........ நம் கல்லூரி
எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் ...........

பல்லாயிரக்கணக்கான மாணவர்களை
கற்பித்து நம் கல்லூரி - இப்போது
இவர்களெல்லாம் பல துறைகளில் கலைஞர்களாக
நம் நாட்டில் ..........

பல பட்டதாரிகளையும் பல அறிஞர்களையும்
கற்பித்த கல்லூரி, காலங்கள் சென்றாலும்
அழியாது பல நெஞ்சங்களின் நினைவுகளில்
இன்றும் கூட ...........

எத்தனை காலமும் காத்திருக்கும் என்றும்
திறந்த வாசலுடன் - இனிவரும் மாணவர்களையும்
ஏணியில் ஏற்றி சிறந்த வழிகாட்ட
எம் யூனியன் கல்லூரி.

✲ ✲ ✲

## சசீலன் பவித்திரா, உயர்தரம் 2016 (கலை)

தமிழர் தம் பெருமையெல்லாம்
தாழ்வாகிப்போனது
இந்நாட்டிலே .... தமிழ் மண்ணை
மறந்து சுகம் தேடி .......
...... பிறநாட்டில் ..........

உன் தமிழ் மண்ணை நீ மறந்து
அந்நியரிடம் அடிபணிகிறாயா?
ஆடம்பரமாய் வாழ்ந்தாலும் அதில்
உன் தமிழ் மண்ணின் மணம் வருமா?

எம் மண்ணை விட்டு எங்கு
சென்று நீ பஞ்சணையில்
உறங்கினாலும் எம்தமிழ்
மண்ணின் இனிமைதனை - உன்
உறக்கம் தந்திடுமா.......?

பதினாறு முளச் சேலையோடு
அழகோவியம் காட்டியவள்
நான்கு துண்டோடு இன்று
அலங்கோலம் காட்டுகிறாள்
உன் தமிழ் மண் உன்னை
மறக்கவில்லை நீ - தான்
எம் மண்ணை மறந்துவிட்டாய்.


✲ ✲ ✲

# மொழிகள்

சசீலன் பவித்திரா உயர்தரம் 2016 (கலை)



இடைவிடாது பொழியும்
நீர் வீழ்ச்சியின் ஓசையும்
தடையில்லாமல் ஓடுகின்ற
நதிகளின் பாஷையும்
கரையுடன் வந்து மோதுகின்ற
கடலலையின் சங்கீதமும்
அடவிக் காட்டில் மரங்களுடன்
தென்றல் பேசுகின்ற கதைகளும்
கண்டு தெளிக்கின்ற
ஞானமில்லை இதுவரையில்
ஒருவருக்கும்.......



ஆனால் இவையெல்லாம்
எமக்கு ஏதோ கூற
விளைகின்றது போல.......
தங்களின் மொழிகளால் .........
அது என்ன என்றுதான்
இதுவரையில் புரியவில்லை!
எம் மவர்களுக்கு.........

✲ ✲ ✲

# காலம்

சசீலன் பவித்திரா, உயர்தரம் 2016 (கலை)

காலம் கலியுகமானது
கலாச்சாரங்கள் காணமற் சென்றன
புத்தகங்கள் ஏந்தும்
கைகளில் எல்லாம்
கைத் தொலைபேசி .......

களவாடப்பட்டன - எம்
காவியங்களும் இலக்கியங்களும்
உறவாடப்பட்டன
தற்போதைய சினிமா
பக்கங்களோடு.......

மாலையில் விளையாட ........
செல்லும் நம் இளைஞர்கள் இன்று .........
தெருவோர மதில்களோடு
கதை பேசும் நிலை.........

மறைவிடத்தில் புகைப்பிடிப்போர்
ஒருபக்கம் ........
மது பானக் கடைக்குள்
தள்ளாடுவோர் இன்னொரு பக்கம்

இவையெல்லாம் வேண்டாம்
காலம் மாறினாலும்
நம் காலச்சாரம் மாறக்கூடாதென்று
புத்துணர்வு பெற வேண்டும் - இவர்களெல்லாம் ......

✲ ✲ ✲

# யூனியன் தாய்

**கா.பிறேமறஜனி**

*யுகத்தின் புதுமையாம் யூனியன் தாயே*
*ஜெகத்தில் உன்பிறப்பு 1816 தனிலே*
*வளத்தில் வளர்ச்சியில் வானளாவி இன்று - புது*
*யுகத்தை உருவாக்கும் மாணவரைத் தந்தாய்*

*கணத்தில் மாற்றங்காண் கலியுகத்தில் நீ இன்றும்*
*கணமும் மாறாமல் கல்வியைத் தருகின்றாய்*
*வியத்தகு வல்லாளர் உன்னின்று வெளியேற*
*மனதில் மகிழ்வெய்தி மலர்வாக நிற்கின்றாய்*

*அமெரிக்க மிஷனரியின் மூவர் தலைமையிலே*
*ஆங்கில இலவசப் பாடசாலையில் முதலாய்*
*உயர்பாடசாலைத் தொழிற்பயிற்சியும் கொண்டு*
*உயர்தரப் பாடசாலையாய் 1939களில்*

*அழகும் பொலிவும் அவனியிலே கொண்ட உன்னை*
*அரசாங்கம் ஏற்றது 1962களில் அன்னையே*
*அன்று முதல் மாணவரை கல்வியிலே கலைகளிலே*
*அன்பினிலே பண்பினிலே ஏற்றிவைத்தாய் எம்தாயே*

*அந்தோ இன்றும் பதறிடுதே எம்மிதயம்*
*நினைவு வந்தவேளையெல்லாம் திடுக்குற்று நிற்கின்றோம்*
*1987 இனிலே உன் ஆவணங்கள் முற்றும்*
*தீக்கிரையாகி நின்றவேளை ஏதிலிகளாய் நாம் ஏங்கி நின்றோம்*

*தெல்லி மாநகர்க்கோர் திலகமாய்த் திகழ்ந்த நீ*
*இடம்விட்டு இடம்சென்றாய் 1992களிலே*
*மல்லாகம் மகாவித்தி இராமநாதன் தொடர்*
*தென்மராட்சி எனத் தொடர்ந்து உன்சேவை*

மீண்டும் 12 ஆண்டுகள் இடைவெளியில்
தெல்லிமா நகரில் உன்பதியில் தற்போது
வெல்லும் புன்னகையும் வீரமுகமும் கொண்டு
சொல்லணா துன்பங்களை தூளாக்கி நிற்கின்றாய்

அன்னையே உன்னை அருமையாய் வளர்த்த முதல்வர்கள்
மூவர்பின் வணஹென்றி வூட்ஜா அவர்கள் பின்
வண ஹொலண்ட் வணரி.எஸ் ஸமித் வணடிக்சன்
முதலாம் சுதேஸ அதிபராக ரட்ணவரத பின் துரைரத்தினம்

இவர்கள் வளியினில் திரு.க.பாலசுந்தரம் திரு வு.நடராஜா
திரு நா.ஸ்ரீபுஸ்பநாதன் திரு.ந.கந்தசாமி திரு.கொ.கமலநாதன்
திரு.வி.வில்லவராயா தொடர்ந்து திரு. அ.புண்ணியசீலன்
இவர் வளியில் இனிதே இன்று திரு.வே.க.இரட்ணகுமார்

மாபெரும் மகத்தான நோக்காய் என்றும்
மாறிவரும் உலகினை எதிர்கொள்ளும் வகையில்
மாணவ சமுதாயத்தை தோற்றுவித்தல் என்ற
குன்றாப் பெருநோக்கை நன்றாகக் கொண்டாய்

கல்லூரியின் பாரம்பரியங்கள் விழுமியங்களொடு
மனித வளத்தின் தரமேம்பாடு இலங்கு
அடிப்படைத் தேரச்சிகள் எல்லாம் ஏற்றும்
மேலான நோக்கைப் பணிக்கூற்றாய்க் கொண்டாய்

உன் பாடசாலைக் கலாச்சாரம் - உலகில்
தரும் எமக்கு அச்சாரம்
பல்தரமாம் சமூக அடுக்குக் கொண்ட
மாணவர்தம் வளர்சசிப் பாதையின் திசைகாட்டி நீ

அடிப்படைக் கல்வி பொதுத்தேர்ச்சி பாடத்தேர்சியுடன்
சமூகத்திறன்கள் தனியார் திறன்கள் வளர்த்து
சமநிலை அழுமை, தலைமைத்துவம் கூட்டிணைந்த முயற்சியுடன்
வகைகூறும் தன்மை தொடர்பாடல் திறன் கட்டி எழுப்புகின்றாய்

வையத்தில் வல்லோதாய் வாழவைத்தாய் போற்றி
வாழ்வினிலே தீபமதை ஏற்றிவைத்தாய் போற்றி
வளமாகி வளங்களை தந்த உன்பதம் போற்றி
ஏற்றிடுவோம் உன்னை யூனியன் தாயே போற்றி போற்றி

✲ ✲ ✲

# முன்னேற்றப் பாதையில்

சி.மதுஷனா, தரம் 11



கிரேக்க புராதன கட்டுக்கதைகளின் படி பணம் என்பது டிமோடைக் கைமி, லைகோஸ் போன்ற கடவுன்களால் படைக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. எமது மூதாதையர்களின் ஒரு இலட்சம் ஆண்டுகளுக்கு முன் பிரகாசமான பெறுமதியான கனிப்பொருட்களையே பணமாகப் பயன்படுத்தியுள்ளார். அதாவது எகிப்தியர்கள் தங்கத்தையும் சுமேரியர்கள் வெள்ளியையும் பயன்படுத்தியுள்ளனர். எனினும் பண்டைய காலத்தில் கொடுக்கல் வாங்கலின் பொருட்டுப் பணம் பயன்படுத்தப்படவில்லை. இதற்குப் பதிலாக மனிதர்கள் பண்டமாற்று முறையையே கையாண்டுள்ளனர். இதற்குப் உதாரணமாகக் கூறப்போனால் எவ்வளவு உயர்ந்தவர்கள் ஆயினும் ஒரு விவசாயிடன் தொடர்பு வைத்திருக்க வேண்டும். தங்கத்தை வைத்திருக்கும் ஒருவர் கூட விவசாயியுடன் தனது உணவுத் தேவைக்காக கோதுமையைப் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலை காணப்பட்டது. இதுவே பண்டமாற்று முறையாகும். பொருட்களை சிறுசிறு அலகுகளாகப் பிரிக்க முடியாமை. பொதுவான அளவீடு இன்மை, நீண்ட காலம் பாதுகாக்க முடியாமை எனும் காரணிகளால் எல்லோரையும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்ட அங்கீகாரமுள்ள அரிதாள் உலோக வகைகள் பணமாக பயன்படுத்தப்பட்டன. இதன் காரணமாக இலகுவாகப் பயன்படுத்தக்கூடிய, இடத்துக்கிடம் எடுத்துச் செல்லக்கூடிய பண்புகளைக் கொண்ட பணம் பண்டமாற்றை விட சிறந்ததாகப் காணப்பட்டது.

உலோக நாணயங்களை உலகில் முதன் முதலாக பயன்படுத்தியது தற்காலத்து துருக்கியர்களது மேற்பிரதேசமாக விளங்கியது லிபியா ஆகும். லிபிய நாணயம் சிங்கம் பொறிக்கப்பட்ட உலோகத்தினால் ஆனது. இம்முறைமை உலகில் மத்திய கடற்பிரதேசம் உட்பட உலகின் அனைத்து நாடுகளுக்கும் பரவியுள்ளது.

உலகில் தாள் நாணயம் கி.பி 600ம் நூற்றாண்டளவில் வெளியிடப்பட்டது. சுவீடன் 1660ம் காலப்பகுதியில் தாள் நாணயங்கள் வெளியிட்டன. எனினும் லிபியா, சுவீடன் போன்ற இரு நாடுகளில் தாள் நாணயம் பயன்பாட்டு முறை வெற்றியளிக்கவில்லை. எனினும் 1690 ஆம் ஆண்டில் 'மொசகூசெட்' எனும்

பிரதேசத்தில் நிலவிய தாள் நாணய அச்சிடல் முறைமை சிறந்ததாக வேரூன்றிப் பாய்ந்தது. இன்றைய உலகமயமாக்கலின் கீழ் பண்டமாற்று முறையிலிருந்து வளர்ச்சியடைந்த உலோகப் பணம், தாள் நாணயங்களின் பாவனை வங்கிப் பணமாக வளர்ச்சி பெற்று தற்காலத்தில் தொழில் நுட்ப வளர்ச்சி காரணமாக இலத்திரனியல் பணமாக வளர்ச்சி கண்டுள்ளது. பணத்தின் பண்புகளாவன மிக நீண்ட காலம் பாவனையில் பயன்படுத்துவதும், இலகுவாக கொண்டு செல்லப்படுவது சிறுசிறு அலகுகளாகவும் கண்டுள்ளது இது பணத்துக்குப் பதிலாக கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளப் பயன்படும். இலத்திரனியல் அட்டை ஆகும். மனிதனின் அனைத்து விதமான பொருளாதார, சமூக, கலாசார செயற்பாடுகளில் பெறுமதியைக் தீர்மானிக்க உதவியாக அமைந்துள்ளது. பலம் பொருந்திய பணம் எனினும் ஆக்கக் கூறாக மாறியுள்ளது. என்பதை அடையாளம் காணலாம். செய்யும் கடமை ஈடு இணையற்றது.

**"ஈட்டி எட்டிய தூரம் வரைதான் பாயம்**
**பணம் பாதாளம் வரை பாயும்"**

✲ ✲ ✲

# திசை மாறிச்செல்லும் எம் இளம் சமூகத்திற்கு சமயக் கல்வியின் அவசியம்

சி.சிவப்பிரியா, உயர்தரம் 2015 (கலை)

"பொருளிலார்க்கு இவ்வுலகில்லை. அருளிலார்க்கு அவ்வுலகில்லை" என்பது தெய்வப் புலவரின் அருள்வாக்கு. இக்கூற்றிற்கு அமைவாக எமது முன்னோர்கள் இம்மை மறுமைப் பயன் கருதி இறைபக்தியுள்ளவர்கள் ஆக எந்தக் கருமத்தைச் செய்யத் தொடங்கும் போதும் இறை ஆசிபெற்றுச் செய்து வந்ததால் எடுத்த கருமங்களில் எல்லாம் வெற்றி பெற்று சீருஞ் சிறப்புடனும் வாழ்ந்து வந்தனர்.

மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற ஆன்றோர் வாக்கின்படி எம் முன்னோர்கள் முறையே அன்னையும் தந்தையையும் தாம் கண்ட முதல் தெய்வங்கள் என்றும் பின்னர் குருவின் சொற்படி நடந்து அவர் காட்டும் பாதையில் சென்று, இறைவனை அடையலாம் என்ற நம்பிக்கையுடன் வாழ்ந்து வந்தனர். அதனால் தான் எமது மூதாதையர்கள் அன்பு, பணிவு, அடக்கம், பொறுமை, விருந்தோம்பல் பண்பு, பஞ்சமா பாதங்களைச் செய்யாத மனப்பக்குவம் உள்ளவர்களாயும் காணப்பட்டனர். இப்படியான அறத்தோடு கூடிய வாழ்வை வாழ்ந்தமையால் தான் எமது தமிழ் இனத்தவருக்கு தனியான ஒரு கலாச்சாரமும் தான் எமது தமிழ் இனத்தவருக்கு தனியான ஒரு கலாசாரமும் பண்பாடும் இருப்பதைக் கண்டு மேல் நாட்டவர் வியந்தனர். ஆனால் இன்றைய இளம் சமூகம் பொருள் தேடுவதற்காக வெளிநாடுகளுக்குச் சென்று அவர்களின் கலாச்சாரத்தையும் வாழ்க்கை முறைகளையும் பார்த்து, கவரப்பட்டு விட்டில் பூச்சி வெளிச்சத்தைக் கண்டு வீண் போன செய்தி போல, தமது தனித்துவமான நாகரிகத்தைப் புறந்தள்ளி மேல் நாட்டவரின் நடை, உடை, பாவனைகளையும் இலட்சியம் இல்லாத வாழ்க்கை முறைகளையும் பின்பற்றுகின்றனர். அத்துடன் புனிதமான ஆலயங்களை கேளிக்கைக்குரிய பொழுது போக்கும் இடங்களாக கருதுகின்றனர்.

முன்னர் எமது ஆலயங்கள் மடாலயங்களாக இருந்த போது ஆன்ம ஈடேற்றம் கருதி அருள் தாகத்தை தீர்க்கும் நோக்கம் கொண்டும், சென்று வழிபாடியற்றி சமய ஒழுகலாறுடன் கூடிய பண்பையும் சமய விழுமியங்களையும் வளர்த்து

சமய வாழ்க்கையுடன் இணைத்து கடைபிடித்து வாழ்ந்ததால் மன நிறைவுடன் நோயற்ற வாழ்க்கை முதுமையிலும் வாழக்கூடியதாக இருந்தது.

"மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்து உன் விரையார். கழற்கென்கைதான் தலைவைத்துக் - கண்ணீர்ததும்பி, வெதும்பி உள்ளம்" என்ற பாடல் வரிகளில் வரும் உணர்வுகளை செய்வதில்லை. ஆண்கள் விரதமிருந்து அங்கப்பிரதட்சணம் செய்வதில்லை. பெண்கள் அடியழித்தல் போன்ற விரத செறி முறைகளின் படி ஒழுகுவதில்லை" பொதுவாக ஆலய வழிபாட்டின் போது வீழ்ந்து வணங்குவதற்கே பலர் வெட்கப்படுகின்றனர். ஆனால் பிறரின் உடை அலங்காரம், ஆபரணங்களின் அழகை இரசிப்பதில் மிகவும் சிரத்தையுடையவர்களாகக் காணப்படுகின்றனர். இறைவன் எல்லாம் அறிபவர் என்பதை அறியாத எம் இளம் சமூகம் குளிக்கப் போய் சேறு பூசிய கதைக்கு ஒப்பாக கடவுளையும் கோயிலையும் கொச்சைப்படுத்துகின்றனர்.

ஒருவர் விரதம் அனுஷ்டிக்கும் போது தான் பசியின் கொடுமை எப்படிப்பட்டது என்ற உண்மை அனுபவத்தை பெற முடியும். அதனால் ஒரு ஏழையின் பசியைப் போக்க தான தருமங்கள் செய்ய வேண்டும் என்ற சிந்தனையை உருவாக்கும். இதோடு விருந்தோம்பல் பண்பையும் வளர்த்துவிடும்.

ஆனால் இன்றைய இளம் சமூகத்தவர் விரதம் அனுட்டிப்பதில்லை. பெற்றோர் சொற்கேட்டு நடப்பதில்லை. பெரியோர்கள், முதியோர்களை மதிக்கும் பண்பு எள்ளளவும் இல்லை. ஒருவர் செய்த உதவிக்கு பிரதி உபகாரம் செய்ய வேண்டும் என்ற பண்போ நன்றியுணர்வோ இல்லை. அஞ்ஞானத்தில் இருந்து தம்மை மெய்ஞ்ஞான நிலைக்கு கொண்டு வந்த ஆசிரியர்கள கனம் பண்ணவும் மனம் வருவதில்லை. இவற்றையெல்லாம் விட மிக மோசமான பண்பு ஒன்று கூட இவர்களிடம் காணப்படுகின்றது. பிறர் துன்பத்தில் இன்பம் காண்பது பிறரின் பொருளை அபகரித்து அதன் மூலம் தாம் சொகுசு வாழ்க்கை நடத்துவது இப்படியெல்லாம் அநாகரிகமான பண்புகள் காணப்படுகின்றது.

அன்று பாரதியார் சொன்னது போல "சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில சாதல் கண்டும் இரங்காரடி கிளியே செய்வதறியாரடி" என்ற பாடல் வரிகளின் படி அன்னையும் பிதாவும் பின்னடிக்கு இடைஞ்சல் என்றும் புதிய குதர்க்க வாதப்பழமொழிகளை ஆக்கி வீண்வாதம் செய்கின்றனர்.

இப்படியே இவர்களை விட்டுவிட்டால் எமது சமய விழுமியங்கள் தமிழர்களின் தனித்துவமான பண்பாடும் சில காலத்தில் இவர்களால் அழிக்கப்பட்டு விடுமோ

என்று கூட சந்தேகம் உண்டாகிறது. எனவே புதிய கல்விச் சீர்திருத்தத்தில் கொண்டு வரப்பட்டிருக்கும் சமய ஒழுக்கலாறு பண்பும் பாடத்தின் மூலம் சேர்த்துப் போதிக்க வேண்டும் என கல்வி திணைக்களம் வலியுறுத்தியுள்ளது. அதனூடாக வாழ்க்கையுடன் சமயத்தை இணைத்துக் கொள்ளக்கூடிய புராண, இதிகாசக் கதைகள் பன்னிரண்டு மாதங்களிலும் அவற்றில் வரும் பண்டிகைகளிலும் மகத்துவத்தை ஆதார பூர்வமாக எடுத்துச் சொல்லியும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும்.

**"தீயவை தீமை பயத்தலால் தீயவை தீயினும் அஞ்சப்படும்"** என்னும் குறட்பாவின் மூலமும் இன்னும் வேண்டிய இடங்களில் தகுந்த உதாரணங்களுக்கேற்ற மேற்கோள்கள் மூலம் இடித்துரைக்கப்பட வேண்டும். திசை மாறிச்செல்லும் எம் இளம் சமூகத்தை திசை திருப்பி நல்வழிப்படுத்த பெரியோர்கள் அனைவரும் முன்வர வேண்டும். அவ்வாறு செயற்படுவதன் மூலமே எமது தமிழ் இனத்தின் சைவ சமயத்தின் தனித்துவமான பண்புகளைக் பாதுகாக்க முடியும்.

✲ ✲ ✲

# அம்மா

அ.கௌசல்யா, உயர்தரம் 2016 (கலை)



அம்மா என்றால்
அனைத்திலும் அவளே!
அகத்திலும் அமர்வாள்
அறியாப் பொருளே.....

(அம்மா)

உதிரமிந்த உத்தமியவளே
உயிரினில் கலந்த உறவுமவளே
உருவம் தந்த உயிர்புமானவளே
உருளும் உலகின் ஈர்ப்புமாவளே

(அம்மா)

அன்பினை சொரிவாள்
அகமதில் நிறைவாள்
ஆத்ம ஞானத்திலும்
ஜோதியாய் அவளே

(அம்மா)

நம் நலம் காப்பவள் - தான்
நலம் வேண்டாள்
நன்னெறி புகட்டியே
நல் வாழ்வு தருவாள்

(அம்மா)

அனுவிலும் அவளே
அண்டத்திலும் அவளே
அனைத்திலும் உறைவாள்
மனத்தால் அன்னையே

(அம்மா)


காவியம் புகழும்
கருணையின் கடலே
இன்னொரு பிறப்பாய்
வருவேன் உன்னிடமே

(அம்மா)

✲ ✲ ✲

# வணிகமும் வணிகத்திட்டமும்

ஞா.மேரிஜெஸ்மினி, தரம்



"வணிகம்" எனப்படுவது மனிதனுடைய தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவு செய்யும் எந்தவொரு கருமமும் ஆகும். வணிகத்தினுடைய அடிப்படை தேவைகளும் விருப்பங்களும் ஆகும். தேவைகள் எனப்படுவது மனிதனுடைய அடிப்படைத் திருப்தியை நிறைவேற்றும் பொருட்டு இயல்பாகவே எழுகின்ற நிலைமை ஆகும். விருப்பங்கள் எனப்படுவது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முற்படும் பல்வேறுபட்ட முறைகள் விருப்பங்கள் எனப்படும். எம்து அடிப்படைத் தேவைகளுக்கு உதாரணமாக உணவு, உடை, உறையுள், கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு போன்றவற்றைக் குறிப்பிடலாம். இத்தேவைக்களுக்குரிய விருப்பங்களாக முறையே பாவாடை சட்டை, மாடிவீடு, இணையம், மூலமான கல்வி, தனியார் வைத்தியசாலைகள், தனிநபர் பாதுகாப்புச் சேவை ஆகியவற்றை குறிப்பிட முடியும். வணிகர்கள் எமது தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவு செய்வதையும் தாம் இலாபம் அடைவதையும் நோக்கமாகக் கொண்டு தமது வணிக நடவடிக்கைகளை நடாத்திச் செல்கின்றனர்.

இவ்வாறு நடாத்திச் செல்லும் வணிகத்தினுடைய நடவடிக்கைகளில் வணிகத்தை ஆரம்பித்த முற்காலப் பகுதியில் வருமானம் குறைவாகக் கிடைத்தல், வேலை செய்வதற்கு அதிக நேரம் தேவைப்படல், பொழுது போக்கில் ஈடுபட நேரம் கிடைக்காது போதல், நிதிவசதி பேதாமை, கடன்கள் ஏற்படுதல் போன்ற பலசாவல்கள் ஏற்படக்கூடும். வணிகத்திட்டமொன்றினை தாயரித்தல் முக்கியமான ஓர் விடயமாகும். அந்த வகையில் வணிகத் திட்டத்தினை தாயரிக்க எந்தவொரு வணிக நடவடிக்கையையும் ஆரம்பிக்க முன் நடை பெற வேண்டிய வழிமுறைகள் பற்றி எண்ணிப் பார்த்து எதை, எப்படி, எப்பொழுது செய்வது எனத்தீர்மானித்து அதனை எழுத்துருவில் சமர்ப்பித்தல் வணிகத்திட்டம் ஆகும்" என வரைவிலக்கணப்படுத்த முடியும். வணிகத் திட்டம் ஒன்றினைத் தயாரிப்பதன் மூலம் வணிகத்தினுடைய நோக்கங்களை அறிய வழிகாட்டியாக அமைதல், விற்பனை

அல்லது இலாப நோக்கை அடைந்து கொள்ளக் கூடியவாறு இருத்தல், எதிர்கால இலக்கினை விபரிக்க முடிதல், நிதிவசதிகளைப் பெற்றுக் கொள்ள துணைபுரிதல். வணிகத்திறகு தேவையான வளங்களை அடையாளங் கண்டு கொள்ளுதல் போன்ற பலவகையான அநுகூலங்களை நாம் பெற்றுக் கொள்ளக் கூடியவாறு அமையும். வணிகத்திட்டம் ஒன்றை ஒழுங்குபடுத்த முன்னர் பொருத்தமான வியாபாரச் சந்தர்ப்பம் ஒன்றை தெரிவு செய்வதற்கான சந்தையின் தேவை, தெரிவு செய்யப்பட்ட வணிகத்தின் எதிர்கால நடவடிக்கைகள் பற்றி திட்டமிடல், நிதிவளத்தேவை, செயற்பாட்டு நடவடிக்கை, மனிதவளத்தேவை ஆகிய அம்சங்களை கருத்தில் கொள்ளுதல் வேண்டும். வணிகத்திட்டத்தில் உள்ளடங்கும் பிரதான திட்டங்கள் சந்தைப்படுத்தல் திட்டம், செயற்திட்டம், நிதித்திட்டம், என்பனவாகும்.

இவற்றுள் சந்தைப்படுத்தல திட்டத்தினை எடுத்து நோக்கினால் தனது பொருட்கள், சேவைகள் தொடர்பாக குறித்த விற்பனையை நோக்கிச் செய்வதற்காக யாதேனும் காலப்பகுதியொன்றின் போது பின்பற்ற வேண்டிய செயன்முறைகளை சந்தைப்படுத்தல் திட்டமொன்றின் மூலம் காட்ட முடியும். சந்தைப்படுத்தல் திட்டமொன்றின் போது நுகர்வாளர்களது நடத்தைப் போக்கினைப் பற்றி அறிய W5 கட்டமைப்பு பயன்படும். W5 கட்டமைப்பில் உள்ளடங்கும் விடயம் Who, What, When, Where, Why என்பதாகும். அதாவது Who என்பது உற்பத்திக்கான நுகர்வோர் குழுவையும் What என்பது அவர்களிற்குத் தேவையான பொருட்களையும் When என்பது அவர்கள் பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்யும் காலத்தையும், Where என்பது அவர்கள் பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்யும் இடங்களையும் Why என்பது பொருள்கள் சேவைகளை கொள்வனவு செய்வதற்கான தேவையையும் குறித்து நிற்கின்றது. சந்தைப்படுத்தல் திட்டம் ஒன்றில் எதிர்பார்க்கப்படும் விற்பனை, எதிர்பார்க்கப்படும் செலவு, எதிர்பார்க்கப்படும் இலாபம் ஆகிய விடயங்கள் உள்ளடக்கப்படும்.

வணிகரினால் வணிக சிந்தனைக்கு அமைய விற்பனை எதிர்வுகூறல் செய்த பின்பு விற்பனை செய்வதற்கு தயாராகுதல் வேண்டும். அதற்காகத் தீர்மானித்த செயற்பாட்டு நடவடிக்கைகளுக்குரிய உற்பத்தித் திட்டம் ஒன்றை உருவாக்க வேண்டும். உற்பத்தித் திட்டம் எனப்படுவது உற்பத்தி செய்வதற்குரிய பண்டத்தை தீர்மானித்து அதற்கரிய உற்பத்திச் செய்முறை, தேவையான வளங்கள் என்பவற்றையும் முற்கூட்டியே தீர்மானித்தல் ஆகும். உற்பத்தித் திட்டத்தை தயாரித்த பின்னர் எதிர்பார்க்கப்படும் உற்பத்தியின் அளவு, எதிர்பார்க்கப்படும் செலவுகள், மூலப்பொருட்கள், எதிர்பார்த்த அலகுக் கிரயம், எதிர்பார்த்த அலகொன்றின் விலை ஆகிய விடயங்களினை கவனத்தில் கொள்ள வேண்டும்.

வணிகத்திட்டத்தில் உள்ளடங்கும் பிரதான திட்டங்களில் நிதித்திட்டத்தினை எடுத்து நோக்கினால் இத்திட்டமானது வணிகம் ஒன்றின் வெற்றிக்கு அடிகோலுவது ஆகும். இவ்வாறு நிதிதொடர்பாக திட்டமிடுவதன் மூலம் குறைந்த மூலதனத்துடன் பெருமளவு வெற்றி பெற்ற நிறுவனமாக நிறுவனத்தை மாற்ற முடியும். நிதித்திட்டமொன்றில் நிதிமூலம், நிதிப்பயன்பாடு, ஆகிய விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும். நிதித்திட்டம் ஒன்றினை தயாரிக்கும் போது கவனிக்க வேண்டிய அம்சங்கள் வணிகத்தை ஆரம்பிக்கும் முன் முதலிடக் கூடியதொகை எவ்வளவு எனத்தீர்மானித்தல், முதலீட்டினை எவ்வாறாக பயன்படுத்துவது எனத்தீர்மானித்தல், என்பனவாகும். அத்தோடு திட்டமிடலில் வணிக நடவடிக்கைகளுக்கு தேவையான வளங்களை கொள்வனவு செய்வதற்கு நிதியை ஒதுக்கீடு செய்து கொள்ளும் முறை பற்றி முதலில் தேடியறிய வேண்டும்.

இவ்வாறு வணிகத்திட்டத்தில் உள்ள பிரதான திட்டங்களான சந்தைப்படுத்தல் திட்டம், உற்பத்தித் திட்டம், நிதித்திட்டம் ஆகியன. வணிகத்தின் செயற்பாட்டினை இலகுவாக நடத்திச் செல்வதற்கு உதவி புரிகின்றன.

சந்தைப்படுத்தல் என்பது ஒரு விரிவான துறையாக காணப்படுகின்ற அதே வேளை வணிகத்திற்கு பாரிய வெற்றியைத் தேடிக் கொடுக்கின்ற ஓர் துறையாகவும் காணப்படுகின்றது. செயற்பாட்டுத் திட்டமானது தமது வணிகத்தின் வகைக்கேற்றவகையில் உற்பத்தி செய்வதற்குரிய பண்டத்தை தீர்மானித்து அதற்குரிய உற்பத்தி செய்முறை தேவையான வளங்கள் ஆகிய விபரங்களை தெளிவுபடுத்துவதால் அவை தொடர்பான பிரச்சினைகளை இலகுவில் தீர்த்து வணிகத்தினை ஒழுங்கு முறையில் தயாரிப்பதன் மூலம் நன்றாகத் தீர்மானித்து அவசியமானதற்கு செலவு செய்வதன் மூலம் உச்ச திருப்தியினையும் உச்சப் பயனையும் பெற்றுக் கொள்ளக் கூடியவாறு இருக்கும்.

வணிகம் ஒன்றினை பல பிரச்சினைகளில் இருந்து தவிர்த்து நடத்திச் செல்வதற்கு வணிகத் திட்டத்தினையும் அதன் பிரதான திட்டங்களையும் தயாரித்து பயன் பெற்றுக் கொள்ள வணிகர்கள் பழகிக் கொள்ள வேண்டும்.

✲ ✲ ✲

# பெற்றோர்

ச.நிஷாந்தி, உயர்தரம் 2016 (கலை)



பத்து மாதம் கருவில் சுமந்து
ஆசையாய் பெற்றெடுப்பாள் அன்னையவள்
பாலூட்டி, சீராட்டி, தாலாட்டி
தினம் தினம் வளர்ப்பாள் ஆசையுடன்

எத்தனை கஷ்ரங்கள் எத்தனை துன்பங்கள்
அத்தனையும் மனதில் மறைத்து
அன்பையும் அறிவையும் ஆகாரமாய் தந்து
நல்வழி காட்டிடுவார் தந்தை.

இத்தனையும் மட்டுமா எத்தனை எத்தனை
என்னவென்று சொல்வது தெய்வங்களின் கொடையை
எம் பெற்றோர் எனக்களிக்கும் அன்பை
எப்படிக் கூறுவேன் வார்த்தைகளே இல்லை
வானளவு கூறலாம் ...................

✲ ✲ ✲

# அம்மா

ஐ.சுபாஜினி, தரம் 10



அன்னையே உன்பாசத்தால்
என்னையே தான் மறந்தேன்

சொத்துக்கள் அதிகமுண்டு
சொல்லிக் கொள்ள நீயுண்டு

பத்துமாதம் கருவில் சுமந்து பெற்றெடுத்த
பூமியிலே என்னை வளர்த்த உத்தமி – நீ

சோர்ந்து போகும் நேரத்திலும் வெற்றிக்கு
அழைப்பாய் நீ தரும் அன்பு போல் ஈடாகாது

ஏழேழு ஜென்மம் எடுத்தாலும் உன் மகளாகவே
நான் பிறக்க வரம் தருவாய் என் அன்னையே

* * *

# துணுக்குகள்

ஐ.சுபாஜினி, தரம் 10

01. நீதிபதி : இந்த குற்றங்களை நீ தனியாகவா செய்தாய்
குற்றவாளி : இந்த காலத்தில் எவரையும் நம்ப முடியாது.

02. மகன் : அம்மா இன்று பாடசாலையில் எல்லோரும் ஒருவர் விழுந்ததை பார்த்து சிரித்தனர். நான் மட்டும் சிரிக்கவில்லை.
அம்மா : ஏன் நீ மட்டும் சிரிக்கவில்லை.
மகன் : விழுந்தது நான் தான் அம்மா.


03. கமலன் : அம்மா உங்க மகன் எங்க?
அம்மா : மேலே படிக்கிறான்
கமலன் : வைத்தியருக்கா, பொறியியலாளருக்கா?
அம்மா : மாடியில் கதைப்புத்தகம் படிக்கிறான்.

04. முதலாளி : இங்கு நீ வேலைக்கு முதல், ஆறுமாதம் ரூபா 300 சம்பளம். ஏழாவது மாதத்திலிருந்து 750 தருகிறேன் சரியா.
தொழிலாளி : நான் ஏழாவது மாதம் வேலைக்கு வருகிறேன்.

✲✲✲

# கோள் மண்டலம்

ச.மதுமிதா, தரம் 09



ஆகாயம், விண்வெளி, விஞ்ஞானம் வானியல், விஞ்ஞானம், விண்வெளி ஆய்வு, இரவு நேர வானம் என்பன தொடர்பில் ஆர்வம் கொண்ட எவருக்கும் அவை தொடர்பான அறிவுசார் மற்றும் பொழுது போக்கு சார்ந்த விடயங்களை வழங்கும் ஓர் இடமே இந்த **"கோள் மண்டலம் "The Planetarium"** ஆகும். கலாநிதி ஸ்டென்லி விஜேசுந்தர மாவத்தை கொழும்பு – 07 என்ற இடத்தில் கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் குதிரைப் பந்தயத்திடலில்,

1965 இல் இலங்கையின் நடைபெற்ற தொழில்நுட்ப கண்காட்சிக்காக, அரச பொறியியல் கூட்டுத்தாபனமே கோள் மண்டலத்தை நிர்மாணித்தது. பெப்ரவரி 1ம் திகதி இது பொது மக்களுக்காக அங்கிரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இலங்கைகைச் சேர்ந்த பொறியிலாளரான அமரர் கலாநிதி ஏ.என்.எஸ்.குணசிங்க என்பவரே கோள் மண்டலத்தை நிர்மானித்தவராவார்.

ஞாயிற்றுக்கிழமை, திங்கட்கிழமை மற்றும் அரசாங்க விடுமுறை தினங்களில் கோள் மண்டலம் மூடப்பட்டிருக்கும். செவ்வாய்க்கிழமை தொடக்கம் சனிக்கிழமை வரை காலை – 10.00 மணி மற்றும் பிற்பகல் - 2.00மணி என்ற அடிப்படையில் காட்சிகள் காண்பிக்கப்படும். ஆரம்ப நிலை, இடை நிலை, விசேட நிலை ஆகிய மூன்று பிரிவுகளாக காட்சிகள் காணப்படுகின்றன.

* * *

# சிறப்பு மிகு சின்னங்கள்

**அ.பேர்ளின் றெஜி, தரம் 09**

| | | |
|---|---|---|
| ❖ | அன்பின் சின்னம் | - தாஜ்மகால் |
| ❖ | அமைதியின் சின்னம் | - புறா |
| ❖ | தொண்டின் சின்னம் | - அன்னை திரேசா |
| ❖ | தியாகத்தின் சின்னம் | - அன்னை கஸ்தூரி |
| ❖ | பொறுமையின் சின்னம் | - கழுதை |
| ❖ | தந்திரத்தின் சின்னம் | - நரி |
| ❖ | கருணையின் சின்னம் | - நாய் |
| ❖ | ஒற்றுமையின் சின்னம் | - காகம் |
| ❖ | சேமிப்பின் சின்னம் | - தேன் |

✲ ✲ ✲

மாகாண மட்டத்தில் பங்குபற்றி இரண்டாம் இடத்தை பெற்று
தேசிய மட்டத்தில் பங்கு பற்றிய வலைப்பந்தாட்ட அணி 19 வயதுப்பிரிவு - 2014




மாகாண மட்டத்தில் பங்குபற்றி மூன்றாம் இடத்தை பெற்று
தேசிய மட்டத்தில் பங்கு பற்றிய வலைப்பந்தாட்ட அணி 15 வயதுப்பிரிவு - 2014




மாகாண மட்டத்தில் பங்குபற்றி மூன்றாம் இடத்தை பெற்று
தேசிய மட்டத்தில் பங்கு பற்றிய எறிபந்து அணி (பெண்) 19 வயதுப்பிரிவு - 2014



மாகாண மட்டத்தில் பங்குபற்றி மூன்றாம் இடத்தை பெற்று
தேசிய மட்டத்தில் பங்கு பற்றிய எறிபந்து அணி (ஆண்) 19 வயதுப்பிரிவு - 2014



மாகாண மட்டத்தில் பங்குபற்றி இரண்டாம் இடத்தை பெற்று
தேசிய மட்டத்தில் பங்கு பற்றிய கொக்கி அணி (ஆண்) 19 வயதுப்பிரிவு - 2014



மாகாண மட்டத்தில் பங்குபற்றி முதலதம் இடத்தை பெற்று
தேசிய மட்டத்தில் பங்கு பற்றிய மேசைப்பந்தாட்ட (பெண்) 19 வயதுப்பிரிவு - 2014



மாகாண மட்டத்தில் பங்குபற்றி இரண்டாம் இடத்தை பெற்று தேசிய மட்டத்தில் பங்கு பற்றிய மேசைப்பந்தாட்ட அணி (ஆண்) 15 வயதுப்பிரிவு - 2014



மாகாண மட்டத்தில் பங்குபற்றி மூன்றாம் இடத்தை பெற்று தேசிய மட்டத்தில் பங்கு பற்றிய மேசைப்பந்தாட்ட அணி (ஆண்) 19 வயதுப்பிரிவு - 2014



வலயமட்டத்தில் இரண்டாம் இடம்பெற்று மாகாண மட்டத்தில் பங்குபற்றிய மேசைப்பந்தாட்ட 15 வயதுப்பிரிவு பெண்கள் அணி - 2014



சதுரங்க அணி (ஆண்) - 2014



சதுரங்க அணி (பெண்) - 2014




தமிழ் மொழித்தினப் போட்டி மாகாணமட்டத்தில் இரண்டாம் இடத்தை
பெற்ற வில்லுப்பாட்டு குழு - 2014



# நீங்கள் எந்தவகை?

**ஸ்ரீ.ஸ்ரீபாக்கியா, தரம் 06**



கோபமாய்ப் பேசினால்
**குணத்தை இழப்பாய்!**

அதிகமாய் பேசினால்
**அமைதியை இழப்பாய்!**

வெட்டியாய் பேசினால்
**அர்த்தத்தை இழப்பாய்!**

ஆணவமாய் பேசினால்
**அன்பை இழப்பாய்!**

அநாகரிகமாய் பேசினால்
**ஆதரவை இழப்பாய்!**

இவற்றைத் தவிர்த்தால் எல்லாம் இருக்கும்!

* * *

# அம்மா

ஆ.தனேஸ்வரன், தரம் 06



மறு பிறவி இருந்தால்
செருப்பாக பிறக்க வேண்டும்
என் அம்மா காலில் மதிபட அல்ல,
என்னை சுமந்த அவளை
சுமப்பதற்காக....!!!

# நட்பு

ஒரு நல்ல நட்பு
கரும்பைப் போன்றது
நாம் அதை அடித்தாலும்
ஒடித்தாலும்
கடித்தாலும்
பிழிந்தாலும் - நமக்கு
அது இனிப்பை மட்டும் தரும்.... !!!

✲ ✲ ✲

# அன்னை தெரேசாவின் அமுத மொழிகள்

பா.சஞ்சிகாஜினி, தரம் 09

"பிரார்த்தனை செய்யுங்கள் கடவுள்
அருகே நீங்கள் போகலாம்! பிரார்த்தனை
செய்ய முடியவில்லை......?? இதற்குப்
பதிலாக சேவை செய்யுங்கள் கடவுளே
உங்கள் அருகே வருவார்.....!"

"அன்பு என்பது
சொற்களில் வாழ்வதில்லை
அன்பை சொற்களால்
விளக்கவும் முடியாது.
செயல்களால் விளக்கம்
பெறுகிறது அன்பு"

"வெறுப்பது யாராக இருந்தாலும்
நேசிப்பது நீங்களாக இருங்கள்"

"மனம் விட்டுப் பேசுங்கள்
அன்பு பெருகும்"

"கண்ணுக்கு தெரிந்த மனிதரை
மதிக்கவிட்டால், கண்ணுக்கு
தெரியாத கடவுளை மதித்தும்
பயன் இல்லை....."



கருவுற்றால் ஒரு குழந்தைக்கு
மட்டும் தான் 'அன்னையாக'
முடியும்.....
ஆனால்......
கருணையுற்றால்
ஆயிரம் குழந்தைகளுக்கு கூட
'அன்னையாக' முடியும்.!!!

✲ ✲ ✲

# அன்னை தெரேசா

சி.யதுசனா, தரம் 09

நீல நிறக் கரைபோட்ட வெள்ளைக் கைத்தறிச் சேலை. சுருக்கங்கள் நிறைந்த முகம். கருணை எங்கும் வழிகள். இன, மத, பிரதேச வேறுபாடற்ற சேவை மனப்பாங்கு.

இவற்றின் மொத்த உருவமாகத் திகழ்ந்த அன்னை தெரேசாவே உலகின் சாதனைப் பெண்களில் இன்று இடம் பெறுகின்றார்.

1910 ஒகஸ்ட் 26 மெஸிடோனியாவில் பிறந்த அப்போனிய இனத்தவராவார். இவரது இயற்பெயர் (Agnes gonxha bojaxhiu) என்பதாகும்.

அல்பேனிய மொழியில் 'கோன்ஷர் (Gonxha) என்பதன் பொருள் 'ரோசா மொட்டு' அல்லது 'சின்னஞ் சிறு மலர்' என்பதாகும்.

இவர் சிறு வயது முதல் ஆழ்ந்த இறை பக்தியும், பொதுத் தொண்டிலும் மிகுந்த ஆர்வம் கொண்டவர். கல்கத்தாவில் இந்திய மிஷனரிகள் செய்து வந்த சமூகத் தொண்டுகளின் பால் அவர் பெரிதும் ஈர்க்கப்பட்டார். எனவே டுப்ளினிஸ் சில மாதங்கள் பயிற்சி பெற்ற பின் இந்தியாவிற்று அனுப்பப்பட்டார். பின் ஆன்மீகக் கற்கையைத் தொடரும் முகமாக அயர்லாந்து சென்று 1931ம் ஆண்டு ஞானஸ்தானம் பெற்று அன்னை தெரேசாவானார். இவர் 1931 – 1948ம் ஆண்டு வரை கல்கத்தா புனித மேரி உயர் நிலைப் பள்ளியில் ஆசிரியர் பணியைத் தொடங்கினார். 1948ம் ஆண்டு பாட்னாவில் மருத்துவத் தாதிப் பயிற்சியைத் பெற்றார். 1949ல் மோதிஜில் என்ற சேரிப்பகுதியை அடைந்து "உங்களுக்கு தொண்டு செய்யவே நான் இங்கு வந்துள்ளேன். உதவி செய்ய என்னை அழைப்பீர்களா"? என்று கேட்டவாறு சுற்றுப் புறத்தைச் சுத்தம் செய்யத் தொடங்கினார். இவர் சேரிவாழ் மக்களுக்கும், அநாதைகளுக்கும், தொழு நோயாளர்களுக்கும், செய்து வந்த தொண்டுகள் அளப்பரியன. நோயாளர்களுக்கு வெறுமனே உபதேசம் செய்தவராக மட்டும் அன்னை தெரேசா இருக்கவில்லை. மாறாக அவர்களுடன் இணைந்து தமது வாழ் நாட்களை எல்லாம் அவர்களுக்காகவே செலவிட்டார். அவர் தமக்கென்று எதையும் சேர்த்து வைக்காமல் எளிய வாழ்க்கையையே நடாத்தி வந்தார்.

1962ம் ஆண்டு பொதுச் சேவைக்கான இந்திய அரசின் பதமஸ்ரீ விருது அன்னை தெரேசாவுக்கு வழங்கப்பட்டது. இது மட்டுமன்றி 1979ம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசும் அவருக்கு வழங்கப்பட்டது. இவரின் இடையறாத சமூகத் தொண்டை கௌரவிக்கும் முகமாக 1980ல் இந்தியாவின் அதி உயர்விருதாக பாரத ரத்னா விருதும், 1983ல் பிரிட்டிஷ் மகாராணி 2ம் எல்சபெத் மகாராணியின் கௌரவ விருதம் அன்னை தெரேசாவைத் தேடி வந்தன. 1997ம் ஆண்டு முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிண்டன் அமெரிக்காவின் கௌரவ பிரஜா உரிமை அந்தஸ்தை வழங்கி அன்னை தெரேசாவைக் கௌரவித்தார். சுமார் 45 வருட காலம் சமூகப் பணிகளில் மகுந்த அர்ப்பணிப்போடு ஈடுபட்டு வந்த அன்னை தெரேசா 1983ம் ஆண்டு இதய நோயால் பாதிக்கப்பட்டார். 1997ம ஆண்டு செப்ரெம்பர் 05ம் திகதி கல்கத்தாவில் உயிர் நீத்தார்.

பொதுத் தொண்டுக்காகவே தம்முடைய வாழ் நாளை அர்ப்பணித்த பெண்மணியான அன்னை தெரேசா உலகின் சாதனைப் பெண்கில் ஒருவர் என்பதை நாம் யாரும் மறக்கு முடியாது. அவரது பொன் மொழிகளில் சில:-

- **ஒரு புன்னகையில் இருந்தே அமைதி பிறக்கின்றது.**
- **தனிமையும் தன்னிரக்கமும் மிகப் பயங்கரமான வறுமை நிலையாகும்.**
- **நீங்கள் செல்லுமிடமெல்லாம் அன்பைப் பரப்புங்கள்.**

* * *

# கற்றனைத் தூறும் அறிவு

ப.கிரிஜா, உயர்தரம் 2014 (கலை)

மனிதன் பெறக்கூடிய செல்வங்கள் எல்லாவற்றிலும் தலைசிறந்தது கல்வி. கல்வி வெள்ளத்தினாலும் அழியாது. நெருப்பினாலும் அழியாது. கள்வராலோ, பகைவராலோ அதனைக் கவர்ந்து செல்ல முடியாது. கல்வியைப் பிறருக்கு அள்ளிக் கொடுக்குந்தோறும் பெருகிக் கொண்டோ செல்லும். எள்ளளவேனும் குறையாது. அதனால் கல்வியே தேடற்கினிய பெரும் செல்வம் ஆகும். இதனையே,

**"வெள்ளத்தால் அழியாது வெந்தழலாய் வேகாது..."**

எனும் பாடல் அடிகள் விளக்கி நிற்கின்றன.

கல்வியினால் அறிவு வளரும். நாம் கல்வியை எவ்வளவுக்கு கற்கிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு எமது அறிவு பெருகும். அறிவுடையவரே வாழ்க்கையில் முன்னேற்றம் அடைவர். இத்தகைய கல்வி அறிவையே,

**"தொட்டணைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்கு**
**கற்றணைத் தூறும் அறிவு"**

என சிறப்பித்து வள்ளுவர் கூறியுள்ளார். அதாவது மணல் இடத்துக் கேணி தோண்டிய அளவு நீர் ஊறும். அது போல் மக்கள் கற்ற அளவு அறிவு வளரும்.

கல்வி கற்றவன் தன்னுடைய நாட்டிலோ, வெளிநாட்டிலோ, சிறப்படைவான். ஆனால் நாட்டை ஆளும் அரசனுக்கோ அவனுடைய நாட்டில் மட்டும் தான் மதிப்பு உண்டாகும். இதனை ஔவையார்

"மன்னனும் மாசறக் கற்றோனுஞ் சீர் தூக்கின் மன்னனிற்
கற்றோன் சிறப்புடையன்......"

எனும் அடிகள் மூலம் கூறியுள்ளார். மற்றும் கல்விச் செல்வம் ஈடு இணையிலாச் செல்வம் என்பதனை வள்ளுவர் "கேடில் விழுச் செல்வம் கல்வி" என்று கூறுகின்றார். கெடுதல் அல்லது அழிதல் இல்லாத செல்வம் கல்வி என்பதே இதன் பொருளாகும். மற்றும் ஏனைய செல்வங்களைப் போல் கொடுக்கக் கொடுக்கக்

குறைவடையாது. ஒரு ஆசிரியர் எவ்வளவு தடவை மாணவனிற்கு கற்பிக்கின்றாரோ, அதற்கேற்ப மாணவர் அறிவு மட்டுமன்றி ஆசிரியரின் அறிவு பெருகும்.

கல்வி, அறிவு, ஒழுக்கம் என்பவற்றை உடையவரே மனிதர். கல்வி, அறிவு என்பனவே மக்களையும் மாக்களையும் வேறுபடுத்தும் அம்சங்கள் என்பதை வள்ளுவர் சுட்டிக் காட்டியுள்ளார். கண்ணுடையவர் என்று உயர்வாகக் கருதப்படுபவர் கற்றவரே என்றும், கல்லாதவர் முகத்தில் இரண்டு புண் உடையவர் ஆவர் என்றும் வள்ளுவர் கூறியுள்ளார். கேள்வியறிவாய் துளைக்கப்படாத செவிகள் இயல்பாகக் கேட்டறிந்தாலும் கேளாத செவிட்டுத் தன்மை உடையனவே என்றும் கேள்வி அறிவின் பெருமையினை எடுத்துக் கூறியுள்ளார். அறிவு ஒன்றே நமக்கு அழிவு வராதபடி காக்கும் காவியமாகும். அறிவுடையவரே எல்லாம் உடையவர் என்று போற்றப்படுவர். அவ்வறிவினாலே எல்லாவற்றையும் தேடி இன்ப வாழ்வு வாழலாம்.

கல்வி அறிவை மேம்படுத்துவதற்கு வாசிப்பு பழக்கத்தை வளர்த்தல் என்பதும் இன்றியமையாதது ஆகும். **"வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்"** என்ற கூற்றிக்கிணங்க பல நூல்களை வாசித்து அதன் மூலம் சிறந்த பயனைப் பெறுவது நல்லது. இவ் வாசிப்பு முறையை விருத்தி செய்வதற்கு வாசிப்புப் பழக்கத்தை ஒவ்வொருவரும் விருத்தி செய்ய வேண்டும். வாசிப்பு பழக்கம் விருத்தியடைவதற்கு வாசிப்பில் அக்கறை ஏற்பட வேண்டும். எதனையும் வாசிப்பதில் அக்கறை இருக்குமானால் வாசிப்பு இலகுவாகும். வாசிப்புக் பொருள் பற்றிய அக்கறையை படிப்படியாக விரிவாக்கிக் கொள்ளலாம். இதன் மூலம் பல்வேறு துறைகளிலும் புத்தகங்களை ஆர்வத்தோடு வாசிக்க பழகுதல் சாத்தியமாகும்.

இவற்றுக்கெல்லாம் உண்மையான உறைவிடமாகத் திகழ்வது நூல்நிலையம் ஆகும். இவ்வித நூல்கள் நமது வாழ்க்கையின் உண்மைகளைப் பாதுகாத்து வைத்துள்ளன. அவை நமக்கு பரந்த அறிவையும், விரிந்த சிந்தனையையும் தருகின்றன. அறம் எது, அறமல்லாதது எது எனப் பகுத்தறியும் வன்மை, நூல்களை வாசிப்பதன் மூலம் விருத்தியடைகிறது. வாசகனின் உள்ளமும் விரிவடைகிறது. இத்தகைய நூல்களை வாசிக்கும் பழக்கத்தை விருத்தி செய்வது இளஞ் சந்ததியினரின் தலையாய கடமை ஆகும்.

கல்வி அறிவை வளர்ப்பதற்கு இளமையில் இருந்தே கற்றல் அவசியமாகிறது. வள்ளுவர் இதனையே "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" எனக் கூறுகின்றார்.

இவ்வகையில் நோக்குமிடத்து ஔவையார், திருவள்ளுவர், காரைக்கால் அம்மையார், கம்பர், மங்கையர்க்கரசியார், பூதப்பாண்டியன் பெருந்தேவியார்

போன்றோர் கல்வியில் சிறந்தவர்களாய் இருந்தமை குறிப்பிடத்தக்கது. அதனால் இவர்களது பெயர்கள் இன்றும் நிலைபெற்றிருப்பது மறக்க முடியாத ஒன்றாகும்.

கல்வியைப் பெற்றுப் கொள்ளுவதற்கு நாம் மிகவும் முயன்று வருவதோடு உயர்ந்த நூல்களைக் கற்று வரும்போதே அந்நூல்களிற் சொல்லப்பட்ட நல்லொழுக்கங்களிலும் நாம் பழகி வருதல் வேண்டும்.

**"கற்றறிவார் கண்டது அடக்கம் அடங்காதார்**
**பொச்சாந்துந் தம்மைப் புகழ்ந்துரைப்பர்"**

என்றபடி நாம் சிறிதும் பெருமை பாராட்டமலுஞ், செருக்கு அடையாமலும் உலக வாழ்க்கையை இனிது நடாத்தி நாமும் பயன்பெற்றுப் பிற உயிர்களையும் பயன்பெறச் செய்து பிற உயர்களையும் பயன்பெறச் செய்து வருதலே நாம் பெற்ற கல்வியறிவைப் பயன்படுத்தும் முறையாகும்.

தற்காலத்தில் இணையம், கணனி போன்ற சாதனங்கள் வாயிலாகவும், கல்வி அறிவு மேம்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் ஒரு துறையில் நிபுணத்துவம் பெறுவதும் கற்றலிலே தங்கியுள்ளது. ஒரு தொழில் வாய்ப்பைப் பெறவேண்டுமெனிலும் கல்வியே அடித்தளமாகக் காணப்படுகிறது. மேலும் பாடசாலைகளில் 5ம் பாடத்துறையாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மொழிநுட்பக்கல்வி எனும் பாடநெறி மூலம் தொழில்சார் கற்கை நெறிகள் வளர்க்கப்படுவதோடு அவை விருத்தி செய்யப்படுகின்றதை இன்று அவதானிக்கலாம்.

மாதா, பிதா, குரு, தெய்வம் எனும் வரிசையில் தெய்வத்திற்கு முதற்படி குருவிற்கு கொடுக்கப்படுகிறது. அதாவது கல்வியை எமக்கு வாரி வழங்கி அறிவுக் கண் திறக்கும் ஆசிரியர்களுக்கு கொடுக்கப்படும் மரியாதை இதுவாகும். இதிலிருந்து கல்வியின் முக்கியத்துவத்தை நாம் உணரக் கூடியதமாக உள்ளது. இவ் உலகில் கல்வியை நாம் தேடிக் கற்றல் வேண்டும். கல்வியே எமது கண்களாகும். அதுவே உயிர்நாடி, மூச்சு, சுவாசக்காற்று ஆகவே கல்விப் பயிரை நாம் கண்போல் காத்து வளர்க்க வேண்டும். எம் எதிர்கால வாழ்க்கைக்கு வழிகோலும் கல்வியை நாம் எப்பாடுபட்டேனும் கற்றிடல் வேண்டும். நாம் ஆரம்பத்தில் கற்கும் கல்வியானது போகப் போக இனித்துக் கொண்டே சென்று வளமானதொரு எதிர்காலத்தை எமக்கு அளிக்கவல்லது.

எனவே மாணவர்களாகிய நாம் கல்வியின் சிறப்பையும் அறிவையும் அதன் முக்கியத்துவத்தையும் உணர்ந்து "கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குக் தக" என்னும் வாக்கிற்கிணங்க 'பிச்சை புகினும் கல்வியினை கற்று அறிவை விருத்தி செய்து எதிர்கால வாழ்வை வளம்படுத்துவோமாக.

# முதியோர் எவரையும் புறமொதுக்காமல் யாவர்க்கு மானதோர் சமூகத்தை கட்டியெழுப்புவோம்

**பா.சஞ்சிகாஜினி, தரம் 09**



மாறி வரும் இந் நவீன உலகிலே பல மாற்றங்கள் நிகழ்கின்றன. அவை தனி மனிதனுக்கும் சமூகத்துக்கும் சிறந்த பலன்களைக் கொடுக்கின்றன என்றாலும் முதியோர் தொடர்பில் இதனை ஏற்றுக் கொள்ள முடியாது. இன்று முதியோர் இல்லங்களது தொகை அதிகரித்து இருப்பதுடன் முதியோர் இல்லங்களில் சேர்க்கப்படும் முதியோர் தொகையும் அதிகரித்துள்ளது. இதற்கு என்ன காரணம்?

நவநாகரிக வாழ்வினை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் நாம் முதியோர்களை புறமொதுக்குவதே இந்நிலைக்கு காரணம். நாம் மூத்தோரைப் புறமொதுக்க காரணம் என்ன? அவர்களது பார்வைக் குறைபாடும். காது கேட்காத தன்மையும் தான் இதற்கு காரணமா? வயது வந்தால் நடுக்கமும் தடுமாற்றமும் ஏற்படுவது பொதுவான விடயம் தானே. என்றோ ஒரு நாள் எமக்கும் இந்நிலை ஏற்படும் என்பதை நாம் மறந்து விடலாகாது. '*மூத்தோர் சொல் மறவாதே*' '*முதியோரினை மதிப்போம்*' இத்தகைய கூற்றுக்களெல்லாம் வார்த்தைக்கு மட்டும் தானா? நிஜ வாழ்வில் அவை சாத்தியமாக மாட்டாதா?

ஒவ்வொரு முதியவர் இல்லங்களிலும் வாழும் முதியோர்கள் தம் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், உறவினர்களைப் பிரிந்து துயரத்தில் ஆழ்கின்றனர். தம் பிள்ளையைக் காண மாட்டோமா என ஏங்கித் தவிக்கின்றனர். பத்து மாதம் பக்குவமாய் சுமந்து பாசத்தை ஊட்டி ஆசைகளை நிறைவேற்றி அன்புடன் வளர்த்த தமது பிள்ளைகள் தம்மை அநாதரவாக முதியோர் இல்லங்களிற்கு அனுப்புகிறார்கள் என்பதை எந்தப் பெற்றோரால் தான் தாங்க இயலும்? இதன் காரணமாக முதியோர் உடல் ரீதியாகவும். உள ரீதியாகவும் தளர்ச்சியடைகின்றனர். மன உளைச்சலுக்கு ஆளாகிய அவர்கள் தாம் என்ன செய்கிறோம் என்பதனையே மறந்து விடுகின்றனர். இதனாலே தான் முதியவர்களை குழந்தை போன்றவர்கள் எனக் குறிப்பிடுகின்றோம்.

ஆகவே தான் சிறுவர் தினமும், முதியோர் தினமும் ஒன்றாகவே கொண்டாடப்படுகின்றது.

அனுபவம் நிறைந்த முதியோர் எம் வாழ்விற்கு அழகாக வழிகாட்டுவார்கள். வாழ்க்கையை வாழ்ந்து முடித்த முதியோரது ஒவ்வொரு அனுபவமும் ஒவ்வொரு அறிவுகள். ஒவ்வொரு சூழ்நிலையிலும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என அவர்களிற்கு நன்றாக தெரியும்.

உலகின் அதி சிறந்த மனிதர்கள் பட்டியலில் முதுமை வயதில் சாதனைகளையும் சேவைகளையும் செய்தோரே அதிகமாகவுள்ளனர். இதற்கு நம் அன்னைதெரேசா சிறந்ததொரு எடுத்துக் காட்டாகும். கண்கள் மங்கி கன்னங்கள் சுருங்கிய நிலையிலும் மகத்தான சேவைகளை அர்ப்பணிப்புடன் அன்னைதெரேசா ஆற்றினார். இதுவரையில் இவரது சேவையை விஞ்சியவர்கள் இவ்பூவுலகில் எவருமே இல்லை.

எனவே தான் முதியோரை இழிவடையச் செய்யாது அவமதிக்காது எம்மோடு பாதுகாத்து வாழ வேண்டும். மன உளைச்சலுக்கு ஆளாகி மனநோயாளியாகிய பலரை முதியோர் இல்லங்களில் காணலாம். எம்மைப் பெற்று வளர்க்கத் பெற்றோருக்கு நாம் செய்யும் நன்றிக்கடன் இது தானா? முதியோரைப் போல சிறந்த வழிகாட்டிகள் எவருமே இல்லை.

**"அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப்**
**பேணித் தமராக் கொளல்"**

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க நம்மை விட உயர்ந்த பெரியோரை எம்முடன் வைத்திருத்தல் சிறந்தவொரு காரியம் என அனைவரும் உணர்ந்து முதியோரை மூத்தோர் இல்லங்களிற்கு அனுப்பாது அவர்களைப் புறமொதுக்காமல் யாவர்க்கும் ஆனதோர் சமூகத்தைக் கட்டியெழுப்புவோம்.

**"மூத்தோரைப் பேணுவோம்,**
**முதியோர் இல்லங்களை மூடுவோம்"**

✲ ✲ ✲

# தாயுமானவன்



அன்புக்கு உணர்வு
கொடுத்த உறவே
என் அப்பா!

என்னை மார்பிலும்
தோளிலும் சுமந்து
அன்னை போல்
அரவணைத்த என் நாயகன்
என் அப்பா!

தன் கஸ்ரம் பாராது
தமக்கென வாழாது
எமக்காக வாழும்
உத்தம புருஷன்
என் அப்பா!

எங்களின் சந்தோஷத்தை
கண்டு உள்ளம் பூரிக்கும்
உயர்வான உள்ளம் படைத்த தலைவன்
என் அப்பா!

எங்களின் மன உணர்வுகளை
புரிந்து கொண்டு
ஆசைகளை நிறைவேற்றும்
தளபதி என் அப்பா!
உன்புகழைப் பாட
வார்த்தை இல்லை தோழனே!
அதற்காக இதை சமர்ப்பிக்கின்றேன்.

**வே.தமிழளகன், தரம் 08**

✲ ✲ ✲

# Education

B. Shanchigajini, Grade 9A

E - Enlightenment

D - Discipline

U - Ushering

C - Culture

A - Ameliorating

T - Tendencies

I - Instilling

O - Onerous

N - Nation

- Education should be sought from infancy.
- Education is a basic right to every child.
- Education widens one's horizon.
- Education is the key to one's progress.
- Education is a treasure to man.
- Education is knowledge and knowledge is education.

✲ ✲ ✲

# Social Networking

B. Shanchigajini Grade 9A

Human beings by and large are social. They feel an inherent need to connect and expand their connections. There is a deep rooted need among humans to Share.

In the past due to geographical distances and economic concerns, connections between people were limited A Social network is made up of individuals that are connected to one another by a particular type of interdependency. It could be ideas, values, trade, anything.

Social networks operate on many levels. Initially Social networking happened at family functions where all relatives and friends would conglomerate under one roof.

Today there are a lot online Social networking sites where individuals volunteer information about themselves and their social networks. Social networking allows for like – minded people to interact with another.

An online Social networking site is a place where a user can create a profile and build a personal network that connects the user to other users. What used to be just a niche activity has today taken the proportions of a global phenomenon that engages tens of millions of internet users.

Online social networks are ideal for exchanging ideas, views, and garnering public opinion, although, these are restricted to the users of the social network. popular social networking sites, like Face book, Twitter, MySpace, YouTube, Wikipedia and Google Plus. Another Social networking programme is that used by a Company Called "Amway"

The Company operates on the system of multi level marketing. Members make new members and get monetary benefits on the purchases made by down

the line members. Members sell the Company's products through Social networking.

Social networking sites have recorded phenomenal growth rates. These networks allow individuals to leverage the connections they establish within the Social network to achieve a broader objective like job search, a real estate search, a holiday trip plan etc.

A Social network allows independent artists, music labels and video content owners to upload share and sell their content to a community of users with interests in the particular media. Users in turn benefit by being able to sample, hear, download and share songs with friends and other members.

Here friends can be relatives, colleagues, or even strangers. Friends can be added from anywhere in the world.

The most Common disadvantage of Social networking sites is addiction. Often users of these sites get addicted to it. They spend hours using these sites and it harms their performance in other fields. It causes mental health problems and sometimes their body too. Sometimes users provide their personal information, photo, mobile number to others which is insecure.

We can see clearly that Social networking sites are advantageous only if they are used wisely. Using these sites would be helpful, if users do not spend time there unnecessarily. Wise members never provide personal information to strangers.

A doctor can operate with a knife and a murderer can kill a person with the same knife.

The Social network sites have emerged as a powerful and effective means for people to use these not only link and get linked but to use these

services as effectively as possible. The growing popularity of these networking sites only proves the simple truth – social networking has arrived!

✲ ✲ ✲

# Recyling

B. Shanchigajini , Grade 9A

Recycling is processes in which new items are made from products that have been used before. Materials are collected separated, and then treated based on their physical or chemical properties. The recycled material can be used to make more of the same or different items. Sometimes these new items, like plastic, lumber may even last longer than the original item and cost less to make.

What do you do with the aluminum soda can or the plastic juice bottle when you drinking from it? Do you place it in the trash, or put it in a recycling container? Putting in a recycling container is the best choice because it saves our resources and conserves energy. Some dealers even give you money back for bottles and cans.

Energy heats our homes in winter and cools them in summer; it powers our televisions, Computers, lights, refrigerators, and many other devices. Did you know that you can power a television for three hours using the energy you save when you recycle one aluminum can? We waste energy by throwing away materials that we can reuse or recycle instead. Things we throw away often go to a landfill, a large area of land in your community reserved just for trash, where they will sit for a very long time.

It recycling is not an option; many things can be reused instead. You can decorate a container made from a plastic that your community doesn't recycle and use it as flowerpot or penholder. A T-shirt too stained to wear still works fine as a cleaning clothe. You can also donate your extra items and outgrown clothes to organizations that find other people who need them.

In order for recycled materials to make a difference in our communities, we have to buy the new products that are made from them. Look for the recycle symbol on the item when you are buying products.

So remember the three Rs of using Earth's resources;

- v Reduce – limit the amount thrown away by buying items that can be used more than once, making your own things and choosing items with less packaging
- v Reuse – find a new way to use something again.
- v Recycle – collect unwanted materials and process them to make new materials. Each "R" saves money, conserves resources, and reduces the problems of trash. In short, it is something you can do today to help the environment.

❊ ❊ ❊

# My leisure time activity

R.Lanujan, Grade 9A

I am Lanujan, Grade 9 of Union College Tellipallai. I like to write about my leisure time activity. Every one has different kinds of free time activities. Such as gardening, collecting stamps, fishing, watching sky, collecting proverbs, browsing the internet and writing stories. But I like gardening. Gardening is my hobby and a big garden facing my house is the result of very good hobby

I have a beautiful big flower garden. There are roses, jasmines, sunflowers and shoe flowers in my garden. The flower garden is in front of my house. The flowers bloom everyday and it is a very beautiful scenery indeed. Many kinds of butterflies come to my garden to get honey from the flowers.

Every Sundays I work in my garden. I water the plants and manure the crops. It makes cool and develop the growing percentage. It is a very useful hobby.

I also have a small vegetable garden. There are tomatoes, pumpkin, beans and sweet potatoes in my vegetable garden. It is very useful. The crops are growing gradually. My mother uses the vegetables for her cooking. The vegetables I get from my garden are very fresh and healthy. Some times, I take these vegetables to the fair to sell and it gives a profitable income.

My mother and my brother help me a lot in the garden work. My mother gives advice on how to develop my garden. I get joy of being in the company of the members of my family. Gardening gives me a good exercise.

Gardening involves a number of different kinds of exercises including stretching and weightlifting. A study shows that you can have good exercise by raking the lawn, trimming the trees and shrubs, clearing bushes and stacking wood also provide good exercise to our body, equal to a light aerobics class.

The "yard care" tasks such watering the lawn, trimming shrubs, raking, planting, seedlings, weeding, clearing land, digging, spading, tilling, laying the sod, chopping wood, turning the compost pile etc are good ways to get exercises. They provide exercise for the whole body. Apart from that, gardening is beneficial for our mental health too. For many people, it is a hobby.

Like other kinds of exercise, gardening can help to lower blood pressure and cholesterol levels. It reduces problems with heart diseases, diabetes and other diseases related to inactivity and excessive weight.

So, Gardening is a very interesting hobby. I spend my leisure time with my garden.

I love my garden very much.

# Our Country

J.Lathuya, Grade 6A

Our Country is Sri Lanka. It is a small island in the Indian Ocean. It has the shape of a mango. It lies very close to India. Sri Jeyawardanapura is the capital of our country. Our country has a population of nearly 18 million.

It is multi national Country. Sinhalese, Tamils, Muslims and Burghers live here. The religions they follow are Buddhism, Hinduism, Islam and Christianity. Agriculture is the chief occupation of our people. Our country is now developing fast in industries too. The people are well educated.

Our Country has a wet and a dry zone. The Central part of our country is the wet zone. There are high mountains, hills, valleys and rivers. There are numerous, tea and rubber estates in the hill country. Flat low – lying areas are dry. Paddy is cultivated in the dry zone. Large coconut estates are found in the coastal areas. Our country exports tea, rubber, coconut, spices and gems.

Our country has a glorious past. Great kings ruled it. They built many tanks, cities, palaces and temples. Our country was under European rule for some time.

The scenic beauty of the cool hill country, the ruined cities and the long sandy beaches make our country a paradise for tourists. Our country is called "The Pearl of the Indian ocean"

* * *

மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்று தேசிய மட்டத்தில் நான்காம் இடத்தை பெற்ற விவாதிகள் கழகம் - 2014



தொழில்நுட்ப மன்றம் - 2014



மேலைத்தேய வாத்திய இசைக்குழுவினர் - 2014



சாரணர்கள் - 2014



வழிகாட்டிகள் - 2014



மாணவர் படையணி - 2014



யாழ் மாவட்ட பாடசாலைகள் ஹொக்கிச் சங்கம் நடாத்திய போட்டியில் சம்பியனாகிய 15 வயது ஆண்கள் ஹொக்கி அணி



கொழும்பு பழைய மாணவர் சங்க நிர்வாக சபை - 2014




யாழ்ப்பாண பழைய மாணவர் சங்க நிர்வாக சபை - 2014



# Proverbs

S.Mathumitha, Grade 9A

01. Never say die

02. Health is wealth

03. Slow and steady win the race

04. Man proposes god disposes

05. Habits die hared

06. Penury pinches all.

07. God's will is great,

08. Familiarity breeds Contempt

09. Jack of all trades is master of none

10. Carry not coals to new castle

11. Distance lends charm to things

12. Think before you act

13. Time is gold

14. Union is gold

15. Union is strength

16. East or west home is best

✲ ✲ ✲

# Parliament of Various countries

A.Ferlin Regi, Grade 9A

| | | |
|---|---|---|
| DENMARK | – | RIGSDAG |
| FRANCE | – | NATIONAL ASSEMBLY |
| INDIA | – | PARLIAMENT (LOK SABHA AND RAJA SABHA) |
| ISRAEL | – | KNESSET |
| ITALY | – | DIET |
| NETHERLANDS | – | STATES GENERAL |
| NORWAY | – | STORTING |
| POLAND | – | SEJM |
| SWEDEN | – | RIKS DAY |
| SWITZERLAND | – | FEDERAL ASSEMBLY |
| SYRIA | – | MAJLIS – AL – NOUAB |
| TUAKEY | – | GRAND NATIONAL ASSEMBLY |
| USA | – | CONGRESS |
| USSR | – | SOVIETS OF THE UNION AND SOVIETS NATIONALITIES |

***

# Sport Heroes

A.Abilasini, Grade 9A

In ancient Athens, the winners in Olympic events did not receive gold medals like they do in the Olympics held today. They were crowned with a wreath of laurel when they returned home. These winners were received with great joy by the people of the states they represented. They were considered heroes and were held in great honour, and the state talked often their welfare for the rest of their lives.

Modern day Olympic winners too are held in high regard by the countries they represent. They become heroes of sporting fans irrespective of their colour creed or race. They are showered with honour and sometimes with material rewards in recognition of their achievements. Sri Lanka boasts of two Olympic winners so far. Duncan white was the first Sri Lanka to win a medal at the Olympics. He won a silver medal in 400 meter hurdles event in Olympics in London in 1948. Susanthika won 200 meters sprint event in the Olympic games held in Sydney, Australia in 2000. Both these athletes have brought fame to Sri Lanka.

✲ ✲ ✲

# Top 15 Chief Seattle's quotes

B.Shanchigajini, Grade 9A

1. "Take only memories leave nothing but foot prints."
2. "Earth does not belong to us; we belong to earth."
3. "There is no death, only a change of worlds."
4. "Human kind has not woven the web of life. We are but on thread within it. Whatever we do to the web, we do to our selves. All things are bound together. All things connect."
5. "What is man without the beasts? If all the beasts were gone, man would die from a great loneliness of spirit. For whatever happens to the beasts, soon happens to man. All things are connected."
6. "There is no quiet place in the white man's cities, no place to hear the leaves of spring or the rustle of insect's wings. Perhaps it is because I am a savage and do not understand, but the clatter only seems to insult the ears."
7. "The whites, too, shall pass – perhaps sooner than other tribes. Continue to contaminate your own bed, and you might suffocate in your own waste."
8. "Day and night cannot dwell together"
9. "Today is fair. Tomorrow may be overcast with clouds. My words are like the stars that never change."
10. "The white man will never be alone."
11. "We are part of the earth and the earth is part of us."
12. "My people resemble the scattering trees of a storm swept plain."
13. "The Indian's night promises to be dark. Not a single star of hope hovers above his horizon.

14. "How can you buy or sell the sky, the warm of the land? The idea is strange to us. If we do not own the freshness of the air and the sparkle of the water, how can you buy them? Every part of the earth is sacred to my people."

15. Whatever befalls the earth befalls the sons of the earth. If men spit upon the ground, they spit upon themselves."

***

# Sports and games

E.Repeshiya, Grade 9A

Sports and games are very important for us. They keep us healthy and fit. They give us energy and strength. Sports provide necessary exercise to the body. Play is a creative activity. It helps in the development of not only the body but also the mind. Even animals and birds play. It gives enjoyment and happiness. There are two types of games; Indoor games and outdoor games.

Indoor games are carom, judo, cards, table tennis, billiards, etc and outdoor games are cricket, foot ball, throw ball, volley ball, hockey, etc.

Medals, Certificates or cups are awarded to the winners for achieving excellence in their performance. Spots develop team spirit in us. They give us opportunity to grow life. Sports take a very important place in today's world.

❋ ❋ ❋

# The value of handicrafts

E.Repeshiya, Grade 9A

Cottage industries, village industries, small scale industries, handicrafts and large scale industries are the various terms which are used for different types of production work, according to their size and production.

When a worker produces something with his simple tools with the help of his family members only then he is said to be running a cottage industry. The absence of big machines, electric power and hired labour are the features of cottage industries. In our villages, we see workers spinning and weaving cloth. This is the main cottage industry of our country.

The importance of cottage industries is very great for rural as well as urban area. In villages, farmers can carry on their cottage industries side by side with their main occupation of agriculture. In urban areas also the poor can start some cottages industries with their own limited resources.

When children and women are employed in big industries corruption becomes rampant. But handicrafts solve all these problems. They are mostly run in homes of the workers. So the housing problem does not arise, other social ills are also removed.

Cottages industries have to face many difficulties. They cannot compete with large factories. As the products of the cottage industries is the result of the labour of the workers. Their cost remains high in comparison with that of the mill made goods.

As a result, much progress has been made in this direction. Let us hope much more would be done of these small scale industries in times to come.

***

# Importance of brakfast

E.Repeshiya, Grade 9A

Break Fast is the main meal of the day. It is the meal with which we start the day. Eating a healthy breakfast every day gives your body a boost. Here are some reasons why taking time in the morning for breakfast, really does makes a difference. Breakfast gives you energy. Breakfast tops up your energy stores for the day and helps to regulate blood sugar. Experts recommend that around 25% of your daily food intakes should come from breakfast.

Breakfast gives your brain a boost. Studies have shown that eating healthy breakfast helps improve your memory, cent ration and aspects of mental performance. Just like any other organ in the body our brain needs energy in order to work at its best.

Breakfast is good for your waist line. Research shows that people who eat break fast are less likely to be over weight and more likely to be in their ideal weight range than people who skip breakfast. Skipping break fast can make you more likely to reach for high sugar and fatty snacks too. Breakfast provides important nutrients and makes you happier.

***

# Golden Rules

S.Dadsika, Grade 6A

**Golden Rules**

Obey your parent.

Speak the truth always.

Be punctual.

Never tell a lie.

Always be neat and tidy.

Be good and do good.

Be a hero.

Help the poor and the needy.

Do your daily duty well.

Learn your lessons well.

Respect the elders and your teacher.

Serve your country.

Serve your society.

Never shirk work.

Do not put off any thing for tomorrow.

If you do your duty well the battle of life will be won. You will be ever happy.

Be ever active.

Selfless service, sacrifices, love must, be your motto.

Lead an exemplary life.

Be polite and courteous.

Never speak harsh words.

Speak sweetly.

Give up talkativeness.

Do some good service every day.

# Time is most precious

S.Venisha, Grade 6A

Time is money. Time is more precious than money. Money can be earned again if it is lost but if the time is lost it cannot be regained. A moment once gone cannot be called back.

Life is but collection of small moments. Every moment should be well utilized. The "tick, tick" of the clock reminds you that moments are passing a way.

Do not waste your time in playing with your friends. Realize the value of time. Do not kill time in idle gossiping and chatting. You will become a great man if you use your time in a useful manner.

***

# அண்ணன் ஐஸ்போல்

**திருமதி ம.முருகமூர்த்தி ஆசிரியை**

தூரத்தில் கட்டியிருந்த கன்று கயிற்றை உன்னி உன்னிப்பார்த்த படி இருந்தது. காலையிலேயே அம்மா விபூதி பூசிக்கொண்டு கோயிலுக்கு நடந்தா. உயர்ந்து நிற்கிற தென்னைகளின் நடுநடுவே சின்னஞ் சிறிய வாழைகளைக் கடந்து தாவாராம், கொட்டில் என்று எங்கேயும் தேடி விட்டேன் அண்ணனைக் காண வில்லை.

ஐப்பசி மாதக் கடைக்கூறு என்பதால் மழையும் நின்ற பாடில்லை நிச்சயம் அவன் வெளியில் வந்திருக்க மாட்டான் வீட்டிற்குள் தான் எங்கேயோ.... பத்திரமாக ஒளிந்து கொண்டிருக் கிறான்......

தாத்தாவின் ஓலைப்பாயால் பின்னப்பட்டிருந்த கட்டிலைத்துருத்திக் கொண்டு அண்ணனின் கைகள் வெளித்தெரிவதைக் கண்டதும், இலட்சோப லட்சம் மின்விளக்குகளைப் பூட்டிய பிரகாசம் எனக்கு.

"அண்ணன் ஐஸ்போல்..... அண்ணன் ஐஸ்போல்...." கத்திக் கொண்டு தாவாரம் நோக்கித் திரும்பி ஓடினேன். எனது விழிப்பில் மலர்ந்து போனவன், சிரித்துக் கொண்டு எனக்குப் பின்னாலேயே ஓடிவந்தான் லேசான களைப்பு அவனைத் தொட்டதும் அங்கேயே நின்றுவிட்டான். அந்த ஓட்டமெல்லாம் இப்போது தான் நடந்தது போல, திரும்பத் திரும்ப நினைவுகளில் நிழலாடிச் செல்கிறது.

வயல்கள் சூழ்ந்த அந்தக்கிராமம் மண்ணினால் கட்டிய பழைய நாற்சார வீடு. கடுங்கோடையிலும் வெக்கையைத் தணித்து இதமளிக்கிற முற்றத்து வேப்பமரமும் அதனருகே நிற்கும் கருத்தக் கொழும்பு மாமரமும்.... இவ்விரண்டுக்கும் நடுவில் தான் எங்களது விளையாட்டு மைதானம். மாட்டுக்கொட்டிலுக்கும் தாவாரத்துக்கும் நடுவில் இருக்கும். பெரிய வராந்தா தான் அநேகமாகப் பார்வையாளர் அரங்காக இருக்கும். மாலைப் பொழுதுகளில் நான், அண்ணன், பக்கத்துவீட்டு நேசன், தயா, சாந்தா, பாலா, ஜெகா, ரவி என்று பெரிய பட்டாளமே குழுமியிருப்போம்.

வெள்ளத்தில் அடித்துச் செல்லும் காகிதக் கப்பல்களாம்.....

இன்று அனைவரும் ஆளுக்கொரு திசையில்..........

சுயத்தைத் தொலைத்தவனுக்கு முகங்களும் முகவரிகளும் இருந்தாலும் ஒன்று இல்லையென்றாலும் ஒன்று என்கிற நிலையில் தாய்நாட்டைக்

கைகழுவி இன்றுடன் பலவருடங்கள் பூர்த்தி ஆனபோதும் அவ்வப்போது பழைய நினைவுகளில் நனைவதும் எனது மனம் ஒப்பிய ஏற்பாடுதானே.

இருபது வயதில் நான் தாய் நாட்டை விட்டுப் புறப்பட்ட போது இனிமேல் காண்போமா? இல்லையா? என்ற கேள்விக்கு விடை தெரியாமல் பொங்கிய விழிகளினூடு விடை கொடுத்து பின்னால் காண்பது ஒன்றும் சாமான்யமல்லவே.

நினைவுகளில் மிதந்து கொண்டிருந்த நான் ஒலிபெருக்கியின் அலறலால் சுயநினைவு வரப்பெற்றவள் போல் எழுந்து நடக்க ஆரம்பித்தேன். குளிரும் நடுக்கமும் ஒரு சேர மழை கொட்டோ கொட்டென்று கொட்டியது கீறு கீறலாய், சிறுசிறு கோடுகளாய் அழகாய்த்தான் தெரிந்தது.

ஏனென்று தெரியாது ஒருவிதப் படபடப்பு. நேரம் செல்லச் செல்ல மனசும் ஒரு விதமாய் அடித்துக் கொண்டது எதற்கென்று தெரியாது. ஆனால் ஒரு விதமான இறுக்கமான மனவுணர்வு புதிதாக வருபவர்களுக்குத் தெரிந்திருந்திருக்க முடியாது ஆனால் அடிக்கடி வருபவர்களுக்கு நன்றாகத் தெரியும் எந்தவொரு விமானமும் இவ்வளவு தாமதமாக வருவதில்லை என

அண்ணனுக்கு போன் செய்ய வேண்டுமென்றும் இருந்தது. ஆனால் இப்ப எதுவும் வேண்டாமென்றும் இருந்தது.

குறோட்டன்கள் சடைத்துக் கிடக்கும் எங்கள் வீட்டு முற்றத்தில் கொட்டிக்கிடந்த கல்லுக்குவியலுக்குள் அண்ணன் ஒரு முறை சறுக்கி விழுந்தபோதும் எனக்கு இப்படித்தான் இருந்தது.

சே! என்ன பெண் நான்? எந்த இடத்தில் எதைப் பற்றி யோசிப்பது என்கிற விவஸ்தையில்லாமல்....... அண்ணனுக்கு என்ன நேர்ந்தது விடப் போகிறது? இந்த உச்சக்கட்ட சண்டைகளின் போதெல்லாம் தப்பிப் பிழைத்த வனாச்சோ..... கண்டதையும் எண்ணாமல், வாயைமூடிக் கொள்வது அல்லது மனதை வேறு திசையில் செலுத்துவது தான் நல்லதெனத் தோன்றியது.

மலேசியா சர்வதேச விமான நிலையத்தில் என்னுடன் சேர்ந்து பல நூற்றுக்கணக்கானவர்கள் விமானத்தின் வரவை எண்ணி எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம். எத்தனையோ பேர் இன்று தமது கணவனை, மனைவியை, பெற்றோரை, பிள்ளைகளை, சகோதரர் களைக் காணும் வாய்ப்பினை எண்ணித் தவம் கிடக்கின்றனரோ நானறியேன்.

சுகமான நித்திரை கண்களை நனைக்கிறது அங்கே கனவில்

"ஆச்சி ஆச்சி"

"எங்க போகிற"

"கருவாடு வாங்க"

"இங்க கிடக்குது"

"எங்க பாப்பம்"

ஒரு கையையும் காலையும் அண்ணன் மடக்கிக் கொள்கிறான்

"இந்தா வாங்கு"

முதுகில் அடிவிழுந்த வேகத்தில் "ஐயோ" என்ற அண்ணனின் அலறல் சப்தம் அந்தத் திக்கு முழுவதும் அப்பொழுது அதிர்ந்து பரவியது.

பதற்றத்துடன் நித்திரை கலைந்த நான் சுதாகரித்துக் கொண்டு அக்கம் பக்கத்தில் நின்றவர்களிடம் பேச்சுக் கொடுத்தேன். விமானம் இன்னும் வராதது கண்டு அனைவருக்கும் ஒரு விதத் திகைப்பு இருப்பதை கண்டு கொண்டேன். "நாக தம்பிரானே எல்லாம் நல்லதாகவே நடக்கட்டும்" என்று இஷ்ட தெய்வத்தை மனதில் எண்ணிய படியே பதற்றத்தை அடக்கிக் கொண்டேன்.

சூழ்நிலை எதுவும் சாதகமாக இல்லை என்பது புரிகிறது. விமானம் ஏன் தாமதமாகிறது என்பது குறித்து விமான நிலையை அதிகாரிகளும் இதுவரையும் சரியான பதிலெதனையும் வழங்கவில்லை. மேலும் அவர்களும் ஒருவிதப் பதற்றத்துடன் இருப்பதை என்னால் அவதானிக்க முடிந்தது. நம்பிக்கையை இன்னும் இறுக்கமாகப் பற்றிக்கொள்வதைத் தவிர எனக்கு வேறு எதுவும் தோன்றவுமில்லை. எண்ணி லடங்காத கேள்விகளால் நாம் அவர்களைத் துளைத்துக் கொண்டிருந்த போது அப்போது தான் அந்த அறிவிப்பு வெளியானது.

ஓசை நல்லது தான் என்ற போதிலும் அவ்வப்போது ஓசை மனிதனின் அச்ச உணர்வைத் தொடுகிறது. மலேசியன் ஏர்லைன்ஸ் விமானம் உக்ரேன் வான் பரப்பில் விபத்துக் காளானதெனவும் அதில் பயணித்த பயணிகள் தொடர்பில் விபரங்கள் ஏதுமில்லையென்றும் அறிவிக்கப்பட்ட போது எனது நெஞ்சமும் உயிரும் இன்னொரு முறை வெடித்துச்சிதறியது. இதயத்தின் சுவரைச் சன்னங்கள் கிழித்து கீறி கீறலாய் உருக்குலைத்து எனது கற்பனைக் கோட்டைகளையெல்லாம் ஒரு நொடியில் தரைமட்டமாயின விமான நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த சர்வதேசத் தொலைக்காட்சிகள் ஒவ்வொன்றாக விமானம் அந்தர வெளியில் வெடித்துச் சிதறும் காட்சிகளை ஒளிபரப்பிய போது எனது உணர்வு அழிந்து மெல்ல மெல்ல மனதின் அடியாழத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தேன்.

நீரில் விழுந்தவன் விழுந்த வேகத்தில் நீரில் மூழ்கி சில கணப் பொழுதுகளில் மேலே மிதப்பதைப் போல உணர்வுகளைத் தொலைத்து மரத்துப்போய் நிலை குலைந்து நிற்கிறேன்.



யுத்தமும் சண்டையும் கிளர்ச்சிகளுக்கும் இன்னும் எத்தனை யாயிரம் உயிர்களைப் பலியெடுக்குமோ?

ஓ இறைவா உனக்கு இரக்கமே இல்லையா?

பிணத்தை அடையாளம் காட்ட வருமாறு கூறி என்னை அழைத்துச் செல்கிறார்கள்.

வெள்ளைத் துணிகளால் மூடி மறைக்கப்பட்ட நூற்றுக்கணக்கான சிதறிய உடலங்கள். நடுவிலே நான்


அதோ அங்கே.....

வெள்ளைத்துணியைத் துருத்திக் கொண்டு என் அண்ணனின் கரங்கள்....... "அண்ணன் ஐஸ்போல் அண்ணன் ஐஸ்போல்" கத்திக் கொண்டு தாவாரத்தை நோக்கித் திரும்பி ஓடினேன்.

✲ ✲ ✲

# பாடசாலைக் கல்வியில் வரலாற்றுப் பாடத்தின் பின்னடைவு

திருமதி பி.லிங்கசபேசன், வரலாற்றுப் பாட ஆசிரியர்



வரலாற்று பாடம் என்றாலே பெரும்பாலன மாணவர்களிடையே கசப்பான உணர்வே ஏற்படுகின்றது. ஏன் அவ்வாறன கசப்பான உணர்வை ஏற்படுகின்றது எனவும், அத்தகைய உணர்வுகளை எப்படி நீக்குவது என்றும், இப்பாடத்தை எப்படிச் சுவைத்துப் படிக்கலாம் எனவும் இக்கட்டுரை மூலம் அறியத்தருகிறேன்.

வரலாறு என்றால் என்ன இப்பதத்தின் தோற்றம் பற்றி சுருங்கக்கூறின் மனித சமூகத்தின் பரினாம நோக்கில் எழுதப்படுவதற்குரிய ஒரு பிரச்சனையாக உருவாக்கப்பட்டது வரலாறு ஆகும். இஸ்ரோறியா (Istoria) என்ற கிரேக்கச் சொல்லின் அடிப்படையில் History என்ற ஆங்கில மொழியில் குறிப்பிடுவதே வரலாறு என்ற பதமாகும். இப்பதத்தின் தந்தையாகக் "வெஹரடோரஸ்" என்ற கிரேக்க வரலாற்று அறிஞர் போற்றப்படுகிறார்.

எல்லா விடயங்களுக்கும் ஒரு வரலாறு உண்டு. எனவே வரலாறு அனைத்தும் பாடத்தினதும் மூலமாகக் கருதமுடியும். மனித இன வரலாறானது எழுத்து வழக்கு அறியப்பட்ட ஐயாயிரம் ஆண்டுகால எல்லையைவிட நீண்டகாலத்தைக் கொண்டிருப்பதனால் வரலாறானது காலத்தையும் விஞ்சி நிற்கின்றது எனலாம். அந்தவகையில் இலங்கையின் வரலாற்றை 3 காலங்களாக வகைப்படுத்தி நோக்கலாம்.

I. வரலாற்றுக்கு முற்பட்டகாலம்

II. வரலாற்று உதயகாலம்

III. வரலாற்றுக் காலம்

எழுத்தாதரங்கள் பயன்படுத்தப்படாத கால வரலாற்றுக்கு முற்பட்டகாலமகாவும் வரலாற்று காலத்துக்குரிய பல அமசங்கள் துளிர்விட்ட காலம் வரலாற்று உதயகாலமாகவும் கொள்ளப்படுகின்றது. இதுவும் வரலாற்றுக்கு முற்பட்ட

காலத்திற்குள்ளேயே அமையும். எழுத்து ஆதாரங்கள் பயன்படுத்தப்பட்ட காலம் வரலாற்றுக் காலமாகவும் கொள்ளப்படுகிறது. அந்தவகையில் இலங்கையின் எழுத்துக்களின் தோற்றம் கி.மு 3 நூற்றாண்டு எனக் கணிக்கப்படுவதனால் வரலாற்றுக் காலத்தின் தோற்றம் இக்கலாமாகக் கொள்ளப்படுகிறது.

வரலாறு பற்றிய விடயங்களை பல்வேறு அறிஞர்கள் பல்வேறு கருத்துக்களான கூறியுள்ளனர் அந்த வகையில்

**ஹெரடோரஸின் கருத்து**

ஆராய்ச்சியின் விளைவாக பெறப்பட்டிருக்கும் தகவல்களை உள்ளடக்கியதே வரலாறு ஆகும்.

**ஸ்டுவார்ட் பிகொட்டின் கருத்து**

புராதன காலம் தொடக்கம் இன்றைய காலம் வரையில் மனித குலத்தின் கடந்த காலத்தை கற்பது தான் வரலாறு.

**பேர்க் ஹாட்டின் கருத்து**

ஒரு யுகத்தில் எழுதிப் பாதுகாத்து வைத்திருக்குமளவிற்கு பெறுமதி மிக்க விடயங்களை அதற்கு முன்னைய யுகம் ஒன்றிலிருந்து தேடிக்கண்டு பிடித்துக் கொள்வதே.

**E.H காரின் கருத்து**

இறந்த காலத்திற்கும் நிகழ்காலத்துக்கும் இடையில் இடம்பெறும் உரையாடல் எனக் குறிப்பிடப்படுகின்றது. வரலாற்று ஆசிரியர்களிடம் பின்வரும் விடயங்கள் கவனத்தில் இருக்க வேண்டியது அவசியம்.

- வரலாற்றை இனங்காணல்
- வரலாற்றாசிரியரை இனங்காணல்
- பாடப்பரப்பினை வரையறை செய்ய வேண்டியதில்லை
- வரலாற்று மூலதாரங்களை இனங்கானல்
- வரலாற்றின் பயன்களை அறிதல்.

நாம் கற்றல் கற்பித்தலில் ஈடுபடும் போது மாணவர்கள் மனதில் வரலாற்றுப் பாடத்தின் இரசனையை ஏற்படுத்துவதற்கு கற்பிக்கப்படுகின்ற விடயத்தில் வரலாற்றை ஆசிரியர் முதலில் இனங்காணுதல் வேண்டும். அந்த வரலாறு பற்றிய மேலதிக ஊசாத்துணை நூல்களை வாசித்தல் வேண்டும். அதன் பின்னர் கற்பித்தலில் ஈடுபடும் போது எமக்கு வரலாற்றை இனங்காணக் கூடியதாக இருக்கும்.

வரலாற்று அறிஞர் E.H கார் கூறியது போல வரலாற்றைக் கற்பதற்கு முன்னர் வரலாற்று ஆசிரியரை இனங்கண்டு கொள்ள வேண்டும். வரலாற்றாசிரியரின் கடமை உண்மையில் என்ன நடந்தது என்பதை கூறுவது மட்டுமல்ல அது தொடர்பான மதீப்பிட்டினையும் மேற்கொள்ளவேண்டும். வரலாறு கற்பிக்கும் ஆசிரியர் அவ்விடயம் பற்றிய பூரண அறிவுள்ளவராக இருத்தல் வேண்டும்.

வரலாற்றை கற்பிக்கும் வரலாற்று ஆசிரியர் பாடப்பரப்பை வரையறை செய்து கற்பிக்க வேண்டிய அவசியம் கிடையாது. ஏனெனில் வரலாற்றுப் பாடத்தை சுவைபடக் கூறுவதாயின் கதையாகவோ, கவிதையாகவோ, உரையாடல்களாகவோ, விவாதம் மூலமாகவே மாணவர்களின் ரசனைக்கேற்ப நாடகப் பாணியிலே அமைத்து காட்டுவதன் மூலம் வரலாற்றை காண்பிக்கமுடியும்.

வரலாற்று விடயங்களை அறிவதற்கும் அவற்றினுடைய இறந்தகால சம்பவங்களை சந்தேகமின்றி நம்பிக்கொள்வதற்கும் வரலாற்று மூலாதாரங்கள் உதவுகின்றது. இந்த வரலாற்று மூலதாரம் அதன் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தும் ஆற்றல் வரலாற்றாசிரியரிடம் இருக்கும் பணியாகும். இவ்வாறு இனங்காணப்பட்ட வரலாற்று தகவல்களை மூலாதாரங்களின் அடிப்படையில் விமர்சன ரீதியில் முடிவுக்கு வருதல் வேண்டும்.

வரலாற்றை கற்பதன் மூலம் மாணவருக்கு கிடைக்கும் பயன்கள் பற்றிய அறிவு வரலாற்றாசிரியருக்கு இருக்கும் பண்பாக அமையும். எனவே வரலாற்றை கற்பதன் மூலம்

- இறந்தகாலம் பற்றிய புரிந்துணர்வு, நிகழ்காலம், பற்றிய சரியான அறிவினைப் பெறமுடியும்.
- தேச அபிமானம், நாட்டுப்பற்று ஆகிய பண்புகள் வளர உதவும்.
- தேசிய ரீதியில் அல்லது சர்வதேச ரீதியில் தோன்றும் பிரச்சனைகளை சமநிலையில் நோக்குவதற்கு ஏற்ற மனப்பாங்கை வளர்க்கின்றது.
- எந்தவொரு நிகழ்வினதும் செய்தியினதும் கூற்றினதும் தகவல்களினதும் சரியான இயல்பினை காரியங்களைக் கண்டறியக் கூடிய ஆற்றலை வளர்க்கிறது.
- காரண காரியங்களைக் கண்டறியக் கூடிய ஆற்றலை வளர்க்கிறது.
- பல்வேறு மனிதர்களின் வாழ்க்கை வரலாற்றைக் காண்பதன் மூலம் அவர்களின் ஆளுமை, நற்பண்பு மூலம் நாட்டைக் கட்டியெழுப்ப முடியும்.
- தேசிய அடையாளத்தை கட்டியெழுப்ப பெரிதும் பங்களிப்புச் செய்கின்றது.

- பண்டைய கால மக்களின் கலை, கலாச்சாரப் பழக்கவழக்கம் ஆடை ஆபரணம் அணியும் முறை என்பவற்றை அறியலாம்.
- மூலதாரங்களின் பங்களிப்பை விளங்கிக் கொள்ளமுடிகின்றது.

இத்தகைய பண்புகளை பெற்றுக்கொள்ள முடிகின்றது.

எனவே இத்தகைய சிறப்புப் பொருந்திய வரலாற்றினை கற்கும் போது மாணவர்களிடையே ஏற்படும் கசப்புத்தன்மை நீக்குவதில் வரலாற்று ஆசிரியரது பங்களிப்பு மிகவும் அவசியமாகக் காணப்படுகின்றது.

வரலாற்றாசிரியர் தனது கற்பித்தல் முறையில் நவீன முறையினைப் பயன்படுத்துவது விரும்பத்தக்கது. நவீன முறைக்கற்பித்தலின் போது மாணவர்களது கவனம் ஈர்க்கப்படுகிறது. எனவே விரிவுரைக் கற்பித்தலை விடுத்து நவீன முறை கற்பித்தலை மேற்கொள்வது சிறந்தது.

வரலாற்று ஆசிரியர் அப்பாடத்தில் மேலதிகமான நூல்களை வாசித்து முழுவதுக்கமான அறிவு கிடையாவிடிலும், அந்த வரலாற்று விடயம் சம்பந்தமான் அறிவு அவசியமாகின்றது. எனவே ஊசாத்துனை நூல்களின் பயன்பாடு அவசியம்.

வரலாற்று விடயத்தில் வருகின்ற சொல், பதம், சொற்றொடர்கள், பேச்சுவழக்கில் இல்லாத பதம் வருகின்ற போது அவற்றை மேலும் ஞாபகப்படுத்திக் கொள்வதற்கு சொல்லட்டைக்கோவை, இதயத்திறப்பான் போன்ற செயற்பாட்டினை மாணவர்களுக்கு புகுத்துவத்ன் மூலம், ஆசிரியர் தானும் தன்னை வளர்ந்து கொள்வதற்கு சந்தர்ப்பம் ஏற்படுகின்றது.

வரலாற்றுப் பாடத்திற்காக ஒதுக்கப்பட்ட பாடவேளை போதாது காணப்படுகின்றது. ஏனெனில் பாடப்பரப்பு அதிகம், பாடவேளை குறைவு எனவே இவற்றை மேலதிக பாடவேளைகளை எடுத்து சீர்செய்ய வேண்டிய அவசியம் உள்ளது.

மாணவர்கள் வரலாற்றை எவ்வாறு கற்கலாம் என்று நோக்குவமானால்

வரலாற்றில் பாட ஆசிரியருக்கு அனுபவக்கல்வி என்பது விரும்பத்தக்க ஒன்றாகும். களப்பயனங்களை மேற்கொள்வதன் மூலம் அனுபவக்கல்வியைப் பெறமுடிகின்றது. தான் பெற்று அனுபவத்தை கற்பித்தலின் போது பயன்படுத்தமுடிகின்றது.

வரலாற்றுப் பாடத்தில் வருடாவருடம் ஏற்படும் கலைத்திட்ட மாறுதல்கள் காரணமாக ஒரு முழுமைத்துவத்தை பெறமுடியாதுள்ளது. ஏனெனில் சமூகக்கல்வி

எனக்குறிப்பிடப்பட்டு அதில் புவியியல், வரலாறு, வாழ்க்கைத்தேர்ச்சி, குடியுரிமை கல்வி என்ற பாடத்திட்டங்கள் புகுத்தப்பட்டு வத்தன. எனினும் பின்னர் சமூகக்கல்வியும் வரலாறும் என பதிப்புரைகள் வந்துள்ளன. எனினும் 2007 ஆண்டின் பின்னர் வரலாறு என்ற பாடத்திட்டம் வந்துள்ளது. இதனால் ஆசிரியர்களிடையே ஓர் முழுமைத்துவத்தைப் பெறமுடியாத நிலைமை ஏற்படுத்தியுள்ளது. இதுவும் வரலாற்றுப் பாடத்தை கற்பிப்பதில் ஒரு பிரச்சனையாக அமைகின்றது.

பாடப்புத்தகத்தில் வரலாற்றுப்பாடத்தில் ஒரு நாட்டின் தனித்துவத்தை கூறுவது மிகைப்படுத்தப்பட்டு வந்துள்ளது. அதாவது சிங்கள மக்களை (பெரும்பான்மையினத்தவர்) வரலாற்றைச் சிறப்பாகவும் தமிழ் மக்களுடைய் வாரலாற்றை ஆக்கிரமிப்பாளர், படையெடுப்பாளார்கள் என்று கொச்சைப்படுத்தியும் குறிப்பிடுவதனால் வரலாற்றில் இனங்களிடையே புரிந்துணர்வு இல்லாத இயல்பு ஏற்படுவதால் வரலாற்று பாடத்தில் ஓர் சலிப்பு ஏற்படுவது தவிக்கமுடியாத ஒன்றாக அமைகின்றது.

எனவே வரலாற்றுப் பாடத்தில் அக்கறையும் ஆர்வத்தையும் ஏற்படுத்த வேண்டுமாயின் அரசு, வரலாற்றுப் பாடத்தை கட்டாய பாடமாக்குவதுடன் தமிழ், கணிதம் பாடத்திற்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை வரலாற்றுப் பாடத்திற்கும் கொடுக்க வேண்டும். வேலை வாய்ப்புக்களை வழங்கும் போது வரலாற்றுப் பாடத்தெரிவின் அவசியத்தை உணரவேண்டிய அவசியத்தை ஏற்படுத்த வேண்டும் கலைத்திட்டத்தின் இனரீதியாக பகிர்ந்தளிக்கும் திட்டத்தை அமுல்படுத்த வேண்டும்.

***

# பாடசாலைகளின் வகுப்பறை மட்டத்திலான பிள்ளைகளின் நடத்தைக் கோலங்களில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்

திருமதி குகானந்தன் சசிரஜனி, ஆசிரியை

### முன்னுரை

நாட்டின் தேசிய அபிலாசைகளை அடைவதற்கும் அச்சமூகத்தில் வாழ்கின்ற ஒரு நபர் எதிர்கொள்ள வேண்டிய சாவல்களைச் சமாளிப்பதற்கும் அறிவு, திறன், மனப்பாங்கில் மாற்றம் ஏற்படவும் பாடசாலைக் கல்வியினாலேயே முடியும் என்பது யதார்த்தமான உண்மையாகும்.

**"சமூக முன்னேற்றத்துக்கு உதவும் வலுமிக்க மற்றும் விழுமியங்கள் கொண்டவர்களை குடும்பங்களிலிருந்து உருவாக்குவதற்கு பாடசாலைகளே இன்றியமையதாவை"**

என்னும் கூற்று இதற்கு வலுச்சேர்க்கின்றது எனலாம். இத்தகைய பாடசாலைகளில் நிர்வாக அலகுகளாக செயற்படுபவை வகுப்பறைகள் ஆகும். வகுப்பறைகளின் செயற்பாட்டைக் கொண்டே பாடசாலையின் தொழிற்பாடு சார்ந்த அனைத்து விடயங்களும் உறுதிப்படுத்தப்படுகின்றது என்றால் மிகையில்லை இத்தகைய வகுப்பறை மட்டத்திலான செயற்பாடுகளுக்கு பிள்ளைகளின் கற்றல், நடத்தைகள், விதிகள் போன்ற பல காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

### நடத்தைகள்

எந்த நடத்தையும் கற்றலின் விளைவாகவே ஏற்படுகின்றது. மனிதன் எப்போதும் கற்றுக் கொண்டிருக்கிறான். அதனால் நடத்தைகளும் வேறுபட்டுச் செல்கின்றன. ஒரு பிள்ளை வகுப்பறை நடவடிக்கைகளில் நாட்டமின்றி இருப்பதும் குறைந்த புள்ளிகள் பெறுவதும், ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்காமல் இருப்பதும் கற்றலின் விளைவே ஆகும்.

பிள்ளைகளின் நல்ல நடத்தைகள் மெச்சப்பட வேண்டும். மீளவலியுறுத்தப்படவும் வேண்டும் நல்ல நடத்தைகள் மென்மேலும் கற்றுக்கொள்ளப்படுகின்றது. இதனால் நல்ல நடத்தைகள் மேற்கொள்ள வழிகாட்ட வேண்டும். மாணவனின் நடத்தையில் நல்லியல்புகள் இனங்காணப்பட வேண்டும். ஆனால் தண்டனை வழங்குவதைவிட வெகுமதிகள் வழங்குவதன் மூலம் நல்ல பழக்கங்களை பதித்தல் வேண்டும். இத்தகைய நடத்தைகள் எதிர்பார்க்கப்

படும் நடத்தைகளாக அமைதல் வேண்டும்.

"அநுபவத்தின் காரணமாக நடத்தையில் ஏற்படும் மாற்றமே கல்வி" என்றால் ஹக்காட் (Haggard), இந்நடத்தையானது மாற்றப்படும் ஒழுங்குபடுத்தப்படும், கட்டுப்படுத தப்படும் ஒரு செயன்முறை ஆகும்.

வகுப்பறைகளின் நடத்தைகள் என்னும் போது பல்வேறு நடத்தைகள் காணப்படும்.

1. வகுப்பறை விதிகளைப் பின்பற்றல்
2. கற்றலும் பிரயோகித்தலும்
3. சகபாடிகள் உறவு
4. ஆசிரிய – மாணவ உறவு
5. அசாதாரண நிலைமைகளில் மாணவர்களின் நிலை
6. சமவயதுக் குழுக்கள்
7. ஆளிடைத் தொடர்புகள் Inter – Personal Skills
8. சுயதிறன்கள்
9. ஆளகத்திறன்கள் Intra Personal Skills

இத்தகைய நடத்தைசார் காரணிகளே ஒரு மாணவனுடைய கற்றலையும் அதனோடு சார்ந்த காரணிகளையும் தீர்மானிப்பவையாக உள்ளன.

"உடனடியான பொருத்தமான உடன்பாட்டுத்தன்மை வாய்ந்த விளைவுகள் விரும்பத்தக்க நடத்தைகளை அதிகரிக்கச் செய்யும்"

என்னும் இக்கூற்று ஒரு ஆசிரியரின் கடமையை உணர்த்துகின்றதெனலாம்.

**வகுப்பறை விதிகளைப் பின்பற்றல**

பாடசாலைக்கு நேரத்திற்கு வருதல், கூட்டுமுறை, தலைமைத்துவத்தை ஏற்றல், நேர சூசியின்படி தமது கடமைக ளைச் செய்தல், கற்றலில் ஆர்வம் கொள்ளுதல் போன்ற பலவற்றைக் குறிப்பிடலாம். இத்தகைய விதிகளைப் பின்பற்றுவதன் மூலம் தனது எதிர் காலத்தில் முன்னேற்றகரமான ஒரு நிலையை மாணவன் அடையமுடியு மென்பது உறுதி.

**கற்றலும் பிரயோகித்தலும்**

ஒன்றிணைந்த பூரணமான ஆளுமையைப் பெறுவதற்காக கற்றல் உதவுகிறது என்பது ஐதார்த்தமாகும். இக்கற்றல் மூலம் சிந்தனைத்திறன், சமூகத்திறன், சுயதிறன் ஆகியன விருத்தியடைகின்றன. சமூகத்தில் ஏனையோருடன் தொடர்புகொண்டு செயற்படும் ஆற்றலையும் ஆக்கச் சிந்தனையையும் வளர்ப்பதற்கும், தீர்க்கமான சிந்தனை (Critical Thikings), பகுப்பாய்வுச் சிந்தனை (Analytical Thinking), தருக்கச் சிந்தனை (Logical Thinking) போன்றவற்றை வளர்க்கவும் உதவும். கற்பதோடு மட்டுமல்லாது அதனைப் பொருத்தமான இடத்தில் பிரயோகிக்க முடிவதே உண்மைக் கல்வியின் நோக்கமாகும். நடத்தைக் கோலங்களில் கற்றல் மிகவும் முக்கிய காரணியாக அமைகின்றது.

### சகபாடிகள்

இக்குழுக்களின் செல்வாக்கு கற்றலில் முக்கியமான நடத்தையாகக் கருதப்படுகிறது. இவர்களுடனான உறவு, நடத்தைசார் கோலங்கள் என்பன ஒரு மாணவனைத் திசை திருப்பும் வகையில் அமைந்துவிடும்.

ஆசிரிய மாணவ உறவு :- என்பது வகுப்பறையில் முக்கியமான நடத்தைசார் கூறு ஆகும். ஆசிரியரின் கற்பித்தல், விழுமியம், வினைதிறன் மிக்க நடத்தைகள் போன்றன மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

அசாதாரண நிலையில் :- ஒருவன் தன்னை எவ்வாறு மாற்றி அமைக்கிறான். இவனது நடத்தைகள் சூழலை அவதானிக்கும் திறன், சமூகமயமாக்கல் திறன் போன்றனவும் . வகுப்பறை நடத்தையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இத்தகைய நடத்தைகள் பால் செல்வாக்கு செலுத்துவதாகப் பல காரணிகள் விளங்குகின்றன. அவற்றை நோக்குவோம்.

### செல்வாக்குச் செலுத்தும் காரணிகள

1. குடும்பம்
2. சகபாடி
3. தனிப்பட்ட உடல்நிலை, உளநிலை
4. பிள்ளைகளின் அனுபவம் - நன்மை, தீமை
5. தண்டனையும் வெகுமதியும்
6. சுயவிருப்பு, தெரிவுகள்
7. பாடசாலைச்சூழல்
8. பாடசாலைக் குழுக்கள்
9. மன்றங்கள், சங்கங்கள்
10. தொடர்பு ஊடகங்கள்
11. துணைக்குழுக்கள்
12. சமய நிறுவனங்கள்
13. புறக் கலாச்சாரக் காரணிகள்

இவ்வாறாக பல காரணிகள் வகுப்பறை மட்டத்திலான பிள்ளைகளின் நடத்தைக் கோலங்களில் செல்வாக்குச் செலுத்துவதை நாம் காணலாம். இத்தகைய காரணிகள் எதிர்பார்க்கப்படும் நடத்தைகளையும் மாறாக எதிர்பார்க்கப்படாத நடத்தைகளையும் ஏற்படுத்தவல்லன. எனினும் இக்காரணிகள் செல்வாக்கு செலுத்துவது – அதன் மூலமான தாக்கங்கள் - நடத்தைகள் யாவும் அவனது கல்வியில் ஏதோ உரு வகையில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்பது உண்மையாகும். செல்வாக்குச் செலுத்தும் காரணிகளைத் தனித்தனியே நோக்குவோம்.

### குடும்பம்

பிள்ளைகளின் நடத்தை, கல்வி, ஒழுக்கம், கட்டுப்பாடு யாவும் குடும்பம் என்ற நிறுவனத்தின் மூலமே அதிகமாகக் கட்டமைக்கப்படுகின்றது எனலாம். பெற்றோரின் ஈடுபாடு அவதானம், அனுசரனை, விழுமியம், சார்ந்த செயற்பாடுகள் மூலமே அவை வளர்த்துச் செல்லப்படுகின்றன. பிள்ளைகளின் நடததைக் கோலங்களில் செல்வாக்குச் செலுத்தும் சக்திமிக்க

நிறுவனமாக குடும்பத்தையே கருத முடியும்.

பிள்ளைகளின் உடல் ஆரோக்கியம், பலவீனம், பழக்கவழக்கங்கள், உளப்பாங்கு தொடர்பான சரியான மதிப்பீட்டை பெற்றோர் மேற்கொள்ளும் போது பிள்ளைகளின் நடத்தை சார்பான செயற்பாடுகளும், மனப்பாங்கும் நேரான வழியில் செல்ல சந்தர்ப்பம் ஏற்படும். பாடசாலைச் சூழல் வீட்டுச்சூழலுடன் முரண்பட்டதாக அமையாது பார்த்துக் கொள்ளுதல் பெற்றோரின் கடமை யாகும். "வழிகாட்டல் ஆலோ சனை பெற்ற தாய்மார்களின் பிள்ளைகள் குறைந்தளவான நடத்தைப் பிரச்சினை களை வெளிக்காட்டினர்" என்பது ஆய்வுகள் முடிவாகும்.

பெற்றோர்கள் பிரச்சினைகளைக் கையாளும் பொழுது பிள்ளைகள் அதிலிருந்து எதையாவது கற்கும் முறையில் செயற்பட்டு பிள்ளைகள் தமக்கு முக்கியமானவர்கள் என்பதை உணர்த்த வேண்டும். இவ்வாறு வகுப்பறையில் முரண்பட்ட நடத்தை, சீரான நடத்தை ஆகியவற்றில் செல்வாக்குச் செலுத்தும் முக்கிய காரணியாக குடும்பத்தையே கருதமுடியும்.

சகபாடி

குடுப்பத்துக்கு அடுத்த படியாக செல்வாக்குச் செலுத்துபவை சகபாடிக் குழுக்களாகும். பிள்ளைகளின் நல் நடத்தையிலும் முரண்பட்ட நடத்தை யிலும் அதிகளவு செல்வாக்குச் செலுத்து பவையாக இவை காணப் படுகின்றன. வகுப்பறை மட்டத்திலும், வெளியிலும் சகபாடிகளின் செல்வாக்கு அதிகரித்துக் காணப்படும்.

- பாடசாலையில் சமவயதுடை யோருடன் கூட்டாகச் செயற்படுதல், கலந்துரையாடல், தேடலில் ஈடுபடுதல் போன்ற வற்றின் ஊடாக அனுபவங் களைப் பெறக்கூடியதாக இருக்கும்.
- 5E செற்பாடே ஒரு வகையான குழுக்கற்றல் முறைமையையும், குழுச் செற் பாடுகளையும், தலைமைத்துவத்தை ஏற்று பின்பற்றும் திறனையும் வளர்த்துச் செல்கின்றது.
- இச்சகபாடிச் செல்வாக்கு கற்றலில் பொதுக் குறிக்கோள்களை அடையவும், சவால்களை வெற்றி கொள்ளவும், பரந்துபட்ட வகையில் அறிவை வளர்த்துக் கொள்ளவும், நேர்மனப் பாங்குகளை வளர்த்துக் கொள்ளவும் - செய்முறைப் பயிற்சிகளை தொடர்பாடல் திறனை விருத்தி செய்து கொள்ளவும் உதவும்.
- மாறான நடத்தைகளுக்கும் இச்சகபாடிக் கற்றல் முறைமைகள் சில வேளைகளில் அமைந்து விடக்கூடிய சந்தர்ப் பங்களும் உண்டு என்பதை நாம் மறுப்பதற்கில்லை.

## பிள்ளையின் தனிப்பட்ட உடல், உள நிலைமை

பிள்ளைகளின் உடல் ஆரோக்கியம், உள ஆரோக்கியம் என்பவற்றின் தாக்கங்களும் கற்றல் நடத்தையில் செல்வாக்குச் செலுத்துகின்றன. நன்கு அவதானிக்கப்பட்ட ஆரோக்கியமான பிள்ளை நிறைவான கல்வியைப் பெறவும் உள ஆரோக்கியம் பேணப்படும் பிள்ளைகளின் கல்வி மேலும் அதிகரித்துச் செல்லும் தன்மையையும் நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

- பிள்ளையின் உடல், உள ஆரோக்கியத்தைப் பேணும் போது தீய பழக்கங்கள் குறைவடைந்து ஆளுமை சார் பண்புகள் விருத்தியடைவது உறுதி.
- வகுப்பறையிலும் கற்பித்தல் மாத்திரமின்றி உடல், உள வளர்ச்சி, சமூகத் தொடர்பு போன்ற தேவைகளுக்காக இணைக் கலைத்திட்டச் செயற் பாடுகளை விருத்தி செய்தல்.
- பிள்ளைகளின் உடல் ஆரோக்கியம், பலவீனம், பழக்கவழக்கங்கள், உளப்பாங்கு தொடர்பாக பெற்றோர் சரியான கண்காணிப்பை வழங்குதல்.

போன்ற காரணிகளை முறையாக மேற்கொண்டால் வகுப்பறை நடத்தை மாணவர்களுக்கு நேரான முறையில் அமையும். வகுப்பறை நடத்தையில் செல்வாக்குச் செலுத்தும் முக்கியமான காரணியாக உள, உடல் நிலைமைகளை கருதமுடியும். தியானம், முறையான உணவுப்பழக்கங்கள், சமயம் சார் நிகழ்வுகள், குடும்ப ஒற்றுமை, போன்ற பல சந்தர்ப்பங்களை சிறந்த முறையில் அமைத்துக் கொள்ளும் போது சிறந்த கற்றலையும், நற்பழக்கங்களையும் கொண்ட பிரசையை உருவாக்க முடியும்.

## பிள்ளைகளின் அனுபவம், சுயவிருப்புக்கள்.

சுய ஊக்கலும், சுயநம்பிக்கையும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த வையாகும். தாமே உணர்ந்து பெறும் அனுபவங்கள் மேலதிக உந்துதலை வழங்கும். கற்றலிலும் அனுபவம் சிறந்த நண்பனாகக் கருதப்படுவான்.

- போட்டி மிக்க இச்சமூகத்தில் வாழக்கூடிய வல்லமையும் சமூக நலன்களுக்கான வாழ்க்கை முறைமைகள், நல்ல மனப்பாங்கு ஆகிய வற்றை வழங்கக்கூடிய சுய கற்றலை ஊக்குவித்தல்.
- பிள்ளைகளின் முன்னேற்றத் திற்கு தடையிடாத சமூக கட்டுப்பாடுகளைப் பேணுதல்.
- அவர்களின் பலம், பலவீன ங்களை அறிந்து வழிப்படுத்தல்.
- அவர்களின் சுயவிருப்பு, வெறுப்பின் பால் மதிப்பளித்தல்
- நேர்மனப்பாங்குடன் கண்கா ணித்தல்.
- கண்டிப்பது தெரியாமல் அவர்களைக் கண்டித்தல்.
- கண்ணியமாக நடத்தல்

போன்ற பல செயற்பாடுகள் நடத்தையில் செல்வாக்கு செலுத்து பவையாக காணப்படுகின்றன.

**பாடசாலைச் சூழல், குழுக்கள், சங்கங்கள், மன்றங்கள்**

- நடப்புச் சமூக இயல்புக்கு ஏற்றவாறு மாணவர்களைத் தயார்படுத்தலும், இசை வுள்ளவர்களாக உருவாக் கிவருதலும் பாடசாலைகளின் கடமையாகும்.
- சமூக உணர்வை வளர்த்தல், சமூக நடத்தைகளுடன் இசைவுபடுதல், கீழ்படிதல், விழுமியங்களைப் புகட்டுதல்.
- சமூகத் திறன், ஆளிடைத் தொடர்புகள், ஆளகத்திறன்கள், ஆக்க, தருக்க, பகுப்பாய்வுச் சிந்தனைகளை வளர்த்தல், முகாமை முரண்பாடு செய்தல் போன்ற பண்புகளை விருத்தி செய்தல்.
- உடன்பாட்டு ஊக்குவிப்புக்களை வழங்கி பிரச்சினைகளையுடைய பிள்ளைகளுக்கு உடனுக்குடன் அவர்களின் எதிர்மறை நடத்தைகளைக் கட்டுப்படுத்தல்.
- ஆசிரியர் எதிர்மறை அணுகுமுறை வழிகளைக் கையாளும் போது அவர் மாணவர்களுடன் நல்லு றவைப் பேணுபவராக இருத்தல்.
- பிள்ளைகளின் சமூகத் தொடர்பாடல் திறன்கள், கல்விசார் திறன்களை விருத்தி செய்வதில் முன்னிற்றல்.

போன்ற செயற்பாடுகள் பாடசாலையைச் சார்ந்தவர்களாலேயே உருவாக்க முடியும். மாணவர்களின் நடத்தையில் அதிக செல்வாக்கு செலுத்துபவையாக இவை காணப்படுகின்றன.

இவ்வாறு பல காரணிகள் வகுப்பறை மட்டத்திலான பிள்ளைகளின் நடத்தைக் கோலங்களுடன் தொடர்புபட் டதாக அமைகின்றன. நேரான மனப்பாங்குகளையும், பெறுமதிமிக்க விழுமியங்களையும், எதிர்காலத்துக்கான உந்துசக்தியையும் அளிப்பதோடு ஒரு மனிதன் எப்படி வாழ வேண்டும் என்ற விதியையும் வகுப்பறை கற்றுத் தருகின்றது. எனினும் சில வேளைகளில் பிறழ்வான நடத்தைகளையும் உருவாக்கி விடுகின்றது என்பதையும் மனங்கொள்ள வேண்டும். எனினும் மேற்கூறிய காரணிகளோடு வேறு பல காரணிகளும் நடத்தைக் கோலங்களில் செல்வாக்குச் செலுத்தி நிற்கின்றது.

***

# Emerging Needs of English

**Mr.K.Balavisakan English Teacher**

English is the window to this globalized world. If we have English language skills We can gain a lot in this world. It is the mostly used language in the world. The influence of English is found in every aspect of our life. The famous Historian H. G Wells once said that English is a language of world brotherhood and international understanding . Hence English occupies a unique place in the world. It is an international and link language.

There are many reasons to learn English language skills. We have to enhance our knowledge in different fields to keep us abreast of the world. Almost all the books which are written by scholars in other languages are also translated into English. If we want to refer a book in a library in foreign country we can refer it through internet. If we have proper English language skills only we can easily reach the pearls of wisdom found in all other language.

Internet is also an essential source of knowledge. English is the vehicle to travel through it and fulfill our needs. All the information , commands and instruction are in English. So We should have a the English Language skills to browse the internet for different purposes such as email , Skype , face book , Twitter etc. Without English language Skills We can't access these facilities.

If we visit abroad we have to meet different kinds of people who speak different languages. In this circumstance English helps us to communicate with each other. While travelling we can chat in English and make it an enjoyable journey. If we are lack of language skills the journey will be a curse. When we visit abroad we have to complete many documents. All these documents are in English. If we have the sound of English there is no need to depend on others to do it. English language helps us immensely to have our foreign visit successfully.

English is an official language in offices such as Immigration and Emigration Department , Embassy ,Travel agencies , foreign banks ,etc. If we communicate with them in English They will give us priority to fulfill our needs. It is easy to understand the instructions and announcements which is made in these offices for our convenient. It is possible if we know English. If We have the fluency in English We can clearly express our needs and fulfill it. *If not* It will be difficult to do the task.

English is made compulsory to follow by primary teacher of training program at College of Education. We should posses credit pass in English in O/ L exam. It is also essential for University entrance. If We have the proper qualification,( paper qualification) of English We can easily get noble professions in private sector .Good command of English language skills is an essential qualification to occupy many posts in private sector.

The science and technology has influenced a lot in our lives . Modern inventions make our lives more comfortable. Almost all the instructional manual and the operating systems of these inventions are in English. If we want to handle or operate these inventions successfully we must go through the manual. Once we are with lack of English language skills it will be an impossible task for us. In this situation we have to always seek assistance of others. It would be more awful related to our privacy manner. It leads us unable to improve our life independently. In this globalized world we can't always wait for things to happen.

We can express our views, ideas, thoughts, and problems to the people and the media, even worldwide. The running commentary of matches and English programme telecast on different television channels influence a lot in our day to day life nowadays.

We must learn English language and improve its skills to lead a successful life. If we don't have proper English language skills We can't make our life successfully in this world .Therefore We must take much effort to learn English language skills in proper way to have a sophisticated life in future and set a goal with a good frame to be achieved within certain period.

* * *

# Classroom interaction and communication Strategies in learning English as a foreign Language.

**Mr. V.Prabagaran B.A (Social Science).PGD(Econ) Teacher Economics & General English**

Effective classroom interaction has two significances. The first one is concerning a pleasant atmosphere in the classroom with friendly relationships among the participants of the learning process and the second is encouraging students to become effective communicators in a foreign language. This can be achieved through various ways as follows.

- **Implementing different student and teacher roles**
- **Exposing students to a varied classroom organization**
- **Employing a variety of activities**
- **Helping students to express themselves**
- **Encouraging their use of communication strategies**

If the two implications of pleasant atmosphere and encouraging students to become effective communicators are joined, we get a pleasant classroom atmosphere in which students are trying to communicate in the foreign language.

The Cambridge International Dictionary of English defines the verb 'to interact' as 'to communicate with or react to each other' whereas the New Oxford Dictionary of English defines the noun 'interaction' as a 'reciprocal action or influence'. Therefore interaction is more than action followed by reaction. It includes acting reciprocally, acting upon each other. Indeed the active and social part of a human being that affects other people through interaction. Experts say that the interaction is the heart of communication. Interaction also has a similar meaning in the classroom. We might define classroom interaction as a two-way process between the participants in the learning process. The teacher influences the learners and vice versa.

**Teacher** ⇄ **Student**

Interaction can proceed harmoniously or it can be fraught with tension. It is stated that every interacting situation has the potential for co-operation or conflict. How the situation actually develops depends on the attitudes and intentions of the people involved, and on their interpretations of each other's attitudes and intentions. Only when there is co-operation between teachers to students and student to student the communication can effectively take place and learning occur. Communication is usually undertaken for a purpose. A person has a reason for transmitting a message to someone else. There are some other purposes of conversation,

E.g.

**The creation and maintenance of social relationships**

**The negotiation of status and social roles**

**Deciding on and carrying out joint actions'.**

The same happens in a classroom situation. People are gathered in the classroom for the purpose of learning. They have other reasons for communicating in the classroom too. Since the classroom is a community of some kind, there is the need to establish and maintain personal relationships in the classroom. The teacher has to establish a rapport with the class, with its individuals, and the individual students form groups with the teacher. Interaction is mainly achieved by two means of resources. They are language and non-verbal expression. Non-verbal expression plays just as important part as a language expression does. It happens in a classroom as well as in social situations. The thing that makes the classroom different from any other social situation is that it has a primary pedagogic purpose. Teachers spend a lot of time talking, lecturing, asking questions, giving instructions and so on. The teacher does not only use language for these functions, but he or she demonstrates and uses mime a lot. These are the most frequent ways of organizing classroom interaction, depending on who communicates with whom.



E.g.

**a)Teacher – learners**

**b) Teacher – learner/a group of learners**

**c) Learner – learner**

**d) Learners – learners**

| **Interaction in a teacher-centred or a locked-step classroom** | Interaction in a peer-based learning classroom |
|---|---|
|  |  |

The first form of interaction (teacher – learners) is established when a teacher talks to the whole class. At the same time the teacher takes the role of a leader or controller and decides about the type and process of the activity. The primary function of such interaction is controlled practicing of certain language structures or vocabulary. Mostly, they are in the form of repeating structures after the teacher (the model). This type of practice is also referred to as 'a drill'.

The second arrangement is conducted when the teacher refers to the whole class, but expects only one student or a group of students to answer. It is often used for evaluation of individual students. This arrangement can also be used for an informal conversation at the beginning of the lesson or for leading students into a less guided activity.

The third type of interaction is called 'pair work'. Students get an assignment, which they have to finish in pairs. Here the teacher holds the role of a consultant or adviser, helping when necessary.

After the activity, he puts the pairs into a whole group and each pair reports on their work.

The last type of classroom interaction is called 'group work'. As with pair work, the teacher's function here is that of a consultant and individual groups report on their work as a follow-up activity.

The last two types are particularly useful for encouraging interaction among students. In large classes, they present the only possibility for as many students as possible to use the foreign language. Research in this field has reviled that students use more language functions in pair- and group-work than in other forms of interaction. It has also been proven that students perceive them as the most pleasant ways of learning, because they feel relaxed and subsequently communicate better. Such work encourages independent learning and gives some responsibility for learning to students. It approaches real-life communication where students talk to their peers in small groups or pairs. However the whole-class organization should not be completely neglected since it is still more appropriate for guided and controlled activities.

In a traditional classroom the teacher had the dominant role of an all-knowing leader who 'filled' students' empty heads with knowledge. This role has changed and the teacher has now got many roles depending on different classroom situations. In a broad sense, he is a 'facilitator of learning which includes the following,

- A general overseer of learning, who coordinates the activities so that they form a coherent progression from lesser to greater communicative ability
- A classroom manager who is responsible for grouping activities into lessons and for their overall organization
- A language instructor who presents new language, controls, evaluates and corrects learners' performance.
- In free communicative activities he will act as a consultant or adviser, helping where necessary. He may move around the classroom and monitor student's progress, strengths and weaknesses.
- Sometimes he will participate in an activity as a 'co-communicator' with the learners. He may encourage learners without taking their main role.

These roles are frequently interrelated and some others (e.g. assessor and observer) could be added. The roles of a consultant or co-communicator encourage classroom interaction most, but they need the support of other roles (e.g. for organizing and controlling activities).

The teaching learning process will occur according to the classroom language. They are as follows,

a) **Accepts feeling**: Feelings may be positive or negative and their prediction and recalling are included.

b) **Praises or encourages**: This includes telling jokes, nodding head or using phrases like 'Go on'.

c) **Accepts or uses ideas of pupils**: The teacher clarifies or develops students' ideas.

d) **Asks questions**: Questions may be about content or procedure.

e) **Lectures**: Gives facts or opinions about content or procedure.

f) Gives directions, commands or orders.

g) **Criticizes or justifies authority**: E.g. statements intended to change pupils' behavior.

h) **Response**: Teacher initiates interaction. Freedom to express own ideas is limited.

i) **Initiation**: Students express their own ideas, initiate a topic, etc.

j) **Silence or confusion**: Pauses, short periods of silence, confusion and incomprehension.

**A model for Classroom interaction**

TEACHER CONTROLLED
WHOLE CLASS ACTIVITIES

ACCURACY — FLUENCY

| | |
|---|---|
| A<br>Drills<br>Games<br>Controlled Conversation<br>Listening<br>Writing | C<br>Conversation<br>Discussion<br>Simulation<br>Games<br>Story- telling<br>Listening<br>Writing |
| B<br>Exercises<br>Controlled Conversation<br>Role Play<br>Games<br>Questionnaires<br>Listening<br>Writing | D<br>Discussion<br>Games<br>Role play<br>Project work<br>Listening<br>Reading<br>Writing |

PAIR WORK ⟷ GRUOPWORK

LEARNER DIRECTED

Type A activities are focused on accuracy. They are controlled by the teacher and done with the whole class. Drills and traditional language games are most present here.

Type B activities are focused on correct use of language too, but they are directed by learner sand done in pairs or groups (e.g. mini-dialogues).

Type C activities focus on fluency. However, they are controlled by the teacher and done with the whole-class. Whole-class discussions and storytelling are some of them.

Type D activities are fluency activities directed by learners and done in pairs or groups. Theypresent the least controlled type of classroom interaction.

The role of the teacher varies in each type from an instructor (type A) to a consultant (type D).

**Strategies for helping students in classroom interactions**

Teachers can help students to develop their interaction skills in a foreign language. Some of the ways of teacher's help are the following:

1. **Asking questions**

It is easier for students to answer questions than to initiate a conversation or make up an independent statement. The teacher indicates with questions some of the words and language structures which will appear in the answer. He can ask additional questions to bring the student to the right answer. The strategy can be used in retelling stories or descriptions. This form of help is still much guided and does not really lead to freedom of expression. Therefore, it is especially appropriate for beginners.

**e.g**

T1: What colour is the crocodile?
Ss: Green, black and grey.
T: Is it dangerous?
S1: Yes.
T: How long is it?
T: How many legs has it got?
S3: Four.
T: Can it fly?
S4: No.
....

2. **Body language**

Students can obtain a lot of information from teacher's gestures and mime. The teacher can help students to express themselves with body language. The example below is taken from a lesson in which we described an ostrich. Sometimes students did not know how to continuespeaking and I prompted them by exaggeratedly acting out body movements of animals:

E.g

T (I point to my legs and show emphatically their length): It's got ...
Ss: ... long legs
S1: It a long neck.
Ss: And a long ...
S2: He lives in Africa.
S1: It can hard kick.
S3: It can run.

S4: It's got eggs.

S5: Big eggs.

T: It can't … (I mime the action of flying with my arms)

Ss: … fly.

**3. A topic**

Teachers can stimulate students' interaction by choosing appropriate topics. Young students prefer talking about sport, computers, music, dinosaurs, spaceships etc. Students can say a lot more about a topic of their interest than something they don't really know well.

Successful interaction is the basis of positive human relationships among people. Similarly to everyday-life interaction, students have to be trained to be effective communicators in a foreign language. We can do this through different ways of encouraging classroom interaction.

The teachers can take on a variety of roles, not always performing the role of an instructor, but also that of a consultant or a co-communicator. Classroom organization can also be adapted more often for one-to-one or group-work arrangement to encourage peer interaction.

Next teachers can observe classroom interaction more consciously (e.g. by action research)and analyses the gathered data in an interpretive way. They may put some of the results of there search in action and see how different strategies can improve students' interaction. Not only this but also a classroom interaction can be more effective if a variety of teacher and student talk is applied in the classroom. Teachers may accept feelings praise and accept students' ideas instead of merely lecturing, and similarly, students may be encouraged to initiate conversation more, instead of only responding to teachers.

So the classroom interaction can be improved through a variety of activities for developing accuracy or fluency and controlled alternately by a teacher and students. Teachers help students by asking questions, choosing appropriate topics and providing them with comprehensible input. Students can improve their interaction skills by

deploying a variety of communication strategies. These are some of the ways of encouraging successful classroom interaction. They can help students to become better communicators of a foreign language in and out of the classroom.

## REFERENCES


1. **SmiljanaKomar (2004).Studies in the English language and literature. BirografikaBori, Ljubljana**
2. **Byrne,D.1987.Techniques for classroom interaction. Harlow: Longman.**
3. **Cambridge International Dictionary of English on CD- ROM. 2000. Cambridge: Cambridge Press.**
4. **New Oxford Dictionary of English on CD – ROM 2006 Oxford. Oxford University Press**
5. **Course Material 2009. National Institute of Technical Teachers Training Research Chennai.**


✲ ✲ ✲

# பார்வைப் புலனற்றவர்களின் வழிகாட்டியாகும் வெள்ளைப் பிரம்பு



வி.விஷ்ணுகரன் விசேட கல்வி

**சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினம் :- ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி**

சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினமானது ஆண்டுதோறும் ஒக்டோபர் மாதம் பதினைந்தாம் திகதி கொண்டாடப்பட்டு வந்தாலும், இத் திகதிக்கு சற்று முன் பின்னாகவோ அன்றி, அத்தினத்தை உள்ளடக்கியதாக அந்த வாரம் முழுவதுமாக கொண்டாடப்பட்டு வருகின்றது.

இத்தினத்தின் முக்கிய நோக்கங்கள்

- வெள்ளைப் பிரம்பு தொடர்பாகவும் அதன் முக்கியத்துவம் தொடர்பாகவும் மக்களுக்கு எடுத்துரைத்து ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் வீதியிலே அதனைத் தாங்கிச் செல்லும் பார்வையற்றவர்களுக்கு பாதுகாப்பை பெற்றுக் கொடுத்தல்.
- பார்வையற்றவர்களின் திறமைகள் தகைமைகள் என்பவற்றினை வெளிக்கொணர்வதன் மூலம் அவர்கள் தொடர்பாகவுள்ள மூட நம்பிக்கைகளையும் அறியாமைகளையும் அகற்றி சமூகத்தில் அவர்களுக்கு நல்லதொரு கௌரவத்தையும் அந்தஸ்தினையும் பெற்றுக்கொள்ள முயலல்.

பார்வையற்றவர்கள் நடமாடுவதற்கு, குறிப்பாக வெளியிலே, வீதியிலே நடமாடுவதற்கு உதவுகின்ற ஒரு உன்னதமான சாதனமே வெள்ளைப் பிரம்பாகும். இவ்விடத்தில் நாம் இவ் வெள்ளைப்பிரப்பு பற்றியும் அதன் முக்கியத்துவம் பற்றியும் நோக்குவது பொருத்தமானதாயிருக்கும். வெள்ளைப்பிரம்பு என்பது சாதாரணமான ஒரு வெள்ளை நிறத் தடி ஆகும். கைக்கடக்கமாக எடுத்துச் செல்வதற்கு வசதியாக இது நான்கு துண்டுகளாக மடிக்ககூடியவாறே பெரும்பாலும் காணப்படுகின்றது. இதன் முக்கியத்துவம் யாதெனில் இது பார்வையற்றவர்களின் அடையாளச் சின்னமாக சட்ட ரீதியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளமையாகும். இந்த வகையிலே இவ் வெள்ளைப்பிரம்புடன் நாம் ஒருவரை காண நேர்ந்தால் அவர் ஒரு பார்வையற்றவர் என்றோ அல்லது மிகவும் குறைந்த பார்வை உடையவர் என்றே இனங்கண்டுகொள்ள வேண்டும்.

வெள்ளைப்பிரம்பினைத் தாங்கிச் செல்ல பின்வரும் சிறப்பு அங்கீகாரங்களும் உரிமைகளும் உண்டு.

- பார்வையற்ற ஒருவர் வெள்ளைப் பிரம்புடன் எங்கும் சுயமாக நடமாடவோ வாகனத்தில் ஏறிப் பயணம் செய்யவோ உரிமை உண்டு.
- வெள்ளைப்பிரம்பு தாங்கியுள்ள நபர் பாதையில் ஏனைய பாதசாரியைவிட முதலில் நடந்து செல்வதற்கு உரிமை உண்டு.
- வெள்ளைப்பிரம்பினைத் தாங்கியுள்ள நபரிற்கு சாரதிகளால் விபத்தொன்று ஏற்படுமாயின் நீதிமன்றத்தில் சாரதி குற்றவாளியாக கருதப்படும்போது இக் குற்றத்திற்கு அதே வகையான விபத்திற்கு விதிக்கப்படும் தண்டனையிலும் பார்க்க கூடுதலான தண்டனை வழங்கப்படுவதற்கும் வாய்ப்புண்டு.
- எவ்விடத்திலும் வெள்ளைப்பிரம்பை நீட்டி பேரூந்துகளை மறித்து அதில் பயணம் செய்யும் உரிமை உண்டு.
- வரிசைகளில் நிற்காமல் முதலில் முன் செல்லும் உரிமை உண்டு.

மேற்கூறியவாறு இவ் வெள்ளைப் பிரம்பிற்கு உரிமைகள் சலுகைகள் சிறப்புக்கள் இருந்த போதிலும் இவை எல்லாம் வெற்றியளிப்பதற்கு நமது மனிதாபிமான உணர்வு மிகவும் இன்றியமையாதது என்பதனை நாம் ஒவ்வொருவரும் மனங்கொள்ள வேண்டும். இந்த வகையிலே இவ் வெள்ளைப் பிரம்பினை நமது மனிதாபிமான உணர்வைத் தட்டியெழுப்புகின்ற ஒரு சாதனமாகவும் நாம் கொள்ள முடியும். இதனைத் தாங்கிச் செல்பவர்களது உரிமைகளை நாம் மதித்துணர வேண்டும். அவர்களிற்கு நமது நண்பராய் சகோதரராய், எல்லாவற்றிற்கும் மேலாக மனிதராய் மதித்து நடக்கும் போது தான் நாம் நாகரீகம் மிக்கதொரு சமுதாயத்தின் அங்கத்தவர்கள் என்பதனை உணர்ந்து கொள்ள முடியும்.

**உசாத்துணை**


1. http://en.wikipedia.org/white Cane _Safety _Day
2. http/www.timeanddate.com/holidays/us/white-cane-safety-day
3. வாழ்வகம். லயன்ஸ் கழக வெள்ளைப்பிரம்பு தினம் 2012 துண்டுப்பிரசுரம்.


* * *

# நிகழ்வுகள்




2014



# யாம் பெற்ற இன்பம்

திரு.பூ.நகுலன், B.A ஆசிரியர்

பழந்தமிழ் இலக்கியங்களை கற்றல் அவ்விலக்கியங்களின் பொருளை அறிதல் அவ்விலக்கியங்களின் பொருளில் காணும் சுவையை ஏனையோருக்கு எடுத்துரைத்து இன்பம் காணுதல் முதலான செயற்பாடுகள் இன்றைய காலத்தில் அருகி வருகின்றதை காணமுடிகின்றது. இத்தகைய ஒரு நிலைக்கு காரணமான விடயங்கள் பல கூறப்படலாம், இனங்காணலாம். இந்த நிலையில் இலக்கிய அனுபவங்களை ஏனையோருடன் பகிர்ந்து கொள்தவற்குரிய வாய்ப்பான சூழ்நிலை வாய்ப்பான சூழ்நிலை வாய்க்கப் பெறாமையை முக்கிய காரணமாகக் கொள்ளலாமோ எனக் கருத இடமளிக்கவும் செய்கின்றது. இலக்கியங்களை கற்று அவற்றின் நுண்பொருள்களை இனங்காண்பவர் அருகி வருகின்றார்கள். அதனை ஏனையோருடன் பகிர்வதில் செலுத்தும் கவனமும் குறைந்து வருவதையே காணமுடிகின்றது.

நாம் வாழும் காலத்தில் இத்தகைய செயற்பாடுகள் அருகி வருகின்றது. எனினும் இலக்கிய உணர்வை ஏனையோருடன் பகிர்ந்து கொள்வதிலும், தமிழ்செல்வத்தை தகுதி வாய்ந்தவர்களுக்கு வழங்குவதிலும் சிறப்புமிக்க ஒருவர் எமது காலத்திலும் வாழ்ந்து அமரராகிய உண்மையை மறந்துவிட முடியாதுள்ளது. அத்தகைய அறிஞர் ஒருவரோடு உடன் இருந்து இலக்கிய அனுபவத்தை பெற்றுக் கொண்டவன் என்ற அடிப்படையில் அத்தகைய அனுபவம் ஒன்றை வெளிப்படுவதாக இக் கட்டுரை அமைகின்றது.

'புலவர் ம.பார்வதி நாதசிவம்' ஐயா அவர்களோடு ஏற்பட்ட தொடர்பால் மாலை நேரங்களில் அவரது இல்லத்தில் இலக்கிய உரையாடல்கள் மேற்கொள்ளும் சந்தர்ப்பங்கள் ஏற்படுவதுண்டு. அத்தகைய சந்தர்ப்பங்களில் சங்கப்பாடல்கள், திருக்குறள், முத்தொள்ளாயிரம் முதலான இலக்கியங்கள் தொடர்பான உரையாடல்களும், அதன் மூலம் பழந்தமிழ் இலக்கியங்களை புதிய பார்வையில் நோக்கும் சிந்தனைகளை பெற்றுக் கொண்ட அனுபவங்களும் ஏற்பட்டதுண்டு.

அன்றைய மாலைப்பொழுதில் பழந்தமிழ் இலக்கியங்களில் தலைவியைப் புகழ்ந்து தலைவன்

உரைக்கின்ற பாடல்கள் தொடர்பில் உரையாடல் ஆரம்பமானது. மான்விழி, தேன்மொழி, பூவிழி, கனிமொழி, வேல்விழி, பூங்குழல் என்றெல்லாம் தலைவியை தலைவன் வர்ணிக்கின்ற அழகு தொடர்பான கருத்துக்கள் இடம்பெற்றன. உரையாடல் இன்னும் சற்று ஆழமாககச் சென்றது. தலைவியின் கண்களை மான்விழி, கயல்விழி, மலர்விழி, வேல்விழி என்று உவமை கூறுகின்ற தமிழ்ப் பாடல்களின் சிறப்பு தொடர்பாக உரையாடல் திசை மாறியது.

தலைவியின் கண்ணினைக் கண்ட தலைவன் அக்கண்ணினைக் குவளை மலர்கள் காணுமாக இருந்தால் அகக்கண்களை விட நாம் அழகாக மாட்டோம் என்று வெட்கப்படும். அவ்வாறு வெட்கப்பட்டு நிலத்தினை நோக்கும் என்று தலைவன் கூறுவதாக அமையும். திருக்குறள் ஒன்றின் கருத்து எடுத்துரைக்கப்பட்டது.

**"காணின் குவளை கவிழ்ந்து நிலன் நோக்கும்**
**மாணிழை கண் ஒவ்வேம் என்று"**

என்ற குறட்பாவின் ஆதாரமாக உரையாடல் தொடர்ந்தது. குவளை மலரினை ஏனைய கவிஞர்கள் தலைவியின் கண்களுக்கு உவமை கூறினால் குவளை மலர்களைக் காட்டிலும் தலைவியின் கண்கள் அழகு வாய்ந்தவை என்பதை தலைவன் முடிவாகக் கொள்கின்ற சிறப்பினை தரிசிக்க முடிந்தது. இக்குறட்பாவின் கருத்து தொடர்பாக இவ் உவமையை விளக்குவது தொடர்பில் அறிஞர் நின்று விடவில்லை. இக்குறட்பாவின் பொருளும் அதன் சிறப்பும் தொடர்பாக திருக்குறள் இலக்கியத்தை வாசித்து அனைவரும் அறிந்து கொள்ள முடியும்.

ஏனையவர்களால் கண்டு உணர முடியாத ஒரு பொருளை தான் கண்டு அனுபவித்த இன்பத்தை எங்களோடு பகிர்ந்து கொண்ட சிறப்பே அறிஞரின் சிறப்பாக அமைந்திருப்பது இக்கட்டுரையில் அடி நாதமாகவும் அமைகின்றது.

குறட்பா ஒன்றில் ஏழு சீர்கள் (சொற்கள்) அமைந்திருக்கின்றன. ஏழு சீர்களும் பயன்பட்டிருக்கும் சிறப்பை வெளிப்படுத்துவதும் திருவள்ளுவர் சொற்களை கையாளுவதில் கொண்ட சிறப்பும் இக்குறள் மூலம் எடுத்துரைக்கப்பட்டது.

காணின் குவளை என்ற முதலிரு சொற்களின் கருத்தானது குவளை மலர் (தலைவியைக்) கண்டால் என்பதாகும்.

கவிழ்ந்து என்பதன் கருத்து தலைவியை கண்ட குவளை வெட்கத்தால் கவிழும் என்பதாகும்.

நிலன் நோக்கும் என்ற தொடர் குவளை நிலத்தை பார்க்கும் என்பதாகும்.

# Who Speaks English

Mrs.Y.Indramala Teacher of English

There are three kinds of English speakers those who speak English as their first language, those for whom English is a second or additional language and those who learn it as a foreign language. The native speakers are those for whom English is the first language and often only language. They live in countries in which the dominant culture is based around English in addition to their own language. Each is used in different contexts. Speakers here often use a local form of English, but may also be fluent in international varieties of English. The third group of English speakers is the growing number of people learning English as a foreign language.

The first two categories of English – Speaking communities are the off – shoots of different colonial processes. People who settled in America and Australia speak English as their first language. Countries like India, Sri Lanka and Nigeria were under British rule and they had access to English as a second language. There is yet another type which is used in the Caribbean Islands, Barbados and Jamaica. The slave trade involving West Africa required in variety known as Black English.

Each of the above mentioned colonial processes had different linguistic consequences. The first type created a Diaspora of native speakers of English such as United States, Canada, South Africa, Australia and Newzealand each settlement eventually established its own national variety of English. The second category Sri Lanka, East Africa and West Africa made as elite second language frequently required for further education and government jobs.

Dividing English speakers thus into three groups is problematic however it is a fact that those who speak English along side other languages will out number first language speakers and probably they will decide the future of the language. English is spoken as a first language in over 30 countries and David crystal calculates that world wide, there are a little over 377 million speakers of English as a first language. In the 19th century it was common to refer to English as the language of administration for one third of the world's population.

Competency in English among second language speakers varies to extremely poor. Areas in which English is used extensively as a second language usually develop a distinct variety of English which reflects other languages used along side, for example Tamils in Sri Lanka using English which has a 'Tamilished' nature, similarly the English used by Sinhalese has semblances of Sinhala languages. Areas where such new Englishes have emerged are the former British colonies. In these countries the use of English for international communication is greatly increasing such as in professional discourse of higher education.

* * *

# நாமும் முதியவர்களும்

திருமதி திரிலோஜினி ஜெயக்குமார் ஆசிரியர்

முதியோர் எனும் போது சமூகத்தில் வயதினால் மூத்த அதாவது அறுபத்தி ஐந்து வயதினைப் பூர்த்தி செய்தவர்களையும் அறிவினால் பெரியவர்களையும் கருத்தில் கொள்ளலாம். ஆனால் இங்கு நான் வயதால் அறுபத்தி ஐந்து வயதினையும், அதற்கு மேற்பட்டவர்களையும் கருத்தில் கொண்டே இக் கட்டுரையை வரைகின்றேன்.

நாம் பல்வேறு பழக்கவழக்கங்களில் உயர்ந்தவர்களாகப் பலராலும் பாராட்டப்படுகின்றோம். ஆனால் நாம் வாழுகின்ற சூழலில் தாய் தந்தையை இழந்தோர்கள், நோயாளிகள், அங்கவீனமானவர்கள், முதியோர்கள்........ எனப் பலவகைப்பட்டோர் ஏதோ ஒரு வகையில் துன்பப்படுகிறார்கள். இவர்களில் முதியோர் துன்பம் கவலைக்கிடமானது தாம் வாழுகின்ற காலத்தில் தமக்கும் தம்முடைய குடும்பம், உற்றார், உறவினர்கள், ஊர்......... அடுத்த சந்ததியினருக்கும் உழைத்தவர்கள் இப்போ ஓய்வு நிலையில் அல்லது உழைக்க முடியாதவர்களாக இருக்கிறார்கள். இப்போது தமது பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் உற்றார் உறவினர்களிடம் அன்பையும் மற்றும் அடிப்படைத் தேவைகளையும் எதிர்பார்த்து நிற்பவர்களாக உள்ளனர்.

இன்னும் கூறுவதனால் இவர்களுக்கு நாம் சமூகத்தில் சரியான இடம்கொடுப்பது குறைவு. மாறாக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளதாகவும், எதற்கும், பயனற்றவர்களாகவும் கணிக்கப்படும் மிகவும் வேதனையான நிலமையே காணப்படுகின்றது. அதிகமான முதியவர்கள் வாய் விட்டுக் கூறாது, துன்பங்களைத் தம்முள் சுமந்து கொண்டு வீடுகளின் மூலையிலும், வயோதிபர் விடுதிகளிலும் தமது வாழ்நாளைக் கழிக்கிறார்கள்.

இன்று வயோதிபம் என்பது உலகளாவிய ரீதியில் ஒரு பிரச்சனையாகவுள்ளது. (ஐப்பசி 1ம் திகதி – வயோதிபர் தினம் கொண்டாடப்படுகிறது) காரணம் இன்று மருத்துவத்துறையினரின் சேவை விரிவடைந்துள்ளதால் வயோதிபர் மரணவிகிதம் முன்னைய காலத்தை விடகுறைவு என்பது வைத்திய அறிக்கைகளின் ஆதாரபூர்வமான முடிவு தனிநபர் சுகாரதாரம், வாழத்துடிக்கும் அல்லது விருப்பம்

என்பவையும் அதிகரித்து வருகின்றது. இந்த நிலையில் பொரும்பாலான ஆசிய நாடுகளில் இவர்களது வாழ்வு மோசமாகவுள்ளது. இலங்கை நீண்டகால யுத்தத்திற்குள்ளாகிய நடொன்பதால் தமது பிள்ளைகளையும், உறவுகளையும் மனநோயாளிகளையும் கொண்டநாடாக எங்கள் முதியேரைத் துன்பப்படவைப்பதா? அல்லது எங்கள் ஒவ்வொரு நிமிடப் பொழுதையும் அவர்களுக்காச் சிந்தித்துச் செயற்பாட்டால் அவர்களும் பெருமையோடு வாழ்வார்கள்.

தமிழ் நாடகத்துறையில் ஒரு மகனாகப் பேற்றப்படும் கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கம் மிகவும் அற்புதமாக முதியோர் பிரச்சனையை மையமாக வைத்து "எந்தையும் தாயும்" என்னும் நாடகத்தை இயக்கியுள்ளார். அதில் பதினொரு பிள்ளைகளின் தந்தை வாழ்வின் இறுதிவரை தமது பிள்ளைகள் பற்றிய நினைவுகளைச் சுமந்து கொண்டு மரணிக்கும் துன்பத்தைப் படைத்துள்ளார்.

ஒவ்வொரு முதியவர்களுடைய உழைப்பிற்கும் மேலேயே அடுத்துவரும் இளைய தலைமுறை ஏறி நிற்கின்றது. இந்த உண்மையை யாரும் சிந்தித்தப் பார்ப்பதில்லை. அவ்வாறு சிந்தித்துச் செயற்பட முற்பட்டால் முதியவர்களுடைய பிரச்சனைக்குத் தீர்வு கிட்டிவிடும். எவ்வளவு வேகமான உலகிலும், எவ்வளவு அதிகமான வேலைச் சுமை எமக்கிருந்தாலும் முதியவர்களுடன் ஒரு நிமிடம் கதைத்து ஆறுதல் கூறி அவர்களுடைய தேவைகளை இனங்கண்டு உதவுதல் எமது வாழ்வின் பணிகளுள் அதுவும் ஒன்று என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். இதைச் செய்வதால் ஒருவகை ஆத்மீக திருப்தியும் எமக்கு ஏற்படும். இதன் மூலம் அடுத்துமவரும் சந்தியினரையும் வழிப்படுத்த முடியும்.

"முதியவர்கள்" என்போர் நாம் தேடிக்கொண்ட முதுபெரும் சொத்துக்கள் அவர்கள் ஒவ்வொருவரும் இந்த மண்ணிலே வாழ்ந்த பெற்றுக்கொண்ட வெற்றிகள், தோல்விகள், சந்தோசங்கள், துக்கங்கள் இவற்றுக் கூடாக பெற்றுக்கொண்ட அனுபவங்கள் அற்புதமானவை. அவற்றில் இருந்து கூறும் கருத்துக்களைச் சற்று நாம் செவிமடுத்துத் தயாராகுவேமானால் நாம் இலகுவாக வாழ்வில் முன்னேற முடியும். ஆனால் நாம் இலகுவாக வாழ்வில் முன்னேற முடியும். னொல் நாம் நடைமுறையில் அவர்களது ஆலோசனைகளைக் கேட்கவோ அல்லது செயற்படவோ தயாரில்லை என்பது வேதனைக்குரிய விடயம் "மூத்தோர் சொல்வார்த்தை அமுதம்" என்று நம் முன்னோல் சொல் வார்த்தை நாம் ஒரு கணம் சிந்திப்பது நன்று.

நம்முடைய வாழ்வில் ஏற்படும் துன்பங்களினால், தோல்விகளினால் மனம்சோர்வதுண்டு. எமக்கு விடிவே இல்லை என ஏங்கி மனம் உடைந்து போகின்றோம். அவ்வேளையில் தம் முதிர்ந்த அனுபவத்தால் ஆறுதல் கூறி

ஆற்றுப்படுத்துபவர்கள் இந்த முதியவர்களே. அவ் ஆற்றுப்படுத்தலுக்குள் விட்டுக் கொடுத்து நடத்தல், அவதானமாக நடத்தல், கூடி வாழ்தல், பிறரைமதித்தல், எதையும் தாங்கிக் கொள்ளுதல்……….. போன்றவற்றைப் பக்குவமாக எடுத்துரைப்பார். அதுமட்டுமல்ல இவற்றை பண்பாகவும் எடுத்துக் கூறுவர். நாமும் நிறைந்த பயனை அடைவோம். அவர்களும் மகிழ்வாக வாழ்வார்.

ஒரு நாட்டினுடைய அபிவிருத்தியில் முதியவர்களின் பங்கு கணிசமாக உள்ளது. அரசின் பெரிய பெரிய பதவிகளின் ஆலோசகர்களாக சுமார் அறுபத்திஐந்து வயதைப் தாண்டியவர்கள் இருப்பதைப் பார்க்கலாம். வெளிநாடுகளில் இவர்களைப் பயன்படுத்தும் விதம் இன்னும் அதிகமாக உள்ளது. அவ்வாறே நாமும் சமூகத்தின் ஒவ்வொரு தேவைகளிலும் அவர்களது ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளப்பழகுவது நன்று.

நமது முதியவர்கள் பல்வேறு காரணங்களினால் தனிமையில் உள்ளனர். இத்தனிமை இவர்களைப் பல்வேறு பிரச்சனைகளுக்குள் மகம் கொடுத்து வரவைக்கிறது. கள்வர்களின் தொல்லை, தேலைஇல்லா மனப்பயம். மகிழ்ச்சியற்ற சூழல் போன்றவற்றைக் கூறலாம். அவ்வாறின்றிக் கூடியவரை அவர்களுடைய உடல் உள நலத்திற்காக நாம் ஒவ்வொருவரும் கொஞ்ச நேரத்தை செலவழிக்கத்தயாராக வேண்டும். அவர்களை எங்களுள் ஒருவராக வைத்து வழிநடத்துவோம். அது தவிர ஆதாரவற்றுத் துன்பப்படுவோரை உரிய வயோதிபர் இல்லங்களில் சேரத்து அவர்களின் உடல் உள நலன்களைச் நாம் பாதுகாப்போம்.

**உசாத்துணை**


1. முதுமைப் பருவம் ஒரு நோக்க – டாக்டர். ந.சிவராஜா
2. மூத்தோரைப் பராமரித்தல் - கா வைத்தீஸ்வரன்
3. நாட்டின் அபிவிருத்தியில் முதியவர்களின் பங்கு – பீ. ஏ. அந்தோனிப்பிள்ளை உதயன் பத்திரிகை


✲ ✲ ✲

# ஆசிரியனே நீயும் ஒரு போராளிதான்

திரு. இ.ரமேஸ்குமார் ஆசிரியர் (ஆலோசனையும் வழிகாட்டியும்)

உன் பாதச் சுவடுகளைத் திரும்பிப்பார்
அதில் ஒரு மாணவனாவது பாதம்
பதித்திருப்பானாயின் - நீ
வெற்றி கண்டு விட்டாய்.

இது ஒரு புனிதமான யாத்திரை
இப் புனித யாத்திரையில் பயணிக்கும் - உன்
பாதங்கள் மிக மிகப் புனிதமானதாகட்டும்
புனிதமாக்கு – நீ
இதைப்புரிந்து கொள்.

சக்தி மிக்கதொரு சந்ததியை பிரசவிக்கப்
புறப்பட்ட சிந்தனைச் சிற்பி – நீ
தெரிந்து கொள்.

உன் சந்நிதிக்கு வரும் மலர்களெல்லாம்
நாளைய சமுதாயத்தின் விருட்சங்கள்
விளங்கிக் கொள்.

உறவுகளை மறந்து- நீ
உணர்வுடன் உழை
உறக்கத்தை மறந்து – நீ
உண்மையாய் உழை
ஏனெனில்
நீயும் ஒரு போராளி தான் - ஆம்
கற்பித்தல் சாதனங்கள் ஏந்திய போராளி....

✲ ✲ ✲

# Thou Shalt love thy neighbour as thy Self

Mrs.N.Sanjeepan Teacher of English

**"Love is not a feeling; it's an act of the will."**

Love is often used but little understood today. So it is not surprising that few people really know what it means to love their neighbours. We are supposed to bring to perfection the love of God in the world in which we live.

No one can see love and no one touch it; but is nevertheless real. And we can hardly conceive of life without it. It is an abstract one. We should treasure it and use it rightly. The lord Jesus Said "Thou shalt love the lord thy God with all thy heart and with all thy soul and with all thy mind." This is the first and great Commandment. And the second is like to unto it. "Thou shalt love thy neighbor as thyself."

Love is the queen of all that God has bestowed on man. Faith is wonderful, hope is essential but love surpasses them both. What a beautiful thought is incorporated here. As children of God we are supposed to bring to perfection the love of God in the world in which we live. God has entrusted His love to us, and others can only see it manifested in its perfection as we show it day by day in our lives. What a tremendous responsibility is ours what a great trust God has given us.

"Love is very patient and kind, never jealous or envious, never boastful or proud, never haughtily or selfish or rude. Love does not demand its own way. It is not irritable or touchy. It does not hold grudges and will hardly even notice when others do it wrong. It is never glad about injustice, but rejoices whenever truth wins out. If you love some one you will be loyal to him no matter what the cost. You will always believe in him, always stand your grounds in defending

him. All the special gifts and power from God will some day come to an end but love goes on forever." Says the Holy – Bible

We need to the lesson in Christian grammar which the Bishop of Cambridge once taught in a class. He said, "We have all learned to say in school; first person I, second person Thou (you), third person He, But that is wrong in Christian grammar. So wrong that to put it right, one had to turn it upside down. According to the above grammar, "first person He, second person Thou, third person I." And He means God the first person in the first place. Then thou mean one's fellow man and I myself come last.'

God grant that we may learn this and then we shall really perfect in our lives the love of lord,

Do you really love your neighbours?

**Ref : - Holy Bible**

## Love and Ego

Once upon a time there was an island where all the feelings lived together. One day there was a storm in the sea and the island was about to get drowned. Every feeling was scared but love made a boat to escape. Every feeling boarded the boat only one feeling was left. Love got down to see who it was. It was ego love tried and tried but Ego wasn't moving also the water was rising.

Every one asked love to leave him and come in the boat, but love was made to love.

At last all the feelings escape and love dies with Ego on the island. Love dies because of Ego.

❋ ❋ ❋

# கற்கும் நிறுவனமாக பாடசாலை

திரு வேலும் மயிலும் சேந்தன்

அறிவார்ந்த சமூகத்திலே அறிவானது பொருளாதாரப் பெறுமானத்துடன் உற்பத்திச் சாதனங்களில் முதன்மை உற்பத்திச் சாதனமாக தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றது. உலகளாவிய சந்தை தேசிய அரசியல், புவியியல் எல்லைகளைக் கடந்து ஒருமுகப் படுத்தப்பட்ட வடிவத்தினை எடுத்தபோது அதனை முகாமை செய்வதற்காக தொழினுட்பமானது அனுசரணையாளர் வகிபாகத்தை ஏற்றுக்கொண்டுள்ளது. இவ்வாறு உலக சந்தை ஒருமுகப்படுத்தப்பட்டு அதன் பிரதான பண்புக்கூறாக போட்டித்தன்மை அமைந்துள்ளது.

பொருட்கள் சேவைகளின் உற்பத்திச் சந்தையிலே போட்டித் தன்மையை எதிர்கொள்வதற்கு ஏற்றதான ஒரு நிறுவனக் கட்டமைப்பினை பீற்றர் எம்.செங் (Peter M.Senge) 1990 ஆம் ஆண்டு "ஐந்தாவது ஒழுக்கம் (The Fifth Discipline) என்ற நூலின் மூலம் ஐந்து எண்ணக் கருத்துக்களை முன் வைத்துள்ளார். இவர் இங்கிலாந்தின் மஞ்செஸ்ரர் தொழில் நுட்ப நிறுவனத்திலே (MIT) மேற்கொண்ட ஆராய்ச்சியில் தொழில்நிறுவனங்கள் உலகமயமாகிய சந்தையிலே போட்டித் தன்மையை அதிகரிப்பதற்கும் தம்மை நிலைநிறுவத்துவதற்கும் இயல்தகவை எவ்வாறு அதிகரிப்பது என்பது தொடர்பிலான ஆய்வை இந் நூலின் மூலமாக முடிவை முன்வைத்தார். மேற்குறித்த ஐந்தாவது ஒழுக்கம் என்ற நூலானது கடந்த 75 ஆண்டுகளுக்குள் பிரசுரமாகிய மிகச்சிறந்த நூல் என Harvad Business Review குறிப்பிட்டிருந்தது. பிற்றர்செங்கினது ஐந்தாவது ஒழுக்கம் என்ற நூல் இன்று வரை பல மில்லியன் பிரதிகள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. இந் நூலுக்கான மூன்று செயற்பாட்டு கை நூல்களும் வெளியாகியுள்ளன.

ஐந்தாவது ஒழுக்கம் என்ற நூலின் மூலம் தொழில்நிறுவனங்கள் உலகளவாவிய போட்டித்தன்மையை எதிர்கொள்வதற்கு ஏற்றமுறையிலே தமது இயல்தகவை அதிகரிப்பதற்கு ஏற்ற ஒழுங்கமைப்பை உருவாக்க வேண்டும் என்பது இவரது நிலைப் பாடாகும். இவ்வாறு போட்டித்தன்மையை எதிர்கொள்ளும்

நிறுவனங்களை "கற்கும் நிறுவனங்கள்" (Learning Organization) என குறிப்பிடுகின்றார்.

இவ்வாறான கற்கும் நிறுவனங்கள் ஏனைய மரபார்ந்த நிறுவனங்களிலிருந்து ஐந்து பண்புகளில் வேறுபட்டு அமையும் என செங் குறிப்பிடுகின்றார். அவையாவன

1. முறைமை சார்ந்த சிந்தனை (Systems Thinking)
2. தனியாள் நிபுணத்துவம் (Personal Mastery)
3. மாதிரி அனுசரணையாளர் (Mental Models)
4. பகிரப்பட்ட நோக்கு (Shared vision)
5. அணிநிலைக் கற்றல் (Team Learning)

முதலான ஐந்து ஒழுங்கங்களையும் உடைய நிறுவனங்களே கற்கும் நிறுவனம் என பீற்றர் செங் குறிப்பிடுகின்றார். கற்கும் நிறுவனங்களிலே அதன் அங்கத்தவர்கள் தொடர்ச்சியாக இயல்தகவை விரிவுபடுத்தி தமது நிறுவனம் விரும்புகின்ற பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்வதற்கு உண்மையான விருப்பமுடையவர்களாக தொடர்ச்சியாக கூட்டிணைந்த கற்றலிலே ஈடுபடுபவர்களாக அவர்கள் காணப்படுவார்கள். அவ்வாறு நிறுவன அங்கத்தவர்கள் கூட்டிணைந்து கற்பதற்கு ஏற்ற நிறுவனக் கட்டமைப்பும் கவிவு நிலையும் கற்கும் நிறுவனங்களிலே ஒழுங்கமைந்து காணப்பட வேண்டும்.

சாதாரணமாக மரபார்ந்த நிறுவனங்கள் கற்றலிலே ஈடுபடுகின்றன. அவை சந்தையிலே தம்மை நிலைத்து நிற்கச் செய்வதற்காக கற்கின்றன. இதனை தப்பிப்பிழைப்பதற்கான கற்றல் (Survival Learning) என பீற்றர் செங் குறிப்பிடுகின்றார். இக் கற்றலை இயைபாக்கக் கற்றல் (Adaptive Learning) எனவும் வேறுசில அறிஞர்கள் குறிப்பிடுகின்றர். இவ்வாறு கற்றலிலே ஈடுபடுவதனை விடுத்து கற்கும் நிறுவனங்கள் என்பன உற்பத்தி ஆற்றுக்காக கற்றலே (Generative Learning) அதன் பிரதான பண்பாகக் காணப்படுகின்றது. இக் கற்றலின் மூலம் புத்தாக்கம் செய்வதற்கான இயல்தகவு அதிகரித்துக் காணப்படும் என நம்பப்படுகின்றது. இவ் ஐந்து ஒழுக்கங்களையும் தொகுத்து நோக்கின்

1. முறைமை சார்ந்த சிந்தனை

முறமை சார்ந்த சிந்தனை என்பது கற்கும் நிறுவனத்தினது பண்புகளின் மிகப் பிரதானமான எண்ணக்கருவாகும். நிறுவன ஒழுங்கமைப்பின் கட்டமைப்புக்களுக்கிடையே உள்ள தொடர்புகள், உறவு முறைகைள், நிறுவன ஒழுங்கமைப்புக்கும் அவற்றின் உப கட்டமைப்புக்கும் உரிய உள்ளீடுகள் மற்றும் வெளியீடுகளுக்கும் இடையிலான தொடர்புகள் அவற்றின்

வினைத்திறன், விளைதிறன் நிறுவன ஒழுங்கமைப்புக்குள் காணப்படும் தொடர்பாடல் முதலானவற்றை எவ்வாறு மேம்படுத்துவது என்ற சிந்தனையை உள்ளடக்கிய எண்ணக்கருச் சட்டகமே இதுவாகும். முறைமை சார்ந்த சிந்தனையின் முழுஇலக்குமானது நிறுவன ஒழுங்கமைப்பின்தும் அவற்றின் உப கட்டமைப்புக் களினதும் பண்புத்தரத்தை மேம்படுத்துவதே ஆகும். இதற்காக ஒவ்வொரு உப கட்டமைப்பிலும் மீள்வலியுறுத்தல்கள் பின்னூட்ட நுட்பங்கள் சிறப்பார்ந்த முறையிலே பேணப்படும். இதற்காக விரி சிந்தனை, குவி சிந்தனை, நோக்குச்சிந்தனை முதலான நுட்பங்கள் உள்ளடங்கிய வெளிப்படையான கலந்துரையாடல்கள் நிறுவன கட்டமைப்புக்குள் காணப்படும். இவற்றோடு தரவட்டச் செயற் பாடுகளையும் முறமைசார்ந்த சிந்தனை உள்ளடக்கியிருக்கும்.

இம் முறைமைசார்ந்த சிந்தனையானது நிறுவனத்தின் ஒவ்வொரு உபகட்டமைப்புக்குளும் அதேவேளை நிறுவனத்தின் முழுத் தொகுதிக்குமான சிந்தனைச் செயன் முறைகளை உள்ளடக்கிய மனவரைபடம் (Mind Mapping) மற்றும் முறமைப் பகுப்பாய்ப்பு (Systerm Analysis) கொண்டமைந்து காணப்படும். இதன்மூலம் நிறுவனத்தின் முழுமைக்கும் அவற்றின் உப கட்டமைப்புக்களிலும் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளையும் அவற்றோடு கட்டமைப்புக்களின் உள்ளீடு செயன்முறை வெளியீடு ஆகியவற்றில் ஏற்படுத்தும் தாக்கங்களையும் பகுப்பாய்வு செய்யலாம்.

## 2. தனியாள் நிபுணத்துவம்

தனியாள் நிபுணத்துவம் என்பது நிறுவனத்தின் மனிதவளத்தினை நோக்கியதாக அமைந்துள்ளது தனி நபர் ஒருவரது ஆற்றல் அறிவு திறன், தேரச்சி என்பன தனிநபரது நிபுணத்துவத்துக்குள் உள்ளடக்கபடும். ஆனால் கற்கும் நிறுவனங்களிலே தனியாள் நிபுணத்துவம் என்பது இதிலிருந்து சற்று வேறுபட்டது. அதாவது கற்கும் நிறுவனம் ஒன்று தான் அடைய விரும்பும் இறுதிப் பெறுபேற்றை சுய அர்ப்பணிப்புடன் அடைவதற்கான தகுதி நிலைகளைக் கொண்ட நிபுணத்துவத்தையே தனியாள் ஊழியர்ஒருவர் கொண்டிருக்கவேண்டும் என பீற்றர்செங் கருதுகின்றார். கற்கும் நிறுவனத்தின் சூழமைவுக்கு ஏற்ப புத்தாக்கத் திறத்துடன் இணைந்த தொழில் வாழ்க்கையே தனியாள் நிபுணத்துவமாகும்.

தனியாள் நிபுணத்துவத்திலே இரு நோக்கு நிலைகள் காணப்படுகின்றன

1. தான் சார்ந்த நிறுவனத்திற்கு அல்லது நிறுவ

உபகட்டமைப்புக்கு எது முக்கியத்துவம் வாய்ந்தது குறித்த சந்தர்பத்திலே எவற்றை முதன்மைப்படுத்த வேண்டும் என்பது தொடர்பிலான தெரிந்தெடுக்கும் தேர்ச்சி

2. நிறுவனத்தின் இலக்கினையும் நோக்கினையும் விளங்கி நிறுவனத்தின் அகச்சூழலையும் புறச்சூழலையும் விளங்கி நிறுவனத்தின் சமகால நிலைகளில் இருந்து அது எதிர்காலத்தில் அடைய விரும்பும் இலக்கு நோக்கி நிறுவனச் செயன்முறைகளை பயனுறுதி மிக்க வகையிலே நகர்த்தக்கூடிய தேர்ச்சி

தனியாள் நிபுணத்துவம் சமகால நிறுவன நிலையிலே அடையவிரும்பும் இலக்கு நோக்கிய மாற்றத்தை முகாமைசெய்யும் திறனை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. இத் தனியாள் நிபுணத்துவத்தினை புத்தாக்கத்திறன், நிலமைப்பகுப்பாய்வு, நடத்தைக் கோலச் சீராக்கம், பயிற்சி முதலானவற்றை உள்ளடக்கியதாகக் காணப்படும். இத்தனியாள் நிபுணத்துவத்தினை நிறுவனத்தின் செயலாற்றுகை தரம் கணிப்பீட்டின் மூலம் அறியமுடியும்.

கற்கும் நிறுவனம் ஒன்றின் தனியாள் நிபுணத்துவத்தின் தரம் என்பது அங்கு பணியாற்றும் தனிமனிதனது இலக்கு எவ்வளவு தூரம் நிறுவன இலக்குடன் நேர்கோட்டுடன் பயணிக்கக்கூடியதாக அமைந்துள்ளது என்பதைப் பொறுத்தே அதன் சிறப்புக் காணப்படுகின்றது. நிறுவனம் சார்ந்த தனிமனிதனது அர்ப்பணிப்பு சிறப்படையும் போது நிறுவனத்தின் மனிதவள ஆற்றல் சிறப்பானதாக அமையப்பெறும்.

**மாதிரி அனுசரணையாளர்**

கற்கும் நிறுவனத்திலே சிரேஷ்ட உறுப்பினர்கள் ஏனைய உறுப்பினர்களுக்கு மாதிரி வழிகாட்டியாக மனவுலகத் தலைவர்களாக அனுசரணை யாளர்களாக அமைவதே இதுவாகும். இம் மாதிரி அனுசரணையானது தொழில் உலகு பற்றிய கண்ணோட்டத்தினை ஏனைய நிறுவன உறுப்பினர்களுக்கு வழங்குபவர்களாக காணப்படுவர்.

மாதிரி அனுசரணையாளர்கள் தொழில் தொடர்பாகவும் அது சார்ந்த ஒழுக்கம் தொடர்பாகவும் பக்கச் சார்பின்றி திறந்த மனத்துடன் நேர்மையான முறையில் நிறுவனத்தின் சக உறுப்பினர்களை அணுகக் கூடியவர்களாக அமைய வேண்டும். அதேவேளை மாதிரி அனுசரணை யாளர்களுக்கு சிறந்த செவிமடுக்கும்

திறனும் விசாரணை செய்யும் திறனும் ஒத்துணர்வும் அமைந்து காணப்பட வேண்டும். நிறுவனம் தொடர்பான சரியான தரவுகள் மற்றும் தகவல்கள் எதிர்கால இலக்குகள் மற்றும் நிறுவனத்தின் பலம் மற்றும் பலவீனம் சந்தர்ப்பங்கள், சவால்கள் என்பன பற்றி நன்கு அறிந்திருத்தல் வேண்டும்.

கற்கும் நிறுவனத்திலே ஒன்று மேற்பட்ட அனுசரணையாளர்கள் காணப்படுவர் இவர்களுக்கிடையே முரண்பாடுகள் கருத்துவேறுபாடுகள் தோன்றாத வண்ணம் கற்கும் நிறுவனத்தின் கவிவுநிலை காணப் படவேண்டும். மாதிரி அனுசர ணையாளர்களுக்குடாக நிறுவனத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் சிறந்த புரிந்துணர்வு ஏற்பட ஒழுங்கமைப்புக் காணப்படவேண்டும். இவ்வாறே சிறந்த புரிந்துணர்வே அவ் உறுப்பினர் களிடையே திறந்த மனப்பாங்களை உருவாக்கும். மாதிரி அனுசர ணையாளர்கள் முறைசார்ந்த மற்றும் முறைசாராத வகையில் அனுசரணை யாளர்களாகச் செயற்படவேண்டும்.

## பகிரப்பட்ட நோக்கு

கற்கும் நிறுவனமானது தனது எதிர்கால இலக்குகள் மற்றும் நோக்குகளை நிறுவனத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் தெரியப்படுத்தி அவை பற்றிய விளக்கத்தினை வழங்குவதே இதுவாகும். இவ்வாறு நிறுவனத்தின் நோக்கு பகிரப்படும் போது அதன் பௌதிக மனித வளங்களையும் தொழில்நுட்பத்திலும் மூலதனத்திலும் உத்தம பயன்பாட்டை பெறமுடியும் என நம்பப்படுகின்றது. இவை தவிர உற்பத்திச் செயன்முறை, தொழில்நுணுக்கங்கள், தொழில்சார் செயற்பாடுகள் நிறுவன ரீதியான முரண்பாட்டுத் தீர்வுகள் பயனுறுதி மிக்க வகையிலே மேற்கொள்ள முடியும் என நம்பப்படுகின்றது.

நிறுவனத்தின் பகிரப்பட்ட நோக்குகளின் அடிப்படையில் நிறுவன உறுப்பினர்கள் புத்தாக்கத்தில் ஈடுபடவும் நிறுவனத்தினை போட்டிமிக்க சூழ் நிலையில் தக்க வைத்துக் கொள்ளவும் அதனை நிலைநிறுத்தவும் பகிரப்பட்ட நோக்கு பெரிதும் உதவும் என நம்பப்படுகின்றது. நிறுவன அங்கத் தவர்கள் தமது பிரச்சினைகள், தமது எதிர்கால திட்டங்கள், தாம் நிபுணத்துவம் பெறவேண்டிய துறைகள் அனைத்தையும் இலகுவில் தீர்மானிப்பதற்கு பகிரப்பட்ட நோக்கு உதவும். பகிரப்பட்ட நோக்கின் மூலம் ஒரு கற்கும் நிறுவனத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கு தாம் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு இன்றியமையாதவர்கள் தமது உழைப்பின் மூலமே நிறுவனத்தின் வளர்ச்சி தங்கியுள்ளது என உணரத்தக்க வகையில் புரிந்துணர்வை உருவாக்கும்.

பகிரப்பட்ட நோக்கின் அடிப்படையிலே மேல்நிலை முகாமை, இடைநிலைமுகாமை, முன்வரிசை முகாமை முதலானோர் முன்னூட்டல் , பின்னூட்டல் மற்றும் மீள் வலியுறுத்தல்களை பகிரப்பட்ட நோக்கின் அடிப்படையில் மேற்கொள்ள முடியும். இது ஏனைய நிறுவனங்களுடன் போட்டியிடும் சூழ்நிலையை பேணுவதற்கு பெரிதும் துணைநிற்கும்.

**அணிநிலைக் கற்றல்**

கற்கும் நிறுவனத்தின் பிறிதொரு இயல்பு அணிநிலைக் கற்றல் ஆகும். கூட்டாகக் கற்றல் செயல்முறை என்பது ஒரு குறித்த பிரச்சினை தொடர்பில் ஒரு மூலையின் சிந்தனையை விட ஒன்றுக்கு மேற்பட்ட மூளைகள் இணைந்து சிந்திப்பது சிறப்பார்ந்தது என்பது இங்கு கவனத்தில் எடுக்கப்படுகின்றது. அணிநிலைக்கற்றலின் போது தகவல் பாய்ச்சலுக்கும் பின்னூட்டலுக்கும் புத்தாக்கச் சிந்தனைக்கும் பிரச்சினை தீர்த்தலுக்கும் பயனுறுதி மிக்க முறமைகளும் நுட்பங்களும் கிடைக்கப் பெறுகின்றன. நிறுவனத்தின் தனியாள் ஒவ்வொருவருக்கும் தமது சிறப்பார்ந்த அனுபவங்களை பகிரவும் சிறப்புத் தேர்ச்சிகளையும் அவற்றின் உள்ளார்ந்த அறிவையும் கற்கும் நிறுவனத்தின் பொது அறிவுவாக உருமாற்றுவதற்கும் அணிநிலைக் கற்றல் உதவுகின்றது.

கற்கும் நிறுவனத்தின் புறச் சூழலில் காணப்படும் போட்டித் தன்மையினை எதிர்கொள்வதற்கு நிறுவனத்தின் அகச்சூழலில் கூட்டிணைந்து செயற்படுவதற்குரிய கவிவு நிலையையும் உபாயத்தையும் அணிநிலைக் கற்றல் வழங்குகின்றது. பீற்றர் செங்கினது கருத்துப்படி அணிநிலைக்கற்றலை நிறுவனம் ஒன்றிலே விரைவாக உருவாக்கி விடமுடியாது. இவ் ஒழுக்க நெறியினை கற்கும் நிறுவனங்கள் வளர்த் தெடுப்பதற்கு நீண்ட கால அவகாசம் தேவைப்படும் என அவர் கருதுகின்றார்.

அணிநிலைக்கற்றலுக்கு திறந்த உரையாடல் அவற்றிற்கான அனுசரணை ஒத்துணர்வு செலுக் கமுள்ள செவிமடுக்கும் திறன், அவதானிப்பு திறன், வினாதொடுக்கும் திறன் என்பன நிறுவன உறுப்பினர்கள் இடையே வளர்த்தெடுக்க வேண்டும் என பீற்றர்செங் குறிப்பிடுகின்றார்.

**பாடசாலை ஒன்றினை கற்கும் நிறுவனமாக மாற்ற வேண்டியதற்கான முன்நிபந்தனை**

பீற்றர்செங் ஆறு முன்நிபந்தனைகளை இங்கு குறிப்பிடுகின்றார். அவையாவன

**1. கற்கும் சந்தரப்பங்களை தொடர்ச்சியாக உருவாக்குதல்**

பாடசாலைகளிலே தான் தொடங்காற்றல் மூலம் உருவாகும்

விடயங்களுக்கும் புதிய சூழ்நிலைகளில் கற்கும் விடயங்களுக்கும் பிரச்சினை தீர்ப்பதற்காக கற்பதற்கும் உரிய கற்றல் சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும். அதற்காக பாடசாலையின் தற்போதைய சூழ்நிலையை மேம்படுத்துவதற்காகவும் புதிய செயற்றிடங்களை உருவாக்கு வதற்காகவும் மாற்றங்களை ஏற்படுத்து வதற்காகவும் கற்கும் சந்தர்ப்பங்களை பயன்படுத்த வேண்டும். இதற்காக பாடசாலையின் மூத்த ஆசிரியர்கள் அல்லது சிறப்புத்தேர்ச்சி மிகக் ஆசிரியர்கள் மாதிரி அனுசரனையாளர்களாக கடமையாற்றுதல் வேண்டும். இதனோடு ஆசிரியர்களின் வாண்மை விருத்திக்கான நேரம், பணம், சந்தர்ப்பங்கள், கவிவு நிலை என்பன வேண்டியளவிற்கு வழங்கப்படுவதுடன் அதன் தொடர்ச்சித் தன்மையும் பேணப்படவேண்டும்.

**2. திறந்த கலந்துரையாடலுக்கான திறன்களை மேம்படுத்துதல்**

பாடசாலை ஆசிரியர்கள் தமது கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் மற்றும் பாடசாலையின் கலைத்திட்ட, இணைக்கலைத்திட்ட செயற்பாடுகள் தொடர்பாக திறந்த மனதுடன் எவ்வித தங்குதடையுமின்றி கலந்துரையாடுவதற்கான கவிவு நிலை காணப்பட வேண்டியதுடன் ஆசிரியர்கள் மத்தியில் விசாரணை செய்யும் திறன் வினாக்கேட்கும் திறன், தனிப்பட்ட ரீதியில் ஒருவரை தாக்காது வினாத்தொடுக்கும் திறன் என்பன மேம்படுத்தப்படவேண்டும்.

**3. கூட்டிணைந்த கற்றலுக்கான ஊக்குவிப்பு**

பாடசாலையில் தரவட்டங்கள் படிப்பு வட்டங்கள் உருவாக்கி ஆசிரியர்கள் கூட்டிணைந்த கற்றலிலே ஈடுபடுவதற்கு வசதியளிக்க வேண்டும். இவற்றோடு பாடசாலைக் களத்தினை அடிப்படையாகக் கொண்ட தீர்மானம் எடுத்தல் ஆய்வுகளை மேற்கொள்ளல் பயிற்சி என்பனவற்றுக்கு ஊக்குவிப்புக்கள் வழங்கப்படவேண்டும்.

**4. பகிரப்பட்ட நோக்கிற்கிணங்க ஆசிரியர்களை வலுவூட்டுதல்**

பாடசாலையின் நோக்கினை ஆசிரிர்களுக்கு பகிரங்கமாக விளங்கப்படுத்தி அந் நோக்கங்களுக்கும் இலக்குகளுக்கும் ஏற்ப ஆசிரியர்கள் பாடசாலையில் கடமை ஆற்றுவதற்காக பாடசாலை மட்டத்திலான ஆசிரியர் வலுவூட்டல் நிகழ்ச்சிகள் இடம் பெறவேண்டும். செயல்நிலை சார்ந்த விசேடித்த இலக்குகளுக்காக செயலணிக்குழுக்கள் உருவாக்கப்பட்டு அக் குழுக்கள் இலக்குகளை எய்துவதற்கு ஏற்றவகையில் வலுவூட்டல்கள் வழங்கப்படவேண்டும்.

**5. பாடசாலையிலே உள்ளூர், உலகலாவிய சூழமைவுடன் இணைத்தல்**

பாடசாலையிலே உள்ளூர் மற்றும் உலகளாவிய போட்டிச் சூழ்நிலையுடன் பொருந்திச் செயற்பட வைப்பதே இதுவாகும். பாடசாலை எதிர்கொள்ளும் பிர்ச்சினைகளை ஏனைய நிறுவனம் சார் அனுபவங்களிலிருந்து (உள்ளூர், வெளியூர்) அப் பிரச்சினை களைத் தீர்ப்பதற்கு முன் உதாரணங்களைத் தேர்ந்தெடுத்து பாடசாலையின் பிரச்சினை தீர்க்கும் திறனை அதன் சூழமைவுடன் இணைப்பதற்கும் செயல்திட்டங்களை வரைய வேண்டும். உலகளாவிய புதிய செல்நெறிகளை உள்வாங்கி பாடசாலை தன்னை சர்வதேச தரத்தில் பொருத்திக் கொள்ளக் கூடியவாறு செயற்பட வேண்டும்.

**6. பாடசாலைக்கு உருமாற்றுத் தந்திரோபாயத்துடன் இணைந்த தலைமைத்துவத்தை வழங்குதல்**

ஒரு பாடசாலையின் அதிபர் தமது பாடசாலை சம கால நிலமைகளில் எவ்வாறு செயற்படுகின்றது என்பதனை ஆராய்ந்து எதிர்கால இலக்குகள் நோக்கி அவற்றை அடைவதற்கான தந்திரோபாயங்களை உருவாக்குவதற்கு ஏற்றமுறையில் உருமாற்றுத் தந்திரோபாயத்தை வழங்கவேண்டும். அதற்குரிய தலமைத்துவத்துடன் கூடிய அதிபர்கள் பாடசாலையை தலைமைதாங்க வேண்டும்.

இவ்வாறு கற்கும் நிறுவனங்களாக பாடசாலைகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பது தொடர்பில் இன்று சர்வதேச ரீதியில் பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

✲✲✲

**J/UNION COLLEGE - TELLIPPALAI**

**TUTORIAL STAFF DETAILS-2014**

| | | |
|---|---|---|
| 1. | Mr.V.K.Rathnakumar (Pricipal) | BA(Cey), Dip.in.Ed, MEd,SLPS - I |
| 2. | Miss.J.Senthivel(Deputy Principal) | BCom, Dip.inEdu, SLTS - I |
| 3. | Mr.V.Senthan(Vice Principal) | BA,PgD.Pu.Ad,Pg.D.Ed, PgD.S.N.Ed,MEd, SLTS–2 II |
| 4. | Mr.E.Anushanthan (Sectional Head) | BA,Dip.in.Edu, MA,Sp.Tr (Tamil),SLTS - 2 II |
| 5. | Mr.N.Thavasothynathan(Sectional Head) | BA, Dip.inEdu, SLTS - 2 II |
| 6. | Mrs.L.S.Loyd (Sectional Head) | Sp.Tr.Teach(Art) , SLTS - I |
| 7. | Mr.T.Rajaratnam | Sp.Trd(Science) , SLTS - 2 II |
| 8. | Mr.S.Sritharan | BA, Dip .in.Teaching(Maths), Dip.in.Edu, SLTS 2 II |
| 9. | Mr.K.Balavishakan | Sp.Trd(English) , SLTS – 2 II |
| 10. | Mr.C.Sivasuthan | BBA(Hons),Dip.in.Edu, SLTS – 2 II |
| 11. | Mr.P.Nagulan | BA, Dip.inEdu, SLTS – 2 II |
| 12. | Mr.V.Prabagaran | BA,P.G.D (Economics) , SLTS – 2 II |
| 13. | Mr.V.Vishnukaran | Dip.in.Teaching(Spe.Ed) , SLTS – 3 I |
| 14. | Mr.K.Mokanaranjan | BSc,Dip.in.Edu, SLTS – 2 II |
| 15. | Mr.S.Mugunthan | BA,MA, Dip.in.Teaching , SLTS – 2 II |
| 16. | Mr.V.Rameshkumar | Dip.in.Teaching(Sci) , SLTS–2 II |
| 17. | Mr.B.Velparan | Sp.Trd(Sci) , SLTS –2 II |
| 18. | Mr.J.Sripirakash | BA, Dip.in.Edu, SLTS –2-II |
| 19. | Mr.N.Anthakumar | Sp.Trd(Technical Subject) , SLTS –2II |
| 20. | Mr.N.Punithathathayaparan | BSc,Dip.in.Edu, SLTS - I |
| 21. | Mr.N.Senthuran | Sp.Trd(Psyhical Education), Dip.in.phy.Edu,SLTS–2II |
| 22. | Mr.R.Rameshkumar | BA, Dip.inEdu, Dip.inEdu(Psychology)SLTS –2 II |
| 23. | Mr.Y.Suthakaran | BA |

| | |
|---|---|
| 24. Miss.V.Vaithilingam | MEd,BA,Dip.in.Edu,SLTS–2 I |
| 25. Mrs.P.Sathyaseelan(Teacher Librarian) | B.A(Hons),Dip.in.Edu, Dip.in.Lib&Info.Sci, SLTS 2II |
| 26. Mrs.M.Jegaruban | Dip.in.Teaching(ICT) , SLTS –3 I |
| 27. Mrs.S.Kugananthan | BA, Dip.inEdu, SLTS –2 II |
| 28. Mrs.T.Jejakumar | BA, SLTS–2 II |
| 29. Mrs.J.Lambotharan | BFA, SLTS – 3 I |
| 30. Mrs.V.Vasiharan | BFA(Dance) , SLTS - 3 I |
| 31. Mrs.L.A. Dominic | BA, Dip.inEdu, SLTS–2 II |
| 32. Mrs.V.Raveendran((Teacher Librarian) | BA(Hons), Dip.inEdu, SLTS–2 II |
| 33. Mrs.S.Rameshkumar | Sp.Trd(Tamil) , SLTS -2 II |
| 34. Mrs.S.Kirubakaran | BSc(hons),Dip.in.Edu, SLTS–2 II |
| 35. Mrs.T.Koneshwara | BA,Dip.in.Teaching, SLTS–3 I |
| 36. Mrs.S.Surenthiranathan | BEd(Merit), Dip in.Teaching(Science) , SLTS –2 I |
| 37. Mrs.N.Uthayakumar | BA,SLTS 3.I |
| 38. Miss. Mary ReethaGiragory | Sp.Trd(Home Economics) , SLTS –3 II |
| 39. MrsI.Jokeenthiran | Sp. Trd(English) , SLTS–3 I |
| 40. MrsS.Sivanathan | Bcom,Dip.in.Edu, SLTS–2I |
| 41. Mrs.R.Murugananthan | BSc,Dip.in.Edu, Sp. Trd (Maths) SLTS –2I |
| 42. Mrs.N.Sanjeepan | Sp.Trd(English) , SLTS –3 I |
| 43. Mrs. T.Ananthakumar | Bcom, Dip.inEdu, SLTS–2 II |
| 44. Mrs.V.Jegasooriyar | MA,BA(Hons), Dip.inEdu, SLTS - 2 II |
| 45. Mrs.M.Murugamoorthy | BA, Dip.inEdu, SLTS - I |
| 46. Mrs.A.Vimalathasan | BSc,Dip.in.Edu(Merrit) , SLPS –2 II |
| 47. Mrs.A.Kugathasan | BFA,Dip.in.Edu, SLTS - I |
| 48. Mrs.J.Sukirthan | MA(BharathamHons), B.F.A(Dance) , Dip.in.Edu, SLTS 2 II |

49. Mrs.M.Srikaran — BSc,Dip.in.Edu, SLTS –2 II
50. Mrs.M.Kirubakaran — BSc,Dip.in.Edu, SLTS–2 II
51. Mrs.R.Mariyamanokaran — BA,Dip.in.Edu, SLTS–2 II
52. Mrs.A.Thirunavukarasu — BA(Hons),Dip.inEdu, SLTS–2 II
53. Mrs.P.Lingasabeshan — BA(hons), Dip.inEdu, SLTS–2 I
54. Mrs.V.Jejabalan — Dip.in.Teaching(Agriculture), SLTS -3 I
55. Miss.P.Kahtikeshu — BFA, SLTS–3 I

**VOLUNTEER TEACHER**


1. Miss. B.Mayoortha
2. Miss S.Mithula

**NON ACADAMIC STAFF**

1. Mr.M.Thavarajan — School Labour Grade I
2. Mr.M.I.Pusparajah — Wathcher,Grade II
3. Miss J.Kanthasamy — Sanitary Labourer



ரஞ்சனாஸ் புடவையகம்
புடவைத் திணிசுகளின் சங்கமம்
இல. 4ஏ மத்திய சந்தை, சுன்னாகம்.
தொ. பே.: 0212240278
Ranjanas Tex
Specialist in Sarees & Shalwars
No. 4A, Central Market, Chunnakam.
Tel: 021-2240278


NEW FASHION PARK
Wholesale & Retail
Dealers in : Textiles
Specialist in Wedding
Sarees and Salwars
No.82, K.K.S. Road, Chunnakam.
Tel: 0777251143




இலங்கை வங்கியின்
ரன் கெகுளு சிறுவர் கணக்கு
மலர்களைப்போன்ற சின்னஞ் சிறார்களுக்கு
இலங்கை வங்கியிடமிருந்து கூடுதலான வட்டி
5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் 2000
திறமைசாலிகளுக்கு
சிறார்களின் காப்புறுதிகள்
குறித்துரைக்கப்பட்ட 12 பாரதூரமான நோய்களுக்கு
திடீர் விபத்துக்களுக்கு
கணக்கு வைப்பாளர் / பாதுகாவலர் காப்புறுதிகள்
ரன்கெகுளு கணக்கிலுள்ள
நிலுவையைப்போல் 12 மடங்கு அவசர
விபத்துக் காப்பீடு
Ran Kekulu
BANK OF CEYLON
BOC
Bankers to the Nation



விஷ்ணுகரன்ஸ்
DELEARS IN FANCY GOODS, GIFT ITEMS,
IMITATION JEWLLERY, BABY ITEMS,
EVERSILVER ITEMS &
FABRIC PAINTS
Vishnukarans
40, Dr. Subramaniyam Road, Chunnakam.
021-2244016



நிம்மதியான அப்
பொன்னான
காலத்திற்காக
இன்றே
திட்டமிடுங்கள்!
மக்கள் வங்கியின்
relax
சேமிப்பு திட்டம்
இன்றைய ஏற்பாடு - நாளைய நிம்மதி
AA-Brand Finance Rating, AA+Fitch Rating
மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி



C.P.T.
CAUSEWAY PAINTS
DECORATIVE | AUTOMOTIVE | INDUSTRIAL | WOOD FINISHES
Colours beyond your imagination
We've brought to you great coverage, exceptional durability and an outstanding finish to all the best colours in the world. Causeway Paints. Inspiring Quality.
OVER 30,000 COLOURS
Powered by
Ralston
COLOUR & COATINGS
THE NETHERLANDS
DE BEER REFINISH
Colour box
STAR CLASS 2K
Farécla
LUXURY
EMULSION PAINT
KENLUX
Sunny
Auto HI BUILD LACQUER
AEROMIX
No.15, Noel Mendis Mawatha, Modarawila Industrial Estate, Panadura, Sri Lanka.
T: (94) 038-2240040 F: (94) 038-2240046 E: luxury@sltnet.lk W: causewaypaints.com